### திரு.என்.இளங்கோ, நாட்டார்மங்கலம் கிராம ஊராட்சித் தலைவர் , விழுப்புரம் மாவட்டம்

ஊராட்சி தலைவர்களுக்கு பிறப்பு, இறப்பு சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், வழங்குவதற்கு உண்டான அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். தலைவர் ஆற்றும் பணிகளுக்கு மாத ஊதியம், ஒய்வு ஊதியம் போன்றவை வழங்கப்பட வேண்டும். அனைத்து கிராம அண்ணா மறுமலாச்சித் திட்டத்தின் கீழ் நலிவடைந்த ஊராட்சிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பதிலாக ஊராட்சிகளே பணிகளை நேரடியாக தேர்ந்தெடுக்க அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். ஊராட்சிகளுக்கான மின் கட்டண சுமை குறைக்கப்பட வேண்டும். குடிநீர் மற்றும் தெருவிளக்கு போன்றவற்றிற்கு இலவச மின்சாரம் வழங்கப்பட வேண்டும். சூரிய விளக்கு வசதி ஏற்படுத்தி தருவதன் மூலம் தெருவிளக்குகளின் மின்கட்டண சுமை பெருமளவு குறையும். இவைகளை பராமரிக்க ஐ.டி.ஐ.படித்த இளைஞர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளத் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படல் வேண்டும்.

சத்துணவு பணியாளர்களையும் நியமித்துக் கொள்ள அதிகாரம் அளிக்கப்படல் வேண்டும். ஆரம்பக் கல்வி நிலையம் மோசமாக உள்ளது. ஆசிரியர்களை ஊராட்சிகள் கட்டுப்பாட்டில் கொண்டு வர ஆவண செய்ய வேண்டும். பணிக்கு வராத ஆசிரியர்களின் சம்பளத்தை குறைக்கவும் அவர்களை பணியிறக்கம் செய்யவும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும், வேளாண் சார்ந்த தொழில் துவங்க ஆவன செய்ய வேண்டும். வரி வருவாய் மற்றும் இதர வரவினங்கள் பிற்பட்ட வகுப்பினர் அதிகமிருப்பதால் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டாலும் மற்றவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வருமானம் குறைவாக உள்ளது. ஊராட்சி சாலைகளை சீர் செய்திட வேண்டும். சமுதாயக் கூடம் இல்லாத இடங்களில் அவை கட்டப்பட வேண்டும். இரண்டு ரூபாய் அரிசி திட்டம் வந்தபின் சம்பூர்ண கிராம வேலை வாய்ப்பு திட்ட அரிசி ரூ.5.60 என்று மதிப்பிடுவதை குறைக்க வேண்டும்.

தேசீய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ஓடைகள் மற்றும் ஆறுகளில் தடுப்பணைகள் கட்ட அனுமதி அளிக்கப்பட வேண்டும். புறம்போக்கு நிலத்திற்கு அனுமதி அளிக்கவும், நியாய விலைக் கடை பணியாளரை நியமிக்கவும் அதிகாரம் அளிக்கப்படல் வேண்டும். அனைத்து பொருட்களும் கிடைக்க செய்ய வேணடும். கிராம ஏரிகள் மண் தூர் வாருவதை தடுக்க கூடாது. விவசாய நிலங்களை பெருமுதலாளிகள் வாங்குவதை தடை செய்ய வேண்டும். என தெரிவித்தார்.

**திரு.ஜெ. ஜெயராமன், பள்ளிவர்த்தி கிராம ஊராட்சித் தலைவர், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், திருவாரூர் மாவட்டம்**

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்டப் பணிகளை நிறைவேற்றுவதை கண்காணிக்கும் அதிகாரம் வழங்க வேண்டும். தனிநபர் ஆக்கிரமிப்பு செய்த சொத்துக்கள் மற்றும் கட்டிடங்களை இடிக்க தனி அதிகாரம் வேண்டும். அரசு புறம்போக்குகள் தனியார் ஆக்ரமிப்பில் உள்ளன.

மாநில நிதிக்குழு மானியம் கடந்த 1996–2001–ல் ஊராட்சிகளுக்கான நிதி கூடுதலாக இருந்தது. கடந்த ஆட்சியில் குறைவாகக் கிடைக்கப் பெற்றது. தற்போது வழங்கப்பட்டு வரும் நிதியும் வளர்ச்சிப் பணிகளுக்கு போதுமானதாக இல்லை. அதை இருமடங்காக அதிகரிக்கச்

செய்ய வேண்டும். தெருவிளக்குகளுக்கு தற்போதுள்ள 1 சோக், 2 குழல் விளக்குகள், 3 ஸ்டார்டர்கள், நீர்மூழ்கி மோட்டருக்கு பராமரிப்பு செலவு ரூ.7,000/– கைப் பம்பிற்கு ரூ.600/– போன்ற வருடாந்திர அளவுகள் இருமடங்காக்கப்பட வேண்டும்.

தலைவருக்கு அமர்வுப்படி தினம் ரூ. 25/– தான் உள்ளது. அவை கூடுதலாக்கப்பட வேண்டும். பயணப்படியும் கூடுதலாக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட வகை பிரச்சனைகளை தீர்த்து வைக்க நீதி வழங்கும் அதிகாரமும் ஊராட்சிகளுக்கு அளிக்கப்படல் வேண்டும். திட்ட வேலைகளை பொறுத்து என்னென்ன பணிகளை மேற்கொள்வது என மேலிருந்து நிர்ணயிக்கப்படுவதை தவிர்க்க வேண்டும். காலதாமதமின்றி நிறைவேற்றிட முன்னுரிமைப் பணிகளைத் தேர்வு செய்யும் அதிகாரம் இல்லாததால் அவைகளை செயல்படுத்த முடியவில்லை. கிராம சபை மூலமாக பணிகள் தீர்மானிக்கப்பட வேண்டும். தொடக்கப் பள்ளிகளுக்கு மின் வசதி செய்வதுடன் அதற்கான செலவினத்தை மேற்கொள்ளவும் நிதி ஒதுக்கீடு தர வேண்டும். மின்வாரிய அலுவலகத்தில் போதிய பதில் தரப்படாமல் இருப்பதுடன், மின்கட்டணத்திற்கு வட்டியையும் கணக்கிடு செய்கிறார்கள். கூடுதல் பம்ப் ஆப்ரேட்டர்களை நியமிக்க அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்.

அனைத்து வளர்ச்சித் திட்டப் பணிகளும் ஊராட்சித் தலைவர்களால் மட்டுமே நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆதனால் சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத ஊதியம், ஓய்வு ஊதியம் போன்றவைகளும் ஊராட்சி தலைவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். 25 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த மின் கம்பங்கள் இன்னும் மாற்றப்படவில்லை. பழுதடைந்த மின்கம்பங்கள் உடனடியாக மாற்றப்படல் வேண்டும். ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு ரூ.500/– ஆவது ஓய்வூதியம் வழங்கிட வேண்டும் என்று தெரிவித்தார்.

### திரு. சத்தியமூர்த்தி, விண்ணமங்கலம் கிராம ஊராட்சித் தலைவர், வேலூர் மாவட்டம்

இரண்டடுக்கு ஊராட்சி முறையில் இருந்த இணக்கமான தொடர்பு மூன்றடுக்கு ஊராட்சி முறையில் இல்லை. ஏனவே, கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டும். மணல் எடுப்பதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரம், இயற்கை வளங்களால் ஊராட்சிகளுக்கு இருந்த வருவாய் நேரடியாக ஊராட்சிகளுக்கே வழங்கப்படல் வேண்டும்.

ஆசிரியர்கள் பணியாற்றும் அனைத்து பள்ளிகளை மேற்பார்வையிடும் அதிகாரம், அங்கன்வாடி, சுகாதாரப் பணிகள் போன்றவைகளை வாரத்திற்கு ஒருமுறை மேற்பார்வையிடும் அதிகாரம் அளிக்கப்படல் வேண்டும். தனிநபர் கழிப்பிடம் அமைக்கப்படுவதால் காலரா, சிக்குன் குனியா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்கப்படுகிறது. இதற்கு முழு நிதி உதவி வேண்டும். வீட்டு மனை பட்டா வழங்கும் அதிகாரம் தேவை. சிறு மருத்துவமனைகளை அமைக்க அனுமதி, கிராம

ஊராட்சியில் தொகுப்பு ஊதியம் பெறுபவர்களுக்கு கூடுதல் ஊதியம் ஆகியவை தேவை என தெரிவித்தார்.

சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்ட நிதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்ட நிதி ஒதுக்கீடு போன்று கிராம மேம்பாட்டு நிதியும் தரவேண்டும். பம்ப் ஆபரேட்டர் மற்றும் ஊராட்சி எழுத்தர்களுக்கு சம்பளம் உயர்த்தப்படல் வேண்டும் என்று தெரிவித்தார்.

### திருமதி. ஆர். டி. மலர்விழி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர், ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம்

தற்போதுள்ள ஒரு தொகுப்பு வீட்டிற்கான ஒதுக்கீட்டு நிதி ரூ. 50,000/– ஆக ஆக்கப்பட வேண்டும். மின் கட்டணம், குடிநீர் கட்டணம் போன்றவைகளுக்கு நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும். கழிப்பறைகள் கட்ட குறைந்தது ரூ. 2500/– நிதி உதவி வேண்டும்.

சத்துணவு மைய அமைப்பாளர்கள் மற்றும் சமையலர் , உதவியாளர் நியமிக்க ஒன்றியக் குழு தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். காசோலை கையெழுத்திடும் அதிகாரம் வேண்டும். ஊராட்சிக்குட்பட்ட அனைத்து பள்ளிகளை கண்காணிக்கும் அதிகாரம் வேண்டும். ஒன்றியக்குழு உறுப்பினர் மாத வருமானம் உயர்த்தப்பட வேண்டும். ஆக்கிரமிப்புகளை அகற்றும் அதிகாரம் வழங்க வேண்டும். ஒன்றியக் குழு தலைவர்கள் அனைத்து பணிகளிலும் பங்குபெறுவதால் வாகனத்திற்கான செலவினம் அதிகமாக உள்ளதால் புதிய வாகனம் வாங்கவும் கூடுதலாக எரிபொருள், பழுது நீக்கம் செய்திட, போதிய நிதி ஒதுக்கீடு செய்து தரப்படல் வேண்டும் என்று தெரிவித்தார்.

### திரு. மாரப்பன், செட்டிப்பாளையம் கிராம ஊராட்சித் தலைவர், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டம்

பல்வேறு மாநிலங்களில் மொத்த வருமானத்தில் 30 முதல் 40 சதவீதம் ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டாலும் தமிழகத்தில் 8 சதவீதம் மட்டுமே வழங்கப்படுகிறது. மின் கட்டணம் உயர்ந்துள்ளதால் ஊராட்சிகளின் வருமானம் செலவிட முடியவில்லை. ஊராட்சி எழுத்தர்களின் நிர்வாக கட்டுப்பாடு தற்போது வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் தான் உள்ளது.

பிறப்பு / இறப்பு சான்றிதழ் வழங்கும் அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். அரசு ஆணைகள் முறையாக ஊராட்சிகளுக்கு அனுப்பப்படல் வேண்டும். 29 அரசுத் துறை சார்ந்த பணிகளை மேற்பார்வையிடும் மற்றும் முடிவு செய்யும் அதிகாரம் வழங்கப்படல் வேண்டும். சுகாதாரம், குடிநீர் வசதிகளுக்காக ஒன்றியங்களிலிருந்து ரூ.40,000 வழங்கப்படுகிறது. மக்கள் தொகை மிகுந்த பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை செய்ய வேண்டும்.

தவறு செய்யும் தலைவரை நீக்கம் செய்திட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் அளிக்கு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 205– க்கு பதிலாக வேறு அதிகாரம் பரிந்துரைக்கப்படல் வேண்டும். 3 அடுக்கு முறை அவசியம். ஊராட்சித் தலைவர், ஒன்றியக்குழுவுடன் கலந்து திட்டங்களை நிறைவேற்றிட ஆவன செய்ய வேண்டும்.

அரசாணைகள் முறையாக கிடைப்பதில்லை. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 1994 205 ஐ நீக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

## திரு.வி. அமிர்தலிங்கம், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர், தலைஞாயிறு, நாகப்பட்டினம் மாவட்டம்

ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தற்போது மதிப்பீடு ரூ. 5/– லட்சத்திற்கு மேல் இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதிக்கு அனுப்பப்படுகிறது. அவைகளை கண்காணிக்கவும் தாமதத்தை தவிர்க்கவும் ஒன்றியக்குழு தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படல் வேண்டும். ஊராட்சித் தலைவர்கள் திட்டப் பணிகளில் நேரடியாக பங்குபெற செய்ய வேண்டும். தவறு செய்யும் அதிகாரிகளை தட்டிக் கேட்கவும் ஊராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். மூன்றடுக்கு ஊராட்சியில் இணக்கமான சூழ்நிலை இல்லை. நியமனக்குழு அமைக்க அதிகாரம் வேண்டும். சத்துணவு மைய பணியாளர் நியமிக்கவும் அதிகாரம் வேண்டும். வாகன பயன்பாட்டிற்காக மாதம் டீசல் 100 லிட்டர் வழங்கப்படுகிறது. பணிகளை மேற்பார்வையிடுவதற்காக செல்வதால் அது ஒரு வாரத்திலேயே செலவாகி விடுகிறது. அதை உயர்த்திட வேண்டும். புதிய வரி விதிப்பு அதிகாரம் வேண்டும்.

மத்திய அரசு 30.5 சதவீத நிதிப் பங்கீட்டை மாநில அரசுகளுக்கு வழங்கி வருகிறது. அதைப் போன்று மாநில அரசும் ஊராட்சிகளுக்கான நிதிப் பங்கீட்டை உயர்த்தி தர வேண்டும். அரசுப் பணிகள் நடைபெறுவதை அறிந்துகொள்ளும்பொருட்டு அதன் விவரங்களை தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாவட்ட ஊராட்சிக் குழுக்களுக்கு ஆந்திரா, மத்தியப் பிரதேசம், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் உள்ளது போன்று சட்டம் இயற்றும் அதிகாரமும் அளிக்கப்படல் வேண்டும். சுக்கான் மலையை அப்புறப்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்ட திட்டக் குழு அமைக்க வேண்டும். அரசமைப்பு சட்டப்படி 29 பொருட்கள் குறித்த அதிகாரம் அளித்திட வேண்டும் என்று தெரிவித்தார்.

## திரு. சந்தானம், தாயில்பட்டி கிராம ஊராட்சித் தலைவர், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்

ஊராட்சிகளுக்கான மின்கட்டண விகிதம் ரூ.3.60 ஒரு யூனிட்டிற்கு என்று உள்ளது, இது கடந்த 5 ஆண்டுகளில் இருமடங்காகி உள்ளது. அதை வீடுகளுக்கு வசூலிக்கப்படும்

விகிதத்தில் குறைக்கப்படல் வேண்டும். நிதி ஒதுக்கீடு 8 சதவீதம் என்று தற்போது உள்ளது 30 சதவீதமாக அதிகரிக்கப்பட வேண்டும். செவிலிப் பணியாளர் பயிற்சி நிலையம் குறைவாக உள்ளது. அரசு அதை அதிகப்படுத்த வேண்டும். முதல் நிலை ஊராட்சி, 2–ஆம் நிலை ஊராட்சி என்று வருமானத்தின் அடிப்படையில் பிரிக்கப்படல் வேண்டும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக 5,000 கிராங்களுக்கு வரும் ஆண்டுகளில் ஒவ்வொரு ஊராட்சிக்கு ரூ.20 லட்சம் வீதம் நிதி ஒதுக்கப்படுகிறது. (இதற்கு அதிகம் நிதி ஒதுக்கப்பட வேண்டும்). கட்டிட விரிவாக்கம் செய்வதற்கான கட்டிட அனுமதி அளிக்கும் அதிகாரம் ஊராட்சிக்கு வழங்க வேண்டும். துப்புரவு பணியாளர் சம்பளம் ரூ. 400/– லிருந்து ரூ. 600/– ஆக உள்ளது.

நமக்கு நாமே திட்டம் கடந்த 1996–2001–ல் இருந்தது. 5,000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சிக்கு ரூ.ஒரு கோடி தேவைப்பட்டால் அதில் 25 சதவீத மக்கள் பங்களிப்பாக அளித்தால் மீதி நிதியை அரசு தரவேண்டும். ரூ.5 லட்சம் வருமானம் ஈட்டும் ஊராட்சிக்கு ரூ.2,000 சம்பளத்தில் ஒரு உதவியாளர் மற்றும் ஒரு வரி தண்டல் வசூலிப்பவரை நியமித்துக் கொள்ளும் அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். பொது நூலக வரியிலிருந்து 10 சதவீதம் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும். தெருவிளக்கு புதிதாக அமைப்பதற்கு ரூ.90,000 தேவைப்படுகிறது. மின் கட்டணம் குறைக்கப்பட வேண்டும். குடிநீர் அல்லது தெருவிளக்கு இவற்றில் ஏதாவது ஒன்றிற்காவது இலவசமாக மின் கட்டணம் தரப்பட வேண்டும். கிராம சபை கூட்டம் தற்போது வருடத்திற்கு 4 முறை கூட்டப்படுவதற்கு பதிலாக 2 முறை கூட்டப்படல் வேண்டும் என்று தெரிவித்தார்.

### திரு. காந்தி செல்வன், மாவட்ட ஊராட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம்

அனைத்துத் துறை திட்டப் பணிகளையும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களின் ஒப்புதலுடன் நடைபெற செய்திட வேண்டும். நிர்வாக அதிகாரம் மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். தற்போதுள்ள மாவட்ட ஆட்சியர் மாவட்ட திட்டக்குழு தலைவராக இருப்பதற்கு பதிலாக மாவட்ட ஊராட்சி தலைவரே, மாவட்ட திட்டக்குழுத் தலைவராக இருக்க வேண்டும். 29 பொருட்கள் குறித்து மாவட்ட ஊராட்சிக்கு நிர்வாக கட்டுப்பாட்டு அதிகாரம் தேவை.

சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்ட நிதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்ட நிதி ஒதுக்கீடு போன்று மாவட்ட மேம்பாட்டு நிதியாக ரூ.3 கோடி தரவேண்டும். 2 அல்லது 3 ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்கள் மாவட்ட ஊராட்சியில் பங்கு பெற செய்ய வேண்டும். அதே போன்று ஊராட்சித் தலைவர்களும் ஒன்றியக்குழுவில் உறுப்பினராக இடம்பெற செய்ய வேண்டும். மாவட்ட ஊராட்சியின் நிதி ஒதுக்கீட்டில் 5 சதவீதம் நிர்வாக செலவிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதை உயர்த்தி 10 சதவீதமாக ஆக்க வேண்டும். மாநில நிதிக் குழு மான்யம்

தற்போதுள்ள 8 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக உயர்த்தப்படல் வேண்டும். 29 துறை சம்பந்தப்பட்ட பணிகள் வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தப்படுவதால் கள ஆய்வு செய்து மேற்பார்வையிட்டு திட்ட குறிப்பு அனுப்ப வழிவகை செய்ய வேண்டும். கிராமப்பறங்களில் சுகாதார மேம்பாட்டிற்காக நகர்ப்புறங்களுக்கு வழங்கப்படுவது போல ரூ.10 லட்சம் ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும். சோடியம் ஆவி விளக்குகளுக்கு பதிலாக குழல் விளக்குகள் போடப்பட வேண்டும். மாவட்ட ஊராட்சிக்கு தனி பணி அமைப்பு ஏற்படுத்த வேண்டும். மாவட்ட திட்டக் குழு முழுமையாக பணியாற்ற ஆவன செய்திட வேண்டும் என்று தெரிவித்தார்.

### திரு. தமிழருவி மணியன், உறுப்பினர், மாநில திட்டக்குழு, சென்னை

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக 12,618 கிராமங்களுக்கு வரும் ஆண்டுகளில் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ரூ.20 லட்சம் வீதம் மொத்தம் ரூ.2,500 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது. இதை நிதிப் பங்கீடு மற்றும் செயல் பங்கீடு என பிரிக்கலாம். மத்திய அரசு பரிந்துரைத்தவாறு ஒரு ஊராட்சிக்கு ஒரு செயலர், ஒரு கணக்காளர் மற்றும் 2 உதவியாளர்களை (ஒருவர் களப்பணி, ஒருவர் அலுவலகப் பணி) நியமிக்க வழிவகை செய்யயப்பட வேண்டும். நமது மாநிலத்தில் ஒரு ஊராட்சியில் ஒரு உதவியாளர் மட்டுமே ரூ.1200 முதல் ரூ.1600 ஊதியத்தில் உள்ளார். தண்டல் ஊழியர் நியமன முறை கேரள மாநிலத்தில் உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுபோன்று சிலர் உள்ளனர். வீட்டு வரி போன்றவை வசூலிப்பது , 31 கணக்குகளை பராமரிப்பது ஒருவரால் மட்டுமே முடியாது. காசோலை கையெழுத்திடுவதில் தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருக்கலாம். தலைவரும் செயலரும் சேர்ந்து கையெழுத்திடுவதால் தவறுகள் நடக்க வாய்ப்பு உள்ளது.

புறம்போக்கு நிலம், நத்தம் புறம்போக்கு, ஆற்று புறம்போக்கு, வாய்க்கால் புறம்போக்கு போன்று பல வகையான புறம்போக்கு உள்ளது. அவைகளை உரிய முறையில் வருவாய்த் துறையினரிடமிருந்து பெறப்பட்டு ஊராட்சிக்கு வருமானம் தரும் சொத்துக்களாக மாற்றி கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பிறப்பு/ இறப்பு சான்றிதழ் ஊராட்சிகளே வழங்க ஆவன செய்யப்பட வேண்டும். சாதி சான்றிதழ் தவிர மற்ற சான்றிதழ்கள் வழங்க பரிசீலனை செய்யலாம். மற்ற சான்றிதழ்கள் பெற வரும்போது வீட்டு வரி கட்டியிருந்தால்தான் சான்றிதழ்கள் தரப்பட வேண்டும் என்ற நிலையை உருவாக்கினால்தான் வீட்டுவரியை 100 சதவீதம் வசூல் செய்ய முடியும்.

மானிய பங்கைப் பொறுத்தவரை மாநில நிதிக் குழு மானிய 8 சதவீதமாக உள்ளது. இவை கேரளா, மேற்கு வங்கத்தில் 30 முதல் 40 சதவீதமாக உள்ளது. நமது மாநிலத்திலும் அவை 30 சதவீதமாக்கப்பட வேண்டும். வேளாண்மைத் துறை வளர்ச்சித் துறையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். குடிநீர் விநியோகம் , துப்புரவு பணி, பணியாளர் நியமனம் போன்றவை பரிசீலிக்கப்பட வேண்டும்.

மக்கள் தொகை அடிப்படையில் 500 முதல் 20,000 வரையிலான ஊராட்சிகள், ஊராட்சி எழுத்தர்களை நியமித்துக் கொள்ளும் அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். மின் கட்டண செலவிற்காக ஊராட்சி நிதியிலிருந்து 50 சதவீதம் போய் விடுகிறது. இப்படி இருந்தால் வளர்ச்சித் திட்டங்கள் திறம்பட ஆற்றிடுதல் கடினம்.

சூரிய விளக்குகள் அமைக்க ரூ. 20,000 முதல் ரூ. 30,000 ஆகிறது. உத்தேசமாக ஒவ்வொரு ஊராட்சிக்கும் 100 முதல் 500 தேவைப்படுகிறது. இப்படி செய்வதால் மின் கட்டணம் குறையும். எனவே 50 சதவீத மான்யம் வழங்கப்பட வேண்டும். கேபிள் டிவி இணைப்புக்கான வசூல் உள்ளாட்சி அமைப்புகளிடம் இருக்க வேண்டும்.

அய்யன் திருவள்ளுவர் நூலகம் ஒவ்வொரு ஊராட்சியிலும் சொந்த கட்டிடத்தில் அமைக்கப்பட வேண்டும். நூலகரை உள்ளூர்காரராக தேர்வு செய்து நியமிக்கும் அதிகாரம் தலைவருக்கு வேண்டும். வண்ண தொலைக்காட்சி அளிக்கும் நேரத்தில் அனைத்து பிரிவினருக்கும் இலவச மின் இணைப்பு கிடைக்க வழி வகை செய்யப்பட வேண்டும். பிற்பட்ட வகுப்பினருக்கான ஈமச்சடங்கு தொகை ரூ.500லிருந்து ரூ.1000 ஆக உயர்த்த வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பாராளுமன்ற மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி மேம்பாடு நிதியாக சுமார் ரூ. 114 கோடியாக உள்ளது. அதில் உள்ள அனைத்து பணிகளுக்கும் வரையறுக்கப்பட்ட பணிகளாக இருக்க வேண்டும். 3 அடுக்கு ஊராட்சி முறையில் ஒரு இணைப்பு இல்லாமல் அடுத்த கட்ட ஊராட்சிகளில் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருப்பதை குறிப்பிட்டார்.

**பேராசிரியர். டாக்டர். பழனிதுரை, காந்தி கிராம பல்கலைக் கழகம், திண்டுக்கல்.**

இதுவரை ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டனவா என்பதை பார்க்க வேண்டும். இது வரை போடப்பட்ட சட்டத்தை நாம் எந்த அளவு முறையாக, முழுமையாக, தகுந்த அளவில் புரிந்து கொண்டோம். எந்த அளவு கைகொள்ளப்பட்டது. ஊராட்சித் தலைவர்களுக்கு தெளிவு படுத்தப்பட்டது என்பதை பார்க்க வேண்டும்.

இதுவரை போடப்பட்ட சட்டங்கள் எல்லாம் ஊராட்சி நிர்வாகத்திற்கு மட்டுமே போடப்பட்டதாக இருக்கிறது. அவற்றை சமூக மேம்பாடு, மனித மேம்பாடு மற்றும் சமூக நீதியாக கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. தமிழ்நாடு தேசிய அளவில் பல விருதுகளை பெற்றுள்ளது.

இத்துறையை பொறுத்தவரை அமைச்சர் முக்கியமானவராகவும் முக்கிய துறையையும் வகிப்பதால் பொறுப்புள்ள துறையாக இது விளங்குகிறது. அதே போன்று துறை செயலரும் ஆழ்ந்து கவனமாக சிந்தித்து திட்டங்களை தீட்டி செயல்படுத்துவதில் துறை மென்மேலும் வளர்ச்சியடைகிறது. இயக்குநரும் மக்களிடம் நல்ல பெயர் பெற்றிருப்பதால் சிறப்பாக இருக்கிறது. சுகாதார கழிப்பிடம் கட்டுவது பற்றி கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால் சுகாதார கலாச்சாரம்

மக்களிடம் எந்தளவுக்கு வளர்ந்துள்ளது என்பது ஆராயப்பட வேண்டும். மாவட்ட ஊராட்சி ஒரு ஆலோசனை வழங்கும் அமைப்பாக மட்டும் உள்ள நிலைமையை மாற்ற வேண்டும்.

இந்த உயர்மட்டக் குழுவின் தொடர்ச்சியாக, ஒரு வெப் சைட் தொடங்குவதன் மூலம் பலரது கருத்துக்களை கேட்டறிவதாலும், துணைக் குழு உருவாக்கப்படுவதன் மூலமும், அதற்கு துணையாக ஒரு சிறு செயலகம் (Mini Secretariat), இயக்குநரகத்தில் துவங்குவதன் மூலம் இக்குழு ஒரு சிறப்பான அறிக்கையை தயார் செய்து ஊராட்சி அமைப்புகளை மேலும் செம்மைப்படுத்த முடியும்.

உயர்மட்டக் குழுவின் முதல் கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயலர் திரு. க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., அவர்கள் நன்றி தெரிவித்து பேசினார். அச்சமயம் உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட சில முக்கியமான இனங்களுக்கு விளக்கம் அளித்தார்.

1. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1958 ன்படி கிராம ஊராட்சித் தலைவர்கள், ஒன்றியக் குழு உறப்பினர்களாக இருந்து வந்துள்ளார்கள். ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். மாவட்ட அளவில் ஊரக மற்றும் நகராட்சி அமைப்புகளுக்கு மாவட்ட வளர்ச்சி மன்ற குழு இருந்து வந்தது. ஆனால் தற்போதைய மூன்றடுக்கு ஊராட்சி முறையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடம் தொடர்பு எதுவும் இல்லாத நிலை உள்ளது.

2. 1996 ல் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடைபெற்ற தேர்தலுக்குப்பின் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு பங்கேற்பு எதுவும் இல்லாததால், கிராம ஊராட்சித் தலைவர்கள் காசோலையில் கையொப்பம் பெறுவதற்காக மட்டும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வரும் சூழ்நிலையை மாற்றி கிராம ஊராட்சிகள் கணக்குகள் தனியாக துவங்கவும் மற்றும் கிராம ஊராட்சித் தலைவரும் துணைத்தலைவரும் காசோலையில் சேர்ந்து கையொப்பமிடும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. கிராம ஊராட்சிகளுக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டு இருந்தும் கிராம ஊராட்சித் தலைவர்கள் தற்போது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பற்றி தெரியாது இருக்கிறார்கள்.

3. கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் முறையே ரூ. 1 லட்சம், ரூ.5 லட்சம், ரூ.10 லட்சம் அளவிற்கு தங்களது சொந்த நிதியிலிருந்து பணிகளை எடுத்துச் செய்ய அதிகாரம் இருந்த போதிலும் சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சொந்த நிதிப் பணிகளுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரின் நிர்வாக அனுமதி குறித்து வலியுறுத்துவது தவறானது என்று தான் ஏற்கனவே அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டார். உள்ளாட்சி

அமைப்புகள் தங்களது திட்ட ஒதுக்கீட்டினை உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப பங்கீடு செய்யாது மொத்த ஒதுக்கீட்டில் சில பெரிய பணிகளை எடுத்துச் செய்ய வேண்டும் என செயலர் வலியுறுத்தினார். மின் வாரியத்திற்கும், கூட்டுக் குடிநீர் திட்டத்திற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் செலுத்த வேண்டிய கட்டணம் ஊராட்சிகளின் வருமானத்தில் 60 – 70 சதவீதம் இருப்பதால் மின்சார கட்டணம், பணியாளர் அமைப்பு, கணக்குகள், தணிக்கை, சுகாதாரம் போன்றவற்றை சீர்படுத்த (rationalize) நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் வரும் மார்ச் 13, 2007 அன்று தமிழ்நாடு மின் வாரியத்துடன் மின்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசனைக் கூட்டம் நடத்தவிருப்பதாக சொன்னார்.

4. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள புறம்போக்கு நிலங்களின் வகைப்பாடுகள் மற்றும் கிராம வரைபடம் ஏற்கனவே 2 அல்லது 3 முறை ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தேவையெனில் பொதுநலன்களுக்காக ஊராட்சி புறம்போக்குகளை கிராம ஊராட்சிகள் உபயோகிக்கலாம் என்றும் கூறினார்.

5. அதிக மக்கள் தொகை மற்றும் அதிக வருமானம் உள்ள ஊராட்சிகளுக்கு தனியான பணியாளர் அமைப்பு ஏற்படுத்தப்படும். ஊராட்சிகள் தங்களுடைய சொந்த நிதியிலிருந்து எடுக்கப்படும் பணிகளுக்கு உச்சவரம்பு உயர்த்தப்படும் என்றும், எனினும் திட்ட நிதிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் நிர்வாக அனுமதி பெறுவது தொடர்ந்து வலியுறுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

6. மூன்றடுக்கு அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு பயிற்சி வழங்குவதற்காக மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் இதற்காக 3 பயிற்சிக் கையேடுகள் தயாரிக்கப்பட்டு, வரும் 18.3.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார்.

7. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 205 பற்றி குறிப்பிடுகையில் இந்த பிரிவானது நிதி கையாடல் செய்யும் ஊராட்சித் தலைவர்கள்மீது மட்டுமே பிரயோகிக்கப்படுவதாகவும் இதற்கான மேல்முறையீடு அரசிடம் உள்ளதால் இதுபற்றி கிராம ஊராட்சித் தலைவர்கள் கவலைப்பட தேவையில்லை என்று கூறினார்.

8. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அனைத்து ஊராட்சிகளுக்கும் ரூ.20 லட்சம் அடுத்த 5 ஆண்டுகளில் வழங்கப்படுவது குறித்தும் அதன் தேர்வு முறை பற்றியும் விளக்கும்போது கடந்த 3 ஆண்டுகளில் கிராம ஊராட்சிகளின் வருவாய் அடிப்படையில் தனிநபர் வருமானம் ( per capita Income) கணக்கிடப்பட்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் நலிவடைந்த 5ல் ஒரு பங்கு

ஊராட்சிகளுக்கு ஆண்டுதோறும் முன்னுரிமை அளிக்கப்பட்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

9. மேலும் மாநில நிதிக்குழு மான்யம் மற்றும் மத்திய நிதிக்குழு மான்யம் ஆகிய மான்யங்கள் மக்கள் தொகை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுவதால், மக்கள் தொகை அதிகமாகவுள்ள ஊராட்சிகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு கிடைக்கிறது. மக்கள் தொகை குறைவாக உள்ள ஊராட்சிகள் குறைந்த தொகையையே பெற்று வருகின்றன. எனவே, நலிவடைந்த ஊராட்சிகளுக்கு பெரிய பணிகள் எடுத்துச் செய்ய கணிசமான நிதி ஒதுக்கீட்டில் பணிகள் மேறகொள்வதற்கு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பெரிதும் உதவும் என தெரிவித்தார்.

10. 18.3.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நடத்தப்படும் கருத்தரங்கில் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான பயிற்சிக் கையேடு, அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகளின் தொலைபேசி மற்றும் முகவரி தொகுப்பு மற்றும் 2006–07ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஊராட்சிகள் சட்டம் மற்றும் திருத்தம், விதி மற்றும் திருத்தம் மற்றும் அரசு ஆணைகள் தொகுப்பு ஆகியவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்படும் என தெரிவித்தார்.

11. இக்குழுவின் கூட்டம் மீண்டும் கூட்டப்படும் என்றும் தெரிவித்தார்,.

இறுதியாக ஊரக வளர்ச்சி இயக்குனர் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறி கூட்டத்தினை முடிவு செய்தார்.

ஒம்/ ககன்தீப் சிங் பேடி,
இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி

ஒம்/ க. அஷோக்வர்தன் ஷெட்டி,
அரசு செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**18.3.2007 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பங்கேற்புடன் சென்னையில் நடைபெற்ற உள்ளாட்சித் தலைவர்கள் கருத்தரங்கில் மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்கள்**

## மாவட்ட ஊராட்சித் தலைவர்களின் கருத்துக்கள்

1. மாவட்ட ஊராட்சியின் நிதி நிலையை மேம்படுத்த மாவட்ட ஊராட்சிக்கு சொந்தமான இடங்களில் உள்ள கடைகள் மற்றும் உணவு விடுதிகளை வாடகைக்கு விடுவதன் மூலம் நிதி ஆதாரத்தினைப் பெருக்கிக் கொள்ளலாம். மேலும், நிர்வாக செலவினத்திற்கு ஒரு ஆண்டிற்கு ரூ.15,00,000/– க்குள் செலவிடப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் தான் மாவட்ட ஊராட்சித் தலைவர் அலுவலக வாகனத்திற்கான எரிபொருள், அலுவலக மற்றும் இல்ல தொலைபேசி கட்டணம் செலுத்தப்படுகிறது. மேலும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு அமர்வுப்படி, நிர்ணயிக்கப்பட்ட பயணப்படி, பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் இதர படிகளும் வழங்கப்படுகின்றன. இத்தொகை போதுமானதாக இல்லை. எனவே, ஒரு ஆண்டிற்கு மாவட்ட ஊராட்சியின் நிர்வாக செலவினமாக ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் படலாம். முன்னாள் மாவட்டக் கழகத்தின் சொத்துக்கள் நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை போன்ற துறைகள் வசம் உள்ளன. அவற்றை மீண்டும் மாவட்ட ஊராட்சிக்கு திரும்ப பெற வேண்டும்.

2. மாவட்ட ஊராட்சி மூலமாக பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் மாவட்ட ஊராட்சி செயலர் பதவியினை இணை இயக்குநர் நிலைக்கு உயர்த்தவும் மற்றும் மாவட்டஊராட்சி அலுவலகத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் உதவியாளர்கள் பணியிடங்களை கூடுதலாகவும் ஏற்படுத்த வேண்டும்.

3. மாநில திட்டக்குழுவின் உறுப்பினர்களாக மாவட்ட ஊராட்சித் தலைவர்களையும் நியமிக்கலாம்.

4. கல்வி நிலையங்களில் அமைக்கப்படும் பெற்றோர் ஆசிரியர் கழகங்களை இணைத்து மாவட்ட திட்டக்குழுவில் துணைக்குழு அமைக்கப்பட்டு, கல்வி நிலையங்களின் வளர்ச்சிக்கு மாவட்டத் திட்டக் குழு உறுப்பினர்களைப் பயன்படுத்தலாம்.

5. விவசாயம் மற்றும் விவசாய விரிவாக்கத்தை கூட்டுறவு விவசாய சங்கங்கள் மூலம் மாவட்ட ஊராட்சிகளின் பங்கேற்புடன் வழங்க வழிவகை செய்ய வேண்டும்.

6. சிறுபாசனம், நீர் மேலாண்மை, நீர்ப்பிடிப்பு மேம்பாடு ஆகியவற்றில் ஏரி, குளம், ஆறு, பாசன வாய்க்கால் மூலம் கிடைக்கும் நீரை ஒழுங்குபடுத்தி அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்க மாவட்ட ஊராட்சிக்கு கண்காணிக்கும் அதிகாரம் வழங்க வேண்டும்.

7. சமூக காடுகள் மற்றும் பண்ணைக்காடுகளை நிர்வகிக்கும் பொறுப்பை மாவட்ட ஊராட்சி மற்றும் வனத்துறை ஆகிய இரு துறைகளுக்கும் பகிர்ந்து அளித்து கண்காணிக்க வேண்டும்.

8. சிறுதொழில், உணவுப்பதப்படுத்துதல், போன்ற தொழில்களுக்கான உரிமங்கள் வழங்குவது, வரிவசூல் செய்வது போன்றவற்றை மாவட்ட ஊராட்சிக்கு அளிக்க வேண்டும்.

9. மாவட்ட ஊராட்சியின் மூலம் வீட்டுவசதிச் சங்கம் ஏற்படுத்தி அதன் மூலம் அனைத்து மக்களுக்கும் குடியிருப்பு, வீட்டு வசதி செய்ய வழிவகை செய்ய வேண்டும்.

10. குடிநீர் பராமரிப்பு பொருத்தவரை தண்ணீர் வரி வசூல் செய்ய மாவட்ட ஊராட்சிக்கு அதிகாரம் வழங்க வேண்டும்.

11. காய்கறிகள் பழங்களைச் சேமிக்க மாவட்டம் தோறும் குளிர்சாதன சேமிப்பு கிடங்குகள் அமைக்க வேண்டும்

12. ஏரிகள் அனைத்தும் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தூர்வாரி கரைகள் சீரமைக்கப்பட வேண்டும்

13. குளம், வாய்கால், ஏரிகளில் உள்ள ஆக்கிரமைப்புகளை அகற்ற வேண்டும். மேலும், அப்பகுதிகளில் இலவச பட்டா வழங்கப்படுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

14. கடலோர மாவட்டங்களில் கடலில் மீன் பிடிப்பு தொழில் செய்ய மீன்பிடிப்பு துறைமுகங்கள் அமைத்துப் பராமரிக்க மாவட்ட ஊராட்சிக்கு அதிகாரம் அளிக்க வேண்டும்.

15. கிராமங்களிலிருந்து மக்கள் குடிபெயர்வதைத் தடுக்க ஒவ்வொரு வட்டாரத்திலும் வேளாண்சார் மற்றும் உணவு பதப்படுத்தும் சிறுதொழில்களை மாவட்ட ஊராட்சிகளின் பரிந்துரையுடன் அரசு துவங்க வேண்டும்.

16. உள்ளாட்சி பணியாளர்களுக்கு அவர்களுடைய பணி மற்றும் ஈடுபாடு குறித்து ஆண்டுக்கொரு முறை பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.

17. மாவட்ட ஊராட்சி தலைவர்களுக்கு என தனி உதவியாளர் (Personal Assistant) மற்றும் அலுவலக பணிகளை மேற்கொள்ள கணக்கர் மற்றும் இரவுகாவலர்களை பணி அமர்த்துதல்.

18. குடிசைகள் அனைத்தையும் தீப்பிடிக்காத ஓட்டு வீடுகளாக கிராமங்கள் தோறும் மாற்ற வேண்டும்.

19. மத்திய அரசால் வழங்கப்படும் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளை அந்தந்த மாவட்டத்திற்கு ஏற்றவாறு மாற்றம் செய்ய வழிவகைகள் வேண்டும்

20. தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் ஊராட்சி தலைவர்கள் மூலம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டம் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. எனவே அதற்கு பதிலாக மாவட்ட ஊராட்சி மூலம் வேறு திட்டங்கள் செயல்படுத்தபடவேண்டும்.

21. மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் தங்களை தேர்ந்தெடுத்த பகுதி மக்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க பணியினை மேற்கொள்ள மாற்றுத் திட்டங்கள் வழங்கப்படவேண்டும்.

22. நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களைத் தவிர்த்து இதர திட்டங்களைச் செயல்படுத்தவும், ஆலோசனை வழங்கவும், பணியினை தேர்வு செய்திடவும் மாவட்ட ஊராட்சிக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும்.

23. மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட படியினை உயர்த்தி மாதம் ஒன்றுக்கு ரூ.5000/– ஆக வழங்கப்படவேண்டும்.

24. மாவட்ட ஊராட்சித் தலைவர்களின் அலுவலக அறை மற்றும் சீருந்த்திற்க்கு குளிர்சாதன வசதி செய்யப்படவேண்டும் மேலும் எரிபொருள் மாதாந்திர அளவினை அதிகப்படுத்த வேண்டும்.

## ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களின் கருத்துக்கள்

**I ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை :**

1 மாநில நிதிக்குழுவின் பகிர்வு மான்யத்தில் ஊராட்சி ஒன்றியங்களின் பங்கினை உயர்த்துதல்

2 வணிக வளாகம் / கடைகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து அதன் மூலம் ஒன்றியங்களின் சொந்த வருவாய் பெருக்குதற்கு வழி வகை செய்திட வேண்டும்.

3 பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் சாலை மேம்பாடு / வடிகால் அமைத்தல் திட்டங்கள் அனைத்தும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்தப்படவேண்டும்.

4 பல்வேறு துறைகளால் ஊராட்சி ஒன்றியங்களில் உருவாக்கப்படும் சந்தைகள் / கடைகளை ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்கப்படவேண்டும்.

5 ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலுள்ள பணியிடங்களை நியமனக்குழுக்கள் மூலம் நிரப்புதல் வேண்டும்.

6 வீடுகள் மற்றும் கட்டிடங்களுக்கான வரைபட அனுமதி, மனைப்பிரிவு அனுமதி ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் வழங்குதல் வேண்டும்.

7 புதிய பேருந்து வழித்தடங்கள் உருவாக்கும்போது ஊராட்சி ஒன்றியங்களின் ஆலோசனை பெறப்பட வேண்டும்

8 பல்வேறு துறைகள் மூலம் ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்பு திட்டங்கள், மத்திய அரசு மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் முதலியவற்றை ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும்.

9 பல்வேறு திட்டங்களுக்கான பயனாளிகள் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும்.

10 சந்தைகள் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படவேண்டும்.

11 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஓட்டுநர், இரவுக் காவலர் ஆகிய கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்யும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் .

12 ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளை உள்ளடக்கிய ரூ.50/– இலட்சத்துக்கும் குறைவான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் உதவிப் பொறியாளர் (குடிநீர் வழங்கல்) மூலம் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் செயல்படுத்த ஆணையிட வேண்டும்.

## II பள்ளி கல்வித் துறை

13 பள்ளிக்கூடங்கள் மற்றும் தளவாட சாமான்கள் பராமரிப்பிற்காக தனியே நிதி ஒதுக்கீடு செய்து அதை ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவே செயல்படுத்த வேண்டும்.

## III சுகாதாரம் மற்றும் நல வாழ்வு

14 மகப்பேறு மற்றும் குழந்தைகள் சுகாதார மையங்களை மேற்பார்வையிடும் அதிகாரம் வழங்குதல் வேண்டும்.

## IV சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை

15 சத்துணவு மையங்களை ஊராட்சிகளில் ஏற்படுத்துதல் மற்றும் அம்மையங்களை ஆய்வு செய்யும் அதிகாரத்தினை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்குதல் வேண்டும்.

16 பணிக்கு செல்லும் மற்றும் உடல் நலமில்லாத தாய்மார்களின் குழந்தைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள காப்பகங்களை மேற்பார்வையிடும் அதிகாரத்தை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளித்தல் வேண்டும்.

## V கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு நலத்துறை

17 பொது விநியோக கடைகளின் செயல்பாட்டினை கண்காணிக்கவும், கட்டுபடுத்தவும் தேவையான அதிகாரத்தினை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க வேண்டும்.

## VI நிதித்துறை

18 ஆயுள் / மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு நடைமுறைபடுத்திட வேண்டும்.

19 தற்போதுள்ள விலைவாசி உயர்வை கருத்தில் கொண்டும், பேருந்து கட்டண உயர்வை கருத்தில் கொண்டும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு பயணப்படி / அமர்வு படி உயர்த்திட வேண்டும்.

## VII வேளாண்மைத் துறை

20 வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்த வேண்டும் .

21 வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த ஆலோசனைகள் வழங்கும் அதிகாரம் வழங்க வேண்டும் .

## VIII வருவாய்த்துறை

22 மணல் குவாரிகள் மற்றும் சிறுகனிம குவாரிகளை கண்காணிக்கும்/ஆய்வு செய்யும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க வேண்டும்.

## IX பொதுப்பணித்துறை

23 வேலைகளுக்கான குளங்கள் தேர்வு செய்யும் அதிகாரத்தை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளித்தல்

24 குளங்கள் வெட்டுவது, ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல் தொடர்பான அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்க வேண்டும்.

## X கால்நடை பராமரிப்பு துறை

25 புதியதாக கால்நடை மருத்துவ மனைகள் அமைத்தல் மற்றும் கிளை நிலையங்களை தரம் உயர்த்துதல் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியங்களின் பரிந்துரையுடன் செயல் படுத்த வேண்டும்.

## XI சிறு தொழில்கள்

26 தொழில் பேட்டைகளையும், வளர்ச்சி நிலையங்களையும் அமைத்தல்

27 ஊராட்சி பகுதிகளில் சிறு தொழில்கள் துவங்குவதற்கு அனுமதி மற்றும் உரிமம் வழங்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க வேண்டும்.

28 தொழில் முனைவோர் மேம்பாடு திட்டத்தில் ஊராட்சி பகுதிகளில் பயனாளிகள் தேர்வு செய்யும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கும் உயர் நிலைக் குழுவின் தலைவர் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஈரோடு ( 24.7.07) ,திருச்சிராப்பள்ளி(25.7.07) திருவண்ணாமலை (3.8.07) மற்றும் விருதுநகர்(23.8.07)ல் நடைபெற்ற கிராம ஊராட்சித் தலைவர்களின் மண்டல மாநாட்டில் பெறப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு.

| வ. எண் | பரிந்துரைகளின் விபரம் | பரிந்துரைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| I | **ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை :** | |
| 1 | ஊராட்சி பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் வழங்க வேண்டும். | 5424 |
| 2 | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் முழுமையாக ஊராட்சிகள் மூலம் செயல்படுத்த வேண்டும். | 1250 |
| 3 | வணிக வளாகம் / கடைகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து நிதி உள்ள ஊராட்சிகள் சொந்த நிதியில் கட்டிக் கொள்ளவும் அனுமதித்து அதன் மூலம் ஊராட்சிகளில் வருவாய் பெருக்குதற்கு வழி வகை செய்திட வேண்டும். | 1207 |
| 4 | கிராமப்புற பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டங்களையும் ஊராட்சிகள் மூலம் செயல்படுத்த வேண்டும். | 987 |
| 5 | கேபிள் டி.வி நடத்த உரிமம் வழங்கும் அதிகாரத்தையும் அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தையும் ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 965 |
| 6 | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம் மற்றும் பிற துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் குடிநீர் வழங்கல் திட்டங்கள் அனைத்தும் ஊராட்சிகளின் பரிந்துரைகளின் அடிப்படையிலும், ஊராட்சிகள் மூலமும் செயல்படுத்தப்பட வேண்டும். | 963 |
| 7 | கிராம ஊராட்சிகளின் வங்கிக் கணக்கு காசோலைகளில் துணைத்தலைவர் கூட்டு கையொப்பம் இடுவதினைத் மாற்றி வட்டார வளர்ச்சி அலுவலரை இரண்டாம் கையொப்பமிடும் அலுவலராக்கி உத்தரவு வழங்க வேண்டும். | 846 |
| 8 | பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் சாலை மேம்பாடு / வடிகால் அமைத்தல் திட்டங்கள் அனைத்தும் ஊராட்சிகள் பரிந்துரையுடன் செயல்படுத்தப்படவேண்டும். | 649 |
| 9 | ஊராட்சி பகுதிகளில் செயல்படும் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு வீட்டுவரி விதித்தலைக் கட்டாயமாக்க வேண்டும். | 636 |
| 10 | பல்வேறு துறைகளால் கிராம ஊராட்சிகளில் உருவாக்கப்படும் சந்தைகள் / கடைகளை ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் ஊராட்சிக்கு வழங்கப்படவேண்டும். | 503 |

| | | |
|---|---|---|
| 11 | கிராம ஊராட்சி பகுதிகளில் நடைபெறும் அனைத்து துறை சார்ந்த பணிகளையும் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடும் அதிகாரம் ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 427 |
| 12 | மரபுசாரா எரிசக்திகளான சூரிய விளக்குகள், தாவர சக்தி எரிவாயுக்கலன்கள், சாண எரிவாயு கலன்களை அமைத்தல் ஆகியவற்றை ஊராட்சிகள் மூலம் செயல்படுத்த வேண்டும். | 398 |
| 13 | ஏற்கனவே, மனைப்பிரிவிற்கு தடையின்மை சான்று வழங்கும் அதிகாரம் இருந்ததைப் போன்று மீண்டும் மனைப்பிரிவிற்கு தடையின்மை சான்று வழங்கும் அதிகாரத்தை கிராம ஊராட்சித் தலைவருக்கு வழங்க வேண்டும். | 328 |
| 14 | சமூக நலத்துறை ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் செயல்படுத்தும் மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் தனி நபர் திட்டங்களை ஊராட்சியின் மூலமே செயல்படுத்தப்பட வேண்டும். | 322 |
| 15 | புதிய பேருந்து வழித்தடங்கள் உருவாக்கும்போது ஊராட்சிகளின் ஆலோசனை பெறப்பட வேண்டும். பேருந்து சாலை வரியில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு சாலை பயன்பாட்டிற்காக பங்குத் தொகை அளிக்க வேண்டும். | 311 |
| 16 | பல்வேறு துறைகள் மூலம் ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்பு திட்டங்கள், மத்திய அரசு மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் முதலியவற்றை ஊராட்சிகள் மூலமே செயல்படுத்தப்பட வேண்டும். | 298 |
| 17 | ஊராட்சி பணியாளர்களை பணி நீக்கம் செய்யவும் மற்றும் கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்யவும் கிராம ஊராட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். | 229 |
| 18 | கட்டிடங்களுக்கு மின் இணைப்பு பெற ஊராட்சியில் தடையின்மை சான்று அடிப்படையில் வழங்க வேண்டும். | 170 |
| 19 | சந்தைகளையும் / கடைகளுக்கான பயனாளிகளைத் தேர்வு செய்யும் அதிகாரத்தை வழங்க வேண்டும். | 158 |
| 20 | ஒழுங்கு முறை விற்பனை கூடம் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் கிராம ஊராட்சித் தலைவர்கள் பதவி வழி உறுப்பினர்களாக நியமிக்கப்படவேண்டும். | 109 |
| II | **மின்சார வாரியம்** | |
| 21 | ஊராட்சிகளின் மின்கட்டணத்தை அரசு ஏற்று ஊராட்சியின் நிதிச்சுமையைக் குறைக்க வேண்டும். | 5417 |
| 22 | ஊராட்சிகளின் மின் கம்பங்களுக்கு CFL விளக்குகள் பொருத்துதல் | 693 |
| 23 | தெரு விளக்குகள் பராமரித்தலுக்கு இன்றைய சந்தை நிலவரப்படி பராமரிப்பு செலவுக்கென தனி நிதி ஒதுக்கீடு வழங்க வேண்டும். | 497 |

| | | |
|---|---|---|
| 24 | ஊராட்சிகளுக்கான மின்கட்டணத்தை வீட்டு இணைப்புகளுக்கான குறைந்தபட்ச மின் கட்டண விகிதத்தில் நிர்ணயம் செய்தல் வேண்டும். | 355 |
| 25 | நீர் இறைக்கும் விசை பம்புகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதை ஊராட்சிகள் மூலம் செயல்படுத்தும் அதிகாரத்தை வழங்க வேண்டும். | 276 |
| 26 | ஒரு குடிசை ஒரு மின்விளக்கு திட்டத்தை ஊராட்சிகள் மூலம் செயல்படுத்தும் அதிகாரத்தை கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்க வேண்டும். | 191 |
| 27 | ஒரு குடிசை, ஒரு விளக்கு திட்டத்தினை ஊராட்சிகள் மூலம் செயல்படுத்த அதிகாரத்தை வழங்க வேண்டும். | 39 |
| III | **பள்ளி கல்வித் துறை** | |
| 28 | கிராம ஊராட்சிகளில் உள்ள பள்ளிகளின் செயல்பாட்டை கண்காணிக்கும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 384 |
| 29 | கிராம ஊராட்சி பகுதிகளில் உள்ள பள்ளிகளின் தரம் உயர்த்துதல் மற்றும் மாற்றம் செய்ய கிராம ஊராட்சிகளின் பரிந்துரையின் அடிப்படையில் செய்ய வேண்டும். | 155 |
| 30 | பள்ளிக்கட்டடங்கள் மற்றும் தளவாட சாமான்கள் பராமரிப்பிற்காக தனியே நிதி ஒதுக்கீடு செய்து அதை ஊராட்சிகள் மூலமாகவே செயல்படுத்தப்பட வேண்டும். | 60 |
| 31 | ஊரக விளையாட்டினை மேம்படுத்த வழங்கப்படும் மத்திய மாநில ஆணையங்களின் நிதி உதவியினை ஊராட்சிகளின் மூலம் வழங்க வேண்டும். | 47 |
| 32 | நூலகம் மற்றும் படிப்பக கட்டிடங்கள் கட்டும் கட்டுமான பணிகளை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 39 |
| 33 | நூலகங்களை நிர்வகிக்கும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 13 |
| IV | **வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி** | |
| 34 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மூலம் புதிய தொழில் பயிற்சி நிறுவனங்கள் தொடங்கப்படும் போது கிராம ஊராட்சிகளின் ஆலோசனை பெறப்பட வேண்டும். | 124 |
| 35 | கிராம ஊராட்சிகளில் தொழில் பயிற்சி கல்வி அளித்தல் மற்றும் பணி நியமனங்கள் செய்யும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 61 |
| V | **பள்ளி சாராக் கல்வி** | |
| 36 | வயது வந்தோர் கல்வி திட்டத்தில் வட்டார மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களில் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும். | 72 |
| 37 | ஊராட்சிகளில் செயல்பட்டுவரும் வயதுவந்தோர் கல்வி திட்டத்தில் ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 11 |

## VI நூலகத்துறை

| | | |
|---|---|---|
| 38 | கிராமப் பகுதிகளில் இயங்கும் பொது நூலகங்கள் அனைத்தையும் அந்தந்த ஊராட்சிகளின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். மேலும், கிராமப் பகுதிகளில் பொது நூலகங்கள் கட்டுதல் மற்றும் பராமரிக்கும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 72 |
| 39 | கிராம பகுதிகளில் உள்ள நூலகங்களுக்கு புத்தகங்கள் மற்றும் பத்திரிக்கைகள் வாங்குவதற்கு அரசின் நிதியை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 40 |

## VII தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை

| | | |
|---|---|---|
| 40 | ஊராட்சிகளில் பாரம்பரிய கலைகளை இளைஞர்களுக்கு பயிற்றுவிக்க பயிற்சி கூடங்கள் அமைக்க அரசின் நிதி உதவியை ஊராட்சிகளின் மூலம் வழங்க வேண்டும். | 29 |
| 41 | கிராம பகுதிகளில் புதிய கலைப் பள்ளிகள் தொடங்க அரசின் நிதி உதவியை ஊராட்சிகளின் மூலம் வழங்க வேண்டும். | 28 |
| 42 | கிராம பகுதிகளில் கலை இலக்கிய விழாக்கள் நடத்த அரசு நிதி ஒதுக்கீடு செய்து ஊராட்சிகளின் மூலம் வழங்க வேண்டும். | 12 |
| 43 | கிராம பகுதிகளில் உள்ள விளையாட்டு மையங்களை மேம்படுத்த அரசின் நிதி உதவியை ஊராட்சிகளின் மூலம் வழங்க வேண்டும். | 8 |
| 44 | கிராம பகுதிகளில் விளையாட்டு ஆணையம் மூலம் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கான அரசின் நிதியை ஊராட்சிகளின் மூலம் வழங்க வேண்டும். | 3 |
| 45 | கிராம பகுதிகளில் உள்ள நலிந்த கலைஞர்களுக்கு அரசின் நிதி உதவியை ஊராட்சிகளின் பரிந்துரையின் பேரில் ஊராட்சிகள் மூலம் வழங்க வேண்டும். | 3 |

## VIII சுகாதாரம் மற்றும் நல வாழ்வு

| | | |
|---|---|---|
| 46 | சுகாதார மையங்கள் மகப்பேறு மையங்களின் கட்டுமானம் மேற்பார்வை மற்றும் பராமரிப்பு ஆகியவை ஊராட்சிகள் மூலம் மேற்கொள்ள வேண்டும். | 152 |
| 47 | குடும்பநல மையங்களை அமைத்து பராமரித்தல் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 68 |
| 48 | மகப்பேறு மற்றும் குழந்தைகள் சுகாதார மையங்கள் மேற்பார்வையிடல் அதிகாரம் வழங்குதல் வேண்டும். | 41 |
| 49 | சுகாதார நிலையங்களை ஆய்வு செய்தல் போன்ற அதிகாரங்களை ஊராட்சிக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். | 29 |
| 50 | குடும்ப நலன் குறித்து ஊராட்சிகளின் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் ஊராட்சிகள் மூலம் செயல்படுத்துதல் வேண்டும். | 26 |
| 51 | குடும்பநலத்திட்டங்களில் உள்ளாட்சி அமைப்புகளை/அரசு சாரா அமைப்புகளை ஈடுபடுத்துதல் வேண்டும். | 24 |

| | | |
|---|---|---|
| 52 | பழங்குடியினர் வாழும் இடங்களில் அரசு நிதியின் கீழ் மருந்தகங்கள் ஏற்படுத்தி இயக்க வேண்டும். | 23 |
| 53 | தூய்மையான சுற்றுப்புற சூழலின் முக்கியம் குறித்தும் நோய்களை கட்டுப்படுத்துவது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்ததல் போன்றவற்றை ஊராட்சிகள் மூலம் செயல்படுத்துதல் வேண்டும். | 23 |
| 54 | காசநோய் கட்டுப்படுத்துதல் மலேரியா நோய் ஒழிப்பு, எய்ட்ஸ், தொழுநோய் கட்டுப்படுத்துதல் போன்ற தேசிய சுகாதார திட்டங்கள் (மாநில/மத்திய திட்டங்கள்) ஊராட்சிகள் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். | 19 |
| 55 | நோய்களை கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தலில் ஊராட்சிகளின் பங்கேற்பினை உறுதி செய்ய வேண்டும். | 19 |
| 56 | வட்டார தலைமையக மருத்துவ மனைகளை மேம்படுத்துதலை ஊராட்சிகளின் பரிந்துரையின் பேரில் செயல்படுத்த வேண்டும். | 17 |
| 57 | பிறப்பு, இறப்பு புள்ளி விவரங்களை பதிவு செய்து சான்றிதழ் வழங்கும் பொறுப்பினை ஊராட்சிகளுக்கு அளிக்க வேண்டும். | 16 |
| 58 | குடும்ப நல முகாம்களில் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்துதல் வேண்டும். | 7 |
| 59 | தொலை தூர பகுதிகளில் இயங்கி நடமாடும் மருத்துவ பிரிவுகளுக்கு நிதி உதவி அளித்து ஊராட்சி நிர்வாகத்தின் கீழ் இயக்க வேண்டும். | 6 |
| 60 | இளம் பிள்ளை வாதம் தொண்டை அடைப்பான் இவற்றிற்கு எதிரான பள்ளி செல்லும் வயது அடையாத குழந்தைகள், தடுப்பு ஊசி போடும் உதவி திட்டங்களை ஊராட்சிகள் மூலம் செயல்படுத்த வேண்டும். | 5 |
| 61 | பள்ளி சுகாதார திட்ட செயல்பாடுகளை ஊராட்சிகள் மூலம் நடைமுறைப்படுத்துதல் வேண்டும். | 2 |
| 62 | குடும்பநலன் குறித்து கல்வி புகட்ட நிதி உதவி / ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை போன்றவற்றை ஊராட்சிகள் மூலம் செயல்படுத்துதல் வேண்டும். | 1 |
| 63 | வட்டார குடும்பநல பயிற்சி மையம்/ மாவட்ட குடும்பநல அமைப்பு போன்றவற்றில் கிராம ஊராட்சித் தலைவர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும். | 1 |
| 64 | போதுமான அளவு பாம்புகடி, தேள்கடி மருந்தை அரசே விநியோகம் செய்தல் வேண்டும். | 1 |
| IX | **சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை** | |
| 65 | குழந்தைநல மையங்கள் ஊராட்சிகளில் ஏற்படுத்துதல் மற்றும் மையங்களை ஆய்வு செய்யும் அதிகாரத்தினை ஊராட்சிகளுக்கு வழங்குதல் வேண்டும். | 134 |
| 66 | புதியதாக குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அநாதை இல்லங்கள் அமைப்பதற்கு ஊராட்சிகளின் பரிந்துரையின் பேரில் அமைக்கவும் மேற்படி மையங்களை ஆய்வு செய்யும் அதிகாரத்தினையும் ஊராட்சிகளுக்கு வழங்குதல் வேண்டும். | 134 |

| | | |
|---|---|---|
| 67 | மகளிர் மற்றும் நலத்திட்டங்களை அமுல்படுத்துதல், மேற்பார்வையிடுதல் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு வழங்குதல் வேண்டும். | 57 |
| 68 | சத்துணவு மையங்களை ஊராட்சிகளில் ஏற்படுத்துதல் மற்றும் மையங்களை ஆய்வு செய்யும் அதிகாரத்தினை ஊராட்சிகளுக்கு வழங்குதல் வேண்டும். | 36 |
| 69 | ஊராட்சிகளில் சத்துணவு மையங்களை ஏற்படுத்தி நிர்வகித்தல் மற்றும் மையங்களை பார்வையிடும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு வழங்குதல் | 36 |
| 70 | முதியோர் இல்லங்களை பார்வையிடல் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு அளித்தல் வேண்டும். | 35 |
| 71 | வறுமைக்கோட்டிற்கு கீழ் ஊராட்சிப் பகுதியில் இருக்கும் கருவுற்ற தாய்மார்களுக்கு மருத்துவ துறை மூலம் நிதிஉதவி, மருத்துவ உதவி போன்ற நல திட்டத்தினை கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்துதல் வேண்டும். | 31 |
| 72 | அங்கன்வாடி மற்றும் பாலர் பள்ளிகள் செயல்பாட்டை மேற்பார்வையிடும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு அளித்தல் வேண்டும். | 27 |
| 73 | ஊராட்சியில் செயல்படுத்தப்படும் ஊட்டச்சத்து திட்டத்தை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்யும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு அளிக்க வேண்டும். | 18 |
| 74 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் செயல்படுத்தப்படும் சத்துணவு திட்டத்தை மேற்பார்வையிடும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு வழங்குதல். | 17 |
| 75 | விதவை தாய்மார்களின் மகள்களுக்கு வழங்கபெறும் அரசு நலத்திட்டத்தினை ஊராட்சிகளின் பரிந்துரையின் பேரில் செயல்படுத்த வேண்டும். | 15 |
| 76 | கணவரால் கைவிடப்பட்ட மகளிர்க்கு சமூக நலத்துறை மூலம் வழங்கபெறும் இலவச தையல் இயந்திரத்தினை ஊராட்சியின் பரிந்துரையின் பேரில் செயல்படுத்த வேண்டும். | 11 |
| 77 | விதவை மறுமணம் உதவி திட்டத்தின் கீழ் பயனாளிகளை பரிந்துரை செய்யும் அதிகாரம் வழங்கவேண்டும். | 9 |
| 78 | வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் திருமணம் ஆகாத மகளிருக்கு மூவலூர் திருமண உதவி திட்டத்தை ஊராட்சிகள் மூலம் செயல்படுத்தவேண்டும். | 9 |
| 79 | கிராம ஊராட்சிப் பகுதிகளில் மருத்துவ துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த குடும்ப நலத்திட்டத்தை பார்வையிடும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு அளித்தல். | 7 |
| 80 | ஊராட்சிப் பகுதிகளில் குடியிருந்து வரும் நபர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் அதிகாரம் மற்றும் தேர்தெடுக்கும் அதிகாரம் வழங்கப்படவேண்டும். | 5 |
| 81 | விதவை மகள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் பட்டியல் கிராம ஊராட்சியின் பரிந்துரையின் அடிப்படையில் தயாரிக்க வேண்டும். | 5 |

| | | |
|---|---|---|
| 82 | சுவிடன் நாட்டு உதவியுடன் டேனிடா ஒருங்கிணைந்த குழந்தை நல திட்டத்தின் கீழ் கட்டப்படும் குழந்தைகள் நல மையங்களை மேற்பார்வையிடும் அதிகாரத்தினை ஊராட்சிக்கு வழங்குதல். | 4 |
| 83 | பணிக்கு செல்லும் மற்றும் உடல் நலமில்லாத (ஊனமுற்ற) தாய்மார்களின் குழந்தைகளுக்கான அமைக்கப்பட்டுள்ள காப்பகங்களை மேற்பார்வையிடும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு அளித்தல் வேண்டும். | 3 |
| 84 | மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்களை பார்வையிடும் அதிகாரத்தை கிராம ஊராட்சித் தலைவருக்கு அளித்தல் வேண்டும். | 2 |
| 85 | அனாதை இல்லங்களின் செயல்பாடுகளை திறம்பட செய்ய பார்வையிடல் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு அளித்தல் வேண்டும். | 1 |
| 86 | ஊராட்சி பகுதியில் நடைபெறும் சிசு கொலையினை தடுப்பது, ஒழிப்பது மற்றும் கைவிடப்பட்ட பெண்கள் பாதுகாப்பது போன்ற குழுக்களில் தலைவர்களின் பிரதிநிதித்துவம் அளித்தல் மற்றும் திட்ட செயல்பாட்டை மேற்பார்வை செய்யும் அதிகாரம் வழங்குதல் வேண்டும். | 1 |
| 87 | சமூக நலத் துறையின் கீழ் இயங்கும் தொழிற்சாலைகள், பணிக்கூடங்கள் மற்றும் உற்பத்தி பிரிவுகளை பார்வையிடும் அதிகாரத்தினை ஊராட்சிகளுக்கு வழங்கவேண்டும். | 1 |
| X | **ஆதிதிராவிடர் நலத்துறை** | |
| 89 | சமுதாயக் கூடங்கள் (மற்றும்) சலவைத்துறைகளை அமைத்து ஆய்வு செய்யவும், பராமரிக்கவும் அதிகாரம் வழங்க வேண்டும். | 44 |
| 90 | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் குடியிருக்கும் பகுதிகளின் குடிநீர் விநியோகம் மற்றும் வளர்ச்சிப் பணிகளைச் செய்ய நிதி உதவி கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 40 |
| 91 | ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக அரசு அறிவிக்கும் நலத்திட்டங்களின் செயல் பாட்டினை ஆய்வு செய்யும் அதிகாரம் கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 30 |
| 92 | துப்புரவு பணியாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் கிராம ஊராட்சிகளின் மறுவாழ்வு அளித்தல் அதிகாரங்களை கிராம ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும். | 19 |
| 93 | 1995 ஆம் ஆண்டு வன்கொடுமை தடுப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஊராட்சிகளின் ஆலோசனைகளைப் பெறப்பட வேண்டும். | 4 |
| 94 | கிராமப்புறங்களில் சமத்துவ சமுதாயம் உருவாக்கும் நோக்கத்துடன் கலப்புத் திருமணத் தம்பதிகளை ஊக்குவித்து கலப்புத்திருமணத் தம்பதிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதை செயல்படுத்த கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும். | 1 |
| 95 | கொத்தடிமைத் தொழிலாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, மறுவாழ்வு அளிப்பதற்கு கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். | 1 |

## XI கூட்டுறவு மற்றும் நூகர்வோர் பாதுகாப்பு நலத்துறை

| | | |
|---|---|---|
| 96 | பொது விநியோக கடைகளின் செயல்பாட்டினை கண்காணிக்கவும், கட்டுபடுத்தவும் தேவையான அதிகாரத்தினை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 339 |
| 97 | ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள் நியாயவிலைக் கடைகளைப் பார்வையிடவும், குறைகளை வருவாய் கோட்ட அளவில் தெரிவிக்கவும் அதிகாரம் வழங்க வேண்டும். | 111 |
| 98 | பொது விநியோகக் கடைகள் எங்கெங்கு தேவைப்படும் என்பதனை அறிந்து, அதற்கான கட்டிடங்களை கட்டும் அதிகாரத்தினை ஊராட்சிகளுக்கு வழங்குதல் வேண்டும். | 69 |

## XII நிதித்துறை

| | | |
|---|---|---|
| 99 | தற்போது மாநில நிதிக்குழு மான்யம் 9 சதவீதம் ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டாலும் நிதிப் பற்றாக்குறை ஏற்படுவதால் தன்னிறைவு பெற்ற ஊராட்சியாக வழங்கிட கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். | 2890 |
| 100 | கிராம ஊராட்சித் தலைவர், ஊராட்சியின் நிர்வாக அலுவலர் என்ற முறையில் ஊராட்சி செயல்பாட்டிற்காகவும், பொது மக்களுக்காகவும் அதிக நேரம் உழைப்பதால், கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு அருகில் உள்ள மாநிங்களில் வழங்குவது போல் மாதாந்திர ஊதியம் வழங்க வேண்டும். | 1493 |
| 101 | பாராளுமன்ற தொகுதி உள்ளூர் வளர்ச்சி நிதி மற்றும் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி வழங்கியது போன்று கிராம ஊராட்சித் தலைவர்களுக்கும் வளர்ச்சி நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும். | 472 |
| 102 | கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும். | 438 |
| 103 | ஊராட்சி செயல்பாட்டிற்காக ஊராட்சி பகுதி முழுவதும் சுற்றி முகாம் சென்று வரவேண்டியுள்ளதாலும், ஊராட்சி செயல்பாட்டிற்காக தொடர்புடைய துறையின் உயர் அலுவலர்களை நேரில் சென்று சந்திக்க வேண்டியுள்ளதாலும் வாகன வசதி அளித்திட வேண்டும். | 140 |
| 104 | ஆயுள் / மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு நடைமுறைபடுத்திட வேண்டும். | 65 |
| 105 | தற்போதுள்ள விலைவாசி உயர்வை கருத்தில் கொண்டும், பேருந்து கட்டண உயர்வை கருத்தில் கொண்டும் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு பயணப்படி / அமர்வு படி உயர்த்திட வேண்டும். | 1493 |

## XIII வேளாண்மைத் துறை

| | | |
|---|---|---|
| 106 | வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும் கிராம ஊராட்சித் தலைவரை தலைவராகக் கொண்ட குழு அமைத்து செயல்படுத்த வேண்டும். | 406 |
| 107 | தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினை ஊராட்சிகள் மூலம் செயல்படுத்த வேண்டும். | 234 |

| | | |
|---|---|---|
| 108 | தரிசு, புறம்போக்கு நிலங்களில் ஊராட்சிகள் மூலம் பழத்தோட்டங்கள் அமைக்க நிதி உதவி வழங்க வேண்டும். | 110 |
| 109 | கிராமப் புறங்களில் வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் இடுபொருட்கள் மற்றும் உரம் வழங்குதல் போன்ற திட்டங்களை தரமாகவும் , உரிய நேரத்தில் வழங்கும் வகையில் கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்த அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். | 96 |
| 110 | வேளாண்மைத் துறையின் மூலம் வழங்கும் பொருட்களை மானியமாகவும், இலவசமாகவும் வழங்க பயனாளிகளைத் தேர்வு செய்யும் அதிகாரத்தினை கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 56 |
| 111 | வேளாண் விளைபொருட்களை பாதுகாக்க சேமிப்பு கிட்டங்கிகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். | 20 |
| XIV | **வருவாய்த்துறை** | |
| 112 | தற்போது வருவாய் வட்டாட்சியர்களால் வழங்கப்பட்டு வரும் பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்கும் அதிகாரத்தை கிராம ஊராட்சிகளுக்கு ஒப்படைத்தல் வேண்டும். | 1908 |
| 113 | அதே போன்று இருப்பிடச் சான்றிதழ் வழங்கும் அதிகாரத்தை ஊராட்சிக்கு ஒப்படைத்தல் வேண்டும். | 1908 |
| 114 | குடும்ப அட்டைகளை ஊராட்சியின் பரிந்துரையினடிப்படையில் வழங்குதல் வேண்டும். | 1908 |
| 115 | மணல் குவாரிகள் மற்றும் சிறுகனிம குவாரிகளை கண்காணிக்கும் பொறுப்பினை ஊராட்சிகளின் வசம் ஒப்படைக்க வேண்டும். | 1027 |
| 116 | ஊராட்சிகளில் உள்ள நீர்நிலை மற்றும் இதர புறம் போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் அதிகாரம் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும். | 301 |
| 117 | ஊராட்சி பகுதிக்குட்பட்ட மதுபானக்கடைகளில் பெறப்படும் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினை ஊராட்சிக்கு வழங்க வேண்டும். | 126 |
| 118 | ஊராட்சியின் நிர்வாகத்திற்கு நில ஆவணங்களை பராமரிக்கவும், பாதுகாக்கவும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். | 84 |
| XV | **பொதுப்பணித்துறை** | |
| 119 | பொதுப்பணித்துறை மூலம் ஊராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அரசு திட்டங்களை கிராம ஊராட்சிகளின் பரிந்துரையின் அடிப்படையில் செயல்படுத்தப்பட வேண்டும். | 384 |
| XVI | **கால்நடை பராமரிப்பு துறை** | |
| 120 | கால்நடை பராமரிப்புப் துறையின் மூலம் கிராமங்களில் செயல்படுத்தப்படும் அரசு திட்டங்களை ஊராட்சிகள் பரிந்துரையின் அடிப்படையில் செயல்படுத்தப்பட வேண்டும். | 291 |

| | | |
|---|---|---|
| 121 | புதியதாக கால்நடை மருத்துவ மனைகள் அமைத்தல், மற்றும் கிளை நிலையங்களை தரம் உயர்த்துதல் ஆகியவற்றை ஊராட்சியின் பரிந்துரையுடன் செயல் படுத்தப்பட வேண்டும். | 202 |
| 122 | கால்நடைகளுக்கு கொள்ளை நோய் மற்றும் தொற்று நோய் பரவும்போது அவற்றுக்கான நோய் தடுப்பு நடவடிக்கைகளை ஊராட்சி மூலம் இணைந்து செயல் படுத்துதல் வேண்டும். | 38 |
| 123 | தற்போது கால்நடை பராமரிப்பு துறை மூலம் செயல்படுத்தப்படும் கால்நடைப்பட்டி மற்றும் மீன் இறைச்சி தொட்டிகள் ஆகியவற்றை ஊராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். | 3 |

## XVII மீன் வளத்துறை

| | | |
|---|---|---|
| 124 | மீன் வளத்துறை மூலம் செயல்படுத்தப்படும் மீன்வளர்த்தல் மற்றும் மீன் வளம் பெருக்குதல் போன்ற திட்டங்களை ஊராட்சிகளின் பரிந்துரையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | 696 |
| 125 | பொதுப்பணித்துறை மற்றும் இதர துறையின் ஏரி, குளங்களில் மீன்பாசி குத்தகை ஏலம் விடும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 482 |
| 126 | கடல் அரிப்பினை தடுக்கும் திட்டங்களை செயல்படுத்தும் அதிகாரத்தை ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். | 8 |

## XVIII வனத்துறை

| | | |
|---|---|---|
| 127 | தற்போது வனத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் சமூக பண்ணைக் காடுகள் மேம்பாடு திட்டத்தை ஊராட்சியின் மூலம் செயல்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். | 458 |
| 128 | தரிசாக உள்ள ஊராட்சிக்கு சொந்தமான நிலங்களை சமூகக் காடுகள் வளர்ப்புக்கு குத்தகைக்கு விடும் அதிகாரத்தை ஊராட்சிக்கு வழங்கப்பட வேண்டும். | 382 |
| 129 | வனத்துறை பகுதிகளில் சாலை அமைத்தல் மற்றும் குடிநீர்ப்பணிகள் மேற்கொள்ள தற்போது கடைபிடிக்கப்பட்டு வரும் கடின நடைமுறைகளை எளிதாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 24 |

## XIX பண்ணைக் காடுகள்

| | | |
|---|---|---|
| 130 | பண்ணைக் காடுகள் மூலம் செயல்படுத்தும் சமூக / பண்ணைக் காடுகள் மேம்பாடு திட்டங்களை ஊராட்சி மூலம் செயல்படுத்த அதிகாரம் வழங்குதல் வேண்டும். | 206 |
| 131 | பண்ணைக் காடுகள் திட்டத்தின் கீழ் ஊராட்சி நிலங்களை சமூக காடுகள் பெருக்கத்திற்கு குத்தகைக்கு விடுவதை ஊராட்சியின் மூலம் செயல்படுத்தும் அதிகாரம் வழங்குதல் வேண்டும். | 201 |

## XX சிறு தொழில்கள்

| | | |
|---|---|---|
| 132 | ஊராட்சி பகுதிகளில் உள்ள தொழிற்பேட்டைகளை பராமரித்து நிருவகிப்பதற்கான நிதியினை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். | 344 |

133 ஊராட்சி பகுதிகளில் தொழில்துறை மூலம் அமைக்கப்படும் தொழிற்பேட்டை கட்டுமானப் பணிகளை ஊராட்சியின் ஒப்புதலோடு செய்ய வேண்டும். 224

134 ஊராட்சி பகுதிகளில் சிறு தொழில்கள் துவங்குவதற்கு அனுமதி மற்றும் உரிமம் வழங்கும் அதிகாரம் ஊராட்சிக்கு வழங்க வேண்டும். 224

135 அரசு பின்தங்கிய ஊராட்சிகளை கண்டறிந்து அவற்றில் புதிய தொழிற்சாலைகளை துவக்க வேண்டும் 175

136 வங்கி கடன் உதவியுடன் புதிதாக தொழில்கள் துவங்க தற்போது மாவட்ட தொழில் மையம் மூலம் தேர்வு செய்யப்படும் பயனாளிகளை ஊராட்சி மூலம் தேர்வு செய்ய வேண்டும். 76

137 தொழில் முனைவோர் மேம்பாடு திட்டத்தில் ஊராட்சி பகுதிகளில் பயனாளிகள் தேர்வு செய்யும் அதிகாரம் ஊராட்சிக்கு அளிக்கப்பட வேண்டும். 46

## XXI கதர் கிராமம் மற்றும் குடிசை தொழில் வாரியம்

138 கதர் கிராமம் மற்றும் குடிசை தொழில் வாரியம் மூலம் செயல்படுத்தும் திட்டங்களுக்குரிய தொழில் நுட்ப பயிற்சிகள், மேம்பாட்டு திட்டங்கள் ஆகியவற்றிற்கு பயனாளிகள் தேர்வு செய்வதை கிராம ஊராட்சிகள் மூலம் செய்ய வேண்டும். 81

139 கதர் கிராமம் மற்றும் குடிசை தொழில் வாரியம் மூலம் கிராம ஊராட்சிப் பகுதிகளில் தொழில் பயிற்சி மையங்கள் அமைக்கப்படவேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் பயிற்சி மையங்களில் அளிக்கப்படவுள்ள பயிற்சிகளுக்குரிய பயனாளிகளை தகுதியின் அடிப்படையில் கிராம ஊராட்சி மூலமாக தேர்வு செய்ய வேண்டும். 65

140 கதர் கிராமம் மற்றும் குடிசை தொழில் வாரியம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் சேகரம் செய்து விற்பனை செய்யப்படாமல் அங்காங்கே தேங்கி உள்ளன. இந்நிலையை போக்கும் வகையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை ஊராட்சி மூலம் விற்பனை செய்ய கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும். 31

141 கதர் கிராமம் மற்றும் குடிசை தொழில் வாரியம் மூலம் பனை பொருள் உற்பத்தியை மேம்படுத்தவும், பனை ஏறும் தொழிலாளர்களுக்கு திட்டங்கள் வகுத்து அத்திட்டங்களுக்குரிய பயனாளிகள் தேர்வு செய்தல், திட்டங்களை மேம்பாடு செய்தல் ஆகியவற்றிற்குரிய பொறுப்புகளை கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும். 29

142 கதர் கிராமம் மற்றும் குடிசை தொழில் வாரியம் மூலமாக கைவினைஞர்களுக்கு கடன் வசதியளித்து அவர்களது வாழ்க்கை தரத்தை உயர்த்த பயனாளிகளை தேர்வு செய்வதை கிராம ஊராட்சிகள் மூலம் தேர்வு செய்யும் வகையில் கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும். 10

## XXII வீட்டு வசதி துறை

| | | |
|---|---|---|
| 143 | தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீன்வளத் துறை மூலம் வசதி செய்து கொடுக்கும் பணியினை ஊராட்சி மூலம் செயல் படுத்தப்பட வேண்டும். | 412 |
| 144 | தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் பகிர்ந்தளிக்கப்படும் வீட்டு மனை பட்டா விவரம் ஊராட்சிக்கு அறிவிக்கப்பட வேண்டும். | 182 |
| 145 | தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் இருப்பிட மேம்பாட்டுத் திட்டங்களை ஊராட்சிகள் மூலம் மேற்பார்வையிடும் அதிகாரங்கள் வேண்டும். | 60 |
| 146 | தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் மேற்கொள்ளப்படும் வீட்டு வசதி திட்டங்களின் பயனாளிகள் கிராம ஊராட்சிகள் மூலம் தேர்வு செய்யப்பட வேண்டும். | 40 |
| 147 | தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் மீனவர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு கட்டப்படும் வீட்டு வசதித் திட்டம் ஊராட்சிகள் மூலம் செயல் படுத்தப்பட வேண்டும். | 10 |

## XXIII கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு நலத்துறை

| | | |
|---|---|---|
| 148 | பொது விநியோக கடைகளை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு வழங்குதல் வேண்டும். | 339 |
| 149 | பொது விநியோக கடைகளை கட்டும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு வழங்குதல் வேண்டும். | 69 |

## XXIV சமூக காடுகள்

| | | |
|---|---|---|
| 150 | வனத்துறையால் செயல்படுத்தப்படும் சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள் அமைத்து பராமரிக்கும் திட்டங்களை ஊராட்சி மூலம் செயல்படுத்த வேண்டும். | 664 |
| 151 | பண்ணைக் காடுகள் திட்டத்தின் கீழ் ஊராட்சி நிலங்களை குத்தகைக்கு விடும் பொறுப்பு ஊராட்சிக்கு வழங்க வேண்டும். | 583 |
| | **மொத்தம்** | **47,108** |

**ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்குவது குறித்து அரசுக்கு பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட மாநில அளவிலான உயர்நிலைக் குழுவின் இரண்டாவது கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குதல் தொடர்பான மாநில அளவிலான உயர்நிலைக் குழுவின் இரண்டாவது கூட்டம் 19.09.2007 அன்று முற்பகல் 10.00 மணிக்கு தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் பங்கேற்றனர்:-

1. அரசு செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.
2. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (சிறப்பு அழைப்பாளர்)
3. திரு. தமிழருவி மணியன் – முழுநேர உறுப்பினர் – மாநில திட்டக்குழு உறுப்பினர்.
4. பேராசிரியர் முனைவர் பழனித்துரை, தலைவர், அரசியல் அறிவியல் மற்றும் வளர்ச்சி நிர்வாகத் துறை காந்திகிராம பல்கலைக்கழகம்
5. திரு. காந்திச் செல்வன், மாவட்ட ஊராட்சித் தலைவர், நாமக்கல்.
6. திரு. ஏ. ரவிச்சந்திர இராமவன்னி, மாவட்ட ஊராட்சித் தலைவர், இராமநாதபுரம்.
7. திரு. என். சின்னதுரை, மாவட்ட ஊராட்சித் தலைவர், தூத்துக்குடி.
8. திரு. எஸ். இராமலிங்கம், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர், திரவிடைமருதூர், தஞ்சாவூர் மாவட்டம்.
9. திரு. பி.கே. கிருஷ்ணன், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர், கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்.
10. திருமதி. டி. ஆர். மலர்விழி, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர், ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம்.
11. திரு. எஸ். பி. இராமர், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர், நங்கவல்லி, சேலம் மாவட்டம்.
12. திரு. வி. அமிர்தலிங்கம், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர், தலைஞாயிறு, நாகப்பட்டினம் மாவட்டம்.
13. திரு. கே. தங்கமணி, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர், மானாமதுரை, சிவகங்கை மாவட்டம்.
14. திருமதி செல்வி செங்குட்டுவன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர், செந்துறை, பெரம்பலூர் மாவட்டம்.
15. திரு. எஸ். சந்தானம், தாயில்பட்டி கிராம ஊராட்சித் தலைவர், விருதுநகர் மாவட்டம்.
16. திரு. சத்தியமூர்த்தி, விண்ணமங்கலம் கிராம ஊராட்சித் தலைவர், வேலூர் மாவட்டம்.
17. திரு. ஜெ. ஜெயராமன், பள்ளிவர்த்தி கிராம ஊராட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம்.

18. திரு. மாரப்பன், செட்டிப்பாளையம் கிராம ஊராட்சித் தலைவர், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், கோயம்புத்துார் மாவட்டம்.

19. திரு.என். இளங்கோ, நாட்டாமங்கலம் கிராம ஊராட்சித் தலைவர், விழுப்புரம் மாவட்டம்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். அவர் தமது தலைமையுரையில், தமிழ் நாட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய முறையில் அதிகாரங்களை முறைப்படுத்தி வழங்கும் நல்லெண்ணத்தோடு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அனுமதியின்பேரில் அமைக்கப்பட்ட மாநில அளவிலான உயர்நிலைக் குழுவின் முதல் கூட்டம் மார்ச் மாதம் ஏழாம் நாள் (07.03.2007) அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் 18.03.07 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடந்த உள்ளாட்சித் தலைவர்கள் கருத்தரங்கில் மாநகராட்சி மேயர்கள், நகராட்சி, பேரூராட்சி, மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். இக்கருத்தரங்கில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரம், கடமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்க பரிந்துரைக்குமுன் கிராம ஊராட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி அவர்களது கருத்துக்களையும் பெற்று குழு தனது பரிந்துரையினை வழங்க வேண்டுமென ஆணையிட்டதன் அடிப்படையில், இம்மாநிலத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சித் தலைவர்களும் கலந்து கொள்ளும் வகையில் ஈரோடு (24.07.2007), திருச்சி (25.07.2007), திருவண்ணாமலை (03.08.2007), விருதுநகர் (23.08.2007) ஆகிய இடங்களில் கிராம ஊராட்சித் தலைவர்களின் மண்டலக் கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டன.

இக்கருத்தரங்கில் மொத்தமுள்ள 12,618 கிராம ஊராட்சி தலைவர்களில் ஏறத்தாழ 98% கிராம ஊராட்சித் தலைவர்கள் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தனர். மேலும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த படிவத்தில் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான தங்களுடைய கருத்துக்களையும் தெரிவித்துள்ளனர். இந்தக் கருத்தரங்கங்களில் பெறப்பட்ட அனைத்து ஆலோசனைகளையும் தொகுத்து, வரிசைப்படுத்திப் பொருள் நிரலாக உயர்நிலைக்குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளது. இக்கருத்துக்களில் பெரும்பாலானவை அவசியமானதாகும். சில பணிகளை உடனடியாகவும், சில பணிகளை பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பின் அடிப்படையிலும் செய்ய வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு குழு உறுப்பினர்கள் தங்கள் ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமை உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து உயர்நிலைக் குழுவின் முதல் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் மீது தொடர் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கீழ்க்கண்டவாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிச் செயலர் விளக்கினார்:-

- 07.03.07 அன்று நடைபெற்ற உயர்நிலைக்குழுவின் கூட்டத்தில் குழு உறுப்பினர்கள் ஊராட்சிகளுக்கு நிதிப்பற்றாக்குறை அதிகமாக உள்ளதெனவும், பணிகளைக் கண்காணிக்க வாகன வசதி வேண்டுமெனவும், பள்ளிக் கட்டிடங்களைச் சீரமைக்க வேண்டுமெனவும், மின்சார வாரியத்துடனான மின் கட்டணம் குறித்த பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டுமெனவும், நிர்வாக நலனுக்கு உரிய பயிற்சிகள் வேண்டுமெனவும் கோரிக்கைகள் வைக்கப்பட்டன. இதனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானியக் கோரிக்கையன்று பல்வேறு அறிவிப்புக்களை செய்துள்ளார்.
- மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதி இந்த நிதியாண்டில், தற்போதுள்ள 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த உயர்வினால் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2006 – 2007 ம் ஆண்டில் ரூபாய் 1225 கோடியாக இருந்த நிதிப்பங்கீடு 2007 – 2008 ம் ஆண்டில் ரூபாய் 1586 கோடியாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டைவிட 361 கோடி ரூபாய் அதாவது 30% கூடுதலாகும். (அரசாணை எண் 199, நிதித் துறை, நாள் 25.5.07)
- குடிநீர் வழங்குதல், பொதுச் சுகாதாரம், சாலைகள் மற்றும் தெருவிளக்குகளை பராமரித்தல் போன்ற அடிப்படை வசதிகளை நிறைவு செய்ய இவ்வாண்டிலிருந்து மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வில், கிராம ஊராட்சிகளின் பங்கு 47 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. (அரசாணை எண் 199 நிதித் துறை, நாள் 25.5.07)
- மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே நிதிப்பங்கீடு செய்யப்படும் பொழுது பல சிறிய ஊராட்சிகளுக்குப் போதுமான நிதி கிடைப்பதில்லை. இந்நிலையினை மாற்ற மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து அனைத்து ஊராட்சிகளுக்கும் ரூபாய் 3 இலட்சம் சமமாக வழங்கவும், மீதமுள்ள தொகையை மக்கள் தொகை அடிப்படையில் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. (அரசாணை எண் 199 நிதித் துறை, நாள் 25.5.07)
- மேலும், மத்திய அரசிடமிருந்து பெறப்படும் 12 வது நிதிக் குழு மான்யம் முழுமையையும் 100% கிராம ஊராட்சிகளுக்கு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. ( அரசாணை எண். 19, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, நாள் 26.2.07 )

- தற்போது ஊராட்சிகளின் மின் கட்டண சுமையினை குறைக்கும் வகையில் மின் கட்டணம் யூனிட் ஒன்றிற்கு ரூ 3.40ல் இருந்து ரூ.3 ஆக குறைக்கப்பட்டுள்ளது. (அரசு எரிசக்தித் துறை கடித எண். 70 நாள் 24.7.07)
- ஊராட்சிகள் மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீதான அபராதவரி 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- 13.3.2007க்கு முந்தைய அபராத வரி ரூபாய் 18.46 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. (அரசு எரிசக்தித் துறை ஆணை எண். 77 நாள் 14.8.07)
- மின்கட்டணம் செலுத்துவதற்காக கால அளவு 20 நாட்களிலிருந்து 60 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.
- புதிய மின்கம்பங்கள் அமைப்பதில் அதிக செலவினமும், கால தாமதமும் ஏற்படுவதைத் தவிர்க்க, ஒரு மின் கம்பத்திற்கு நிலையான கட்டணமாக ரூபாய் 9,500 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அரசாணை எண் 111, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, நாள் 26.6.07)
- ஊராட்சிகளிலுள்ள மின் இணைப்புகளுக்கு மீட்டர் பொறுத்தாது பட்டியல் அளிப்பதைத் தவிர்க்க, அனைத்து மின் இணைப்புகளுக்கும் மீட்டர் பொறுத்தவும், ஆரம்ப / இறுதி மீட்டர் அளவுகள் வீதம் பட்டியல் வழங்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது.
- ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளைச் சீரமைக்கும் வகையில் ‘‘ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்“ என்ற திட்டம் ரூபாய் 135 கோடி செலவில் நடைமுறைப்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.
- ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குப் பயிற்சிக்காக ரூபாய் 3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மேலும், மண்டலக் கருத்தரங்கத்தில் கிராம ஊராட்சித் தலைவர்கள் கோரிக்கையின் பேரில் அவர்கள் அனைவருக்கும் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டது.
- மாவட்ட மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் புதியதாக 121 ஈப்புகள் வழங்கப்பட உள்ளன. இது தவிர ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு எரிபொருள் வரம்பை அதிகப்படுத்தியும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

பின்னர் உயர்நிலைக் குழுவின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ள 237 பொருள் நிரல்கள் விவாதிக்கப்பட்டன. விவாதத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளன:-

1. அரசமைப்பு (73 வது) திருத்தச் சட்டத்தின்படி பட்டியல் 11 ல் குறிப்பிட்டுள்ளபடி 29 இனங்களை பொறுத்து தமிழ்நாட்டில் ஏற்கனவே இரண்டு உயர்மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்குப் பட்டியல் 11 ல் குறிப்பிட்டுள்ள 29 இனங்களில் ஆய்வு செய்யவும், கண்காணிப்பு செய்யவும் அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக தற்பொழுது வருவாய்த்துறை, சமூகநலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, ஊனமுற்றோர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் – சீர்மரபினர் நலத்துறை போன்ற துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்குப் பயனாளிகள் தேர்வு செய்தல் மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்டங்களை வழங்குவதை ஊராட்சிகள் மூலம் செயல்படுத்த வேண்டும் என்ற பொருள் பல்வேறு துறைத் தலைவர்களின் கருத்துருக்களைப் பெற்று முடிவு செய்யப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

2. வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, உணவு மற்றும் பொது விநியோகம், பொது சுகாதாரம் மற்றும் குடும்பநலம் போன்ற துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்கள் கண்காணிக்க நடவடிக்கைகள் எடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

3. மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம் மூலம் வழங்கப்படும் முதியோர் ஓய்வு ஊதியத் தொகை மற்றும் விதவைகளுக்கான ஓய்வூதியம் போன்ற சமூக நலத்திட்டங்கள் வருவாய்த்துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டங்களை ஊராட்சியின் பொது நிதியிலிருந்து கொடுத்து விட்டுப் பின்னர் அத்தொகையினை வருவாய்த் துறையிலிருந்து பெற்று ஈடு கட்டச் செய்யலாம் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இத்திட்டங்களின் மூலம் பெறப்படும் நிதியிலிருந்து கிராம ஊராட்சிகளுக்கு முன்பணமாக அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்தும் பரிசீலிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

4. துப்புரவுப் பணியாளர் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர் போன்ற பணியிடங்களை நிரப்புவதற்கு தற்போது தடையாணை இருப்பதை நீக்கி நிர்வாக செலவின வரம்பினை 20 சதவீதம் என்பதில் இருந்து உயர்த்தி கணினி இயக்குநர், வசூல் தண்டலர் போன்ற புதிய பணியிடங்களை உருவாக்குவது என்ற பொருள் மீது விவாதம் மேற்கொள்ளப்பட்டது. அதிக பணியிடங்கள் உருவாக்கப்படுவது ஊராட்சியின் பணியிடங்களைப் பாதிக்கும் என்று முடிவு செய்யப்பட்டது. இருப்பினும் இக்கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு முடிவு செய்யப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

5. கிராம ஊராட்சிகளின் தொலைக்காட்சி இணைப்பு சேவை, தொலைபேசி இணைப்புகள், அகன்ற வரிசைக் கணினி இணைப்புகள் ஆகியவற்றிற்கான வழித்தடக் கட்டணம், செல்போன் கோபுரங்கள் (Cell phone Towers), காற்றாலை ஆகியவை செலுத்த வேண்டிய

கட்டணங்கள், தனியார் தொழிற்சாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவை செலுத்த வேண்டிய சொத்துவரி மற்றும் தொழில் கட்டணங்கள் ஆகியவற்றை பொருத்து உரிய விதிமுறைகள் வகுக்கப்பட்டு ஊராட்சிகளின் நிதி வருவாயைப் பெருக்க வழிவகை செய்ய வேண்டும் என்ற பொருள் குறித்து விவாதம் மேற்கொள்ளப்படும்போது, ஊரக வளர்ச்சிச் செயலர் தெரிவித்தப்படி, BSNL செலுத்த வேண்டிய கட்டணம் குறித்து வழக்கு உயர்நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளதால் தற்போது முடிவு செய்ய இயலாது என்றும் இருப்பினும் இப்பொருள்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

6. கிராம ஊராட்சிகளில் அரசாணை எண் 102, ஊ.வ. துறை, நாள் 12.7.2005–ன் மூலம் கீழ்க்கண்ட ஐந்து குழுக்கள் அமைக்கப்பட்டன:-

    1. நியமனக்குழு
    2. கல்விக் குழு
    3. குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு
    4. வளர்ச்சிக் குழு
    5. விவசாயக் குழு

பல்வேறு துறைகளின் மூலம் திட்டங்கள் செயல்படுத்தப்படும் போது கிராம அளவில் பல்வேறு குழுக்கள் அமைக்கப்படுவதைத் தவிர்த்து, கிராம ஊராட்சியின் குழுக்களையே தங்கள் துறையின் குழுக்களாக அமைக்க வேண்டும். சம்பந்தப்பட்ட துறைகளின் அலுவலர்களும் ஊராட்சிகளின் குழுக்களில் அந்தந்தத் திட்டச் செயலாக்கத்துக்கான உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்ற பொருள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

7. ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் சமூக நல அலுவலர்களைக் கொண்டு செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களை கிராம ஊராட்சியை அடிப்படை அலகாகக் கொண்டு பயனாளிகள் தேர்வை கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்தலாம் என்ற பொருள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது:–

    1. பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்.
    2. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்.
    3. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதி உதவித் திட்டம்.
    4. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம்.
    5. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமண உதவித் திட்டம்.

6. தமிழக அரசு கலப்பு திருமண உதவித் திட்டம்.
7. சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்.

8. ஊராட்சி ஒன்றியங்களில் கல்வித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்டத் திட்டங்களை கிராம ஊராட்சியை ஈடுபடுத்தி செயல்படுத்தலாம் என்ற பொருள் மீது விவாதம் மேற்கொள்ளப்பட்டு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது:–
   1. இலவச பாடப்புத்தகங்கள்
   2. இலவச நோட்டுப் புத்தகங்கள்
   3. சீருடைகள்
   4. சிறப்பு வழிகாட்டி
   5. மிதிவண்டிகள்

9. ஊரகப் பகுதிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட நலத்திட்டங்களை கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்தலாம் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது:–

   1. பரவி வாழும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக பழங்குடியினர் நலத்துறையால் செயல்படுத்தப்படும் ஆடு வளர்க்கும் திட்டம் கிராம ஊராட்சியின் பரிந்துரையின் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும்.

   2. கறவை மாடுகள் உழவு மாடுகள் வழங்கும் திட்டம், கிராம ஊராட்சியின் பரிந்துரையின் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும்.

   3. பழங்குடியினர் மேம்பாட்டிற்கான ஜனஸ்ரீ பீம யோஜனா ஆயுள் காப்பீட்டுத் திட்டம் கிராம ஊராட்சியின் பரிந்துரையின் பேரில் செயல்படுத்தப்பட வேண்டும்.

10. வருவாய்த் துறையின் வட்டாட்சியர் அலுவலகத்தை அடிப்படையாகக் கொண்டு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் கீழ்கண்ட திட்டங்களை கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்த வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது:-

   1. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை மூலம் வழங்கப்படும் இலவச சலவை பெட்டி, தையல் இயந்திரம், மிதிவண்டி ஆகியவைகள் கிராம ஊராட்சி மூலம் வழங்கப்பட வேண்டும்.

   2. இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் கிராம ஊராட்சியின் பரிந்துரையின் மூலம் வழங்கப்பட வேண்டும்.

3. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபினர் ஆகிய வகுப்பை சேர்ந்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு பயிற்சிகள் சம்மந்தப்பட்ட துறைகள் வழங்கும் போது ஊராட்சிகளின் பரிந்துரைகள் பெறப்பட வேண்டும்.

11. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்டத் திட்டங்களை ஊராட்சியினை அடிப்படை அலகாகக் கொண்டு கிராம ஊராட்சிகளின் பரிந்துரையின் அடிப்படையில் செயல்படுத்த வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது:-

1. பொதுக்கடன் திட்டம்
2. தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற மகளிருக்கான கடன் திட்டம்
3. மகளிருக்கான புதிய பொற்காலத் திட்டம்
4. சிறு வணிகக் கடன் திட்டம்
5. கறவை மாடு திட்டம்

12. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் செயல்படுத்தும் திட்டங்களை கிராம ஊராட்சியினை அடிப்படை அலகாகக் கொண்டு கிராம ஊராட்சியின் பரிந்துரையின் படி செயல்படுத்த வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1. தனிநபர் கடன் திட்டம்
2. கறவை மாடு திட்டம்
3. இசுலாமிய இளைஞர்களுக்கு ஆட்டோ தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஆட்டோ வாங்க கடன் வழங்கும் திட்டம்.
4. சுயஉதவிக் குழுக்கள் மூலமாக 4 சதவிகித வட்டி விகிதத்தில் ரூ.10,000/– சிறு கடன் வழங்கும் திட்டம்.
5. பயிற்சித் திட்டங்கள்
   அ) தொழில் பயிற்சி அளித்தல்
   ஆ) மகிளா சம்ரிதி யோஜனா திட்டம்

14. பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து நலத் திட்டங்களையும் ஊராட்சி ஒன்றியத்தினை அடிப்படை அலகாகக் கொண்டு கிராம ஊராட்சியின் மூலம் பயனாளிகளைத் தேர்வு செய்தல் மற்றும் நலத்திட்ட

உதவிகளை வழங்குதல் ஆகியவை செயல்படுத்தப்பட வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**(எடுத்துக்காட்டு–** பள்ளிப்படிப்பு உதவித்தொகை வழங்குதல், கல்விக் கட்டணங்கள், தொழிற்கல்வி உதவித் தொகை, இலவச மிதி வண்டி, தையல் இயந்திரம், புத்தகங்கள், சீருடை வழங்குதல், இலவச வேலை வாய்ப்பு பயிற்சித் திட்டங்கள் போன்றவை)

15. சிறந்த மாணவர்களுக்கான பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் நினைவு விருதுகள் வழங்குதல் கிராம ஊராட்சியின் பரிந்துறையின் அடிப்படையில் வழங்க வேண்டும் என்ற பொருள் பற்றி விவாதிக்கப்பட்டது தற்போதுள்ள நிலையே தொடரலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

16. மாவட்டங்களில் வட்டார, கிராம அளவிலான அலுவலகங்களின்றி செயல்படும் முன்னாள் படை வீரர் நலத்துறையின் தனி நபர் திட்டங்களை கிராம ஊராட்சியின் பரிந்துரையின் மூலம் அளித்திட வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

17. மாவட்டங்களில் வட்டார, கிராம அளவிலான அலுவலகங்களின்றி செயல்படும் முன்னாள் படை வீரர் நலத்துறையின் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் அனைத்து உதவிகளையும் கிராம ஊராட்சியின் பரிந்துரையோடு செயல்படுத்த வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

18. சமூகப் பாதுகாப்புத் துறையின் மூலம் தமிழ்நாடு சமூக பாதுகாப்பு நல நிதித் திட்டத்தின் மூலம் செயல் படுத்தப்படும் திட்டங்களை கிராம ஊராட்சியினை அடிப்படை அலகாகக் கொண்டு கிராம ஊராட்சியின் பரிந்துரையின் பேரில் செயல்படுத்த வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது:–

19. தமிழ்நாடு மாநில நோயாளர் உதவி அமைப்பின் மூலம் கீழ்க்கண்ட நோய்களுக்காக வழங்கப்படும் உதவித்தொகையை கிராம ஊராட்சியின் பரிந்துரையின் மூலம் வழங்க வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது:–

    1. இருதய அறுவை சிகிச்சை
    2. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை
    3. கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை
    4. தண்டுவட மாற்று அறுவை சிகிச்சை
    5. இடுப்பு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை
    6. தீயினால் ஏற்படும் காயங்களுக்கான பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை

20. உடல் ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத் துறையினரால் செயல்படுத்தப்படும் தனிநபர் திட்டங்களை கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்த வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

21. தனிநபர் திட்டங்களின் பயனாளிகளை தேர்வு செய்வதற்கு கிராம ஊராட்சிகள் முன்னுரிமை அடிப்படையில் தயார் செய்யும் பட்டியல் அடிப்படையில் சம்பந்தப்பட்ட துறைகள் தனிநபர் பயன்பெறும் திட்டப் பயனாளிகளை தேர்வு செய்ய வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

22. சார்புத் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் கிராம ஊராட்சிகள் அளவிலான பயனாளிகளைத் தேர்வு செய்யும் பொழுது கிராம ஊராட்சியுடன் கலந்தாலோசித்து பயனாளிகளை கிராம ஊராட்சியின் பரிந்துரையின் அடிப்படையில் தேர்வு செய்து ஊராட்சிகள் மூலம் வழங்க வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது. (கர்ப்பிணிப் பெண் உதவித் திட்டம், அன்னபூர்ணா மற்றும் கல்வி உதவித் தொகை, இலவச பாடபுத்தகம் வழங்கல், இலவச மிதிவண்டி, ஊனமுற்றோர் நலத் திட்ட உதவிகள் போன்ற திட்டங்களுக்கான பயனாளிகள்).

23. ஊரகப் பகுதியில் செயல்படுத்தப்படும் தனிக் குடிநீர்த்திட்டங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் தொழில் நுட்ப உதவியுடன் நிறைவேற்ற வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

24. வடிமுனைக்குழாய்கள், இந்தியா மார்க்– II, III பம்புகள், குடிநீர் விநியோகக் குழாய்கள், விஸ்தரிப்புப் பணிகள் ஆகியவற்றை கிராம ஊராட்சிகளே அமைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

25. சுனாமி போன்ற பேரழிவுகள் ஏற்படும் போது செலவு செய்ய ஏதுவாக பேரிடர் நிவாரண நிதி கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும். மேலும், பேரிடர் மேலாண்மையிலும், துயர் துடைக்கும் பணியிலும் ஊராட்சிக்கு முதன்மை பொறுப்பு வழங்கி கிராம ஊராட்சித் தலைவர்களின் கீழ் அந்த பகுதியின் கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட அனைத்து கிராம அளவிலான அலுவலர்களும் இணைந்து செயல்பட வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

27. ஊராட்சிகளின் குடிநீர் விநியோகச் சேவையிலுள்ள மின்விசைப் பம்புகளைத் தொடர்ந்து பழுதுநீக்கம் செய்வதற்கு பதில் 7 ஆண்டுகளுக்கு மேல் பயன்பாட்டிலுள்ள மின்விசைப் பம்புகளை உரிய முறையில் கழிவு நீக்கம் செய்து புதிய மின்விசைப் பம்புகளை

வாங்குவதற்கு புதியத் திட்டத்தை அறிவிக்கலாம் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

28. பாரம்பரியமிக்க, மரபுசார்ந்த பழமையான இடங்களை கண்டறிந்து பாதுகாக்க அடிப்படை வசதிகள் அமைக்க அவ்விடங்களை சுற்றுலாத் தலங்களாக மேம்படுத்த தனியான நிதி ஒதுக்கீடு வழங்க வழி வகை செய்ய வேண்டும் என்ற பொருள் ஆய்விற்குப் பின் முடிவெடுக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

29. கிராம ஊராட்சிகளின் எல்லைகளை மாற்றி அமைக்க வேண்டும். எந்த ஒரு வருவாய் கிராமமும் ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளின் எல்லைக்குள் பகுதியாக இருக்குமாறு அமையக்கூடாது. ஒரே கிராம ஊராட்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட வருவாய் கிராமங்களில் எல்லைகள் முழுவதும் அமையுமாறு இருக்கலாம். இதனால் மக்கள் தொகை கணக்கெடுப்பின்பொழுது மக்கள் தொகை எண்ணிக்கை மாறாமல் இருக்கும் என்ற பரிந்துரை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

30. கட்சித்தாவல் தடை சட்டம், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி தலைவர்களுக்கும் மற்றும் உறுப்பினர்களுக்கும் பொருந்துமாறு சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

31. ஒரே வார்டில் பல்வேறு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் Multi Member Ward நடைமுறையை நீக்கி, வார்டுகளின் எண்ணிக்கையை மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு இணையாக மாற்றி அமைக்க வேண்டும் என்ற பரிந்துரை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

32. முந்தைய இரு குழுக்கள் மூலம் பரிந்துரைக்கப்பட்டு அதன் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள அரசாணைகளின்படி சார்புத்துறைகளின் பணியினைப் பொறுத்து ஊராட்சிகளுக்கு கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், இந்த அரசாணைகளின்படி சார்புத் துறைகள் செயல்படுவதில்லை. இவற்றை முழுமையாகச் செயல்படுத்த உரிய வழிவகைகளையும் கூட்டு ஆலோசனைக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு ஏற்ற விதிமுறைகளையும் சார்புத் துறைகள் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

33. காலாண்டுக்கு ஒரு முறை அல்லது வருடம் இரு முறை ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்பின் கூட்டத்தினை ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர்கள் நடத்திட

ஆணையிட வேண்டும் என்ற பொருளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது குறித்து, துறை அளவில் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

34. மாவட்ட திட்டக் குழுவில் சுழற்சி முறையில் கிராம ஊராட்சித் தலைவர்கள் பங்கேற்பதற்கு ஆணையிட வேண்டும் என்பது குறித்த ஆய்வு செய்து முடிவு எடுத்திட தீர்மானிக்கப்பட்டது.

35. மாவட்டத் திட்டக் குழுவிற்குத் தற்போதுள்ள நிர்வாக அமைப்பு முறையை மாற்றியமைத்து மாவட்ட அளவில் சார்புத் துறைகளின் சார்பாக உயர் அலுவலர்கள் பங்கேற்கும் வகையில் ஆணையிட வேண்டும் என்ற பொருள் மீது விவாதம் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட நாளில் கூட்டம் நடத்துவதினால் அந்த அதிகாரிகளுக்கு விபரம் தெளிவாகத் தெரியும் அவர்களும் கூட்டத்துக்கு வர இயலும். எனவே, ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட நாளில் இந்தக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

36. முன்னாள் மாவட்டக் கழகத்தின் சொத்துக்கள் நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை போன்ற துறைகள் வசம் உள்ளன. அவற்றை மீண்டும் மாவட்ட ஊராட்சிக்கு வழங்க வேண்டும் என்ற பொருள் குறித்து விவாதம் மேற்கொள்ளப்பட்டது. இது குறித்து ஆய்வு செய்து முடிவெடுக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

37. மாவட்ட ஊராட்சி மூலமாக பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் மாவட்ட ஊராட்சி செயலர் பதவியினை இணை இயக்குநர் நிலைக்கு உயர்த்தவும் மற்றும் மாவட்ட ஊராட்சி அலுவலகத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் உதவியாளர்கள் பணியிடங்களைக் கூடுதலாகவும் ஒதுக்க வேண்டும் என்ற பொருள் குறித்து விவாதிக்கப்பட்டது. தற்சமயம் உள்ள உதவி இயக்குநர் நிலை அலுவலரே போதுமானது என்றும் உயர்நிலை அலுவலர் தேவைக்குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

38. மாநில திட்டக் குழுவின் உறுப்பினர்களாக மாவட்ட ஊராட்சித் தலைவர்களையும் சுழற்சி முறையில் நியமிக்கலாம் என்ற பொருள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

39. கல்வி நிலையங்களில் அமைக்கப்படும், பெற்றோர் ஆசிரியர் கழகங்களை இணைத்து மாவட்ட திட்டக்குழுவில் உபகுழு அமைக்கப்பட்டு கல்வி நிலையங்களின் வளர்ச்சிக்கு மாவட்டத் திட்டக் குழு உறுப்பினர்களைப் பயன்படுத்துதல் என்ற பொருள் மீது நடந்த விவாதத்தில் பெற்றோர் ஆசிரியர் கழகங்களில் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களும் அங்கத்தினர்களாக இருக்க வேண்டும் என்ற தீர்மானிக்கப்பட்டது.

40. விவசாயம் மற்றும் விவசாய விரிவாக்கம் தொடர்புடைய திட்டப் பணிகளை கூட்டுறவு விவசாய சங்கங்கள் மூலம் மாவட்ட ஊராட்சிகளின் கண்காணிப்புடன் வழங்க வழிவகை செய்ய வேண்டும் என்ற பொருள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

41. சிறுபாசனம், நீர் மேலாண்மை, நீர்ப்பிடிப்பு மேம்பாடு ஆகியவற்றில் ஏரி, குளம், ஆறு, பாசன வாய்க்கால் மூலம் கிடைக்கும் நீரை ஒழுங்குபடுத்தி அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்க மாவட்ட ஊராட்சிக்குக் கண்காணிக்கும் அதிகாரம் வழங்க வேண்டும் என்ற பொருள் மீதான விவாதத்தில் இது தேவையில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. மேலும் தோட்டக்கலைத் துறை செயல்படுத்தும் திட்டங்களைக் கண்காணிக்கும் அதிகாரத்தையும் வழங்குவதை குறித்து அய்வு செய்வது என்பது தீர்மானிக்கப்பட்டது.

42. மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு என தனி உதவியாளர் (Personal Assistant) மற்றும் அலுவலகப் பணிகளை மேற்கொள்ள கணக்கர் மற்றும் இரவுக் காவலர்களை பணி அமர்த்துதல் என்ற பொருள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

43. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் கிராம ஊராட்சித் தலைவர்கள் மூலம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டம் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. எனவே, அதற்கு பதிலாக மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் மூலம் வேறு திட்டங்கள் செயல்படுத்த மாற்றம் செய்யப்படவேண்டும் என்ற பொருள் குறித்த விவாதத்தில் அரசின் ஒதுக்கப்பட்ட வருவாய் தற்போது கிராம ஊராட்சிகளுக்கு மட்டுமே செல்கிறது. இம் முறையில் தகுந்த மாற்றம் கொண்டு வரப்பட்டு மூன்றாவது நிதிக்குழு மானியத்தின் பரிந்துரையின்படி, மாவட்ட ஊராட்சிகளுக்கும் வழங்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

44. மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்குத் தற்போது வழங்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட படியினை உயர்த்தி மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/– ஆக வழங்கப்படவேண்டும் என்ற பொருள் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. மாவட்ட ஊராட்சித் தலைவர்களின் அலுவலக அறைகளை மேம்படுத்துவது, புதிய வாகனம் வழங்குவது குறித்து துறை மூலம் ஆய்வு செய்து முடிவெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

## ஊராட்சி ஒன்றியங்கள் தொடர்புடைய பரிந்துரைகளை குறித்த பொருட்களின் மீதான விவாதங்கள்

45. மாநில நிதிக்குழுவின் பகிர்வு மானியத்தில் ஊராட்சி ஒன்றியங்களின் பங்கினை உயர்த்துதல் குறித்து விவாதிக்கப்பட்டது. தற்போது 9 சதமாக உயர்த்தப்பட்டுள்ள மாநில அரசின் பகிர்வு மானியத்தை இனி வரும் காலங்களில் உயர்த்தி அளிப்பது குறித்து ஆய்வு செய்திட தீர்மானிக்கப்பட்டது.

46. பல்வேறு துறைகளால் ஊரகப் பகுதிகளில் உருவாக்கப்படும் சந்தைகள் / கடைகளை ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற பொருள் நிராகரிக்கப்பட்டது.

47. ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலுள்ள பணியிடங்களை நியமனக் குழுக்கள் மூலம் நிரப்புதல் என்ற பொருளில் தற்போது காலியாக உள்ள அனுமதிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பணியாளர் இடங்களை நிரப்புவது குறித்து ஆய்வு செய்து முடிவு எடுப்பது என்றும் அரசுத் தரப்பு பணியாளர்களை நியமனக் குழு மூலம் நியமிக்க இயலாது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

48. புதிய பேருந்து வழித்தடங்கள் உருவாக்கும்போது, ஊராட்சி ஒன்றியங்களின் ஆலோசனை பெறப்பட வேண்டும் என்ற பொருள் சம்மந்தப்பட்ட துறையின் ஆலோசனைக்குப் பின் முடிவு செய்யப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

49. பல்வேறு துறைகள் மூலம் ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள், மத்திய அரசு மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் முதலியவற்றை ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும் என்ற பொருள் சம்மந்தப்பட்ட துறைகளுடன் ஆலோசனைக்குப்பின் முடிவு செய்யப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

50. பல்வேறு திட்டங்களுக்கான பயனாளிகள் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும் என்ற பொருள் குறித்து விவாதிக்கப்பட்டது. கிராம ஊராட்சி அளவில் இதனை செய்ய இயலும் என்பதால் ஒன்றிய அளவில் ஒப்படைக் வேண்டியதில்லை என தெரிவிக்கப்பட்டது.

51. சந்தைகள் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படவேண்டும் என்ற பொருள் சம்மந்தப்பட்ட துறைகளுடன் ஆலோசனைக்குப்பின் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

52. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளை உள்ளடக்கிய ரூ.50/– இலட்சத்துக்கும் குறைவான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் உதவிப் பொறியாளர் (குடிநீர் வழங்கல்) மூலம் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் செயல்படுத்த ஆணையிட வேண்டும் என்ற பொருள் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்துடன் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

## நிதித்துறை

53. ஆயுள் / மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு நடைமுறைப் படுத்திட வேண்டும் என்ற பொருள் பரிசீலனைக்குப்பின் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

54. தற்போதுள்ள விலைவாசி உயர்வை கருத்தில் கொண்டும், பேருந்து கட்டண உயர்வை கருத்தில் கொண்டும் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு பயணப்படி / அமர்வு படி உயர்த்திட வேண்டும் என்ற பொருள் பரிசீலனைக்குப்பின் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

## வேளாண்மைத் துறை

55. வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்த வேண்டும் என்ற பொருள் குறித்து வேளாண் துறையுடன் பரிசீலனைக்குப்பின் முடிவு செய்யப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது..

56. வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த ஆலோசனைகள் வழங்கும் அதிகாரம் வழங்க வேண்டும் என்ற பொருள் பரிசீலனைக்குப்பின் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

## வருவாய்த்துறை

57. மணல் குவாரிகள் மற்றும் சிறுகனிம குவாரிகளைக் கண்காணிக்கும் / ஆய்வு செய்யும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க வேண்டும் என்ற பொருளின் மீதான விவாதத்தில் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் முடிவு செய்யப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

# கிராம ஊராட்சிப் பொருட்களின் மீதான விவாதங்கள்

## ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை :

58. வணிக வளாகம் / கடைகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து மேலும் போதுமான நிதி வசதியுள்ள கிராம ஊராட்சிகள் சொந்த நிதியில் கட்டிக் கொள்ளவும் அனுமதித்து, அதன் மூலம் கிராம ஊராட்சிகளின் வருவாய் பெருக்குதற்கு வழி வகை செய்திட வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

59. கேபிள் டி.வி நடத்த உரிமம் வழங்கும் அதிகாரத்தையும் அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தையும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும் என்ற பொருள் குறித்து இதற்காக அரசு வகுத்துள்ள சட்ட விதிகள்படி ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

60. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம் மற்றும் பிற துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் குடிநீர் வழங்கல் திட்டங்கள் அனைத்தும் கிராம ஊராட்சிகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

61. கிராம ஊராட்சிப் பகுதிகளில் செயல்படும் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு வீட்டுவரி விதித்தலைக் கட்டாயமாக்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

62. கிராம ஊராட்சிப் பகுதிகளில் நடைபெறும் அனைத்துத் துறை சார்ந்தப் பணிகளையும் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடும் அதிகாரம் கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

63. மரபுசாரா எரிசக்திகளான சூரிய விளக்குகள், தாவர சக்தி எரிவாயுக் கலன்கள், சாண எரிவாயுக் கலன்களை அமைத்தல் ஆகியவற்றை கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்த வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

64. ஏற்கனவே, மனைப் பிரிவிற்குத் தடையின்மைச் சான்று வழங்கும் அதிகாரம் இருந்ததைப் போன்று மீண்டும் மனைப் பிரிவிற்குத் தடையின்மைச் சான்று வழங்கும் அதிகாரத்தை கிராம ஊராட்சித் தலைவருக்கு வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

65. சமூக நலத்துறை ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் தனி நபர் பயன் திட்டங்களை கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்த வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

66. கட்டிடங்களுக்கு மின் இணைப்பு, கிராம ஊராட்சியின் தடையின்மை சான்று அடிப்படையில் வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## மின்சார வாரியம்

67. தெரு விளக்குகள் பராமரித்தலுக்கு இன்றைய சந்தை நிலவரப்படி பராமரிப்பு செலவு மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

68. ஊராட்சிகளுக்கான மின்கட்டணத்தை வீட்டு இணைப்புகளுக்கான குறைந்தபட்ச மின் கட்டண விகிதத்தில் நிர்ணயம் செய்தல் வேண்டும் என்ற பொருள் ஆய்வு செய்யப்பட்டது. இது குறித்து மின்சார வாரியத்துடன் ஆலோசித்து முடிவு செய்திட தீர்மானிக்கப்பட்டது.

69. ஒரு குடிசை, ஒரு விளக்குத் திட்டத்தினை கிராம ஊராட்சிகள் செயல்படுத்தும் அதிகாரம் வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## பள்ளிக் கல்வித் துறை

70. கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள பள்ளிகளின் தரம் உயர்த்துதல் மற்றும் மாற்றம் செய்தலை கிராம ஊராட்சிகளின் பரிந்துரையின் அடிப்படையில் செய்ய வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## பள்ளி சாராக் கல்வி

71. வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் வட்டார மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களில் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## நூலகத்துறை

72. கிராமப் பகுதிகளில் இயங்கும் பொது நூலகங்கள் அனைத்தையும் அந்தந்த கிராம ஊராட்சிகளின் கட்டுப்பாட்டில் இயக்க வேண்டும். மேலும், கிராமப் பகுதிகளில் பொது நூலகங்கள் கட்டுதல் மற்றும் பராமரிக்கும் பொறுப்பினை கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

73. கிராமப் பகுதிகளில் உள்ள நூலகங்களுக்குப் புத்தகங்கள் மற்றும் பத்திரிக்கைகள் வாங்குவதற்கு அரசின் நிதியை கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## தமிழ் வளர்ச்சி மற்றும் கலாச்சாரத் துறை

74. கிராம ஊராட்சிகளில் பாரம்பரியக் கலைகளை இளைஞர்களுக்குப் பயிற்றுவிக்கப் பயிற்சிக் கூடங்கள் அமைக்க அரசின் நிதி உதவியை கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

75. கிராமப் பகுதிகளில் கலை இலக்கிய விழாக்கள் நடத்த அரசு நிதி ஒதுக்கீடு செய்து கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

76. கிராமப் பகுதிகளில் உள்ள விளையாட்டு மைதானங்களை மேம்படுத்த கிராம ஊராட்சி நிதிக்கு பதிலாக அரசின் நிதி உதவியை கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும் என்ற பொருள் குறித்து பரிசீலித்திட தீர்மானிக்கப்பட்டது.

## சுகாதாரம்

84. மகளிர் நலத்திட்டங்களை அமுல்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடும் அதிகாரத்தை வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

85.முதியோர் இல்லங்களை பார்வையிடும் அதிகாரத்தை கிராம ஊராட்சிகளுக்கு அளித்தல் வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

86. வறுமைக்கோட்டிற்குக் கீழ் கிராம ஊராட்சிப் பகுதியில் இருக்கும் கருவுற்றத் தாய்மார்களுக்கு மருத்துவத் துறை வழங்கும் நிதிஉதவி, மருத்துவ உதவி போன்ற நலத் திட்டங்களை கிராம ஊராட்சிகள் மூலம் வழங்குதல் வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

87. விதவை தாய்மார்களின் மகள்களுக்கு வழங்கப்பெறும் அரசு நலத் திட்டத்தினை கிராம ஊராட்சிகளின் பரிந்துரையின் பேரில் செயல்படுத்த வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது

88. கணவரால் கைவிடப்பட்ட மகளிர்க்கு சமூக நலத்துறை மூலம் வழங்கபெறும் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தினை கிராம ஊராட்சியின் பரிந்துரையின் பேரில் செயல்படுத்த வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது .

89. வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் திருமணம் ஆகாத மகளிருக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தை கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்த வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

90. கிராம ஊராட்சிப் பகுதிகளில் குடியிருந்து வரும் நபர்களுக்குத் தொழிற்பயிற்சி வழங்கும் அதிகாரம் மற்றும் தேர்தெடுக்கும் அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

91. விதவை மகள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் பட்டியல் கிராம ஊராட்சியின் பரிந்துரையின் அடிப்படையில் தயாரிக்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

92.பணிக்கு செல்லும் மற்றும் உடல் நலமில்லாத (ஊனமுற்ற) தாய்மார்களின் குழந்தைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள காப்பகங்களை மேற்பார்வையிடும் அதிகாரத்தை கிராம ஊராட்சிகளுக்கு அளித்தல் வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது .

93.அனாதை இல்லங்களின் செயல்பாடுகளை மேம்படுத்த இவ்வில்லங்களையும் பார்வையிடும் அதிகாரத்தை கிராம ஊராட்சிகளுக்கு அளித்தல் வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

94. கிராம ஊராட்சி பகுதியில் நடைபெறும் சிசு கொலையினை தடுப்பது, ஒழிப்பது மற்றும் ஆதரவற்ற பெண்களைப் பாதுகாத்தல் போன்றக் குழுக்களில் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு

பிரதிநிதித்துவம் அளித்தல் மற்றும் திட்ட செயல்பாட்டை மேற்பார்வை செய்யும் அதிகாரம் வழங்குதல் வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

95. சமூக நலத் துறையின் கீழ் இயங்கும் தொழிற்சாலைகள், பணிமனைகள் மற்றும் உற்பத்தி பிரிவுகளை பார்வையிடும் அதிகாரத்தினை கிராம ஊராட்சிகளுக்கு வழங்கவேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## ஆதிதிராவிடர் நலத்துறை

96. ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக அரசு அறிவிக்கும் நலத்திட்டங்களின் செயல் பாட்டினை ஆய்வு செய்யும் அதிகாரம் கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

97. துப்புரவு பணியாளர்களுக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் மறுவாழ்வு அளிக்கும் திட்ட செயலாக்கத்துக்கான அதிகாரங்களை கிராம ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

98. 1995 ஆம் ஆண்டு வன்கொடுமை தடுப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது கிராம ஊராட்சிகளின் ஆலோசனைகளைப் பெறப்பட வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

99. கொத்தடிமைத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு, மறுவாழ்வு அளிப்பதற்கு கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு நலத்துறை

100. பொது விநியோக கடைகளின் செயல்பாட்டினை கண்காணிக்கும் அதிகாரத்தினை கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

101. கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் கிராம ஊராட்சி உறுப்பினர்கள் நியாயவிலைக் கடைகளைப் பார்வையிடவும், குறைகளை வட்ட வழங்கல் அலுவலருக்கு தெரிவிக்கவும் அதிகாரம் வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## நிதித்துறை

102. தற்போது மாநில நிதிக்குழு மான்யம் 9 சதவீதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டாலும் நிதிப் பற்றாக்குறை ஏற்படுவதால் தன்னிறைவு பெற்ற கிராம ஊராட்சியாக விளங்கிட கூடுதல் சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

103. ஆயுள் / மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு நடைமுறைபடுத்திட வேண்டும் என்ற பொருள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

104. தற்போதுள்ள விலைவாசி உயர்வை கருத்தில் கொண்டும், பேருந்து கட்டண உயர்வை கருத்தில் கொண்டும் கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான பயணப்படி / அமர்வுபடி உயர்த்திட வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## வேளாண்மைத் துறை

105. மாநில அரசு செயல்படுத்தும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினை கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்த வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## வருவாய்த்துறை

106. தற்போது வருவாய் வட்டாட்சியர்களால் வழங்கப்பட்டு வரும் பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்கும் அதிகாரத்தை கிராம ஊராட்சிகளுக்கு ஒப்படைத்தல் வேண்டும் என்ற பொருள் ஆய்வுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

107. இருப்பிடச் சான்றிதழ் வழங்கும் அதிகாரத்தை கிராம ஊராட்சிக்கு ஒப்படைத்தல் வேண்டும் என்ற பொருள் ஆய்வுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

108. குடும்ப அட்டைகளை கிராம ஊராட்சியின் பரிந்துரையின்அடிப்படையில் வழங்குதல் வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

109. கிராம ஊராட்சிகளில் உள்ள நீர்நிலை, மற்றும் இதர புறம் போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் அதிகாரம் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும், இதற்கு வருவாய்த் துறை, காவல்துறை ஒத்துழைக்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

110. கிராம ஊராட்சிப் பகுதிக்குட்பட்ட மதுபானக்கடைகளில் பெறப்படும் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினை கிராம ஊராட்சிக்கு வழங்க வேண்டும் என்ற பொருள் ஆய்வுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## கால்நடை பராமரிப்பு துறை

111. கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கிராமங்களில் செயல்படுத்தப்படும் அரசுத் திட்டங்களை கிராம ஊராட்சிகளின் பரிந்துரையின் அடிப்படையில் செயல்படுத்த வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

112. புதியதாக கால்நடை மருத்துவ மனைகள் அமைத்தல் மற்றும் கிளை நிலையங்களை தரம் உயர்த்துதல் ஆகியவற்றை கிராம ஊராட்சியின் பரிந்துரையுடன் செயல் படுத்த வேண்டும் என்ற பரிந்துரை குறித்து ஆய்வு செய்து முடிவெடுப்பது என தீர்மானிக்கப்பட்டது.

113. கால்நடைகளுக்கு கொள்ளை நோய் மற்றும் தொற்று நோய் பரவும் போது அவற்றுக்கான நோய் தடுப்பு நடவடிக்கைகளை கிராம ஊராட்சியின் மூலம் இணைந்து செயல்படுத்துதல் வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

114. தற்போது கால்நடை பராமரிப்புத் துறை மூலம் செயல்படுத்தப்படும் கால்நடைப்பட்டி மற்றும் மீன் இறைச்சி தொட்டிகள் ஆகியவற்றை கிராம ஊராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## மீன் வளத்துறை

115. பொதுப்பணித்துறை மற்றும் இதர துறையின் ஏரி, குளங்களில் மீன்பாசி குத்தகை ஏலம் விடும் அதிகாரத்தை கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## வனத்துறை

116. தற்போது வனத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் சமூக பண்ணைக் காடுகள் மேம்பாடு திட்டத்தை கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்த அதிகாரம் வழங்க வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

117. வனத்துறை பகுதிகளில் சாலை அமைத்தல் மற்றும் குடிநீர்ப்பணிகள் மேற்கொள்ள தற்போது கடைபிடிக்கப்பட்டு வரும் கடின நடைமுறைகளை எளிதாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## சிறு தொழில்கள்

118. தொழில் முனைவோர் மேம்பாடு திட்டத்தில் கிராம ஊராட்சி பகுதிகளில் பயனாளிகள் தேர்வு செய்யும் அதிகாரம் கிராம ஊராட்சிக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## கதர் கிராமம் மற்றும் குடிசை தொழில் வாரியம்

119. கதர் கிராமம் மற்றும் குடிசை தொழில் வாரியம் மூலம் செயல்படுத்தும் திட்டங்களுக்குரிய தொழில் நுட்ப பயிற்சிகள், மேம்பாட்டு திட்டங்கள் ஆகியவற்றிற்கு பயனாளிகள் தேர்வு செய்வதை கிராம ஊராட்சிகள் மூலம் செய்ய வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

120. கதர் கிராமம் மற்றும் குடிசை தொழில் வாரியம் மூலம் கிராம ஊராட்சிப் பகுதிகளில் தொழில் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் பயிற்சி மையங்களில் அளிக்கப்படவுள்ள பயிற்சிகளுக்குரிய பயனாளிகளை தகுதியின் அடிப்படையில் கிராம ஊராட்சியின் மூலமாக தேர்வு செய்ய வேண்டும் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேலும் உயர் நிலை குழுவின் உறுப்பினர்கள் கீழ் கண்ட கருத்துகளை குழுவின் பரிசீலனைக்காக தெரிவித்தனர்.

பல்வேறு திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகள், சாலை மேம்பாடு மற்றும் வடிகால் அமைத்தல் பணிகளுக்கு ஒன்றிய மேற்பார்வையாளர் ரூ.50,000/– வரையிலும் ஒன்றிய பொறியாளர் ரூ.1,00,000/– வரையிலும் மேலோப்பம் செய்யலாம் என்றிருப்பதை மாற்றி தொகையை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை ஆய்வுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் தமது பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள அரசு அளித்துள்ள வரம்புக்கு உட்பட்டு நிர்வாக அனுமதி வழங்கும் அதிகாரத்தை வழங்க இராமநாதபுரம், தேனி மாவட்டங்களில் மறுப்பதாக, சம்மந்தப்பட்ட மாவட்ட உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மூன்றடுக்கு ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்ச வரம்பினை உயர்த்த வேண்டும். அதற்கு பதிலளித்த ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை செயலாளர், மூன்றடுக்கு கிராம ஊராட்சிகளிலும் தங்களது பொது நிதியிலிருந்து தீர்மானம் இயற்றி வேலைகளைத் தேர்ந்து எடுக்கலாம் என்றும் இது குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் நிர்வாக அனுமதி வழங்க உள்ள வரம்பினை உயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஓட்டுநர், இரவுக்காவலர் ஆகிய பணியாளர்கள் நியமனம் செய்யும் அதிகாரம் வழங்கப்படவேண்டும் என உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கு, காலியாக உள்ள ஊராட்சி ஒன்றியக் குழு பணியிடங்கள் நிரப்புவது பற்றிய அரசாணை தயார் நிலையில் இருப்பதாகவும் விரைவில் வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார்.

பள்ளிக்கூடங்கள் மற்றும் தளவாட சாமான்கள் பராமரிப்பிற்காக தனியே நிதி ஒதுக்கீடு செய்து அதை ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும் என உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கு பள்ளிக்கூடங்களை புதுப்பிக்கும் அமைப்பு மூலம் (School Renovation Committee) அந்தந்த ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர், ஆசிரியர்கள், ஒன்றிய பொறியாளர் ஆகியோர் அடங்கிய குழு பள்ளியை ஆய்வு செய்து பள்ளிப் பராமரிப்பினை செய்து கொள்ளலாம் என தெரிவித்தார்.

துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.600/– மட்டுமே ஊதியமாக தற்பொழுது கொடுக்கப்படுகிறது. இதனால் துப்புரவு பணியாளர் பணியிடங்கள் காலியாகவே இருக்கிறது. கிராமங்களில் சுகாதாரக் கேடு பெருமளவில் ஏற்படுகிறது. ஆதலால் துப்புரவு பணியாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி கொடுக்க வேண்டும் என உறுப்பினர் கேட்டுக் கொண்டார்.

மாவட்ட ஊராட்சி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கணினிகள் பராமரிக்க புதிய பணியிடம் உறுவாக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. மாவட்ட ஊராட்சி தலைவருக்கு உதவியாளர் நியமிக்கப்படும் போது இப்பொறுப்பையும் அந்த உதவியாளரே கவனிக்கலாம் என முடிவு செய்யப்பட்டது.

ஊரக பகுதிகளை குப்பைகள் இல்லாமல் தூய்மையாக பராமரிக்க கூடுதலான பணியாளர்களை நியமிக்க உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலாளர் சுகாதார பணிகளை கீழ் கண்ட மூன்று வழிகளில் மேற்கொள்ளளாம் எனத் தெரிவித்தார். 1. ஊதியத்தின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டு காலியாக உள்ள இடத்தில் பணியாளர்களை நியமித்தல். 2. சுய உதவிக் குழுக்களின் மூலம் குப்பைகளை கொண்டு எரு தயாரித்தல் (Vermi Compost) 3. ஒப்பந்த அடிப்படையில் சுகாதார சேவைகளை மேற்கொள்ள அனுமதித்தல் ஆகிய முறைகளில் சுகாதார சேவைகளை மேற்கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

ஊராட்சி ஒன்றியங்களில் அதிகப்படியான பணியிடங்கள் காலியாக இருப்பதாக உறுப்பினர் தெரிவித்ததற்கு, தற்பொழுது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளதாக அரசு செயலர் தெரிவித்தார்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணியினை தேர்வு செய்யும் பொழுது குளம் வெட்டும் பணி மட்டும் தேர்வு செய்யப்படுகிறது. படித்துறைகள் கட்டப்படுவதில்லை. அதே போன்று சாலை அமைக்கும் பணி மட்டும் தேர்வு செய்யப்படுகிறது. தடுப்புச் சுவர் அமைக்கப்படுவதில்லை. இதனால் பொதுமக்கள் அதிருப்தி அடைவதாக தெரிவித்து எஸ்.ஜி.ஆர்.ஒய் திட்டத்தை மீண்டும் இந்த மாவட்டங்களில் செயல்படுத்தப்ப வேண்டும் என கேட்டுக்கொண்டதற்கு இத்தகையப் பணிகளை வேறு புதிய திட்டங்களின் மூலம் செயல்படுத்துவது குறித்து அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக பேராசிரியர் முனைவர் பழனித்துரை, காந்தி கிராமம் பல்கலைக் கழக பேராசிரியர் கூறியதாவது– ஊராட்சிகளின் செயல்பாடுகள் என்பது பெறும் எதிர்பார்ப்புகளுக்கிடையே நடந்து வருகிறது. தற்போது அமைக்கப்பட்டுள்ள மாநில அளவிலான உயர்நிலைக் குழுக்கூட்டத்தில் அனைத்து மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் பங்கேற்று அதை மக்களுக்கு எடுத்துச் சொல்கிறார்கள். அனைத்து மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு பயிற்சி கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் விரிவான அறிக்கைகள்,

அதிகாரங்கள் மற்றும் ஆணைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அனைவரும் அதைப் படித்து பயன்பெறவேண்டும். இதுவரை ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டனவா என்பதை பார்க்க வேண்டும். இதுவரை போடப்பட்ட சட்டத்தை நாம் எந்த அளவு முறையாக, முழுமையாக புரிந்துகொண்டோம், எந்த அளவு ஊராட்சித் தலைவர்களுக்கு தெளிவு படுத்தப்பட்டது என்பதை பார்க்க வேண்டும். எந்தவொரு பணியையும் கிராம சபை தீர்மானத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டும். இது குறித்து அரசாணை எண்.152 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை, நாள் 20.07.2007–ல் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை இயக்குநர் மூலமாகவோ, செயலர் மூலமாகவோ கேட்டு தெரிந்து கொள்ளலாம். அதிகாரத்தை இன்னும் பரவலாக்கவேண்டும், எந்த நிலையில் அதிகாரம் உள்ளது என்று அறிக்கை தயார் செய்ய வேண்டும், அரசாங்கத்திற்கு வலுவூட்டக் கூடிய கோரிக்கையாக இருக்க வேண்டும் என்று தனது பல்கலை கழகம் மூலம் தயாரித்த விரிவான அறிக்கையினை மாண்புமிகு அமைச்சருக்கு அனுப்பி வைப்பதாக தெரிவித்தார். எந்தவொரு தகவலையும் Right Information Act மூலமாக அந்தந்த துறை மூலமாக அனைத்து தகவலையும் பெற்று, மக்களுக்கு வழிகாட்டலாம் என்று கூறி தமது உரையை நிறைவு செய்தார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார். தற்போது நடைபெற்ற இக்கூட்டம் அனைவருக்கும் பயனுள்ள வகையில் அமைந்திருக்கும் என தான் நம்புவதாக தெரிவித்தார். முக்கியமான அறிவிப்புகளான தொலைபேசி இணைப்பு, அடையாள அட்டை மற்றும் மின்சார வாரியம் சம்பந்தமான பிரச்சனைகள் நமது மாண்புமிகு அமைச்சர் மூலமாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. மக்களுக்கு எல்லா பயன்களும் சென்று சேர வேண்டும் என்ற எண்ணத்தில் அனைத்து பணிகளும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வழி காட்டுதலின் பேரில் வேகமாக நடைபெற்று வருகிறது. தற்போது இக்குழுவின் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு இறுதி அறிக்கை முதல்வரிடம் சமர்பிக்கப்படும் என்று தெரிவித்தார். அவரது நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

## ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் மற்றும் பொறுப்புகள் வழங்குவது தொடர்பாக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பல்வேறு அரசுத்துறை செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்களுடன் 11.10.2007 மற்றும் 12.10.2007 அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் சமூக நலத்துறை மற்றும் சத்துணவுத் திட்டம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் ஆகிய துறைகளின் அரசு செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்களின் கூட்டம் 11.10.2007 ல் நடத்தப்பட்டது. இதே போன்று பள்ளிக் கல்வி, சுகாதரம், உணவு மற்றும் கூட்டுறவு, எரிசக்தி, கால்நடை பராமரிப்பு மற்றும் வருவாய்த்துறை அரசு செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்களின் கூட்டம் 12.10.07ல் நடைபெற்றது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலாளர் இக்கூட்டங்களை ஒருங்கிணைத்தார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரும் இக்கூட்டத்தில் கலந்துக் கொண்டார்.

பல்வேறு துறை சார்ந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குவது தொடர்பாகக் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

### சமூக நலத் துறை

1. கிராம ஊராட்சிகளில் செயல்படும் சத்துணவு மற்றும் ஊட்டசத்து மையங்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுவதற்கு கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு போதிய அதிகாரம் வழங்கப்படும். இது தொடர்பாக அரசாணை ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன. அரசாணையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்த மீண்டும் வலியுறுத்தப்படும்.
2. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் போன்ற பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்கள் மற்றும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றின் பயனாளிகளின் பட்டியலை கிராம ஊராட்சி பரிந்துரை செய்யும். அதனை சமூக நலத் துறை அலுவலர்கள் தகுதியின் அடிப்படையில் பயனாளிகளின் பட்டியலை கூர்ந்தாய்வு செய்வர். தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியல் கிராம சபைக் கூட்டத்தில் தகவலுக்காக வைக்கப்படும்.

3. ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை செயல்படுத்தும் தனி நபர் பயன் பெறும் திட்டங்களின் பயனாளிகளைக் கிராம ஊராட்சிகள் பரிந்துரை செய்து அதனை கிராம சபை உறுதி செய்யும்.

4. இத்துறை செயல்படுத்தும் ஓய்வுதியத் திட்டங்களின் பயனாளிகளுக்கு தற்போது மாவட்ட அளவில் பண அஞ்சல் மூலம் அனுப்பப்படும் நடைமுறையினை மாற்றி இத்தொகை கிராம ஊராட்சிகள் மூலம் வழங்கப்படும்.

5. கிராம அளவில் சமூக நலத்துறை திட்டங்களுக்காக அமைக்கப்படும் குழுக்களுக்கு பதிலாக இனி கிராம ஊராட்சியே இத்தகைய குழுவாக அங்கீகரிக்கப்படும். தேவைப்படின், இக்குழுவிற்கு கூடுதல் உறுப்பினர்கள் சமூக நலத்துறையால் நியமனம் செய்யப்படுவர்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளைக் கண்காணிக்கும் அதிகாரம் கிராம ஊராட்சிக்கு வழங்கப்படும். இது தொடர்பாக ஏற்கனவே அரசாணை எண்.85, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 14.7.1999–ல் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகள் மீண்டும் வலியுறுத்தப்படும்.

2. தாட்கோ செயல்படுத்தும் தனிநபர் பயன் பெறும் திட்ட பயனாளிகளைத் தேர்வு செய்ய தாட்கோ நிர்ணயித்துள்ள விதிமுறைகள் அடிப்படையில் பயனாளிகளின் பட்டியலை தேர்ந்தெடுக்கக் கிராம ஊராட்சிக்கு அதிகாரம் வழங்கப்படும். கிராம ஊராட்சிகளின் பரிந்துரையின் அடிப்படையிலும், பயனாளிகளின் தகுதியின் அடிப்படையிலும் தாட்கோ பயனாளிகளை தேர்ந்தெடுக்கும். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியலை கிராம சபையின் தகவலுக்காகவும், ஒப்புதலுக்காகவும் வைக்கப்படும்.

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்க பயனாளிகளின் பெயர்களைக் கிராம ஊராட்சிகள் பரிந்துரை செய்யும். இப்பட்டியலை தகுதியின் அடிப்படையில் ஆதிதிராவிடர் நல தாசில்தார் கூர்ந்தாய்வு செய்து இறுதி செய்வார்.

4. விடுவிக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர்களின் மறுவாழ்வு பணிகளின் செயல்பாட்டினை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகள் மேற்பார்வையிடும்.

5. தீண்டாமை ஒழிப்பது தொடர்பாக முன் மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கிராம ஊராட்சிகளுக்கு ஆதி திராவிடர் நலத் துறையால் வழங்கப்படும் ஊக்கத் தொகையைச் செலவு செய்யும் அதிகாரம் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும்.

6. கிராம அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை திட்டங்களுக்காக அமைக்கப்படும் குழுக்களுக்கு பதிலாக இனி கிராம ஊராட்சியே இத்தகைய குழுவாக அங்கீகரிக்கப்படும். தேவைப்படின், இக்குழுவிற்கு கூடுதல் உறுப்பினர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் நியமனம் செய்யப்படுவர்.

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபாண்மையினர் நலத் துறை

1. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறையை சார்ந்த பள்ளிகள் மற்றும் விடுதிகளை கண்காணிக்கும் அதிகாரம் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கப்படும்.

2. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை தொடர்பாகவும் இலவச வீட்டு மனை பட்டா வழங்குதல் போன்ற தனி நபர் பயன்பெறும் திட்டங்களின் பயனாளிகளைத் தேர்வு செய்து பரிந்துரை செய்யும் அதிகாரம் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும். இவ்வாறு அளிக்கப்பட்ட பயனாளிகள் பட்டியலிலிருந்து தகுதியின் அடிப்படையில் பயனாளிகளை இத்துறை தேர்ந்தெடுக்கும்.

3. இத்துறையின் மூலம் பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் இடம் தேர்வு செய்யும் பணி கிராம ஊராட்சியுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்படும்.

7. கிராம அளவில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறைத் திட்டங்களுக்காக அமைக்கப்படும் குழுக்களுக்கு பதிலாக இனி கிராம ஊராட்சியே இத்தகைய குழுவாக அங்கீகரிக்கப்படும். தேவைப்படின், இக்குழுவிற்கு கூடுதல் உறுப்பினர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறையால் நியமனம் செய்யப்படுவர்.

## பள்ளிக் கல்வித் துறை

1. தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளைக் கண்காணிக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவருக்கு வழங்கப்படும். இது தொடர்பாக ஏற்கனவே அரசாணை எண்.248, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11.6.1997—ல் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகள் மீண்டும் வலியுறுத்தப்படும்.

2. கிராமங்களிலுள்ள வயது வந்தோர் மற்றும் முறை சாராக் கல்வி மையங்களை கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்கள் கண்காணிக்க அதிகாரம் வழங்கப்படும். இது தொடர்பாக ஏற்கனவே அரசாணை எண்.268, பள்ளிக் கல்வித் துறை, நாள் 27.8.1999—ல் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகள் மீண்டும் வலியுறுத்தப்படும்.

3. இந்திய அரசு வகுத்திருக்கும் விதிமுறைகளுக்குட்பட்டு அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் கிராம கல்விக்குழுவில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள உறுப்பினர்களுடன் கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் கிராம ஊராட்சி உறுப்பினர்கள்ஆகியோர் கிராமக் கல்விக் குழுவில் இடம் பெறுவர்.

8. கிராம அளவில் பள்ளிக் கல்வித் துறைத் திட்டங்களுக்காக அமைக்கப்படும் குழுக்களுக்கு பதிலாக இனி கிராம ஊராட்சியே இத்தகைய குழுவாக அங்கீகரிக்கப்படும். தேவைப்படின், இக்குழுவிற்கு கூடுதல் உறுப்பினர்கள் பள்ளிக் கல்வித் துறையால் நியமனம் செய்யப்படுவர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருட்களும் விவாதிக்கப்பட்டன–

1. கிராம ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், அவரவர் பகுதிகளில் செயல்படும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

2. வயது வந்தோர் மற்றும் பள்ளிசாராக் கல்வி மையங்களுக்கு தற்போது மத்திய அரசு அளித்து வரும் நிதி உதவி முடிவிற்கு வந்தவுடன், இம்மையங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஏற்றுக் கொள்ள பள்ளிக் கல்வித் துறையினர் கேட்டுக் கொண்டனர். ஆனால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் நிதிப் பற்றாக்குறை உள்ளது என்றும், இம்மையங்களில் பணியாற்றும் கூடுதல் பணியாளர்களுக்கான கூடுதல் நிதிச்சுமையினை ஏற்பதற்கு வாய்ப்பில்லை என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலாளர் தெரிவித்தார். எனவே, மேற்படி கோரிக்கை ஏற்கப்படவில்லை.

3. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கான புதிய கட்டிடங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் கட்டப்பட்ட பள்ளிக் கட்டிடங்களுக்கான பராமரிப்புப் பணிகளை ஊராட்சி ஒன்றியங்களே தொடர்ந்து மேற்கொள்ளும். ஆனால் மின்சார வசதியுள்ள இப்பள்ளிகளுக்கான மின்சாரக் கட்டணத்தை பெற்றோர் ஆசிரியர் கழகம் அல்லது பள்ளிக் கல்வித் துறையால் ஏற்றுக் கொள்ளப்படும். நிதிப் பற்றாக்குறையின் காரணமாக ஊராட்சி ஒன்றியங்களால் இச்செலவினத்தை மேற்கொள்ள இயலாது. மின்சார வசதியுள்ள பள்ளிகளின் மின் கட்டணம் தற்போது எவ்வாறு கட்டப்படுகிறது என்கிற விவரங்கள் சேகரிக்கப்படும் என பள்ளிக் கல்வித் துறை செயலாளர் தெரிவித்தார்.

## சுகாதாரத் துறை

1. ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் துணை சுகாதார மையங்களை ஆய்வு செய்யவும் கண்காணிக்கவும் சம்பந்தப்பட்ட பகுதியின் கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும். வட்டார மருத்துவ

அலுவலர், அனைத்து ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் துணை சுகாதார மையங்களின் செயல்பாடுகள் பற்றி விவாதிக்கும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் கடைசி செவ்வாய் அன்று நடத்தும் மருத்துவ அலுவலர்கள் கூட்டத்திற்கு கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்ள அழைப்பு விடுப்பர். இக்கூட்டத்தில் அளிக்கப்பட்ட குறிப்புகளை உரிய பதிவேட்டில் பதிவு செய்து அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் பதிவு செய்து அதன் விவரத்தை சம்பந்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையத்தின் மருத்துவ அலுவலர் மூலம் சம்பந்தப்பட்டட கிராம ஊராட்சித் தலைவருக்கு தெரிவிக்கப்படும்.

2. சிக்கன்குன்யா, கலரா போன்ற பொதுவான நோய்களை தடுப்பதற்கு தகவல் கல்வி தொடர்பு பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யும் தொகையினை, சுகாதாரத் துறை அலுவலர்களின் தொழில்நுட்ப மேற்பார்வையின் கீழ் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகள் மூலம் செலவிடப்படும்.

3. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டம், ஜனனி சுரக்ஷா போன்ற தனிநபர் நலத் திட்டத்தின் கீழ்த் தேர்வு செய்யும் பயனாளிகளின் பட்டியல், கிராம ஊராட்சியால் பரிந்துரை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் சுகாதாரத் துறையின் மூலம் இறுதியாகத் தேர்வு செய்யப்படும்.

4. கிராம அளவில் சுகாதாரத் துறைத் திட்டங்களுக்காக அமைக்கப்படும் குழுக்களுக்கு பதிலாக இனி கிராம ஊராட்சியே இத்தகைய குழுவாக அங்கீகரிக்கப்படும். தேவைப்படின், இக்குழுவிற்கு கூடுதல் உறுப்பினர்கள் சுகாதாரத் துறையால் நியமனம் செய்யப்படுவர்.

## உணவு மற்றும் கூட்டுறவுத் துறை

1. கிராம ஊராட்சி எல்லைக்குட்பட்ட நியாய விலை கடைகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்யவும் கண்காணிக்கவும் கிராம ஊராட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்படும்.

2. நியாயவிலைக் கடைகளின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்யவும், மேம்படுத்தவும் காலாண்டிற்கு ஒரு முறை கிராம ஊராட்சித் தலைவர்கள் கூட்டம் வட்ட வழங்கல் அலுவலர்களால் நடத்தப்படும். இக்கூட்டத்திற்கு கூட்டுறவு சார் பதிவாளர் , நுகர்பொருள் வாணிப கழகத்தின் பணியாளர்கள் அழைக்கப்பட வேண்டும்.

3. நாளது வரை பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட 'அ' பதிவேடு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, 26ம் நாள் நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். இவ்வாறு வைக்கப்படும்போது கடந்த ஓராண்டிற்குள் நீக்கம் செய்யப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட நபர்களின் பெயர் பட்டியலுடன் வைக்கப்பட வேண்டும்.

4. பயிர்கடன் விவரங்கள் மற்றும் பயனாளிகளின் பட்டியல் ஒவ்வொரு காலாண்டும் கிராமசபைக் கூட்டத்தில் வைக்கப்பட வேண்டும்.

5. கிராம அளவில் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை திட்டங்களுக்காக அமைக்கப்படும் குழுக்களுக்கு பதிலாக இனி கிராம ஊராட்சியே இத்தகைய குழுவாக அங்கீகரிக்கப்படும். தேவைப்படின், இக்குழுவிற்கு கூடுதல் உறுப்பினர்கள் உணவு மற்றும் கூட்டுறவுத் துறையால் நியமனம் செய்யப்படுவர்.

## எரிசக்தி துறை

1. ராஜீவ்காந்தி கிராமின் வித்யூதிகரன் யோஜனா திட்டத்தின் (RGGVY) கீழ் பயன்பெறும் பொருட்டு மின் வசதியற்ற கிராமங்கள் மற்றும் வீடுகளை கண்டறிந்து தருமாறு கிராம ஊராட்சிகள் கேட்டுக்கொள்ளப்படும். மேற்படி விவரங்களை கிராம ஊராட்சிகளிடமிருந்து சேகரித்து (தமிழ்நாடு மின்சார வாரியம்) ராஜீவ்காந்தி கிராமின் வித்யூதிகரன் யோஜனா திட்டத்தின் கீழ் நிதியுதவிப் பெற்று பணிகளை மேற்கொள்ளும்.

2. அனைத்து மின் இணைப்புகளுக்கும் குறுகிய காலத்தில் தனித்தனியான மீட்டர்கள் பொருத்த தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை மேற்கொள்ளும். மேலும் ஒவ்வொரு மீட்டர் இணைப்புக்கும் அட்டைகள் வழங்கப்பட்டு இரு மாதங்களுக்கு ஒருமுறை அட்டையில் தொடக்க மற்றும் இறுதி அளவுகள் குறிப்பிடப்படும். மேலும், மாவட்ட நிர்வாகத்தினால் அனைத்து நிலுவைத் தொகையும் ஈடுகட்டப்படும் நிலையில், ஈடு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளின் மின் அட்டையிலும் "இந்த ஊராட்சியால் இந்த இணைப்புக்கு மின் கட்டண நிலுவை இல்லை" என்று எழுதி தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலர்களால் சான்றிடப்படும்.

3. கிராம ஊராட்சிகள் காற்றாலைகளை நிறுவுவதற்கான உதவிகளை தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கொள்ளும். மேலும், இதன் வாயிலாக தயாரிக்கும் மின்சாரத்தை மற்ற காற்றாலை மின் உற்பத்தியாளர்களுக்கு விற்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ.2.90–க்கு பதிலாக, தெரு விளக்குகளுக்கான கட்டணத்தில் அதாவது ரூ.3.00–க்கு கிராம ஊராட்சி விற்பனை செய்ய ஏதுவாக தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையரிடம், தமிழ்நாடு மின்சார வாரியம் கோரிக்கையினை முன் வைக்கும்.

4. மின்வாரியம் 6000 ஒப்பந்த பணியாளர்களை நியமனம் செய்துள்ளது. மேலும் 2008–ம் ஆண்டு பொங்கலுக்குள் 6000 ஒப்பந்த பணியாளர்களை நியமனம் செய்ய உள்ளது. மின்வாரியத்தின் இந்த முயற்சிகளினால் கிராமப் பகுதிகளில் களப்பணியாளர்களின் பற்றாக்குறை ஒழிக்கப்பட்டுவிடும் என உறுதியளிக்கப்பட்டது.

5. கிராம அளவில் எரிசக்தித் துறை திட்டங்களுக்காக அமைக்கப்படும் குழுக்களுக்கு பதிலாக இனி கிராம ஊராட்சியே இத்தகைய குழுவாக அங்கீகரிக்கப்படும். தேவைப்படின், இக்குழுவிற்கு கூடுதல் உறுப்பினர்கள் எரிசக்தி துறையால் நியமனம் செய்யப்படுவர்.

## கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை

1. கிராம ஊராட்சித் தலைவர்களுக்குக் கால் நடை பராமரிப்புத் துறையின் கால்நடைத் துணை பராமரிப்பு நிலையங்களையும், கால்நடை பார்வை நிலையங்களையும், நடமாடும் கால்நடை பராமரிப்பு நிலையங்களையும் அவைகள் செயல்படும் விதத்தையும் ஆய்வு செய்யும் அதிகாரம் வழங்கப்படும். உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) அவர்கள் காலாண்டுக்கு ஒரு முறை கால்நடை மருத்துவர்கள் மற்றும் கிராம ஊராட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் கலந்தாய்வுக் கூட்டத்தை நடத்துவார். இக்ககைய காலாண்டுக் கூட்டங்களில் தெரிவிக்கப்படும் கருத்துக்களின் மீது குறைகளை களைய நடவடிக்கை எடுக்கப்படும்.

2. கால்நடைகள் மற்றும் கோழிகளிடையே பரவும் நோய்களை தடுப்பதில் கிராம ஊராட்சிகள் தங்கள் முழு ஒத்துழைப்பினை கால்நடை பராமரிப்புத்துறைக்கு நல்க வேண்டும். அதே போல் கால் நடை பராமரிப்புத் துறை தகவல், கல்வி மற்றும் தொடர்புக்கான நிதியினைத் தனது துறை தொழில் நுட்ப அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கும்.

3. சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கறவை மாடுகள் வாங்குவதற்கான கடன்கள் மற்றும் கோழிப்பண்ணைகள் அமைப்பதற்கான கடன்களை அந்தந்த பால் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் இணைந்து வழங்குவதற்கான நடவடிக்கைகளில் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையானது, கால் நடை பராமரிப்புத் துறைக்கு ஒத்துழைப்பு வழங்கும். இது பயனாளிகளுக்கும் சங்கங்களுக்கும் இணைப்பை உருவாக்கி இரு சாராருக்கும் பயனுள்ளதாக அமைய வழி வகுக்கும்.

4. அரசாணை (நிலை) எண்.169, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16.8.1999ன் படி கிராம ஊராட்சிகளுக்கு கொடுக்கப்பட்ட உள்நாட்டு மீன் வளர்த்தல் உரிமைகள் மீண்டும் வலியுறுத்தப்படுவதோடு மட்டுமல்லாமல், அதை கிராம ஊராட்சிகளுக்கும் தெரிக்கப்படும்.

5. மேய்க்கால் மற்றும் மந்தவெளி புறம்போக்குகளில் கிராம ஊராட்சிகள் சுய உதவிக்குழுக்கள் மூலமாக கால்நடை தீவனம் மற்றும் புல்வெளிகளை பெருக்குவதில் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைகள் இணைந்து முயற்சிகள் மேற்கொள்ளும்.

6. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறையின் திட்டங்களுக்கு தனித்தனியாக கிராம அளவிலான குழுக்களை அமைப்பதைக் காட்டிலும், கிராம ஊராட்சியே அனைத்துத் திட்டங்களுக்கும் சேர்த்து கிராம அளவிலான குழுவாக செயல்படலாம். தேவைப்படின், இக்குழுவிற்கு கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத்துறையிலிருந்து கூடுதல் உறுப்பினர்களை நியமனம் செய்யலாம்.

## வருவாய்த் துறை

1. பிறப்பு, இறப்பு பதிவானது தற்போது உள்ளது போலவே கிராம நிர்வாக அலுவலர்களால் பராமரிக்கப்படும். இருந்தபோதிலும், மாதந்தோறும் அதன் நாளது வரை திருத்தப்பட்ட பிரதிகள் கிராம ஊராட்சி அலுவலகத்திற்கு கொடுக்கப்படும். மேலும் பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரினாலோ அல்லது கிராம ஊராட்சித் தலைவராலோ வழங்க அதிகாரமளிக்கப்படும்.

2. குடியிருப்பு / இருப்பிட சான்றிதழ், திருமணச் சான்று மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்வோர் சான்று இவைகள் கிராம ஊராட்சித் தலைவர்களால் வழங்கப்படலாம். ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழுவோர் பட்டியலை ஒருங்கிணைத்து பிற துறைகளின் பல்வேறு நலத்திட்டங்களுக்கான தகுதிகளை நிர்ணயிப்பதில் வருவாய் மற்றும் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறைகள் இணைந்து முயற்சிகள் எடுக்கும்.

3. தகுதியற்றோர் பெயர்கள் இடம்பெறுவதை கண்காணிக்கவும், தகுதியானோர் பெயர் விடுபட்டிருப்பின் அதனைச் சுட்டிக் காட்டவும், முதியோர் ஓய்வூதியதாரர்கள், ஆதரவற்ற விதவை ஓய்வூதியதாரர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண் ஓய்வூதியதாரர்கள், உடல் ஊனமுற்ற ஓய்வூதியதாரர்கள் போன்றவர்களின் பட்டியலானது கிராம சபா கூட்டத்திலும் வைக்கப்படும். இதன் மீதான கிராம சபையின் பரிந்துரைகளை தகுதியின் அடிப்படையில் கூர்ந்தாய்வு செய்து வருவாய்த் துறை உடனடி நடவடிக்கை எடுக்கும்.

4. வீட்டு மனைப்பட்டா, இரண்டு ஏக்கர் தரிசு நில விநியோகத் திட்டம், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம், இலவச காஸ் அடுப்பு வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களின் பயனாளிகளின் பட்டியல் வருவாய்த் துறையால் தயாரிக்கப்பட்டு கிராம சபையின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

5. பதிவுகள் பராமரித்தலை மேம்படுத்தும் பொருட்டு கிராம ஊராட்சிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களின் பட்டியல் மற்றும் அவற்றின் அளவைச் சுவடி வரைபடங்கள் ஆகியவை வருவாய்த் துறை அலுவலர்களால் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களிடம் 31.12.2007–க்குள் ஒப்படைக்கப்படும்.

6. கிராம அளவில் வருவாய்த் துறை திட்டங்களுக்காக அமைக்கப்படும் குழுக்களுக்கு பதிலாக இனி கிராம ஊராட்சியே இத்தகைய குழுவாக அங்கீகரிக்கப்படும். தேவைப்படின், இக்குழுவிற்கு கூடுதல் உறுப்பினர்கள் வருவாய்த் துறையால் நியமனம் செய்யப்படுவர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருட்களும் விவாதிக்கப்பட்டன–

வருவாய்த் துறை செயல்படுத்தும் முதியோர் ஓய்வூதியத் திட்டம் போன்ற இதர ஓய்வூதியத் திட்டங்களில் வழங்கப்படும் ஓய்வூதியங்களையே இனி பயனாளிகளுக்கு கிராம ஊராட்சியின் மூலம் நேரடியாக வழங்கினால் முறையாகவும், துரிதமாகவும் பட்டுவாடா செய்யவும், தகுதியற்றவர்களை இத்திட்டங்களிலிருந்து நீக்கவும் ஏதுவாக அமையும் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் ஆலோசனை வழங்கப்பட்டது. ஓய்வூதியங்களை வழங்குவதில் தாமதம் ஏற்படின், கிராம ஊராட்சிகள் தங்களுடைய பொது நிதியிலிருந்து வழங்கி பின்னர் அதனை வரவு வைக்கலாம் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்போதுள்ள தாலுக்கா அலுவலகத்திலிருந்து பயனாளிகளுக்கு நேரிடையாக பண அஞ்சல் மூலமாக ஓய்வுதியம் அனுப்பப்படுவதாகவும், இந்த நடைமுறை திருப்திகரமாக செயல்படுவதால், இதே நடைமுறை வருவாய்த் துறை மூலம் தொடரலாம் என தெரிவிக்கப்பட்டது.

## முந்தைய உயர்நிலைக் குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் அதிகார பரவலாக்கம் குறித்து வெளியிடப்பட்ட அரசாணைகள்

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

| | | |
|---|---|---|
| 1 | அரசாணை ( நிலை ) எண் : 85<br>நாள் : 14.07.1999 | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் – உயர்மட்டக்குழுவின் அறிக்கை – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை குறித்த பரிந்துரைகள் – கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் பகிர்ந்தளிப்பது – ஆணை வெளியிடப்படுகிறது. |

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

| | | |
|---|---|---|
| 2. | அரசாணை ( நிலை ) எண் : 75<br>நாள் : 14.03.1999 | ஊராட்சிகள்–மூன்றடுக்கு ஊராட்சிகள்– உரிமைகள் மற்றும் பொறுப்புக்களை ஒப்படை செய்தல் திட்டக்குழுவின் முதல் அறிக்கை– பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள் ஆணை வெளியிடப்படுகிறது. |
| 3. | அரசாணை ( நிலை ) எண் : 102<br>நாள் : 21.06.1999 | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குவது குறித்து உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகள் மீது அரசு முடிவுகள் – ஆணைகள் வெளியிடப்படுகிறது. |
| 4. | அரசாணை ( நிலை ) எண் : 104<br>நாள் : 22.06.1999 | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் – உயர்நிலைக்குழு பரிந்துரைகள் – “சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் என்ற தலைப்பில் அரசு ஏற்றுக் கொண்டவை மீது ஆணை வெளியிடப்படுகிறது. |
| 5. | அரசாணை (நிலை) எண்.105,<br>நாள் : 22.06.1999 | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் – உயர்நிலைக்குழு பரிந்துரைகள் – சமூக சொத்துக்களை பேணுதல் என்ற தலைப்பில் அரசு ஏற்றுக்கொண்டவை மீது அரசாணை வெளியிடப்படுகிறது. |
| 6. | அரசாணை (நிலை) எண்.119,<br>நாள் : 05.07.1999 | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் உரிமைகள் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய உயர்நிலைக்குழு |

அமைக்கப்பட்டது – குழுவின் அறிக்கை அரசுக்கு சமர்பிக்கப்பட்டது. குழுவின் அறிக்கை இயல் மூன்றில் 13 சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், நீர்வாழிகள் மற்றும் பிற தொடர்பு வழிகள் என்ற தலைப்பின் மீது ஆணை வெளியிடப்படுகிறது.

### எரிசக்தித் துறை

| | | |
|---|---|---|
| 7. | அரசாணை (நிலை) எண்.124, நாள் 4.6.1999 | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளித்தல் – உயர் மட்டக்குழு பரிந்துரையின் படி ஊரக மின்மயமாக்கல் – குழுவின் பரிந்துரையின் பேரில் அரசின் முடிவு – ஆணை வெளியிடப்படுகிறது. |
| 8. | அரசாணை (நிலை) எண்.125, நாள் 4.6.1999 | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளித்தல் – உயர் மட்டக்குழு பரிந்துரை பொருள் எண்.15 – மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள் – ஆணை வெளியிடப்படுகிறது. |

### கால்நடை பராமரிப்பு மற்றும் மீனவளத் துறை.

| | | |
|---|---|---|
| 9. | அரசாணை ( நிலை ) எண் : 200 நாள் : 22.08.1997 | ஊராட்சிகள்–மூன்றடுக்கு ஊராட்சிகள்– அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல்–மாநில திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கை–கால்நடை வளர்ப்பு பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள் ஆணை வெளியிடப்படுகிறது. |
| 10. | அரசாணை ( நிலை ) எண் : 238 நாள் : 16.10.1997 | ஊராட்சிகள்–மூன்றடுக்கு ஊராட்சிகள்– அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல்–மாநில திட்டக்குழுவில் இரண்டாவது அறிக்கை–மீன் வளத்துறை பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள் ஆணை வெளியிடப்படுகிறது. |
| 11. | அரசாணை ( நிலை ) எண் : 166 நாள் : 27.07.1997 | கால்நடை பராமரிப்புத்துறை–மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்து உயர்நிலை குழுவின் பரிந்துரைகள் மீதுஅரசு ஆணை வெளியிடப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 12. | அரசாணை ( நிலை ) எண் : 137<br>நாள் : 23.06.1999 | மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது–உயர்நிலை குழுவின் பரிந்துரைகள் மீன்வளத்துறை பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்–ஆணை வெளியிடப்படுறது. |

## கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணி நூல் மற்றும் கதர் துறை

| | | |
|---|---|---|
| 13. | அரசாணை (நிலை) எண்.107,<br>நாள் 7.6.1999 | மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க உயர்மட்டக்குழுவின் பரிந்துரைகள் ஏற்கப்பட்டது – ஆணை வெளியிடப்படுகிறது. |
| 14. | அரசு கடித எண்.8912/எப்.2/ 99–1,<br>நாள் 6.9.1999 | மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரம் அளித்தல் – உயர் நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் மீது அரசின் முடிவுகள் – ஆணைகள் வெளியிடுதல். |

## சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

| | | |
|---|---|---|
| 15. | அரசாணை ( நிலை ) எண் : 110<br>நாள் : 04.06.1999 | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் - உயர்மட்டக் குழுவின் அறிக்கை - கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் பகிர்ந்தளிப்பது –ஆணை – வெளியிடப்படுகிறது. |
| 16. | அரசாணை ( நிலை ) எண் : 2<br>நாள் : 5.01.1998 | ஊராட்சிகள்– மூன்றடுக்கு ஊராட்சிகள்– அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல்– மாநில திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கை–சமூகநலத்துறை பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்–ஆணை வெளியிடப்படுகிறது. |

## சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை

| | | |
|---|---|---|
| 17. | அரசாணை (நிலை) எண்.139,<br>நாள் 15.6.1999 | வனம் – மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிப்பது குறித்த உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் ஆணை வெளியிடப்படுகிறது. |
| 18. | அரசு கடித எண்.17108/வனம்–6/99–1,<br>நாள் 20.7.1999 | வனம் – மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிப்பது குறித்த உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் ஆணை வெளியிடப்பட்டுள்ள – ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆய்வு, |

கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள் பற்றிய தொடர் ஆணை வழங்கப்படுகிறது.

## சிறு தொழில் துறை

| | | |
|---|---|---|
| **19.** | அரசாணை ( நிலை ) எண் : 66<br>நாள் : 21**.06.1999** | சிறு தொழில் – மூன்றடுக்கு ஊராட்சிகள் பொறுப்புகளை பகிர்ந்தளித்தல் மாநில திட்டக்குழுவின் அறிக்கை – சிறு தொழில்கள் பற்றிய பரிந்துரைககள் மீதான அரசின் முடிவுள் – ஆணை வெளியிடப்படுகிறது. |

## தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

| | | |
|---|---|---|
| **20.** | அரசாணை ( நிலை ) எண் : 411<br>நாள் : 29**.06.1999** | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளித்தல் – உயர்நிலைக்குழு பரிந்துரைகள் – தமிழ் வளர்ச்சி பண்பாடு தொடர்பான இனங்கள் ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாங்களைப் பகிர்ந்தளித்தல்– ஆணை வெளியிடப்படுகிறது. |

## தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை

| | | |
|---|---|---|
| **21.** | அரசாணை ( நிலை ) எண் : 83<br>நாள் : 18**.06.1999** | வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை – பயிற்சி பிரிவு – மூன்றடுக்கு (கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள்) – ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்து உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகள் – தொழிற் பள்ளிகள் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் அமைப்பது – ஆணைகள் வெளியிடப்படுகிறது. |

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

| | | |
|---|---|---|
| **22.** | அரசாணை ( நிலை ) எண் : 153<br>நாள் : 16**.06.1999** | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் உயர்நிலைக்குழுவின் அறிக்கை – குடிநீர் வசதி கூடுதல் அதிகாங்கள் மற்றும் பொறுப்புகள் பகிர்ந்தளிப்பது – ஆணை வெளியிடப்படுகிறது. |

## பள்ளிக் கல்வித் துறை

| | | |
|---|---|---|
| **23.** | அரசாணை (நிலை) எண்.**268,**<br>நாள் **27.8.1990** | பள்ளிக் கல்வி – பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி – மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் குறித்து உயர் நிலைக்குழுவின் |

பரிந்துரைகள் மீது அமைச்சரவை முடிவுகள் மீது ஆணை வெளியிடப்படுகிறது.

24. அரசாணை (நிலை) எண்.248, நாள் 11.6.1997

தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் , 1994 – ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை நிர்வகிப்பதற்கான அதிகாரங்கள் செயல்பாடு மற்றும் பொறுப்புகள் – கல்வித் துறையிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுதல் மற்றும் பொது நூலகங்கள் குறித்து அதிகாரங்கள் வழங்குதல் ஆணை வெளியிடப்படுகிறது.

25. அரசாணை (நிலை) எண்.202, நாள் 2.7.1999

பொது நூலகங்கள் – ஊராட்சி அமைப்புகள் – மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்க பரிந்துரைகள் செய்து அமைக்கப்பட்ட உயர் நிலைக்குழுவின் பரிந்துரைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை

26. அரசாணை ( நிலை ) எண் : 272 நாள் : 07.06.1999

உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகளும் பொறுப்புகளும் மற்றும் அதிகாரங்களும் வழங்குதல் – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடுமப் நலத்துறை செயல்பாடு குறித்த மூண்றடுக்கு ஊராட்சிகளுக்கு – அதிகாரங்கள் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

27. அரசாணை ( நிலை ) எண் : 274 நாள் : 08.06.1999

உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகள் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்குதல் மற்றும் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயல்பாடு குறித்து மூன்றடுக்கு ஊராட்சி மன்றங்களுக்கு அதிகாரம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

## பொதுப்பணித் துறை

28. அரசாணை ( நிலை ) எண் : 331 நாள் : 18.06.1999

பொதுப்பணித்துறை – மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்குதல் உயர்மட்டக்குழுவின் பரிந்துரைகள் ‘சிறுபாசனம்’ ‘நீர் மேலாண்மை’ மற்றும் ‘நீர் பிடிப்பு மேம்பாடு’ – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

## வருவாய் மற்றும் நிலநிர்வாகத் துறை

| | | |
|---|---|---|
| 29. | அரசாணை (நிலை) எண்.333, வருவாய் (நிலச்சீர்திருத்தம் 2–2) துறை, நாள் 30.6.1999 | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் – அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளித்தல் – உயர் மட்டக்குழு – நிலச் சீர்திருத்தம் பற்றிய பரிந்துரைகள் – அரசின் முடிவுகள் – ஆணை வெளியிடப்படுகிறது. |
| 30. | அரசாணை (நிலை) எண்.345, வருவாய் (நிலச்சீர்திருத்தம் 3–1) துறை, நாள் 2.7.1999 | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் – அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளித்தல் – நில ஒப்படை தொடர்பாக உயர் மட்டக்குழுவின் பரிந்துரைகள் – அரசின் முடிவுகள் – ஆணை வெளியிடப்படுகிறது. |
| 31. | அரசாணை (நிலை) எண்.1006, வருவாய் (நிலச்சீர்திருத்தம் 2–2) துறை, நாள் 27.10.1997 | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் – அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளித்தல் – மாநில திட்டக்குழுவின் இரண்டாவது அறிக்கை – நிலச்சீர்திருத்தம் பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள் – ஆணை வெளியிடப்படுகிறது. |

## வேளாண்மைத் துறை

| | | |
|---|---|---|
| 32. | அரசாணை (நிலை ) எண்.377 நாள்.4.09.1997 | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தல்–மாநில திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கை வேளாண்மை துறை திட்டங்கள் பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள் ஆணை வெளியிடப்படுகின்றது. |
| 33. | அரசாணை (நிலை) எண்.220. நாள்.07.06.1999 | ஊராட்சிகள்– மூன்றடுக்கு ஊராட்சிகள்– அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல்– உயர்நிலை குழுவின் பரிந்துரைகள்–வேளாண்மை துறை திட்டங்கள் பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்–ஆணை வெளியிடப்படுகின்றது. |

## வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை

| | | |
|---|---|---|
| 34. | அரசாணை ( நிலை ) எண் : 292 நாள் : 14.07.1999 | ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு மேலும் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்க உயர்நிலைக்குழுவின் பரிந்துரை – ஊரக வீட்டு வசதி – ஆணைகள் வெளியிடப்படுகிறது. |

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் – உயர்மட்டக்குழுவின் அறிக்கை – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை குறித்த பரிந்துரைகள் – கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் பகிர்ந்தளிப்பது – ஆணை வெளியிடப்படுகிறது.

### ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 1) துறை

**அரசு ஆணை (நிலை) எண். 85** நாள் 14.07.99

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 77, ஊரக வளர்ச்சி துறை, நாள் 25.04.1998
2. ஊரக வளர்ச்சி செயலாளரின் நேர்முக கடிதம் எண் 14532/சி4/99 நாள் 11.05.1999

**ஆணை:–**

1. இந்திய அரசியலமைப்புச் சட்டம் அட்டவணை 2ல் மாநில அரசுகள் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டிய உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் குறித்து 29 இனங்களைக் குறிப்பிட்டுள்ளது. அதன்படி முதற்கட்டமாக மாநில திட்டக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 'ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்' என்ற இனம் குறித்து மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், பொறுப்புகள் ஒப்படைப்பு செய்து பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. இரண்டாவது கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை 11.01.1999 அன்று அரசுக்கு அளித்தது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளர், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்து உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக அரசு மேற்கொண்ட முடிவுகள் குறித்த அறிக்கையினை அனுப்பி, தேவையான தொடர் நடவடிக்கை மேற்கொண்டு ஆணையிடும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அதன்படி உயர்நிலைக்குழு அறிக்கையில் இயல் 3 "27 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்" சார்பான பரிந்துரைகள் இவ்வாணையில் இணைப்பு 1ல் கண்டவாறு, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் உரிமைகள் அளித்தும். 'ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை பற்றிய கூடுதல் பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு இணைப்பில் குறிப்பிட்டவாறு அளித்தும் அரசு ஆணையிடுகின்றது.

5. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இவ்வாணையின் நகலை, தமக்குக் கீழுள்ள மாவட்ட ஊராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியத்தலைவர் மற்றும் கிராம ஊராட்சி தலைவர்களுக்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கு.சம்பத்குமார்

அரசு செயலாளர்.

## தமிழ்நாடு அரசு
## சுருக்கம்.

ஊராட்சிகள்—மூன்றடுக்கு ஊராட்சிகள்—உரிமைகள் மற்றும் பொறுப்புக்களை ஒப்படைப்பு செய்தல் திட்டக் குழுவின் முதல் அறிக்கை—பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஊரக வளர்ச்சித் (சி1) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.75** நாள்.14.03.97

படிக்கப்பட்டவை:

அரசு கடித எண்.510 ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள்: 20.1.97

******

**ஆணை**

இந்திய அரசியலமைப்பின் 73—வது திருத்த சட்டத்திற்கு இணங்க உருவாக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு தேர்தல்கள் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பதவியேற்றுள்ளனர். மேற்கூறிய சட்டத்தின் பிரிவுக்கூறு 243—ஜி—மற்றும் 1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 257—க்கிணங்க பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தவும், மற்றும் 1994—ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பட்டியல் IV ல் உள்ள இனங்களைச் செயல்படுத்தவும் தேவையான பொறுப்புகளை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். ஆகவே, எந்தெந்த பொறுப்புக்களை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்பது குறித்து ஆலோசனை கூறுமாறு மாநிலத் திட்டக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே, மாநிலத் திட்டக்குழு கீழ்க்கண்ட ஒன்பது இனங்களைப் பற்றி தம்முடைய முதல் அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது.

அ) வறுமை ஒழிப்பு திட்டங்கள்
ஆ) குடிநீர்
இ) பொது பகிர்வு முறை
ஈ) சாலைகள், சிறுபாலங்கள் மற்றும் உண்டான போக்குவரத்துத் தொடர்பு
உ) கதர், கிராம மற்றும் குடிசை தொழில்கள்.
ஊ) தொழில் நுட்ப பயிற்சி மற்றும் வேலைக் கல்வி
எ) நூலகங்கள்.
ஏ) ஊரக மின்மயமாக்கல்.
ஐ) மரபு சாரா எரிசக்தி வளங்கள்.

1. மாநில திட்டக்குழுவின் முதல்அறிக்கையில் மேற்கூறிய ஒன்பது இனங்கள் பற்றிய பரிந்துரைகளை அரசு சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்து ஆய்வு செய்தது. ஆய்விற்கு பின் கீழ்க்காணும் துறைகளின் திட்டங்களை செயற்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய பொறுப்புகளை ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க மாநில திட்டக்குழுவின் பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இவ்வாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உரிமைகள் மற்றும் பொறுப்புகளை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணையிடுகிறது.

2. மேற்கூறிய இனங்களுடன் சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகள் தங்களுடைய நிர்வாகத்தின் கீழிருக்கும் ஒவ்வொரு நிலையிலும் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் என்ன என்பதையும் அவைகளை ஒருங்கிணைக்கும் அலுவலர்கள் யார் என்பதையும் தெளிவாக குறிப்பிட்டு உடனே அறிவுரை வழங்க வேண்டுமெனவும் ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அ. நம்பியார்,**

தலைமை செயலாளர்.

## பிற்சேர்க்கை
## அ) ஊராட்சிகள்.

### 1. வறுமை ஒழிப்பு திட்டங்கள்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் ,ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், சுய வேலை வாய்ப்புத் திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டம் மற்றும் ஏனைய தனி நபர் பயனடையும் திட்டங்களுக்கான பயன் அடைவோரைக் கண்டறிதல் மற்றும் தேர்ந்தெடுத்தல்.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், மற்றும் ஏனைய ஊராட்சிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட வேலைவாய்ப்புத் திட்டங்களை நிறைவேற்றல்.

### 2. குடிநீர்

கைப் பம்புகள், கிணறுகள், ஊரணிகள், மேல்நிலை தொட்டிகள் உட்பட்ட கிராமக் குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்தல்.

குடிநீர் வழங்கும் திட்டங்களையும் அதற்கான இடங்களையும் கண்டறிய உதவுதல்.

சுத்தமான குடிநீர் விநியோகம் மற்றும் நீரின் தரத்தை சோதித்தல் ஆகியவை.

### 3. பொது பகிர்வு முறை

ஊராட்சித் தலைவர் அவ்வூராட்சியிலுள்ள நியாய விலைக்கடைகளை ஆய்வு செய்ய அமைக்கப்படவிருக்கும் ஊராட்சி அளவிலான குழுவில் ஒரு உறுப்பினராக இருப்பார். சாலைகள், சிறுபாலங்கள் மற்றும் ஏனைய போக்குவரத்து தொடர்புகள்.

### 4. சாலைகள், சிறு பாலங்கள் மற்றும் ஏனைய போக்குவரத்து தொடர்புகள்

ஊராட்சிக்கு சொந்தமான சாலைகளை பராமரித்தலும் அதனை மேம்படுத்தலும். அரசால் உள்ளாட்சிகளுக்கு ஒப்படைப்பு செய்யப்படும் சாலைகளை பராமரித்தல். தேவைக்கேற்ப அங்கெல்லாம் மூல மற்றும் பராமரிப்புச் செலவிற்கு வரிகளை விதித்தல். சாலையோர மரங்கள், கன்றுகள் பராமரித்தல். ஊராட்சிக்குச் சொந்தமான சாலைகளில் ஆக்கிரமிப்பை அகற்றி, தண்டக் கட்டணம் விதித்தல். கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில்.

### 5. கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில்

ஊராட்சி அளவிலான செயல்பாடுகளைக் கண்டறிந்து அவைகளுக்கான இடங்களை உருவாக்க உதவிடல். பயிற்சிக்கும் திறமையை வளர்ப்பதற்கும் பயனாளிகளை தேர்ந்தெடுத்தல். பயிற்சிக்கும் விற்பனைக்குமான வாய்ப்புகளை, கிராம கைவினைஞர்களுக்கு எடுத்துரைத்தல்.

### 6. தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்க்கை தொழில் கல்வி.

குறிப்பிட்ட தொழில்களிலும் கலைகளிலும் பயிற்சிக்கான வழிமுறைகளை கண்டறிதல். தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள் பயிற்சிகள் பற்றிய செய்திகளைப் பரப்புதல்.

### 7. நூலகங்கள்.

– புதிய படிப்பறைகள் மற்றும் நூலகங்கள் திறப்பது.

– தேவைக்கேற்ப இவைகளுக்கான கட்டிடங்கள் கட்டுவது.

**8. ஊரக மின்மயமாக்கல்.**

கிராம தெரு விளக்குகள் பராமரித்தல், குழல் விளக்குகள், இதர விளக்குகள் முதலியவை வாங்குதல்.

**9. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள்.**

தனிப்பட்ட கரிம வாயுக் கலன்கள், காற்றாலைகள் மற்ற வகை கலன்களுக்கான பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல். பயனாளிகளுக்குத் தகுந்த மையங்களில் பயிற்சி ஏற்பாடு செய்தல். மேற்கண்ட கலன்கள் பார்வையிட உதவுதல். எரிசக்தி மற்றும் மரபுசாரா இனங்கள் பற்றியும் மக்களிடம் எடுத்துரைத்தல்.

## 1. ஊராட்சி ஒன்றியங்கள்.

**1. வறுமை ஒழிப்பு திட்டங்கள்.**

திட்டங்களை செயல்படுத்துவதற்காக ஊராட்சிகளுக்குத் தேவையான மற்றும் நிர்வாக உதவிகள் அளித்தல்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்படும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். மேலாய்வு மற்றும் முன்னேற்றம் குறித்த புள்ளி விபரங்களை ஒன்றிய அளவில் வழங்கல்

**2. குடிநீர்**

கிராமங்களுக்கான குடிநீர் திட்டங்களை கண்டறிதல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.

திட்டங்களின் தரம் மற்றும் முன்னேற்றத்தினை மேலாண்மை செய்தல்.

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குடிநீர் வழங்கும் திட்டங்களைப் பராமரித்தல் மற்றும் எங்கெல்லாம் இயலுமோ அங்கு தண்ணீர் கட்டணத்தை வசூலித்தல்.

**3. சாலைகள் சிறுபாலங்கள் மற்றும் இதர வகையான தொடர்புகள்.**

ஊராட்சி ஒன்றியச் சாலைகளை பராமரித்தல் பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல்.

ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கபட்ட சாலைப் பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரித்தல், அனுமதித்தல், மேற்பார்வையிடல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

நடைமுறைப்படுத்தப்படும் சாலைபணிகளின் தரத்தினை கண்காணித்தல்.

சாலை ஓர மரங்கள் வளர்த்தல், மற்றும் கன்றுகள் நடுதல்.

ஆக்கிரமிப்புகளை நீக்குதல் மற்றும் தண்ட கட்டணம் வசூலித்தல் போன்றவை.

**4. கதர் ஊரக மற்றும் குடிசை தொழில்கள்.**

கிராமக் கைவினைஞர்களுக்கு திறமைகளை வளர்க்கவும், தொழில் அனுபவத்தை கற்பிக்கவும், புதிய பயிற்சி மற்றும் தொழில் மையங்களை பெருக்குதல் அல்லது ஏற்கனவே, உள்ள அலகுகளை மாற்றியமைத்தல்.

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனை செய்ய உதவுதல்.

கைவினைஞர்கள் கடன் வசதி பெறுவதற்கு உதவுதல்.

கைவினைஞர்களுக்கு பயிற்சி மற்றும் மேம்பாட்டுக்கு பயனாளிகளை ஊராட்சியில் தெரிவு செய்ய உதவுதல்.

## 5. தொழில்நுட்ப பயிற்சி மற்றும் வாழ்வியல் தொழில் கல்வி

புதிய தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் தோற்றுவிப்பதற்கான தேவைகளை மதிப்பிடுதல் மற்றும் பரிந்துரைத்தல்.

## 6. நூலகங்கள்.

கிராமங்களில் நூலகங்களை உருவாக்குவதற்கான விரிவான திட்டங்களை தயாரிப்பதில் உள்ளாட்சி நூலக ஆணைக் குழுவிற்கு உதவுதல்.

நூலகங்கள் மற்றம் படிப்பகங்களுக்கான கட்டிடங்களை கட்ட ஊராட்சிக்கு தொழில் நுட்ப மற்றும் நிதி உதவி செய்தல்.

## 7. ஊரக மின் மயமாக்குதல்.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தமிழ்நாடு மின்வாரியம் ஆகியவற்றால் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து திட்டங்கள் குறிப்பாக நீரிறைக்கும் விசைப்பம்புகளுக்கும் மின்னூட்டல் ஆதி திராவிட குடியிருப்புகள் மற்றும் குடிசைகளுக்கான மின் இணைப்பு தரும் திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மேலாய்வு செய்தல்.

## 8. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள்.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை பயன்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்குதல்.

சாண எரிவாயு, காற்றாலை மற்றும் பிறதிட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

எரிசக்தி சேமிப்பு வழிகளை மேம்படுத்துதல் மற்றும் பிரபலப்படுத்துதல்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 114(2)ன்படி ஏற்கனவே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசாணை எண்.886–ஊரக வளர்ச்சித்துறை நாள். 29.10.90–ல் கொடுக்கப்பட்டுள்ள திட்ட ஆய்வு பணிகள் தற்போதைய சூழ்நிலையில் இத்துறையில் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கு ஏற்ப திருத்தங்களுடன் திரும்ப ஒப்படைப்பு செய்யப்பட உள்ளது.

## 1. மாவட்ட ஊராட்சிகள்.

(1) குடிநீர்

பெரிய குடிநீர் வழங்கல் திட்டங்களைக் கண்டறிந்து அதற்கான திட்டங்கள் உருவாக்குதல்.

(2) பொது விநியோகமுறை

– நுகர்வோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதலில் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவுடன் இணைந்து தக்க ஆலோசனை வழங்குதல்.

(3) சாலைகள், சிறுபாலங்கள் மற்றும் பிற போக்குவரத்து தொடர்பு.

– மாவட்டத்தில் உள்ள சாலைகளை மேம்படுத்த திட்டமிடல்

– மாவட்டத்தில் செயல்படும் அனைத்து சாலை வசதி திட்டங்களை ஆய்வு செய்தல்.

(4) கதர் , ஊரக மற்றும் குடிசை தொழில்கள்.

– கதர் ஊரகத் தொழில்கள் பட்டுவளர்ப்பு, கைத் தொழில்கள் முதலியவற்றிற்கான வளர்ச்சிக்கு மாவட்ட அளவிலான திட்டத்தை உருவாக்குதல்.

– இவைகளுக்காக பயிற்சியளிக்க பொருத்தமான பயிற்சி நடைமுறையை கண்டறிதல்.

(5) தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்வியல் தொழிற்கல்வி.

மாவட்டத்தில் தொழில் நுட்ப பணியாளர் தேவைகளுக்கான திட்டம் ஏற்படுத்துதல்.

மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்தல்.

(6) நூலகங்கள்.

- மாவட்டத்தில் புதிய நூலகங்களையும், படிப்பகங்களையும் திறக்க உள்ளூர் நூலக ஆணை குழுவிற்கு ஆலோசனை கூறல்.
- மாவட்ட ஊராட்சியின் ஒரு உறுப்பினரை மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு தேர்ந்தெடுக்க அனுப்புதல்.
- நூலகத்தில் படிக்கும் வழக்கத்தை மேம்படுத்த தீவிர திட்டம் உருவாக்குதல்.

(7) ஊரக மின் மயமாக்கல்.

- மாவட்டத்தில் ஊரக மின்மயமாக்கல் சம்பந்தமான அனைத்து அரசுதிட்டங்களையும், நிறைவேற்றல். மற்றும் ஆய்வு செய்தல் மற்றும் (கண்காணிப்பு) பொறியாளர்கள் இந்த ஆய்வு கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும்.

(8) மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள்.

- மாவட்டத்தில் நிறைவேற்றப்படக்கூடிய தகுதிவாய்ந்த மரபு சாரா எரிசக்தி வளங்களைப் பற்றி அரசுக்கு ஆலோசனைகள் வழங்குதல்.
- மரபு சாரா எரிபொருள் சாதனங்கள் தயாரிப்பாளர்கள் மற்றும் உபயோகிப்பாளர்களுடன் மாவட்ட அளவிலான பயிற்சி மாநாடு ஏற்பாடு செய்தல்.
- மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் இது சம்பந்தமான திட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

**தலைமை செயலாளர்.**

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஊராட்சிகள்– மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குவது குறித்து உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகள் மீது அரசு முடிவுகள். ஆணைகள்வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி (ஐ.ஆர்.டி.1) துறை

**அரசாணை (நிலை) எண். 102.** நாள் 21.6.1999.

படிக்க–

1. அரசு ஆணை (நிலை) எண். 320, ஊரக வளர்ச்சித்துறை நாள் 11.11.97.
2. அரசு ஆணை ( நிலை) எண். 100, ஊரக வளர்ச்சித்துறை நாள் 22.5.98.

**ஆணை–**

இந்திய அரசியலமைப்பு சட்டம், அட்டவணை 2–ல் மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க வேண்டிய 29 பொருள்கள் என்னென்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளன. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிக்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி .மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும், சட்டமன்றத்தில், இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டும் உயர்நிலைக்குழு அமைத்து, பார்வை ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசு ஆணைகளின் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. உயர்நிலைக் குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை அரசு கவனமாக ஆராய்ந்தது. அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மற்றும் அவற்றின் விவரங்கள் கொண்ட அறிக்கை சட்டமன்ற பேரவைகளும் 12.5.99 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையில் பகுதி 2–ல் வளர்ச்சி பிரிவின் பரிந்துரைகளின் கீழ் வரிசை எண். 16. ‘‘வறுமை ஒழிப்புத் திட்டங்கள்’’ என்ற தலைப்பின் கீழ் அரசு ஏற்றுக் கொண்டதற்கிணங்க கீழ்க்கண்டவாறு மேலும் மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகளை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

## 16. வறுமை ஒழிப்புத் திட்டங்கள்.
## கிராம ஊராட்சிகள்

1. தனி நபர் பயன்பெறும் வறுமை ஒழிப்புத் திட்டங்களான சுவர்ண ஜெயந்தி சுயவேலை வாய்ப்புத் திட்டம் போன்றவற்றின் பயனாளிகளை தேர்வு செய்து கிராம சபையின் ஒப்புதல் பெற்று உதவி வழங்க ஏற்பாடு செய்தல்.

2 மானியத்தொகை மற்றும் கடன் சொத்துக்கள் ஆகியவற்றை பயனாளிகள் தவறாக பயன்படுத்துவதை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் மாவட்ட அளவிலான சம்மந்தப்பட்ட துறை அலுவலருக்கும் தெரியப்படுத்துதல்.

3. ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டத்தில் முழு நிதி ஒதுக்கீட்டையும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கி கிராம ஊராட்சிகளே கிராம பணியை நிறைவேற்றி கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்தல்.

4. வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் அடையாள அட்டை வழங்குதல், பணிகளை மேற்பார்வையிட உதவி செய்தல், நடைபெறும் பணிகள் பற்றிய விவர பட்டியலையும் கிராம ஊராட்சிகள் பொதுமக்கள் பார்வைக்கு வைத்தல்.

5. நில மேம்பாட்டுத் திட்டங்களில் திட்டத் தயாரிப்பு பணிகளில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவி புரிதல்.

6. பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்தில் திட்டங்களை மாவட்ட அளவில் தயாரிக்க ஏற்பாடுகள் செய்தல்

7. வறட்சி இலக்காகும் திட்டத்தில் உதவி பெறுபவர்களை கண்டறிய உதவுதல்.

8. சமக்ர ஆவாஜ் யோஜனா (தொகுப்பு வீடுகள் திட்டம்) திட்டத்தில் பயனாளிகளை கண்டறிய உதவுதல்.

9. பத்தாவது நிதிக் குழு பரிந்துரைகளின் கீழ் உள்ளாட்சி மன்றங்கள் மானியங்களை சரிவர பயன்படுத்துவதை உறுதி செய்தல் மற்றும் கிராம ஊராட்சிகளில் அனுமதிக்கும் திட்டப் பணிகளை கிராம ஊராட்சி வாரியாக பிரித்து, பணிகள் முடிவு பெற்றுவிட்டதா என்பதை கிராம ஊராட்சிகள் உறுதி செய்யும்.

10. டானிடா உதவியுடன் கடலூார் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக துப்புரவு மற்றும் நீர்வழங்கல் திட்டத்தில் பயனாளிகளை கண்டறிய உதவுதல் மத்திய ஊரக துப்புரவு திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களில் பயனாளிகள் கண்டறிதல்.

11. கட்டணக் கழிப்பிடங்களை கட்டி பராமரித்தல்.

12. சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் முகவர்களுக்கு உதவுதல்.

13. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சமுதாய வானொலிப்பெட்டி வழங்குதல்.

14. மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புத் திட்டத்தின் மீதான செயல்முறை விளக்கங்களுக்கு ஏற்பாடு செய்தல், தேசிய புகையில்லா திட்டத்தில் உதவி பெறுவதற்குரியவர்களை கண்டறிதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. சுவர்ண ஜெயந்தி சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் ஒன்றிய அளவில் திட்டம் தயாரித்து, தொழில் நுட்ப இணைப்பு, பயிற்சி, உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் உள்கட்டமைப்புகள் வலுப்படுத்துதல், விற்பனை வசதிகள் ஏற்படுத்துதல் போன்றவற்றில் உள்ள இடைவெளியை கண்டறிந்து தேவைகளை பூர்த்தி செய்தல். பயனாளிகளை சுய உதவி குழுக்களாகவும் தொழில் அடிப்படையிலான ஒரு தொடர்பு அமைப்புகளை ஏற்படுத்தவும் திட்டத்தை நன்கு நிறைவேற்றவும் கிராம ஊராட்சிகளுக்கு உதவுதல்.

2. கிராம ஊராட்சிகளால் தயாரிக்கப்படும் திட்டங்களை ஆய்வு செய்து தொழில் நுட்ப இசைவு மற்றும் தொழில் நுட்ப உதவிகளை அளித்தல்.

3. நில மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் செயல் திட்டங்களை உருவாக்க மாவட்ட ஊராட்சியிடமிருந்து தொழில் நுட்ப ஏற்பினையும் நிதி ஒதுக்கீட்டினையும் பெறுதல்.

4. கிராம ஊராட்சிகளின் ஒத்துழைப்போடு ஊராட்சி ஒன்றியங்கள் திட்டங்களை செயல்படுத்துதல் மேலும் அப்பகுதிக்கான செயல் திட்டங்களை வறுமை ஒழிப்புத் திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்.

5. மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டப் பணிகளை மேற்பார்வையிட்டு மாவட்ட ஊராட்சிகளுக்கு விவரங்களை வழங்கி உதவி செய்தல், வறட்சிக்கு இலக்காகும் திட்டத்திற்கு திட்டமிடுதல்.

6. உள்ளாட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படும் உள்ளமைப்புகள் மேம்பாடு அடைய திட்டமிடுதல் மற்றும் செயல்படுதல்.

7. டானிடா உதவியுடன் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் ஒருங்கிணைந்த அரசு ஊரக துப்புரவு மற்றும் நீர் வழங்கல் திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்துதல்.

8. ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாக செயல்படுத்தப்படும் குடிநீர் வழங்கல். திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்துதல்.

9 மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புத் திட்டத்தின் மீதான செயல்முறை விளக்க தேசிய திட்டத்திற்கு திட்டமிட்டு செயல்படுத்துதல்.

## மாவட்ட ஊராட்சி

1. மாவட்ட ஊராட்சிகள் வறுமை ஒழிப்பு திட்டங்களை மாவட்ட அளவில் ஒருங்கிணைந்து தயாரித்தல்.
2. கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியம் அளவில் திட்டமிடுதலில் தொழில் நுட்ப உதவியை மாவட்ட ஊராட்சிகள் வழங்குதல்.
3. மாவட்ட ஊராட்சிகள் வறுமை ஒழிப்புத் திட்டங்களை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல்.
4. மாவட்ட ஊராட்சிகள் வறட்சிக்கு இலக்காகும் பகுதியில் செயல்படுத்தப்படும் திட்டத்தை பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.
5. மாவட்ட ஊராட்சிகள் ஊரக பகுதிகளில் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாடு திட்டக்குழுக்களை மேற்பார்வையிட.ல் மற்றும் ஆய்வு செய்தல்.
6. மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்ட ஊராட்சிகள் செய்வது மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட திட்டக் குழுவிற்கு துணைபுரிதல்.
7. பத்தாவது நிதிக்குழு பரிந்துரைகளின் கீழ் உள்ளாட்சி மன்றங்களுக்கான மானியங்கள் சார்ந்த திட்டங்களை ஆய்வு செய்தல், மேற்பார்வையிடுதல்.
8. சமக்ர ஆவாஜ் யோஜனா (தொகுப்பு வீடுகள் திட்டம்) திட்டத்தை ஆய்வு செய்தல்.
9. மத்திய அரசின் புதிய வழிகாட்டி நெறிமுறைப்படி வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தை நிறைவேற்றி மேற்பார்வையிடுதல்.
10. டானிடா உதவியுடன் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த அரசு ஊரக துப்புரவு மற்றும் நீர் வழங்கல் திட்டத்தை மாவட்ட ஊராட்சிகள் ஆய்வு செய்து மேற்பார்வையிடுதல்.
11. மத்திய ஊரக துப்புரவுத் திட்டத்தை மாவட்ட ஊராட்சிகள் ஆய்வு செய்தல்.
12. தனிநபர் மற்றும் சமுதாய நலனுக்காக சாண எரிவாயு கலன்கள் அமைக்கும் திட்டத்தை மாவட்ட ஊராட்சிகள் திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.
13. மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புத் திட்டத்தின் மீதான செயல்முறை விளக்க தேசிய திட்டத்திற்கு மாவட்ட ஊராட்சிகள் திட்டமிடல் பணியை மேற்கொள்ளுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

/ஆளுநரின் ஆணைப்படி/

இரமேஷ் சந்திர பண்டா,
அரசுச் செயலாளர்.

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஊராட்சிகள்–மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல்– உயர்நிலைக்குழு பரிந்துரைகள்—" சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்" என்ற தலைப்பில் அரசு ஏற்றுக் கொண்டவை மீது ஆணை வெளியிடப்படுகிறது.

## ஊரக வளர்ச்சித் துறை

**அரசு ஆணை நிலை எண்.104.** நாள் – 22.6.1999.

படிக்க –

அரசு ஆணை( நிலை) எண். 297, ஊரக வளர்ச்சித் துறை, நாள்– 29.9.97.

**ஆணை :**

மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராக கொண்டு உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை 11.1.1999 அன்று அரசுக்கு சமர்ப்பித்தது. உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து முடிவு செய்ய 3.5.1999 மற்றும் 4.5.1999 ஆகிய நாட்களில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டங்களில் பரிசீலிக்கப்பட்டன.

2. கிராம ஊராட்சிகள் தங்கள் பகுதிகளில் உள்ளாட்சி அமைப்பு மற்றும் தனியார் அங்காடிகளை புதிதாக ஏற்படுத்த இடங்களை தேர்வு செய்யவும் மற்றும் அங்காடிகளை நடத்தவும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவுகள் 147 மற்றும் 148–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகள் தங்களுக்கு சொந்தமான அங்காடிக் கட்டடங்களைப் பராமரிக்கும் பொறுப்பு ஊராட்சிகளிடமே தற்போது உள்ளது. கடைகள், அங்காடிகள்,திருவிழாக்கடைகள், திருவிழாக்கள் நடத்துவது போன்றவற்றிற்கான உரிமங்களை கிராம ஊராட்சிகள் வழங்குவதற்கும், மற்றும் கட்டணங்களை நிர்ணயித்து அதனை முறையாக வசூலிப்பதற்கும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 111–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிராம ஊராட்சி அளவில் நடைபெறும் சமுதாய விழாக்கள்–வழிபாடுகள் சார்ந்த திருவிழாக்களின் போது சுத்தம் மற்றும் சுகாதாரம் முறையாக பேணுதல் குறித்து தேவையான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள கிராம ஊராட்சிகளின் கடமைகளில் ஒன்றாக தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் தினசரி மற்றும் வாரச் சந்தைகளை ஏற்படுத்தவும் அவைகள் செயல்பட தேவையான நடவடிக்கைகள் எடுக்கவும், அதே சமயத்தில் தினசரி மற்றும் வாரச்சந்தைகளுக்கான உரிமங்களை வழங்கி, வரி வசூல் செய்யவும் இவ்வாறு அமைக்கப்படும் அங்காடிகளை பராமரிக்கவும். இவை தவிர அங்காடிகளால் சுற்றுப்புற சூழல் மாசுபடாமலும், மனித சுகாதாரத்திற்குக் கேடுகள் விளையாமலும் அதே நேரத்தில் சட்டம் ஒழுங்கு நிலை நாட்டவும் தேவையான நடவடி,ககைகளை ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்க ஊராட்சிகள் சட்டம் பிரிவுகள் 147 மற்றும் 148–ல் ஏற்கனவே வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இயங்கும் தினசரி மற்றும் வார அங்காடிகளை இனங்கண்டு, அவற்றை ஊராட்சி ஒன்றிய சிறப்பு அங்காடிகளாக அறிவித்து, அவற்றின் மேம்பாட்டுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க

ஊராட்சி ஒன்றியங்களுக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு **152–**ல் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

3. உயர்நிலைக் குழுவின் அறிக்கை இயல் 111 22. சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் என்ற தலைப்பில் உள்ள பரிந்துரைகளில் அரசு ஏற்றுக் கொண்டுள்ளபடி கிராம ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்கள்/ மாவட்ட ஊராட்சிகள் ஆகியவைகளுக்கு இணைப்புகள் 1–ல் கண்டவாறு கூடுதல் அதிகாரங்கள் வழங்கி அரசு ஆணையிடுகிறது. மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள் இணைப்பு '2'-ல் கண்டவாறு ஒப்படைப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

4. இவ்வாணையையும் இதன் கூடிய இணைப்புகளையும் அனைத்து கிராம ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்கள்/ மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் கவனத்திற்குக் கொண்டு செல்லுமாறு அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா,**
அரசுச் செயலாளர்.

## இணைப்பு–1

சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் குறித்த மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் கூடுதல் அதிகாரங்கள்

**கிராம ஊராட்சிகள் :**

1. சந்தைகள், அங்காடிகள் போன்றவற்றை முறைப்படுத்தவும் மற்றும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும், வரையறைகளை மீறி நடப்போர் இருப்பின், அளித்த உரிமத்தை ரத்து செய்தல், மேலும் சட்ட மீறல்கள் இருப்பின் தண்டனை மற்றும் அபராதம் விதிப்பதற்கான நடவடிக்கைகளை கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளலாம்.

**ஊராட்சி ஒன்றியங்கள் :**

1. கிராமப்புறங்களிலுள்ள அங்காடிகள் மற்றும் சந்தைகள் சிறப்புற இயங்க கிராம ஊராட்சிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் உதவி செய்யலாம்.
2. கிராம ஊராட்சிகள் நடத்தப்படும் திருவிழாக்கள் போது சுகாதாரம் சட்டம் ஒழுங்கு பேணி பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளிலும் ஊராட்சி ஒன்றியங்கள் உதவி செய்யலாம்.

**மாவட்ட ஊராட்சிகள் :**

1. வருமானம் ஈட்டக் கூடிய வகையில் மாவட்டத்தில் முக்கியப் பகுதிகளில் அங்காடி வளாகங்கள் கட்டுவதற்குரிய திட்டமிடல், கட்டடங்களைக் கட்டி, வாடகைக்கு விடுதல், அவற்றைப் பராமரித்தல் போன்ற பணிகளை மாவட்ட ஊராட்சிகள் செய்யலாம். மேலும் இவ்வாறு நிர்வகிக்கப்படும் அங்காடிகளுக்கான வரி மற்றும் வாடகை வசூல் செய்யவும் வரி/வாடகை செலுத்தத் தவறியவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை மாவட்ட ஊராட்சிகள் மேற்கொள்ளலாம்.
2. மாவட்டப் பகுதிகளில், நலிவடைந்த அங்காடிகள் மற்றும் பெரிய சந்தைகளை திறம்பட செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை மாவட்ட ஊராட்சிகள் மேற்கொள்ளலாம்.
3. சந்தைகள் மற்றும் சிறப்பு அங்காடி வளாகங்களை மாவட்டத்தின் சிறப்பு இனங்களாக குறிப்பிட்டு அறிவிக்க அரசுக்கு மாவட்ட ஊராட்சிகள் உதவலாம்.

# இணைப்பு–2

மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கும் கூடுதல் பொறுப்புகள்.

ஊரக வளர்ச்சித் துறை (சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்)

1. பொது அங்காடிகள் மற்றி உதவி இயக்குநருடன் (ஊராட்சிகள்) அறிவுரை வழங்கவும் மற்றும் ஆய்வும் செய்யலாம்.
2. தனியார் அங்காடிகள் பற்றி உதவி இயக்குநருடன் (ஊராட்சிகள்) அறிவுரை வழங்கவும் மற்றும் ஆய்வும் செய்யலாம்.
3. தொடக்க கூட்டுறவு அங்காடிகள் பற்றி இணைப்பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் அவர்களுடன் அறிவுரை வழங்கி ஆய்வு செய்யலாம்.
4. ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் பற்றி மாவட்ட ஒழுங்கு முறை விற்பனைக் கூட அலுவலருக்கு அறிவுரை வழங்கலாம்.

**இரமேஷ் சந்திர பண்டா,**
அரசுச் செயலாளர்.

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் – உயர்நிலைக் குழு பரிந்துரைகள் – சமூக சொத்துக்களை பேணுதல் என்ற தலைப்பில் அரசு ஏற்றுக் கொண்டவை மீது அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

### ஊரக வளர்ச்சித் துறை

**அரசு ஆணை (நிலை) எண். 105** **நாள்: 22.06.1999**

படிக்க:

அரசு ஆணை (நிலை) எண்.297 ஊரக வளர்ச்சித் துறை, நாள்.29.09.1997

* * *

**ஆணை:**

மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராக கொண்டு உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை 11.01.1999 அன்று அரசுக்கு சமர்ப்பித்தது. உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து முடிவு செய்ய 03.05.1999 மற்றும் 04.05.1999 ஆகிய நாட்களில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டங்களில் பரிசீலிக்கப்பட்டன.

2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலும், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளிலும் மற்றும் வெளியிடப்பட்ட செயல் ஆணைகளிலும் கிராம ஊராட்சியில் உள்ள பல்வேறு சமூக சொத்துக்களை கண்டறிந்து கிராம ஊராட்சிகள் பதிவேட்டில் பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் அசையா சொத்துக்களைத் தனியாக பதிவேட்டில் பதிவு செய்து பராமரிக்க அரசு ஆணை (நிலை) எண்.92, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.26.03.1997–ல் ஆணையிடப்பட்டுள்ளது. வணிக மற்றும் பிற சொத்துக்களுக்கான வரி, வாடகை உபயோகிப்போர் கட்டணம் நிர்ணயிக்க மற்றும் வசூலிக்க கிராம ஊராட்சிகளுக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு எண்.188ல் அதிகாரம் செய்யப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிப் பகுதியிலுள்ள சொத்துக்களை குத்தகைக்கு விட்டு வாடகை வசூலிக்க தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலும் அரசு செயல் ஆணையிலும் வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமூக சொத்துக்களை மேம்படுத்தவும் பேணிப் பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களையும் நன்கொடையாகப் பெறுவதற்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 124–ல் வழி வகை செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியத்தின் சொத்துக்களை பராமரிப்பதற்கு தேவையான பராமரிப்பு செலவினங்களை மாநில நிதிக்குழு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் வழங்கும் நிதியில் பயன்படுத்திக் கொள்ளலாம். எனினும் கூடுதல் நிதி திரட்ட வருமானம் ஈட்டும் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு நிதி நிறுவனங்களிடம் கடன் உதவி பெற, தற்போது சட்டத்தில் இடமில்லை. எனவே இதற்குரிய சட்டத் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். வணிக மற்றும் பிற சொத்துக்களுக்கான வரி, வாடகை மற்றும் கட்டணம் ஆகியவற்றை ஊராட்சிகள் சட்டம் பிரிவு எண்.186ன் படி வசூலிக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சமூக சொத்துக்களை மேம்படுத்தவும், பேணிப் பாதுகாக்கவும் தேவையான

நிதி ஆதாரங்களை நன்கொடையாக, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தர்ம ஸ்தாபனங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து ஊராட்சி ஒன்றியங்கள் பெற ஊராட்சிகள் சட்டம் பிரிவு 124ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. முன்னாள் ஜில்லா போர்டுக்கு சொந்தமான கட்டிடங்கள் நிலங்கள், பிற சொத்துக்கள் சிலவற்றை மட்டும் ஊராட்சி ஒன்றியங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதே போன்ற, பிற துறைகளுக்கு, ஒப்படைக்கப்பட்ட முன்னாள் ஜில்லா போர்டுக்கு சொந்தமான சொத்துக்களை மீள எடுக்கும் பொறுப்பை மாவட்ட ஊராட்சிக்கு வழங்க இனவாரியாக அரசு பரிசீலனை செய்யும் தங்கள் பொறுப்பிலுள்ள சொத்துக்களை மேம்படுத்தவும், பேணிப் பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பொது மக்களிடமிருந்து நன்கொடைகளை பெற ஊராட்சிகள் சட்டம் 124ல் வழி வகை உள்ளது.

3. உயர்நிலைக் குழுவின் அறிக்கை இயல் III–29 சமூகச் சொத்துக்களை பேணுதல் என்ற தலைப்பில் உள்ள பரிந்துரைகளில் அரசு ஏற்றுக் கொண்டுள்ளபடி கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள் / மாவட்ட ஊராட்சிகள் ஆகியவைகளுக்கு இணைப்பில் கண்டவாறு கூடுதல் அதிகாரங்கள் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணையையும் இதன் கூடிய இணைப்புகளையும், அனைத்து கிராம ஊராட்சி / ஊராட்சி ஒன்றியங்கள் / மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பாண்டா,**
அரசு செயலர்.

## இணைப்பு

## சமூக சொத்துக்களை பேணுதல் குறித்து மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் கூடுதல் அதிகாரங்கள்

### கிராம ஊராட்சிகள்

1) ஊராட்சி ஒன்றிய பகுதியிலுள்ள, சமூக சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படாமல் மேற்பார்வையிடுவதும், ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருப்பதுடன், அவ்வாறு நடந்தால் தேவையான நேரத்தில் அந்தந்த கிராம ஊராட்சிகள் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

### ஊராட்சி ஒன்றியங்கள்

1) ஊராட்சி ஒன்றியங்களுக்கு சொந்தமான வருமானம் ஈட்டக்கூடிய எந்தவிதமான சொத்துக்களையும் பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விடலாம். அதற்கான வாடகைத் தொகை குத்தகைத் தொகை நிர்ணயிக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது. இதற்கான விளக்கங்கள் ஊராட்சிகள் சட்ட விதிகளிலும் அரசு செயல் ஆணைகளிலும் உள்ளது.

2) சமூக சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தாமல் மேற்பார்வையிடுவதும் ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருத்தலும், அவ்வாறு நடந்தால், தேவையான நேரத்தில் அதற்கான சட்டப்படி நடவடிக்கைகளை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ளலாம்.

### மாவட்ட ஊராட்சிகள்

1) வணிக மற்றும் இதர சொத்துக்களுக்கான வரி வாடகை உபயோகிப்போர் கட்டணம் ஆகியவற்றை நிர்ணயித்து அவற்றை வசூலிக்கலாம்.

2) மாவட்ட ஊராட்சிகள் சொத்துக்களை, குத்தகைக்கு விட்டு அதற்குண்டான வாடகை வசூலிக்கலாம்.

3) மாவட்ட ஊராட்சிகள், சமுதாக சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படாமல் மேற்பார்வையிடுவதுடன், ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருந்து சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**இரமேஷ் சந்திர பாண்டா,**
அரசு செயலர்.

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஊராட்சிகள்—மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களுக்கு கூடுதல் அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் உரிமைகள் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது — குழுவின் அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. குழுவின் அறிக்கை இயல் மூன்றில் 13 சாலைகள் சிறுபாலங்கள் , பாலங்கள், நீர்வழிகள் மற்றும் பிற தொடர்பு வழிகள் என்ற தலைப்பின் மீது ஆணை வெளியிடப்படுகிறது.

### ஊரக வளர்ச்சி (சி4) துறை

**அரசு ஆணை நிலை எண்.119** நாள் : 5.7.99.

1. அரசு ஆணை( நிலை) எண். 75, ஊரக வளர்ச்சித் துறை, நாள்— 14.3.97.
2. அரசு ஆணை( நிலை) எண். 320, ஊரக வளர்ச்சித் துறை, நாள்— 11.11.97.
3. அரசு ஆணை( நிலை) எண். 78, ஊரக வளர்ச்சித் துறை, நாள்— 28.4.98.

**ஆணை :**

இந்திய அரசியலமைப்புச் சட்டம், அட்டவணை 11—ல் மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புக்களுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க வேண்டிய 29 பொருட்கள் என்னென்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி முதற்கட்டமாக மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று 13 சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், நீர் வழிகள் மற்றும் பிற தொடர்பு வழிகள் என்ற தலைப்பில் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிக்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும், சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டும் உயர்நிலைக் குழு அமைத்து பார்வை இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. உயர்நிலைக் குழு தனது அறிக்கையை அரசுக்கு 11.1.99 அன்று சமர்ப்பித்தது.

2. உயர்நிலைக் குழுவின் அறிக்கையில் உள்ள இப்பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து முடிவு செய்ய 3.5.99 மற்றும் 4.5.99 ஆகிய நாட்களில் கூடிய அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகளின்படி 13 சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், நீர்வழிகள் மற்றும் பிற தொடர்பு வழிகள் என்ற தலைப்பில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் இவ்வாணையின் இணைப்பு 1—ல் கண்டவாறு ஒப்படைப்பு செய்யப்படுகிறது. மேலும், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆய்வு மேற்பார்வை மற்றும் கண்காணித்தல் போன்று கூடுதல் பொறுப்புகளை இவ்வாணையின் இணைப்பு 2—ல் கண்டவாறு ஒப்படைப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

3. இவ்வாணை நெடுஞ்சாலை துறையின் 28.6.99 நாளிட்ட அலுவல் சார்பு எண். 10862/எச்.டபிள்யூ/99—1—ன் இசைவுடன் வெளியிடப்பட்டது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பாண்டா,**
அரசு செயலாளர்.

# இணைப்பு–1

13 சாலைகள், சிறுபாலங்கள், நீர்வழிகள் மற்றும் பிற தொடர்பு வழிகள்

## கிராம ஊராட்சிகள்

1. கிராம ஊராட்சி சாலைப் பணிகள் நடைபெறுவதற்கான நிதி ஆதாரங்களை, உரிய துறையிடமிருந்து பெற்று செயல்படுத்தப்படும் பணியினை மேற்பார்வையிடுதல்.
2. ஊராட்சி சாலைகள், மேம்படுத்தும் பணியை மேற்கொள்ளத் திட்டமிடல், செயல்படுத்துதல், மற்றும் மேற்பார்வையிடல் பணிகளுக்காக கிராம ஊராட்சிகள், தொழில் நுட்ப வல்லுநர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
3. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், இதர வளர்ச்சித் திட்டங்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், வெளிநாட்டு நிதி ஆதாரங்களைக் கொண்டு நிறைவேற்றப்படும் ஊராட்சி சாலைப் பணிகள் இணைப்புச் சாலை பணிகள் ஆகியவற்றினை மேற்பார்வையிடுதல்.

### ஊராட்சி ஒன்றியங்கள்

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், நவீன (Innovative) ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், வெளிநாட்டு நிதி ஆதாரங்களைக் கொண்டு நிறைவேற்றப்படும் ஊராட்சி ஒன்றியச் சாலைப் பணிகள், இணைப்புச் சாலைப் பணிகள் திட்டம் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் ஆகியவற்றினை செயல்படுத்துதல்.

### மாவட்ட ஊராட்சிகள்

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், நவீன (Innovative) ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், வெளிநாட்டு நிதி ஆதாரங்களைக் கொண்டு நிறைவேற்றப்படும் உள்ளாட்சிக்கு உட்பட்ட சாலைப்பணிகள் ஊராட்சி ஒன்றியச் சாலைப் பணிகள், இணைப்புச் சாலைப் பணிகள் திட்டம் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் அமைக்கப்படும் உள்ளாட்சிக்குட்பட்ட சாலைப் பணிகளுக்கான திட்டங்களைத் தீட்டுதல் ஆய்வு செய்தல்.

## இணைப்பு–2

### ஊராட்சி ஒன்றியங்கள்

1. ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் போடப்படும் சாலைப் பணிகள் குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுடன் ஆய்வு செய்யலாம்.
2. நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் போடப்படும் சாலைப் பணிகள் குறித்து வட்டார வளர்ச்சி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
3. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் போடப்படும் சாலைப் பணிகள் குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுடன் ஆய்வு செய்யலாம்.
4. ஊரக சாலைகள் மற்றும் சிறப்புச் சாலைகள் திட்டத்தில் போட வேண்டிய சாலைகள் மற்றும் ஆய்வு வட்டார வளர்ச்சி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

### மாவட்ட ஊராட்சிகள்

1. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சாலைப் பணிகள் மற்றும் நவீன ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் பற்றி திட்ட அலுவலர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையுடன் ஆய்வு செய்யலாம்.
2. கோட்ட வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சாலைப் பணிகள் (மாநிலத் திட்டம்) பற்றி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சியுடன் ஆய்வு செய்யலாம்.

**GOVERNMENT OF TAMIL NADU**
**ABSTRACT**

Panchayats-Three tier Panchayats Devolution of powers- High level Committee recommendations of Rural Electrification- Govt. decision on the recommendations-communicated- Orders issued.

## ENERGY(G2) DEPARTMENT

**G.O.Ms.No.124** **Dated. 4.6.1999.**

1. Govt .Lr.No. 754/C3/99-2, dt.5.3.1999.
2. Govt. Lr.No. 2337/C3/99-2, dt.19.3.1999.

**ORDER;**

Under the revised Rule 73 of Indian Constitution 1994, the Tamil Nadu Panchayats Act was enacted. According to the Act three tier Panchayats set up was formed for which elections conducted and elected members assumed charge in the Panchayats, Panchayat Union and District Councils. As per Rule 243 of 1994 of Tamil Nadu welfare programmes implemented by the three tier panchayats set up for which a High Level Committee was constituted with selected Legislators as Members and the Minister for Rural Development and Local Administration as Convenor has examined the Devolution of powers to the three tier Panchayats set up under the subject viz., Rural Electrification and made certain recommendations.

2. The Government have examined recommendations of the High Level Committee made under the subject “Rural Electrification” and also under “General Recommendations”. In supersession of the Instructions/Orders issued in the Government letters-read above, the Government have decided to accept those recommendations as mentioned in the Annexure to this order.

3. The Chairman, Tamil Nadu Electricity Board is requested to take necessary action with reference to the above orders of the Government. The Chairman, Tamil Nadu Electricity Board is also requested to acknowledge the receipt of this letter.

(BY ORDER OF THE GOVERNOR)

LAL RAWNA SAILO
SECRETARY TO GOVERNMENT

| ANNEXURE | | ENERGY DEPARTMENT |
|---|---|---|
| Sl. No. | Recommendations of High Level Committee | Decision of the Government. |
| 1 | 2 | 3 |

**VILLAGE PANCHAYATS**

| | | |
|---|---|---|
| 1 | The responsibiliy of Street lights maintenance has been transferred to the Village Panchayats. The current consumption charges are being paid by the Village Panchayats. For the financially weaker Panchayats, funds may be allocated from equalisation and Incentive Grant towards the maintenance of street lights. | For Village Panchayats which have to pay current consumption charges to Tamil nadu Electricity Board for a consumption of Street lights. When the source of fund is less, it is in practice to issue orders by Rural Development Department allocating funds from equalisation and Incentive Grants from the year 1997-1998. |
| 2 | The Village Panchayats will furnish the Electricity Board the list of habitations under one light one hut scheme/TNEB and under 'Million wells scheme' TNEB will furnish the details of Service connections given along with the list of beneficiaries to the Village Panchayats. The concerned Executive Engineer of TNEB may be responsible for this item of work. | The Village Panchayats will furnish the Electricity Board the list of habitations under 'One light one hut scheme' and under 'Million wells scheme' . TNEB will furnish the details of service connections given along with the list of beneficiaries to the Village Panchayats. The concerned Executive Engineer of TNEB may be responsible for this item of work. |
| 3 | Village Panchayats and Panchayat Unions may be entrusted with the responsibility of identifying the theft of electricity. TNEB may award suitably the Village Panchayats for effective implementation. | Village Panchayats and Panchayat Unions may be entrusted with the responsibility of identifying the theft of electricity. TNEB will award 10% of the total amount collected due to the theft of energy to concerned panchayats. |
| 4 | While the TNEB proposing for setting up of new transformers and poles, it should consult the Village Panchayats for finalising the place | While the TNEB proposing for setting up transformers and poles, it should consult the Village Panchayats for finalising the place. |

## PANCHAYAT UNIONS

| | | |
|---|---|---|
| **1** | The Panchayat Union may be entrusted with the powers to monitor and review (a) the erection of electrical pump sets for agriculture and Water Supply, (b) provision of Street lights and (c) one hut one light point scheme. The TNEB Engineer will attend the Panchayat Union Council meeting pertaining to electricity subjects | The Panchayat Union may be entrusted with the powers to monitor and review (a) the erection of electrical pump sets for agriculture and water supply, (b) Provision of Street lights and (c) one hut one light point scheme. The concerned Assistant Engineer/ Junior Engineer will attend the Panchayat Union Council meeting pertaining to electricity subjects |

## DISTRICT PANCHAYATS

| | | |
|---|---|---|
| 1 | In Order to get regular and uniform power supply, District Panchayats may collect the data on electricity requirement, availability, new installations required etc., and furnish the consolidated district data to TNEB. | In Order to get regular and Uniform power supply, District Panchayats may collect the data on electricity requirement, availability, new installations required etc., and furnish the consolidated district data to TNEB |
| 2 | The District Panchayat will collect information on the requirement under 'one hut one light scheme', prepare the District Plan and Co-ordinate with TNEB for the implementation. | The District Panchayat will collect information on the requirement under 'one hut one light scheme', Prepare the District Plan and Co-ordinate with TNEB for the implementation |
| 3 | On the basis of information furnished by the Village Panchayats and Panchayat Union, the District Panchayat will recommend to TNEB, for proper distribution of power supply to agricultural pumpsets. | On the basis of information furnished by the Village Panchayats and Panchayat Unions, the District Panchayat will recommend to TNEB, for proper distribution of power supply to agricultural pumpsets. |
| 4 | The District Panchayat may be empowered to review and monitor the schemes implemented by TNEB and suggest ways to improve the power supply and distribution | The District Panchayat may be empowered to review and monitor the schemes implemented by TNEB and suggest ways to improve the power supply and distribution. |

## GENERAL RECOMMENDATIONS

| | | |
|---|---|---|
| 1 | Village Panchayat may be empowered to make complaint to the concerned office if anybody uses more than one light under 'One light for one hut programme.' | Village Panchayat may be empowered to make complaint to the concerned officer if anybody uses more than one light under 'One light for one hut programme.' |
| 2 | For erecting street light poles, the EB normally do not take prior permission from Village Panchayats. However when there is a necessity for shifting of poles for taking up certain development works like widening of roads, Electricity Board levy shifting charges. Government may consider to issue an order to Electricity Board not to levy and any such charges when this type of changes are required to carry out the developmental works. | For erecting street light poles, the EB normally do not take prior permission from Village Panchayats. However when there is a necessity for shifting of poles for taking up certain development works, like widening of roads, Electricity Board levy shifting charges. The Board after collecting the reasonable cost of expenditure ( cost of additional materials and labour charges) from the Panchayats may execute shifting works immediately. |
| 3 | This committee recommends for providing house service electricity connection by Electricity Board on the basis of the Certificate furnished by the Village Panchayats instead of the Certificate issued by the Village Administrative Officer. | The committee recommends to Government to issue orders to TNEB to provide service connection to House based on the Certificate issued by the Panchayats instead of the One issued by the Village Administrative Officers. It has been decided to provide service connection to House based on the Certificate issued either by the VAO or Panchayat President. |

**SECTION OFFICER.**

**GOVERNMENT OF TAMIL NADU**

**ABSTRACT**

Panchayats-Three tier Panchayats Devolution of powers- High level Committee recommendations of the Sub.15 on Non Conventional Energy Sources -communicated-Orders issued.

**ENERGY(G2) DEPARTMENT**

**G.O.Ms.No.125** Dated. 4.6.1999.

Read :

**G.O.Ms.No.65, Energy dated. 24.3.99.**

**ORDER:**

Under the revised Rule 73 of Indian Constitution 1994, the Tamil Nadu Panchayats Act was enacted. According to the Act three tier Panchayats set up was formed for which elections conducted and elected members assumed charge in the Panchayats, Panchayat Union and District Councils. As per Rule 243G of 1994 of Tamil Nadu Panchayat Act and Rule 257 of the said Act, the economic and social Welfare Programmes implemented by the theer tier Panchayats set up for which a High Level Committee was constituted with selected Legislators as Members and the Minister for Rural Development and Local Administration as Convenor has examined the Devolution of powers to the three tier Panchayats set up under the subject viz. "Non Conventional Energy Sources."

2. The Government have examined recommendations of the High Level Committee made under the subject 15 "Non Conventional Energy Sources". In supersession of the orders issued in the G.O. read above, the Government have decided to accept those recommendations as mentioned in the Annexure to this order.

3. The Chairman and Managing Director, Tamil Nadu Energy Development Agency is requested to take necessary action with reference to the above orders of the Government. The Chairman and Managing Director , Tamil Nadu Energy Development Agency is also requested to acknowledge the receipt of this Order.

(BY ORDER OF THE GOVERNOR)

**LAL RAWNA SAILO**

SECRETARY TO GOVERNMENT

## ANNEXURE TO G.O.Ms. No.125,ENERGY, dt. 4.6.99.

| Sl. No. | Recommendations of High Level Committee | Decision of the Government. |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| | **VILLAGE PANCHAYATS** | |
| 1 | Identification of beneficiaries by Village Panchayats for installations of windmills, Solar Cookers and Bio-gas plants in consultation with the B.D.O. , DRDA and Branch Manager, TEDA. | The Village Panchayats may be empowered to identify the persons to be assisted, the places where these sources of energy such as Solar, Wind mill and bio-gas plants to be erected and co-ordinate with Block Development Officers, District Rural Development Agency and Branch Manager of Tamil Nadu Energy Development Agency. |
| 2 | To help the Village Panchayats on guiding the Villagers on the importance and saving of electricity then and there. | TEDA and Electricity Board will guide Village Panchayats to educate the rural people on the importance of Electricity and its savings. |
| 3 | To organise training at Village level to the selected beneficiaries on the use of N.C.E.S. ( Bio-gas, Solar Cookers and Windmills) | The Village Panchayats may be given the responsibility of imparting training to the beneficiaries selected under non-conventional energy sources like Bio-gas, Solar, Windmill. |
| 4 | To identifying the beneficiaries for NCES such as Bio-gas, Solar Cookers and Windmills under Rural Employment Programmes by the Village Panchayats. | The Village Panchayats may assist in the proper identification of beneficiaries under these schemes and also in the rural employment generation schemes. |

## PANCHAYAT UNIONS

| | | |
|---|---|---|
| 1 | At Panchayat Union level action may be taken to identify and promote the NCES Solar Energy Windmills and Bio-gas Plants. | The Panchayat Unions will identify the non-conventional energy sources such as Solar, Windmills and Bio-gas plants and its extensions and take appropriate action to develop the scheme. The Panchayat Unions will propagate the importance and the benefits of non conventional energy sources through media. |
| 2 | To arrange for training to the beneficiares in the NCES. | The Panchayat Unions will arrange for giving proper training for the users. |
| 3 | Panchayat Unions may be entrusted with power for promotion and implementations of Solar Cookers, SPV Pumps and Solar Water Heaters, TEDA may utilise the concerned Panchayat Unions as its implementing Agency. | The Panchayat Unions will have powers to implement the schemes on the NCES like Solar Cooker, Windmill Pumps and Solar Water Heaters etc. TEDA may use the concerned Panchayat Unions as implementing agencies. |
| 4 | The Bio-gas plants should be installed at Panchayat Union level and its benefits to be propagated to the Rural people by the Panchayat Unions. The IRDP programme relating to Rural Development Department be entrusted to Panchayat Unions. The beneficiaries under this programme to be identified by the Village Panchayats and the details furnished to the Panchayat Unions. | The Panchayat Unions may have the powers to install the Bio-gas plants and educate the Public on the importance and use of the plants to implement the Integrated Rural Energy Programme. The Village Panchayats may send the list of identified beneficiaries to the Panchayat Unions. |

## DISTRICT PANCHAYATS

| | | |
|---|---|---|
| 1 | To co-ordinate the work for Promotion of NCES and for preparing Master Plan for Promotion of Bio-gas Plants, Windmills and Solar Cookers. | The District Panchayats may undertake Planning and Co-ordination of the development of those schemes. It may also assist in design a master plan at the district level for Bio-gas, Windmills, Solar Cookers and heaters. |
| 2 | At District level Promotional Activities to ascertain the resources for Wind Energy, Solar Energy and Bio- Energy and to formulate programmes at District Level for implementation. | The District Panchayat will take action for the identification of potontialities for non conventional energy sources more specially for solar energy, wind energy and Bio-gas. It will take necessary action to extend this scheme throughout the Districts. |

SECTION OFFICER.

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஊராட்சிகள்—மூன்றடுக்கு ஊராட்சிகள்—அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல்—மாநில திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கை—கால்நடை வளர்ப்பு பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள் ஆணை வெளியிடப்படுகிறது.

**கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் (காப.2)துறை**

**அரசாணை நிலை எண்.200** நாள்.22.08.97

படிக்கப்பட்டது.

அரசாணை எண்.(நிலை) எண்.75, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள்.14.03.07.

******

**ஆணை:-**

இந்திய அரசியலமைப்பின் 73—வது திருத்தச் சட்டத்திற்கு இணங்க உருவாக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு தேர்தல்கள் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பதவியேற்றுள்ளனர். மேற்கூறிய சட்டத்தின் பிரிவுக்கூறு 243 ஜி மற்றும் 1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 257—க்கு இணங்க, பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தவும் மற்றும் 1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பட்டியல் IV ல் உள்ள இனங்களைச் செயல்படுத்தவும், தேவையான பொறுப்புகளை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். ஆகவே, எந்தெந்த பொறுப்புகளை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்பது குறித்து மாநிலத் திட்டக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே மாநிலத் திட்டக்குழு தனது இரண்டாவது அறிக்கையில் பிறவற்றோடு, கால்நடை வளர்ப்பு தொடர்பான இனங்கள் மீது அரசுக்கு அறிக்கைகளை அனுப்பி உள்ளது.

2) மாநிலத் திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கையில் மேற்சொன்ன கால்நடை வளர்ப்பு பற்றிய பரிந்துரைகளை, சம்பந்தப்பட்ட துறையுடன் கலந்து ஆய்வு செய்தது. ஆய்வுக்கு பின்னர், கால்நடை பராமரிப்புத் துறையின் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும், ஊராட்சி அமைப்புகளுக்கு உரிய பொறுப்புக்களை ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, இவ்வாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணையிடப்படுகிறது.

3) மேற்சொன்ன துறைக்கு நிர்வாகத் துறையான கால்நடை பராமரிப்பு துறையானது, தமது நிர்வாகத்தின் கீழிருக்கும் ஒவ்வொரு நிலையிலும் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள், அவைகளை ஒருங்கிணைக்கும் அலுவலர்கள் பற்றி விரிவாகக் குறிப்பிட்டு உடனே அறிவுரைகள் வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**மோகன் வர்கீஸ் சுங்கத்,**
அரசு செயலாளர்.

## பிற்சேர்க்கை

திட்டங்களை செயல்படுத்துதல், மேற்பார்வையிடுதல், ஆய்வு செய்தல் தொடர்பாக அதிகாரங்களை ஒப்படைத்தல் (கால்நடை வளர்ப்பு)

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | கால்நடை துணை மையம் / மருத்துவமனை (மாநிலத் திட்டம்) | – | செயல்படுத்துதல் பார்வையிடுதல் | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 2 | கிடாரி உற்பத்தி திட்டம் (மாநிலத் திட்டம்) | – | – | – |
| 3 | துணை மையங்களில் செயற்கை முறையில் இனப்பெருக்கம் (வெளிநாட்டு உதவி பெறும் திட்டம் ) | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | செயல்படுத்துதல் / பார்வையிடல் / மேற்பார்வை | மறு ஆய்வு |
| 4 | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உறை விந்து வசதிகள் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | செயற்படுத்துதல் | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 5 | கிராம அளவில் / மாவட்ட அளவில் கால்நடை மற்றும் கோழியின் கண்காட்சி நடத்துதல் (மாநிலத் திட்டம்) | செயற்படுத்துதல் | மேற்பார்வை | செயற்படுத்துதல்/மறு ஆய்வு |
| 6 | இறைச்சிக் கொட்டில் பராமரிப்பு (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) | செயற்படுத்துதல் | செயற்படுத்துதல் | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 7 | செம்மறி ஆடு வளர்ப்பதற்காக சிறு உழவர்களுக்கு/ சொற்ப உழவர்களுக்கு AL நிதியுதவி (மாநில மற்றும் மத்திய திட்டம்) | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | செயற்படுத்துதல் | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 8 | பன்றி வளர்ப்பு (மாநிலத் திட்டம்) இனம் கண்டறிதல் | பயனீட்டாளர்களை | செயற்படுத்துதல் மறு ஆய்வு | மேற்பார்வை / |
| 9 | விலங்குகள், பறவைகள் வழங்குதல் (மாநிலத் திட்டம்) | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | செயற்படுத்துதல் | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 10 | ஐந்தாண்டுக்கொரு முறை கால்நடை குறித்த கணக்கெடுப்பு (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) | – | – | மேற்பார்வை / மறு ஆய்வு |

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 11 | முயல் வளர்ப்பு, கோழி வளர்ப்புக்கு நிதியுதவி (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் செயற்படுத்துதல் | செயற்படுத்துதல் | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 12 | மேய்ச்சல் நில மேம்பாட்டு நிதியுதவி (மாநிலத் திட்டம்) | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | செயற்படுத்துதல் | மூார்வையிடுதல் |
| 13 | பால்பண்ணை கூட்டுறவு சங்கங்கள் (மத்திய பொருளுதவி பெறும் திட்டம்) | உதவி | மறு ஆய்வு | மறு ஆய்வு |
| 14 | ஒருங்கிணைந்த பால் பண்ணை மேம்பாட்டுத் திட்டம் (மத்திய பொருளுதவி பெறும் திட்டம்) | – | மறு ஆய்வு | மறு ஆய்வு |
| 15 | தரமான கறவை மாடுகள் வழங்குதல் (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்) | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | மறு ஆய்வு | மறு ஆய்வு |
| 16 | மலைப்பகுதி, மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திட்டப்பணிகள் (மாநிலத் திட்டம்) | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | பார்வையிடுதல்/ மேற்பார்வை/ மறு ஆய்வு | மறு ஆய்வு |
| 17 | மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திட்டப்பணிகள் (மாநிலத் திட்டம்) | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | பார்வையிடல் / மேற்பார்வை/மறு ஆய்வு | மறு ஆய்வு |
| 18 | மத்திய பொருளுதவி பெறும் திட்டம் ITDP ல் கீழ் திட்டப்பணிகள் | – | – | – |

மோகன் வர்கீஸ்சுங்கத்,
அரசு செயலாளர்.

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஊராட்சிகள்–மூன்றடுக்கு ஊராட்சிகள்–அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல்–மாநில திட்டக்குழுவின் இரண்டாவது அறிக்கை–மீன் வளத்துறை பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள் ஆணை வெளியிடப்படுகிறது.

**கால்நடை பராமரிப்பு (மற்றும் ) மீன்வளத் (மீனளம் 5) துறை**

**அரசாணை (நிலை) எண்.238**

நாள். 16.10.97.
திருவள்ளுவராண்டு 2028
ஈஸ்வர–புரட்டாசி 30
படிக்க:

அரசாணை (நிலை) எண்.75, ஊரக வளர்ச்சி (சி1) துறை நாள்.14.03.97.

******

**ஆணை :**

இந்திய அரசியலமைப்பின் 73–வது திருத்தச் சட்டத்திற்கு இணங்க உருவாக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு தேர்தல்கள் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிதிகள் பதவியேற்றுள்ளனர். மேற்கூறிய சட்டத்தின் பிரிவுக்கூறு 243 ஜி மற்றும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 257–க்கு இணங்க பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தவும் மற்றும் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பட்டியல் ஐஏ– ல் உள்ள இனங்களைச் செயல்படுத்தவும், தேவையான பொறுப்புக்களை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். ஆகவே, எந்தெந்த பொறுப்புக்களை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்பது குறித்து, மாநில திட்டக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே, மாநில திட்டக்குழு தனது இரண்டாவது அறிக்கையில், பிறவற்றோடு மீன்வளத்துறை தொடர்பான இனங்கள் மீது அரசுக்கு அறிக்கைகளை அனுப்பியுள்ளது.

2. மாநில திட்டக்குழுவின் இரண்டாவது அறிக்கையில் மேற்சொன்ன மீன் வளத்துறை பற்றிய பரிந்துரைகளை, சம்பந்தப்பட்ட துறையுடன் கலந்து ஆய்வு செய்து, ஆய்வுக்குப் பின்னர், மீன்வளத் துறையில் திட்டப்பணிகளைச் செயல்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும் ஊராட்சி அமைப்புகளுக்கு உரிய பொறுப்புகளை ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி இவ்வாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கி ஆணையிடப்படுகிறது.

3. மேற்சொன்ன துறைக்கு நிர்வாகத் துறையான மீன் வளத் துறையானது, தமது நிர்வாகத்தின் கீழிருக்கும் ஒவ்வொரு நிலையிலும் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் அவைகளை ஒருங்கிணைக்கும் அலுவலர்கள் பற்றி விரிவாகக் குறிப்பிட்டு உடனே அறிவுரைகள் வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**மோகன் வர்கீஸ்சுங்கத்,**
அரசு செயலாளர்.

## பிற்சேர்க்கை
## திட்டங்களை செயல்படுத்துதல், மேற்பார்வையிடுதல், ஆய்வு செய்தல் ஆகியவை தொடர்பான அதிகாரங்களை ஒப்படைத்தல் (மீன்வளம்)

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை மேம்படுத்துதல் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்/ செயற்படுத்துதல் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்/ மறு ஆய்வு | திட்டமிடுதல்/ மறு ஆய்வு/ மேற்பார்வையிடுதல் |
| 2 | உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்வளத்தை பயன்படுத்துதலும், விற்பனையும் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | ஆலோசனை வழங்குதல் / பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | திட்டமிடுதல் / மறு ஆய்வு |
| 3 | நன்னீர் இறால் வளர்ப்பு தொழிற்சாலையை அமைத்தல் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | ஆலோசனை வழங்குதல் | திட்டமிடுதல் / மறு ஆய்வு |
| 4 | தூண்டுதல் முறை இறால் மீன் வளர்ப்பு மையங்களை நிறுவுதல் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்/ செயற்படுத்துதல் | ஆலோசனை வழங்குதல் | திட்டமிடுதல் / மறு ஆய்வு |
| 5 | உவர் நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகவரமைப்புகளை நிறுவுதல் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல்/ செயற்படுத்துதல் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | திட்டமிடுதல் / மறு ஆய்வு |
| 6 | கடற்கரையோரப் பகுதிகளில் மீனை இறக்கும் வசதிகளை மேம்படுத்துதல் | —— | செயற்படுத்துதல் | மறு ஆய்வு |
| 7 | மீன் பிடிக்காத காலங்களில் கடலோர மீனவளர்களுக்கான நிவாரண திட்டம் | —— | —— | —— |
| 8 | கடற்கரையோர மீ ன் பிடிப்பு கிராம பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | ——— | செயல்படுத்துதல் | திட்டமிடுதல் / மறு ஆய்வு |

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 9 | மீனவர்களுக்கான இலவச வீட்டு வசதி திட்டம் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | -- | திட்டமிடுதல் / மறு ஆய்வு |
| 10 | மீன்பிடி துறைமுகங்களை மேம்படுத்தும் பொருட்டு நிலங்களை கையகப்படுத்துவதற்கான நிதியுதவி | உதவி | உதவி | திட்டமிடுதல் ஆலோசனை வழங்குதல். |
| 11 | நவீன மீன்பிடித்தொழில் நுட்பத்தில் மீனவர்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் மீனவர்களுக்குப் பயிற்சிக் கால உதவித்தொகை வழங்குதல் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | -- | திட்டமிடுதல் / மறு ஆய்வு |
| 12 | மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி | உதவி | உதவி | உதவி/திட்டமிடுதல் |
| 13 | மீன்காட்சியங்களை நிறுவுதல் | -- | -- | திட்டமிடுதல் |
| 14 | மீனவர்களுக்கு செயற்கை இழை வலைகள் மற்றும் பருத்தி நூலிழையிலான வலைகள், எஞ்சின் மற்றும் ஏனைய துணைக் கருவிகளை வழங்குதல் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | -- | மறு ஆய்வு |
| 15 | சுத்தமான கொள்கலன்கள் மற்றும் முச்சக்கர மிதிவண்டிகள் ஆகியவற்றை வாங்குவதற்காக மீனவர்களுக்கு நிதியுதவி | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | செயற்படுத்துல் | மறு ஆய்வு |

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 16 | மீனவர்களின் கட்டுமரங்களுக்கு இராசாயனப்பூச்சு பூசுதல் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | -- | மறு ஆய்வு |
| 17 | கடல் அரிப்பு தடுப்புத் திட்டங்களுக்கான நிதியுதவி | உதவி | திட்டமிடுதல் | திட்டமிடுதல்/ மறு ஆய்வு |
| 18 | மீனவர் சிற்றூர்களுக்கு அனுகு சாலைகளை அமைத்தல் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | -- | மேற்பார்வையிடுதல்/ மறு ஆய்வு |
| 19 | மீனவர் தொகுதி காப்புறுதித் திட்டம் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | செயற்படுத்துல் | மறு ஆய்வு |
| 20 | மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டம் | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | செயற்படுத்துல் | மறு ஆய்வு |

**மோகன் வர்கீஸ்சுங்கத்**

அரசு செயலாளர்.

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

கால்நடை பராமரிப்புத்துறை—மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்து உயர்நிலை குழுவின் பரிந்துரைகள் மீது அரசு ஆணைகள் வெளியிடப்படுகிறது.

**கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் (காப 2) துறை**

**அரசாணை (நிலை) எண்.166** நாள்.27.07.1999

படிக்க

1. அரசாணை (நிலை) எண்.200—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை நாள்.22.08.97.
2. அரசாணை (நிலை) எண்.320—ஊரக வளர்ச்சித் துறை, நாள்.11.01.97
3. அரசாணை (நிலை)எண்.100—ஊரக வளர்ச்சித் துறை, நாள்.22.05.98
4. ஊரக வளர்ச்சித்துறை செயலரின் நேமுக.14532/சி4/99, நாள்.11.05.99.

******

**ஆணை:—**

பார்வை 1—ல் படிக்கப்பட்ட அரசாணையில், மாநில திட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று முதற்கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய பார்வை 2—மற்றும் 3—ல் படிக்கப்பட்ட அரசு ஆணைகளில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும், சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டு உயர்நிலைகுழு அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை 11.1.99—அன்று அரசுக்கு சமர்ப்பித்தது.

2) உயர்நிலைக்குழு அறிக்கை, இயல் III ல் “4—கால்நடை பராமரிப்பு பால் பண்ணை மற்றும் கோழிப் பண்ணை மற்றும் 12. விறகு மற்றும் தீவனம்” என்ற தலைப்புகளில் உள்ள பரிந்துரைகளை அரசு கவனமுடன் பரிசீலித்து பின்னர் ஏற்றுக் கொண்டுள்ள பரிந்துரைகளை இவ்வாணையில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை 1— மற்றும் அட்டவணை 2—ல் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் ஒப்படைப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

3) மேலும், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு கால்நடை துறையை பொருத்த ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள் அட்டவணை 3—ல் கண்டுள்ளவாறு வழங்கி அரசு ஒப்புதல்அளிக்கிறது.

4) இவ்வாணை ஊரக வளர்ச்சி துறையில் அ.சா.கு..எண்.21903/சி4/99.1 நாள்.17.06.99—ல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**மோகன் வர்கீஸ் சுங்கத்**

அரசு செயலாளர்.

## அட்டவணை 1

## கால்நடை பராமரிப்பு, பால்பண்ணை மற்றும் கோழி வளர்ப்பு.

## கிராம ஊராட்சிகள்.

01. கால்நடை மற்றும் கோழி இனங்களை நல்லமுறையில் பராமரிக்க, கால்நடைகளுக்கு நோய் மற்றும் தொற்று நோய் பற்றிய விபரங்களை கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநரிடமோ, ஊராட்சி ஒன்றிய கால்நடை விரிவாக்க அலுவலரிடமோ தெரியப்படுத்தலாம்.

02. இறைச்சி வெட்டும் கூடங்களில் நடக்கும் பணிகளை கால்நடை உதவி மருத்துவரின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் அவ்வப்போது மேற்பார்வையிட்டு குறிப்புகளை பதிவு செய்யலாம்.

03. இறைச்சி வெட்டும் கூடங்களை நல்ல முறையில் பராமரிக்கலாம்.

04. கிராம பொது நிலங்களில் (புறம்போக்கு) கால்நடை தீவன மரங்களை வளர்த்து தீவன உற்பத்தியை பெருக்கலாம்.

05. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து கால்நடை தீவன மரங்களை வளர்க்க சமுதாய நிலங்களை வாங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

06. உள்ளூரில், தீவன வங்கி ஏற்படுத்தி வறட்சி மற்றும் பற்றாக்குறை காலங்களில் தீவனத்தை பங்கிட்டு அளிக்க ஏற்பாடு செய்யலாம்.

07. தீவன விதைகள், தீவன மரக்கன்றுகளை கிராம மக்களுக்கு பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யலாம்.

08. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள், பால் சேகரிக்கும் மையங்கள் மற்றும் கோழியின நிலையம் போன்றவற்றுக்குத் தேவையான வசதி செய்து தரலாம்.

09. உள்நாட்டு இனப் பெருக்க கால்நடை மேம்பாடு / தீவனம் மற்றும் தீவன விதை மேம்பாட்டுத் திட்டம், கால்நடைகளுக்கும் பறவைகளுக்கும் தடுப்பூசி போடுதல் சிறப்பு கூறு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களில் பயன்பெறும் பயனாளிகளைக் கண்டறிய உதவலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்.

01. உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப, கால்நடை மருந்தகங்கள் அமைத்தல் மற்றும் மருத்துவப் பணிகள் ஆகிய பணிகளை தேசிய வேளாண்மை குழுவில் வழிகாட்டி நெறிமுறைப்படி கால்நடை மருத்துவப் பணிகள் துறையுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளலாம்.

02. தற்போது இயங்கி வரும் கால்நடை மருந்தகங்களை சீராக பராமரிக்கலாம்.

03. பல்வேறு திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு தரமான கால்நடைகளை விநியாகம் செய்யலாம்.

04. நல்ல தரமான உயர்ரக கால்நடைகளைப் பற்றி விவசாயிகளிடம் செய்தி பரப்பலாம்.

05. கால்நடை மேம்பாட்டுப் பணிகளை மேற்பார்வையிடும் பணியை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கலாம்.

06. கால்நடைகளுக்கு ஊராட்சி ஒன்றிய பகுதியில் நோய்கள், குறிப்பாக தொற்று நோய் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கலாம்.

07. கோழி வளர்ப்பவர்களுக்கு பயிற்சி அளிக்கவும், கோழி தீவனம் வழங்கவும் ஆவன செய்யலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்

01. உள்ளூர் சூழ்நிலைக்கேற்ப மாவட்ட ஊராட்சிகளில் மருத்துவப் பணிகள் மற்றும் கால்நடை பெருக்கத்திற்கு விவசாயிகளின் ஆண்டு விழா ஏற்பாடு செய்து, தமிழ்நாடு கால்நடை மருத்துவக் கல்லூரியின் கண்டுபிடிப்புகளையும் தொழில் நுட்பங்களையும் பரப்புதல்.

02. கால்நடை மேம்பாட்டுக்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை காலாண்டுக்கொருமுறை கால்நடை இணை/உதவி இயக்குநர் உடன் இணைந்து வேளாண்மை நிலைக்குழு ஆய்வு செய்யலாம். வேளாண்மை நிலைக்குழுவின் மூலமாக மாவட்டங்களில் செயல்படும் கால்நடை மேம்பாட்டுத் திட்டங்களை காலாண்டுக்கு ஒருமுறை ஆய்வு செய்தல், அவ்வாய்வு கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை இணை/துணை இயக்குநர் கலந்து கொண்டு ஆய்வு மேற்கொள்ளலாம்.

03. சிறப்பு பகுதி மற்றும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்களின் மேம்பாட்டு திட்டத்தின் கீழான திட்டங்களை ஆய்வு செய்தல் மற்றும் வெளிநாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இதர திட்டங்களை மேற்பார்வை செய்யலாம்.

**மோகன் வர்கீஸ் சுங்கத்,**

அரசு செயலாளர்.

## அட்டவணை 2.

### விறகு மற்றும் தீவனம்

### கிராம ஊராட்சிகள்

01. கிராம மக்களின் தேவைக்கேற்ப எரிபொருள், மரங்கள் (விறகு) கால்நடைகளுக்குத் தேவையான தீவனப்பயிர் ஆகியவற்றை கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய நிலங்களில் வளர்க்க கால்நடை பராமரிப்பு / வனத்துறைகளின் ஆலோசனையின்படி தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

02. கால்நடை பராமரிப்பு இணை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்கும் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படும் தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தில் செயல்படும் தீவன மேம்பாட்டுத் திட்டத்திற்கு தேவையான தீவன மரச் செடிகள், தொட்டி செடிகள் வழங்குவதை மேற்பார்வையிடுதல் மற்றும் உதவி புரிதல்.

### ஊராட்சி ஒன்றியங்கள்.

01. தீவன உற்பத்தியின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு மண்டல இணை இயக்குநர்/உதவி இயக்குநர் ஆலோசனையின் பேரில் மரங்கள் மற்றும் மாட்டுத் தீவனம் உற்பத்தியை பெருக்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு நிலங்களை அடையாளம் கண்டு இதற்கென தனியே ஒதுக்கலாம்.

02. கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் மற்றும் மண்டல இணை இயக்குநர், வனத்துறை அலுவலர் உதவியுடன் தீவனத்திற்கு பயன்படும் மரங்களை இனங்கண்டு பயிரிடலாம் மற்றும் நேரிடையாக ஆய்வு மேற்கொள்ளலாம்.

03. சமூக தரிசு நிலங்களில் பயிர் செய்யும் தீவன மரங்களின் உற்பத்தியில் நேரிடையாக ஈடுபட்டு மேற்பார்வையிடலாம்.

### மாவட்ட ஊராட்சிகள்

01. மாவட்ட ஊராட்சிப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களில் கால்நடை தீவன மரங்களை வளர்த்து தீவன உற்பத்திகளைப் பெருக்கலாம். இதுபோன்ற பணியினை மாவட்ட ஊராட்சிகள் திட்டமிடலாம்.

02. கால்நடை பராமரிப்பு இயக்குநர் தலைமையில் செயல்படும் தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெரிய அளவில் கால்நடை தீவன உற்பத்தியைப் பெருக்க தேவையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**மோகன் வர்கீஸ் சுங்கத்**
அரசு செயலாளர்

## அட்டவணை.3.

ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள்.

**கால்நடைத்துறை**

**மாவட்ட ஊராட்சிகள்.**

01. திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் மாடுகளுக்கும் எருமைகளுக்கும் ஊசி போடுதல் பற்றி இணை இயக்குநர் கால்நடைஅவர்களுடன்ஆய்வு செய்யலாம்

**மோகன் வர்கீஸ் சுங்கத்**

அரசு செயலாளர்

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது—உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள்—மீன்வளத் துறை பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்—ஆணை வெளியிடப்படுகிறது.

**காலநடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் (மீன்—5) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.137**

நாள்.23.06.1999
பிரமாதி, ஆனி 9,
திருவள்ளுவராண்டு 2030

படிக்க.

1. அரசாணை (நிலை) எண்.238, கால்நடைபராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை நாள்.16.11.97
2. ஊரக வளர்ச்சித் துறை செயலர் நேமுக எண்.14532/சி4/99/ நாள்.11.05.99.

******

**ஆணை:-**

இந்திய அரசியலமைப்பின் 73—வது திருத்தச் சட்டத்திற்கு இணங்க உருவாக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு தேர்தல்கள் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பதவியேற்றுள்ளனர். மேற்கூறிய சட்டத்தின் பிரிவுகள் 243 ஜி—மற்றும் 1994—ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 257—க்கு இணங்க, பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தவும் மற்றும் 1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பட்டியல் 4—ல் உள்ள இனங்களை செயல்படுத்தவும், தேவையான பொறுப்புக்களை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். அதன்படி முதல் கட்டமாக மாநில திட்டக்குழு இரண்டவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் மீன்வளத்துறை தொடர்பான இனங்கள் மீது திட்டப்பணிகளைச் செயல்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும் ஊராட்சி அமைப்புகளுக்கு உரிய பொறுப்புகளை ஒப்படைக்க முடிவு செய்து அதன்படி பொறுப்புக்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்து பார்வை ஒன்றில் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஆணை வழங்கப்படடது.

2. மேற்படி ஆணையினைத் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சிகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் வழங்கி அரசுக்குப் பரிந்துரை செய்ய உயர்நிலைக்குழு (HIGH LEVEL COMMITTEE) அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை அரசுக்கு 11.1.1999—அன்று சமர்ப்பித்தது. (பக்கம் 3—6) குழுவின் அறிக்கை இயல் III—5—மீன்வளம் என்ற தலைப்பில் உள்ள பரிந்துரைகளை அரசு ஏற்று, அதன்படி இவ்வாணையின் பிற்சேர்க்கையில் மீன்வளத்துறை தொடர்பாக கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு கூடுதல்அதிகாரங்களை உரிமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்கி ஆணையிடப்படுகிறது.

3. கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு மீன்வளத்துறை தொடர்பான பணிகளை நிறைவேற்ற உரிய அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள தக்க அறிவுரை வழங்குமாறு மீன்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**மோகன் வர்கீஸ் சுங்கத்**
அரசு செயலாளர்

## பிற்சேர்க்கை

**(அரசாணை (நிலை) எண்.137 கா.ப.ம.மீன்வளத்துறை (மீன்.5) நாள்.23.06.1999)**

### 1. வளர்ச்சிப் பிரிவில் வழங்கப்படும் பொறுப்புகள்:–

### கிராம ஊராட்சிகள்

புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் மீனவ குடும்பங்களில் இழப்பு / சேதம் குறித்து மதிப்பீடு செய்வதில் மீன்துறைக்கு கிராம ஊராட்சிகளில் ஒத்துழைத்தல் மற்றும் மீனவர் காப்புறுதி திட்டத்தை மீனவர்களிடம் விளம்பரப்படுத்தி திட்டத்தில் ஊக்குவித்தல்.

### ஊராட்சி ஒன்றியங்கள்.

01. ஒட்டு மொத்த மீன்வள மேம்பாட்டு திட்டம் மற்றும் மீனவர் நலன் நாடும் நலத் திட்டங்களைத் தயாரிக்கும் பொழுது சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களை கலந்தாலோசித்து துறை அலுவலர்கள் செயல்படலாம்.

02. ஊராட்சி ஒன்றியத் தலைவர், தொடர்புடைய ஊராட்சியில் கடல் மற்றும் உவர் நீர் மீன் வளர்ப்புக்குரிய பகுதிகளை தேர்ந்தெடுக்க தகுந்த உதவிகள் செய்யலாம். மீன் வள கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல் மற்றும் மீன் இறங்கும் தளங்கள், புயல் பாதுகாப்பகம், மீன் உலர்த்தும் தளம் மற்றும் வழிகாட்டி விளக்குகள் அமைத்தல் ஆகியவை குறித்து ஊராட்சி ஒன்றியங்களின் உதவியை நாடுமாறு மீன்வளத்துறை அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்படலாம்.

03. மீன் குளிர்ப் பதனப்படுத்துதல், பதபடுத்துதல், சிப்பம் கட்டுதல், பாதுகாத்தல் ஆகியவற்றில் மீன்வளத்துறை மூலம் மீனவர்களுக்கு பயிற்சியளிக்க வசதி செய்தல்.

04. ஊராட்சி ஒன்றியக்குழுவின் சீராய்வு கூட்டத்தில் மீன்துறை உதவி இயக்குநர் அல்லது மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை அலுவலர், உவர் நீர் மீன்வளர்ப்போர் முகமை அலுவலர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக அலுவலர் (ஊராட்சி ஒன்றிய பகுதிக்குள்) ஆகிய அலுவலர்களில் எவரேனும் ஒருவர் கலந்து கொள்ளலாம்.

### மாவட்ட ஊராட்சிகள்.

ஒட்டுமொத்த மீன்வள மேம்பாட்டு திட்டங்கள் மற்றும் மீனவர் நல திட்டங்களை தயாரிக்க மாவட்ட ஊராட்சிகள் மீன் வளத்துறைக்கு தகுந்த உதவிகள் செய்யலாம்.

## 11 . மாவட்ட ஊராட்சிகளின் ஆய்வு, கண்காணிப்புமற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள்.

01. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை மேம்படுத்துதல் திட்டம் பற்றி மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை பொறுப்பு வகிக்கும் மீன்துறை உதவி இயக்குநருடன் ஆய்வு மற்றும் மேற்பார்வையிடலாம்.

02. உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் வளத்தை பெருக்குதல் மற்றும் விற்பனை திட்டம் பற்றி இத்திட்டம் செயல்படுத்தப்படும் மூன்று மாவட்டங்களைஒய அமைத்தல் திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட உள்நாட்டு மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

04. செயற்கை முறை இறால் மீன் வளர்ப்பு மையங்களை நிறுவுதல் திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

05. உவர் நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகவர் அமைப்புகளை நிறுவுதல் பற்றி சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

06. கடலோரப் பகுதிகளில் மீனை இறக்கும் பணிகளை மேம்படுத்துதல் பற்றி சம்பந்தப்பட்ட கடலோார மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

07. நவீன மீன்பிடி தொழில் நுட்பத்தில் மீனவர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் மீனவர்களுக்கு பயிற்சி கால உதவி தொகை வழங்குதல் பற்றி சம்பந்தப்பட்ட மீன் துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

08. சுத்தமான கொள்கலன்கள் மற்றும் மூன்று சக்கர வண்டிகள் ஆகியவற்றை வழங்குவதற்காக மீனவர்களுக்கு நிதி உதவி திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

09. மீனவர்களின் கட்டு மரங்களுக்கு இரசாயனப் பூச்சு பூசுதல் பற்றி சம்பந்தப்பட்ட கடலோர மீன்துறை உதவி இயக்குநர்களுடன்ஆய்வு செய்யலாம்.

10. கடல் அரிப்பு தடுப்பு திட்டங்களுக்காக நிதி உதவி திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட கடலோர மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

11. மீனவர் தொகுதி காப்புறுதி திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் மற்றும் கடலோர மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வுசெய்யலாம்.

12. மீனவர் சேமிப்பு நிவாரண திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட கடலோர மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

13. மீன்பிடி துறைமுகங்களை மேம்படுத்தும் பொருட்டு நிலங்களை கையகப்படுத்துவதற்காக நிதியுதவி திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட மீன்துறை உதவிஇயக்குநர் மற்றும் மீன்பிடி துறைமுக செயற்பொறியாளர்களுக்கு ஆலோசனை வழங்கலாம்.

**மோகன்வர்கீஸ் சுங்கத்,**
அரசு செயலாளர்.

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் உரிமைகள் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள் ஏற்கப்பட்டது– ஆணை வெளியிடப்படுகிறது.

**கைத்தறி,கைவினைப் பொருட்கள் துணி நூல் மற்றும் கதர் (எப்–2) துறை**

**அரசு ஆணை (நிலை) எண். 107** நாள் 7.6.99.
பிரமாதி வைகாசி 24,
திருவள்ளுவர் ஆண்டு 2030.

படிக்கப்பட்டவை–

செயலாளர் ஊரக வளர்ச்சித் துறை நேர்முக
கடித எண்.14532/சி4/99 நாள் 11.5.99.

**ஆணை–**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் உரிமைகள் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கபரிந்துரை செய்ய உயர்மட்டக்குழு ஒன்று தமிழக அரசால் அமைக்கப்பட்டது. தற்போது கதர் கிராம குடிசைத் தொழில் திட்டங்களை செயல்படுத்திட வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை இக்குழு ஆராய்ந்து மேலும் வழங்க வேண்டிய அதிகாரங்கள் குறித்து சில பரிந்துரைகளை செய்துள்ளது. இது தொடர்பாக கதர் வாரியம் கலந்தாலோசிக்கப்பட்டு இத்துறையை பொறுத்தவரை மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற அதிகாரங்கள் தொடர்பாக குழுவின் அனைத்துப் பரிந்துரைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

2. கதர் கிராம மற்றும் குடிமைச் தொழில் திட்டங்களில் குராம ஊராட்கிளுக்கு 9 பரிந்துரைகளும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 10 பரிந்துரைகளும் மாவட்ட ஊலராட்சிகளுக்கு 5 பரிந்துரைகளையும் கைத்தறி, கைவினைப் பொருட்கள் துணி நூல் (மற்றும்) கதர் துறை ஏற்கலாம் என்று உயர்மட்டக்குழு தெரிவித்துள்ளது. அதன் மீது 4.5.99 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு அனைத்து பரிந்துரைகளையும் ஏற்றுக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

3. எனவே கதர் கிராம மற்றும் குடிமைத் தொழில் திட்டங்களை செயல்படுத்திட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்து உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகளின்படி கீழ்க்காணும் அதிகாரங்களை ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கி அரசு ஆணை வெளியிடுகிறது.

## கதர் கிராம மற்றும் குடிசை தொழில் திட்டங்கள்

## கிராம ஊராட்சிகள்

164. கதர், கிராம மற்றும் குடிசைத் தொழில் திட்டங்களுக்கு தகுதியான பயனாளிகளை தேர்வு செய்து முறையான பயிற்சி நிறுவனங்கள் உள்ள இடங்கள் பற்றி தகவல் பயனாளிகளுக்கு தெரிவித்து தொழில் நுட்பம் மற்றும் செயல்திறன் பற்றி பயிற்சி அளிக்க ஊராட்சி நடவடிக்கை எடுக்கலாம்.

165. கிராம ஊராட்சி அளவில் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்த கிராம ஊராட்சி உதவிட வேண்டும். உள்ளூரிலேயே கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களை கொண்டு தொழில் துவங்க ஏற்பபாடு செய்தல், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விலையையும் ஊராட்சியே நிர்ணயம் செய்யலாம்.

166. ஊராட்சி அளவில் கதர் மேம்பாட்டிற்கான புயிற்சி திட்டத்தை தமிழக கதர் வாரியத்தின் ஒப்புதலுடன் ஊராட்சிகள் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கலாம்.

167. ஊராட்சி அளவில் தறிகளை நவீனப்படுத்துவதற்கான கைத்தறி மற்றும் கதர் துறை அலுவலர்களுடன் கூடிப்பேசி திட்டம் தயாரித்து, அதனை செயல்படுத்தி அவ்வப்போது ஊராட்சிகள் மேற்பார்வையிடலாம்.

168. கிராம ஊராட்சிகள் சம்மந்தப்பட்ட துறையுடன் தொடர்புக் கொண்டு, கிராம புறங்களில் வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தேனீ வளர்க்கும் பெட்டிகள் வழங்கி அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கவும் இத்திட்டத்தை மேற்பார்வையும் செய்யலாம்.

169. கிராம ஊராட்சி அளவில் உள்ளகதர் பட்டு நெசவாளர்களுக்கு சம்மந்தப்பட்ட துறையுடன், தொடர்பு கொண்டு ஜெகார்டு பெட்டி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி மேற்பார்வையிடலாம்.

170. வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் வருமானம் உயர்வதற்கு நூற்புக் கதிர் கொண்ட கைராட்டைகளில் கதர் நூற்புக்கான திட்டங்களை வசூலிக்க சம்மந்தப்பட்ட கதர் மற்றும் கைத்தறித்துறை சார்ந்த அலுவலர்களது உதவி பெறலாம்.

171. பனை ஏறும் தொழிலாளர்களுக்கு மரம் ஏறுவதற்கான கருவி வழங்க ஒரு திட்டத்தை செயல்படுத்தி அத்திட்டத்தினை ஊராட்சிகள் மேற்பார்வையிடலாம்.

172. பனை ஏறும் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி கற்பதற்கான புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், எழுதுப்பொருட்கள் இலவசமாக வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி மேற்பார்வையிடலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

173. பிற முகமைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து கதர், ஊரக மற்றும் குடிசைத் தொழில் மற்றும் பிற கைவினைஞர்களுக்கான செயல்பாட்டுத் திட்டத்தை தீட்டுதல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

174. பல்வேறு உற்பத்தி வணிகம் மற்றும் கைவினை தொழிலில் தொழில் நுட்பவியல் சென்றடையவும் அவற்றை மேம்பாடு செய்யவும் உதவி செய்யலாம்.

175. பொதுவாக பணியிடங்களின் பட்டறை பணிவாளகங்கள் கட்டுவது போன்ற உள்ளமைப்பு வளர்ச்சிக்காக உதவுதல்.

176. ஒன்றிய அளவில் தொழில் துவங்குபவர்களுக்கு கடன் மற்றும் நிதியுதவி பெற ஏற்பாடு செய்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

177. ஒன்றிய அளவில் உற்பத்தியாகும் கதர் துணி மீதான விற்பனையில் தள்ளுபடி தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதை மேற்பார்வையிடல்

178. ஒன்றிய அளவில் கதர் மேம்பாட்டிற்கான புதிய திட்டத்தை வகுத்து அது முறையாக செயல்படுகிறதா என்பதை மேற்பார்வையிடுதல்.

179. ஒன்றிய அளவில் கதர் நெசவுக்கு பயன்படும் தறிகளை நவீனப்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்தல்.

180. ஒன்றியத்திலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தேனி வளர்க்கும் பெட்டிகளை வழங்கி அவர்களுடைய வருமானத்தை பெருக்க நடவடிக்கை எடுத்தல்.

181. ஒன்றியத்திலுள்ள பனை ஏறும் தொழிலாளர்களுக்கு பதனீர் எடுக்க தேவையான நவீனகருவிகள் வழங்க ஏற்பாடு செய்தல். அவை வழங்கப்பட்டதா அவை பயனாளிகள் முறையாக பயன்படுத்துகிறார்களா என்பதை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்பார்வையிடலாம்.

182. பனை ஏறும் தொழிலாளர்களின் குழந்தைகள், கல்வி கசற்பதற்கான புத்தங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் எழுதுப் பொருள்கள் இலவசமாக வழங்கி அதை பயனாளிகள் முறையான பயன்படுத்துகின்றனரா என்பதை மேற்பார்வையிடலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்

183. கதர், கைவினைப் பொருள்கள்,பட்டுப்புழு வளர்ப்பு, குடிசை மற்றும் ஊரகத் தொழில் வளர்ச்சிக்காக மாவட்ட நிலையில் திட்டம் தயாரித்தல்.

184. உரிய தொழில் நுட்பவியல் பயிற்சி மையங்களையும்/ நிலையங்களையும் கண்டறிந்து அவ்விவரங்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஊராட்சிகளுக்கும் தெரிவித்தல்.

185 மாவட்டத்தில் கிடைக்க கூடிய வளங்களைப் பயன்படுத்துவதற்கு தேவையான உள்ளமைப்புகள் பற்றி கதர் மற்றும் ஊரகத்தொழில் வாரியத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

186. மாவட்டம் முழுவதற்கான கடன் திட்டத்தின் கீழ் மாவட்டத்திலுள்ளகதர் கைவினைப்பொருட்கள், பட்டுப்புழு வளர்ப்பு குடிசை மற்றும் ஊரகத் தொழிலில் ஈடுபட்டுள்ள பிரிவினருக்கு கடன் வசதி அளிக்க திட்டத்தினை வடிவமைத்தல்.

187. கதர் தறிகளை நவீனப்படுத்தும் திட்டம், தேனீ வளர்க்கும் பெட்டிகளை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கும் திட்டம், கதர் பட்டு நெசவாளர்களுக்கு ஜெகார்டு பெட்டி வழங்கும் திட்டம், பனை ஏறும் தொழிலாளர்களுக்கு இலவச கருவி வழங்கும் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலைத் திட்டத்தின் கீழ் கிராமத்தொழில் மேம்பாட்டுக்கான திட்டம் மற்றும் நீலகிரியில் தேனி வளர்ப்பு, கிராமத் தொழில் மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டங்களை செயல்படுத்த திட்டமிடுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஜெயந்தி**
அரசு செயலாளர்

திருமதி. ஜெயந்தி இ.ஆ.ப., அரசு செயலாளர், கைத்தறி கைவினைப் பொருட்கள் துணி நூல் மற்றும் கதர் (எப்.இ) துறை சென்னை–9 அவர்களிடமிருந்து கடித எண் 8912/ எப்.2/ 99.1, நாள்.6.9.99, இயக்குநர், ஊரக வளர்ச்சி இயக்ககம், சென்னை – 15க்கு அனுப்பட்ட கடிதத்தின் உண்மை நகல்

****

ஐயா,

| | |
|---|---|
| பொருள் : | மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரம் அளித்தல் – உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் மீது அரசின் முடிவுகள் – ஆணைகள் வெளியிடுதல் ''9 கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில்கள்'' தலைப்பில் ஆணை வெளியிடப்படுகிறது. |
| பார்வை : | 1. அரசாணை நிலை எண்.107, கைத்தறி கைவினைப் பொருட்கள் துணி நூல் மற்றும் கதர் (எப் 2) துறை நாள் 7.6.99<br>2. ஊரக வளர்ச்சித்துறை கடித எண்.33498/சி4/98.5. நாள் 28.6.99 (மற்றும்) 20.8.99 |

பார்வை ஒன்றிலுள்ள அரசு ஆணையின் தொடர்ச்சியாக (வரிசை எண்.164 முதல் 187 வரை) பார்வையிரண்டிலுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, உயர்நிலைக் குழு பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள முடிவுகள் குறித்த அறிக்கை பகுதி 4ல் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு கூடுதல் ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்பு என்ற தலைப்பில் மாவட்ட ஊராட்சிகள் என்ற குறுந்தலைப்பில் "4ல் கதர் கிராமம் மற்றும் குடிசைத் தொழில் வாரியம்" வரிசை எண்.646 முதல் 654 வரையிலுள்ள முடிவுகள் குறித்து இணைப்பில் உள்ளவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

**அரசு செயலாளருக்காக**

## இணைப்பு :

### 4. கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில் வாரியம்

646. கதர் மேம்பாட்டிற்கான புதிய திட்டம் பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்

647. கதர் நெசவுக்கான தறிகளை நவீனப்படுத்தும் திட்டங்கள் பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.

648. தேனீ வளர்க்கும் பெட்டிகளை ஆதிதிராவிட பழங்குடியினருக்கு வழங்குதல் (மாநிலத் திட்டம்) பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.

649. கதர் பட்டு நெசவாளர்களுக்கு ஜகார்டு பெட்டி வழங்குவதற்கான திட்டங்கள் (மாநிலத் திட்டம்) பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.

650. நூற்புக் கதிர் கொண்ட கைராட்டைகளில் கதர் நூற்புக்கான திட்டங்கள் (மாநிலத் திட்டம்) பற்றி கதர் தொழில் வாரியம் உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.

651. பதநீர் எடுக்கப் பனைமரம் ஏறுவதற்கான கருவி வழங்கும் திட்டம் (மாநிலத் திட்டம்) பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.

652. படிப்புதவிக் கருவிகளை இலவசமாக வழங்கும் திட்டம் பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.

653. கதர் பட்டு நெசவாளர்களுக்கு வடிவமைப்பு அட்டைகளையும் பிற உபகரணங்களையும் வழங்குவதற்கான திட்டம் (மாநிலத் திட்டம்) பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.

654. நீலகிரியில் தேனீ வளர்ப்பு கிராமத் தொழில் மேம்பாட்டுத் திட்டம் (மைய அரசு ஏற்று நடத்தும் திட்டம்) பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.

**ஜெயந்தி**
அரசு செயலாளர்

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் - உயர்மட்டக்குழுவின் அறிக்கை - கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் பகிர்ந்தளிப்பது -ஆணை – வெளியிடப்படுகிறது.

**சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை**

**அரசாணை ( நிலை ) எண் : 110** நாள் : 04.06.1999

படிக்கப்பட்டன : 49731

1. அரசாணை ( நிலை ) எண் 2, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் : 05.01.1998.
2. ஊரக வளர்ச்சி செயலாளரின் நே.முக. எண் 14532 / சி4 / 99 நாள் : 11.05.1999.

XXXXXX

**ஆணை :-**

மாநில திட்டக்குழு , பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயலாக்கம், ஆய்வு ஆகியவை தொடர்பான அதிகாரங்களை, உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதற்கான அறிக்கை அரசுக்கு அனுப்பியதைத் தொடர்ந்து, சமூக நலத் துறை சம்மந்தப்பட்ட திட்டப் பணிகளில் சிலவற்றை ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒப்படைத்து, பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வழங்கப்பட்டது.

2. தற்போது, பார்வை 2 –ல் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை செயலாளர், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்த உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள முடிவுகள் குறித்த அறிக்கையினை அனுப்பி, தேவையான தொடர் நடவடிக்கை மேற்கொண்டு ஆணையிட கேட்டுக்கொண்டுள்ளார்.

3. அதன்படி, இத்துறை சார்பான பரிந்துரைகள், அதாவது “ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு ” மற்றும் “ உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் நலன் உள்ளடங்கலாக சமூக நலன்” மீதான உயர் மட்டக் குழுவின் பரிந்துரைகளின் மீது இவ்வாணையின் இணைப்பு – 1–ல் கண்டவாறு கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளித்தும், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு “ ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை ” பற்றிய கூடுதல் பொறுப்புகளை இணைப்பு 2 ல் குறிப்பிட்டவாறு அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

**( ஒம் . ) ................**

அரசு செயலாளர்

# இணைப்பு -1

## 1. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

### கிராம ஊராட்சிகள்.

1. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு பொதுவாக ஏற்படும் சோகை, நுண்ணுயிர் ஊட்டச் சத்து குறைவு, முன் கழுத்து கழலை போன்ற ஊட்டச் சத்து குறைபாடுள்ளவர்களை கண்டறிந்து சமூக நலத்துறைப் பணியாளர்களுக்கு தெரிவிக்கலாம்.

2. சுயதொழில் தொடங்க முன்வரும் தகுதி வாய்ந்த பெண்களை தேர்தெடுக்கவும் அவர்கள் பயிற்சி பெறுவதற்கும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உதவுதல்.

3. சமூக நலத்துறையின் திட்டங்களை அமுலாக்குவதற்காக, மகளிர் குழுக்களையும் திட்டப் பணியளாளர்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதை மேற்பார்வையிடல்.

4. கிராமங்களில் வாழும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கைத்தரம், மேம்படுத்த கடைபிடிக்க வேண்டிய சுகாதாரம் மற்றும் நல்ல உணவு பழக்க வழங்கங்கள் தாய்ப்பால் இது தொடர்பாக அரசின் - திட்டங்கள் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், தகவல்களை பரப்புதல்.

5. பின்வரும் தேவையான ஒருங்கிணைப்பு உதவிகளை கிராம ஊராட்சிகள் சம்பந்தப்பட்ட சமூக நலத்துறை பணியாளர்களுக்கு செய்யலாம்:-

   (அ) அரசின் ஆதரவுடன் நடைபெறும் மையங்களைப் பார்வையிட்டு குறைகளை சுட்டிக்காட்டி அவைகளை களைந்திட உதவுதல்

   (ஆ) சத்துணவுத் திட்ட மையங்களுக்கு தேவையான காய்கறிகள், இதர பொருட்களை சத்துணவு அமைப்பாளர்கள் பெறும் பொருட்டு உள்ளூரில் ஆதரவினை திரட்டி ஊக்குவித்தல்.

   (இ) குழந்தைகள் வளர்ச்சி கண்காணிப்பு, பிரசவத்திற்கு முந்தைய, பிந்தைய மருத்து வசதிகள், எடை குறைவாக பிறந்த குழந்தைகளின் உடல் நலம், பாதுகாப்பு, ஆகியவற்றில் பணியாற்றும் சமூக நலப் பணியாளர்களுக்கு கிராம ஊராட்சியின் பெண் பிரதிநிதிகள் உதவுதல்.

   (ஈ) தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்துவதில் திட்டப் பணியாளர்களுக்கு உதவுதல்.

6. பொதுவான மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் குழந்தைகள், பெண்கள் சார்ந்த புள்ளி விவரங்களை திரட்டுவதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் உதவுதல்.

7. குழந்தைகள் நல மையங்கள் இதர சத்துணவு மையங்கள் கட்டுவதற்கான மனைகளைத் தேர்ந்தெடுப்பதில் உதவுதல், கவனமும், மருத்துவப் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளை கணக்கெடுப்பின் மூலம் கண்டறிய உதவுதல்.

8. குழந்தை தொழிலாளர்களை இனம் காணுதல், மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களில் ஈடுபடச் செய்ய சமூக நலத்துறை பணியாளர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருத்தல்.

9. பெண்கள் மத்தியில் சுய உதவிக் குழுக்களை அமைத்து சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த உதவுதல்.

10. ஊராட்சி ஒன்றிய பகுதியில் ஊட்டச்சத்து குறைபாடுகளுடன் கூடிய குழந்தைகள் மற்றும் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோரின் நலம் கருதி செயல்படுத்தப்படும் அரசுத் திட்டங்களில் பயன் பெறும் பொருட்டு தகுதி வாய்ந்த பயனாளிகளைக் கண்டறிய உதவுதல்.

11. கிராம ஊராட்சிகளில் உள்ள மதிய உணவு மையங்கள் செயல்படுவதை மேற்பார்வையிடுதல்.

12. ஊட்டச்சத்து சார்ந்த திட்டங்களின் செயல்பாட்டிற்கான புள்ளி விவரங்களை அனைத்து ஊராட்சிகளிடமிருந்து பெற்று அதன் அடிப்படையில் மதிப்பீடு அறிக்கைகள் தயார் செய்து மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்புதல்.

13. கிராம ஊராட்சிகளில் செயல்படும் குழந்தைகள் காப்பகம், முன்பருவக் கல்வி நடவடிக்கைகள் மற்றும் மையங்களில் உள்ள குழந்தைகளின் பின்கல்வி நடவடிக்கைகளுக்கு ஒன்றியங்கள் உதவுதல்.

14. குழந்தைகளுக்கான நல மைங்களுக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கு தேவையான தொழில் நுட்ப வசதிகள், குடிநீர் வசதி, விளையாட்டுப் பொருட்கள் போன்ற வசதிகள் இம்மையங்கள் பெறுவதற்கும் ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு உதவுதல்.

15. ஊட்டச்சத்து மற்றும் நலவாழ்வு கல்வி குறித்த விவரங்களை மற்றும் விழிப்புணர்வினை செய்திகளாகவும், மக்கள் தொடர்பு சாதனங்களை பயன்படுத்தியும் மற்றும் நாட்டுப்புறக் கலைகளை உபயோகித்தும் பாடல்கள், சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள் தயாரித்து வழங்குவதில் ஊராட்சிகளுக்கு உதவுதல்.

16. குழந்தைகளுக்கான உடல்நலம் மற்றும் கல்வி குறித்த திட்ட செயல்பாட்டினை மதிப்பீடு செய்ய, மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவனங்களை ஈடுபடுத்த உதவுதல்.

17. குழந்தைத் தொழிலாளர்கள் சார்ந்த புள்ளி விவரங்கள் கிராம ஊராட்சிகளிடமிருந்து பெற்று தொகுத்து, மாவட்ட ஊராட்சிக்கு வழங்குவதில் உதவுதல்.

18. குழந்தைகள் காப்பகங்கள், பகல் நேர கவனிப்பு மையங்கள் நடத்துதல், அனாதை விடுதிகள் பராமரித்தல், கைவிடப்பட்ட குழந்தைகளுக்கான மையங்களை அமைத்தல் மற்றும் பராமரித்தல் போன்ற நடவடிக்கைகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும், சமூக நலத்துறை அலுவலர்களுக்கும் உதவுதல்.

19. மகளிர் நலத்திட்டங்களுக்குரிய தகவல்களைப் பொதுமக்களிடம் பரப்புவதற்கு கிராம ஊராட்சிக்கு உதவுதல்.

20. பெண்களுக்கு சுயவேலைவாய்ப்பு பெறும் பொருட்டு, தேவைப்படும் தொழில் நுட்ப பயிற்சி, தொழில் துவங்க நிதி ஆதாரம் ஆகியவற்றை பெறவும் தகுந்த வேலை வாய்ப்பு வசதிகளை கண்டறிவதிலும் கிராம ஊராட்சிகளும் அரசு சாரா அமைப்புகளும் ஈடுபட உதவலாம்.

21. வரதட்சிணைக் கொடுமைகள், பாலியல் பாகுபாடுகள், பெண்களுக்கெதிரான கொடுமைகள் போன்றவற்றை சமுதாயத்திலிருந்து களைய அரசும், அரசு சாரா நிறுவனங்களும் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

22. கிராம ஆலோசனை மையங்கள் அமைத்து நடத்துவதில் கிராம ஊராட்சிகளுக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் தேவையான அறிவுரைகளையும் உதவிகளையும் வழங்குதல்.

## மாவட்ட ஊராட்சிகள்.

23. ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பெறப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம் சார்ந்த புள்ளி விவரங்களை கொண்டு, மகளிர் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை, குழந்தைகளின் சமூக நிலை, பெண்களின் சமூக பொருளாதார நிலை ஆகியவற்றை மாவட்ட அளவில் தயாரித்து, அவற்றை பிற மாவட்ட அறிக்கைகள், தமிழ்நாடு மாநில அறிக்கைகள் மற்றும் பிற மாநில அறிக்கைகளுடன் ஒப்பிட்டு கருத்துரைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கி திட்டமிடுவதற்கு பயன்படுத்துதல்.

24. மாவட்டங்களில் அமைந்துள்ள பெண்கள் வழிகாட்டி நிலையங்கள் செயல்படுவதை மேற்பார்வையிடல்.

25. மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மேம்பாட்டுத் திட்டங்களின் செயல்பாட்டினை மேற்பார்வையிட்டு அறிவுரைகள் வழங்குதல்.

26. ஊட்டச்சத்து சார்பான பணிகள் குறித்து ஊராட்சி ஒன்றியத்தில் செயல்பாடுகளையும் கிராம ஊராட்சியின் செயல்களையும் மேற்பார்வையிட்டு அறிவுரைகள் வழங்குதல்.

27. குடும்ப நலவாழ்வு கல்வித் திட்டம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி தகவல்களை பரப்புவதற்கும் கல்வி, குடிநீர், ஊரக வளர்ச்சி போன்ற திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துவதிலும் ஊராட்சி ஒன்றியங்களின் நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டு சேவைகளை ஒருங்கிணைத்தல்.

28. குழந்தை தொழிலாளர்கள், பெண் சிசுக்கொலை ஆகிய சமூகக் கொடுமைகள் மீதான விவரங்களை ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து திரட்டி, அதனை களைந்திடும் நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

29. பெண்களின் வருமானத்தை உயர்த்தும் பொருட்டு செயல்படுத்தப்படும் சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள் மற்றும் தொழில் துவங்க தேவையான கடன் வசதிகளைப் பெறுவதில் உள்ள இடர்பாடுகளை அகற்றிட உதவுதல்.

30. உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் நலன் உள்ளடங்கலாக சமூக நலன்.

## கிராம ஊராட்சிகள்

1. கிராமப்புறங்களில் உள்ள உடல் ஊனமுற்றோர் எண்ணிக்கை மற்றும் விவரங்களைத் தயாரித்து கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுப்புதல்.
2. உடல் ஊனமுறுவதற்கான காரணங்களை மக்களிடையே பரப்பி விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
3. உடல் ஊனங்கள் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு தக்க நடவடிக்கைகளை எடுத்தல், அபாயமிக்க விபத்துக்களை கண்டறிந்து அவற்றை குறைக்க வழி காணுதல்.
4. அரசு சார்பற்ற தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களை அணுகி அவர்களின் உதவி பெற்று உடல் ஊனமுற்றோர் நலனை பாதுகாக்கவும் மற்றும் இவை சார்ந்த திட்டங்களை செயல் படுத்த உதவுதல்.
5. பதினாறு வயதுக்கு மேற்பட்ட எழுத்தறிவற்ற உடல் ஊனமுற்றோருக்கான முறை சாராக் கல்வி மற்றும் இதர எழுத்தறிவுத் திட்டங்களின் மூலம் அவர்களுக்கு எழுத்தறிவு புகட்ட கிராம அளவில் தக்க நடவடிக்கை எடுத்தல்.
6. கிராமங்களில் உள்ள தனியார் தொண்டு நிறுவனங்களில் உள்ள படித்தோரின் மனித ஆற்றலைப் பயன்படுத்தி உடல் ஊனமுற்ற கல்வியறிவற்ற குழந்தைகளுக்கு கல்வி அறிவு தர உதவுதல்.

7. உடல் ஊனமுற்றோரில் குறிப்பாக காது கேளாதோர், மனநலம் குன்றியவர்கள் மற்றும் இசிப்பு நோய்க்கு ஆட்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளிகளையும், இவர்கள் நலம் பேண தேவையான நிறுவனங்களையும் அமைக்க அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருத்தல்.

8. கிராமபுறங்களில் உடல் ஊனமுற்றவர்க்கு துணைக்கருவிகள் ( காது கேட்கும் கருவி, செயற்கை கை, செயற்கை கால், ஊன்று கோல்கள், மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி ) ஆகியவை வழங்குவதற்கு தகுதி வாய்ந்த பயனாளிகளை கண்டறிய சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உதவுதல்.

9. ஆதரவற்ற முதியோர்கள் உதவித் தொகை பெறும் பொருட்டு செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உதவுதல்.

10. குடிப்பழக்கம் என்பது சமுதாயத்தில் புரையோடிப் போய் உள்ளது. இது குடிப்பழக்கத்திற்கு அடிமையான தனிநபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களை நேரிடையாகவும் மேலும் சமுதாயத்தையும் பாதிக்கின்றது. பொதுவாக இப்பழக்கத்தின் விளைவால் துன்புறுவோர் பெண்களேயாவர். இத்தகைய தீய பழக்கத்தினை ஒழிக்க இதன் தீமைகள் குறித்தும், விளைவுகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டத்திற்கு தகுதி வாய்ந்த பெண் பயனாளிகளை ஊராட்சிகள், கண்டறிந்து சம்பந்தப்பட்ட சமூக நலத்துறை அலுவலர்களுக்கு பரிந்துரை செய்தல்.

11. உடல் ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோரை ஊக்கப்படுத்துவதற்காக கிராம ஊராட்சிகள் அவர்களுக்கென சிறப்பு விளையாட்டு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவைகள் நடத்தி பரிசுகள் வழங்க நடவடிக்கை எடுக்கலாம். மேலும் இதற்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் உதவியை கிராம ஊராட்சிகள் பெறுதல்.

12. போதை மருந்து மற்றும் இதர பொருட்களை தவறாக பயன்படுத்துவதால் விளையும் சமுதாயக் கொடுமைகள் ஆகியவற்றை பொதுமக்கள் குறிப்பாக மாணவர்கள், புரிந்து கொள்ளும் வகையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன், சிறப்பு பயிற்சிகள் நடத்த கிராம ஊராட்சிகள் ஏற்பாடு செய்தல்.

13. கிராம ஊராட்சிகள் அந்தந்தப் பகுதிகளில் சேகரிக்கும் நலிவுற்றோர் சார்ந்த புள்ளி விவரங்களை சேகரித்து சேகரிக்கப்பட்ட விபரங்களை திட்டங்களின் செயல்பாட்டிற்கு உதவும் வகையில் மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்புதல்.

14. அந்தந்தப் பகுதி ஊராட்சிகளில் அரசினால் செயல்படுத்தப்படும் மறு வாழ்வு, ஊட்டச்சத்து மற்றும் உடல் ஊனமுற்றோர் நலத் திட்டங்களின் செயல்பாட்டில் சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் கிராம ஊராட்சிகளுக்கும் உதவி காப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல்

15. உடல் ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோர்க்காக ஏற்படுத்தப்படும் சிறப்பு பள்ளி அமைப்பதில் முறைச்சாரக் கல்வி, தொழில் சார்ந்த பயிற்சி அடிப்படை ஆதார வசதிகள் அமைப்பதிலும், உடல் ஊனமுற்றோர் மனவளர்ச்சி குன்றியோர் ஆகியோருக்கு நல வாழ்வு மற்றும் மறுவாழ்வு அளிக்கும் நடவடிக்கையில் தேவையான காது கேட்டும் கருவிகள், செயற்கை கைகள், கால்கள் இன்னும் பிற துணைக் கருவிகள் அளிக்கவும் உதவுதல், உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநலம் குன்றியோர்களின் நலம் குறித்து செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயல்பாட்டில் ஏற்படும் இடர்பாடுகளை களைந்திடும் நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

16. சமூக நலத்துறையின் மறுவாழ்வு மற்றும் சாலையோர குழந்தைகளின் நலன் கருதி செயல்படுத்தப்படும் திட்டத்திற்கு, தேவையான புள்ளி விவரங்களை கிராம ஊராட்சிகளிடமிருந்து பெற்று, ஊராட்சி ஒன்றிய அளவில் பதிவேடுகளில் பதிந்து அதனை பராமரித்து, பராமரிக்கப்பட்ட புள்ளி விவரங்களை மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்பி நடவடிக்கைகள் எடுத்தல்.

17. முதியோர் புள்ளி விவரங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிடம் பெற்று ஊராட்சி ஒன்றிய அளவில் உள்ள பதிவேடுகளில் பதிந்து பராமரித்து, புள்ளி விவரங்களை ஒருங்கிணைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்பி நடவடிக்கைகள் எடுத்தல்

18. கிராம ஊராட்சிகள் தங்கள் பகுதிகளில் மேற்கொள்ளும், முதியோர் முக்கியத்துவம், போதை மருந்து பழக்க ஒழிப்பு, ஊனமுற்றோர் மறுவாழ்வு ஆகியவை சார்ந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு ஊராட்சி ஒன்றியம் உதவுதல்.

19. உடல் ஊனமுற்றோர்க்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு வேலைவாய்ப்பு வசதிகள் அரசினால் அளிக்கப்படுகின்றன. மேலும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஆதரவைத் திரட்டி, தொழில் பயிற்சி, வேலைவாய்ப்பு நிறுவனங்களின் பதிவு, சுயமாக வேலை வாய்ப்பு பெற தேவையான கடன் வசதிகள் பெற உதவுதல், 1995- ஆம் ஆண்டு சட்டத்தின்படி ( சம வாய்ப்புகள் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் பங்கு பெறுதல்) உடல் ஊனமுற்றோர்குறிய நலன் சார்ந்த திட்டங்களை நிறைவேற்றுவதில் சம்பந்தப்பட்ட மறுவாழ்வுத் துறை அலுவலர்களுக்கு உதவுதல்.

20. சாலையோர குழந்தைகளின் மேம்பாட்டிற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளும் பல நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

21. முதியவர்கள் அரசினால் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒய்வூதியம் பெற கிராம ஊராட்சிகள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் உதவுதல்

22. போதை பழக்கம் மற்றும் இதனால் ஏற்படும் சமுதாய தீமைகளின் பால் கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளும் விழிப்புணர்வு நடவடிக்கைக்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களும் மேலும் கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளும் போதை மருந்து, பழகி விடுவிக்கும் பணிகள், போதை பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்களுக்கு பாடம் புகட்டுவதற்குரிய, சமுதாயப் பணியாளர்களுக்குப் பணிபுரிய கிராம ஊராட்சிகளுக்கு உதவுதல். மேலும், கிராமப்புறங்களில்உள்ள குடிப்பழக்கத்தினல் பெரிதும் பாதிக்கப்படும் பெண்கள், உதவ முன் வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குக் குடிப்பழக்கத்தினை ஒழிக்க ஊராட்சி ஒன்றியம் உதவுதல்.

23. குழந்தைகளுக்கு கல்வி புகட்டுதல், அவர்கள் குற்றங்கள் புரிவதிலிருந்து தடுத்தல், ஆகியவற்றிற்கு ஒட்டு மொத்த சமுதாயம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஆதரவினை பெற்று உதவுதல்.

24. குற்றங்கள் இழைத்து தண்டனைக் காலம் முடிவுற்ற நிலையில் வெளி வந்தவர்களை சமுதாயத்தின் ஓர் அங்கமாக பொதுமக்கள் அங்கிகரித்து நடத்த தேவையான விழிப்புணர்வினை உருவாக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கும் கிராம ஊராட்சிகளுக்கும் உதவுதல்.

25. இளங் குற்றவாளிகள் மற்றும் நலிவடைந்தோர்க்காக நடத்தப்படும் கூர்நோக்கு இல்லங்கள் / மறுவாழ்வு இல்லங்கள், விழிப்பு பணி இல்லங்கள், பாதுகாப்பு இல்லங்கள் பிற்காப்பு நிறுவனங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு அவைகள் திறம்பட செயல்பட உதவுதல், இளம் சிறார்கள் மற்றும்

சமுதாயத்தில் வழி தவறிய பெண்கள் மறு வாழ்விற்கென செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயல்பாட்டில் உள்ள இடையூறுகள் மற்றும் குறைகளை களைய சம்பந்தப்பட்ட சமூக நலத்துறை பணியாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு உதவுதல்.

**மாவட்ட ஊராட்சிகள்.**

26. ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பெறப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு, பதிவுகள் செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு புள்ளி விபரங்கள், உடல் ஊனமுற்றோர் விவரங்கள், குழந்தை தொழிலாளர்கள், சாலையோர குழந்தைகள், மாவட்டத்தில் உள்ள முதியோர், பிச்சைக்காரர்கள் மற்றம் போதை பழக்க விளைவுகளால் பாதிக்கப்பட்டவர்கள், சமுதாயத்தில் வழி தவறிய பெண்கள் ஆகியோர் சார்ந்த விபரங்களடங்கிய பட்டியல்களின் அடிப்படையில் அறிக்கைகள் தயாரித்து அதனை திட்ட மேம்பாட்டிற்காக பயன்படுத்துதல்.

27. மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் சமூகநலன் சார்ந்த திட்டங்கள் மறு வாழ்வு மற்றும் சமூக பாதுகாப்பிற்கான திட்டங்களை மாவட்ட ஊராட்சிகள் தேர்ந்டுெக்கப்பட்ட பெண் பிரதிநிதிகளுடன் மேற்பார்வையிட்டு திட்டங்கள் திறம்பட செய்ய இயலாமல் தடுக்கும் தடைகளை களைய,, துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள உதவுதல்.

28. முதியோர்களுக்கு அரசு வழங்கும் ஓய்வூதியம் இலவச வேட்டி மற்றும் சேலைகள் முறையாக உரிய காலத்தில் வழங்கப்படுகின்றனவா என்பதனை பயனாளிகளிடமிருந்து கேட்டு தெரிந்து கொண்டு குறைபாடுகள் இருப்பின் அவற்றை களைய உதவுதல்.

29. போதை மருந்துகளை உட்கொள்ள தூண்டுவோரையும் போதை மருந்துகள் வியாபாரம் செய்வோரை அறவே ஒழிக்க சட்டபூர்வமான நடவடிக்கையை காவல் துறையின் துணை கொண்டு நடவடிக்கைகள் எடுத்தல்.

30. சமுதாய அளவில் உடல் ஊனமுறுவதற்கான ‘முக்கிய காரணங்களையும்’ மன வளர்ச்சி குன்றியோரை சமுதாயத்தில் ஓர் அங்கமாக நடத்துவதற்கும் தேவையான விழிப்புணர்ச்சிகளை பொதுமக்களுக்கு அளிக்க செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு உதவுதல்.

31. ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பெறப்படும் மறுவாழ்வு, குழந்தை தொழிலாளர்கள் மற்றம் சாலையோர குழந்தைகள் குறித்து புள்ளி விபரங்களை கொண்டு ஆராய்ச்சி மேற்கொண்டு திட்ட மேம்பாட்டிற்கு உதவுதல்.

32. மாவட்ட ஊராட்சிகள், முதியோர் நலன் சார்ந்த திட்டங்களுக்கான கிராம ஊராட்சிகள் வாரியான புள்ளி விவரங்களை ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகப் பெற்று அவற்றை மாவட்ட அளவில் எற்படுத்தி பராமரித்தல்.

33. கல்வி நிறுவனங்களிலும், அரசு துறைகளிலும், உடல் ஊனமுற்றோர்க்கான இட ஒதுக்கீடுகள் முறையாக கடைபிடிக்கப்படுகின்றதா என்பதை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு ஆய்வு மேற்கொள்ளுதல்.

34. போதை மருந்து பழக்கம் மற்றும் இதர உயிர் போக்கும் தீய பழக்கங்களுக்கு பொது மக்கள் குறிப்பாக இளைஞர்கள் அடிமையாகாமல் இருக்க வேண்டி கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியம் எடுக்கும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

35. குடும்ப நல கலந்தாய்வு மையங்களை மாவட்டங்களில் அமைத்து கலந்துரையாடல்கள் நடத்தி இதன் மூலம் சிறு குடும்ப நெறி , சமூகப் பாதுகாப்பு போன்ற முக்கியமான அம்சங்கள் பாதுகாக்கப்பட சமூக நலத்துறைக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மாவட்ட ஊராட்சி உதவுதல், சமுதாயத்தில் உழைத்துப் பிழைக்காமல் பிச்சை எடுக்கும் பெரியவர்கள் மற்றும் சிறுவர்கள் மேல் சட்டத்தில் உள்ள சரத்துக்களின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ள காவல்துறை மற்றும் இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவுதல்.

## இணைப்பு – 2

ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு "ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை" மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள்.

**ஊராட்சி ஒன்றியங்கள்**

1. சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை

(பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு)

******

01. குழந்தைகள் நல மையங்கள் பற்றி குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
02. பள்ளி சத்துணவுமையங்கள் பற்றி வட்டார வளர்ச்சி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
03. ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மையம் பற்றி திட்ட அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
04. மகளிர் மன்றங்கள் பணி பற்றி மாவட்ட சமூக நல அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
05. குழந்தைகள் காப்பகங்கள் பற்றி மாவட்ட சமூக நல அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
06. அனாதை இல்லங்கள் பற்றி மாவட்ட சமூக நல அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

**மாவட்ட ஊராட்சி.**

01.சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை (பெண்கள் மற்றும் குழந்தைகள்)

******

07. குழந்தை நல மையங்களை பார்வையிட்டு குழந்தைகள் நல திட்ட அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
08. சமுதாய சத்துணவு மையங்களை பார்வையிட்டு மாவட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
09. சத்துணவு மையங்களை பார்வையிட்டு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) வட்டார வளர்ச்சி அலுவலர்களுடன் ஆய்வு செய்யலாம்.
10. மகளிர் மன்றங்கள் பற்றி மாவட்ட சமூகநல அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
11. குழந்தைகள் காப்பகங்கள் பற்றி மாவட்ட சமூகநல அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
12. அனாதை இல்லங்கள் பற்றி மாவட்ட சமூகநல அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

**02. சமூகநலம் மற்றும்சத்துணவு திட்டத்துறை**

(மன வளர்ச்சி குன்றியோர் மற்றும் ஊனமுற்றோர் உள்ளிட்ட சமூக பாதுகாப்பு திட்டம்)

13. சிறப்பு பள்ளிகள் பற்றி மாவட்ட மறுவாழ்வு அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஊராட்சிகள்–மூன்றடுக்கு ஊராட்சிகள்–அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல்–மாநில திட்டக்குழுவின் இரண்டாவது அறிக்கை–சமூகநலத்துறை பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்–ஆணை வெளியிடப்படுகிறது.

### சமூகநலம் (மற்றும்) சத்துணவு திட்டத்துறை

**அரசு ஆணை(நிலை) எண் 2** நாள். 05.01.1998

படிக்க:

1. தலைமை செயலாளரின் நேர்முக கடி எண்.14/சி/எஸ்.எப்.சி./94 நாள்.13.11.95
2. மாநில நிதிக்குழு தலைவரின் நேர்முக கடிதஎண்.14/சி/எஸ்எப்சி/94–18/ நாள்.24.11.95, 13.12.95 மற்றும் 07.05.96
3. மாநில திட்டக்குழு உறுப்பினர், செயலாளர் நேர்முக கடித எண்.897/எஸ்எப்.சி.எல்/யூ/97/ நாள்.01.04.97.

******

**ஆணை:-**

இந்திய அரசியலமைப்பின் 73–வது திருத்தச் சட்டத்திற்கு இணங்க உருவாக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு தேர்தல்கள் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பதவியேற்றுள்ளனர். மேற்கூறிய சட்டத்தின் பிரிவுக்கூறு 243–ஜி– மற்றும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 257–க்கு இணங்க பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களை தீட்டி செயல்படுத்தவும் மற்றும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பட்டியல் 1–ல் உள்ள இனங்களை செயல்படுத்தவும், தேவையான பொறுப்புக்களை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். ஆகவே, எந்தெந்த பொறுப்புகளை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்பது குறித்து மாநில திட்டக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே மாநில திட்டக்குழு தனது இரண்டாவது அறிக்கையில் பிறவற்றோடு சமூகநலத்துறை தொடர்பான இனங்கள் மீது அரசுக்கு அறிக்கையை அனுப்பி உள்ளது.

1. மாநில திட்டக்குழு பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களில் செயலாக்கம், மேற்பார்வை, ஆய்வு ஆகியவை தொடர்பான அதிகாரங்களை உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதற்கான அறிக்கையை அரசுக்கு அனுப்பியது. அதை அரசு கவனமாக ஆராய்ந்தது. அதில் சமூகநலத் துறை சம்பந்தப்பட்ட திட்ட பணிகளில் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒப்படைக்க வேண்டிய பணிகள் எவை எவை என்பது குறித்து பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணையிடப்படுகிறது.
2. இது குறித்து சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்கள் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**லக்ஷ்மி ப்ரானேஷ்**
அரசு செயலாளர்.

திட்டப்பணிகளை செயல்படுத்துதல் மேற்பார்வை செய்தல் மற்றும் ஆய்வு ஆகியவை தொடர்பான அதிகாரங்களை ஒப்படைத்தல்—சமூகநலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்)

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 01. | சத்துணவு மையங்களை ஏற்படுத்தி நிர்வகித்து மேற்பார்வையிடல் (மாநில திட்டம்) | பார்வையிடல் | பார்வையிடல் | மறு ஆய்வு |
| 02. | ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மேம்பாட்டு திட்டம் / துணை ஊட்டச் சத்து திட்டம் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) | பார்வையிடல் | பார்வையிடுதல் | மறு ஆய்வு |
| 03. | பள்ளிகள் ஒருங்கிணைந்த குழந்தை நல மே"பாட்டு திட்டமையங்கள் முதலியவற்றில் சத்துணவு திட்டத்தை செயல்படுத்துதல்) (மாநில திட்டம் / மத்திய பொறுப்பேற்கும் திட்டம் / வெளிநாட்டு உதவி பெறும் திட்டம். | பார்வையிடல் | பார்வையிடல் | மறு ஆய்வு |
| 04. | பால்வாடிகள் மற்றும் பாலர் பள்ளிகள் தொடங்குதல் | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 05. | ஸ்வீடன் நாட்டு உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தை நல திட்ட தொகுப்புகளில் குழந்தை நல மையங்கள் கட்டுதல் (வெளி நாட்டு உதவி பெறும் திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | –– |
| 06. | ஊட்டச்சத்து திட்டத்தை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் | உதவியளித்தல் | உதவியளித்தல் | –– |
| 07. | சிசுக் கொலையை ஒழிக்கும் திட்டம் மற்றும் கைவிடப்பட்ட பெண் குழந்தைகளை பாதுகாத்து வளர்த்தல் (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 08. | மகளிருக்கான பணி நிலையங்களையும், உற்பத்தி பிரிவுகளையும் மேற்பார்வையிடல் (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 09. | உழைக்கும் மகளிர் இல்லங்களை மேற்பார்வையிடல் (மாநில திட்டம்) | –– | –– | பார்வையிடல் |
| 10. | வாழ்க்கை தொழில் பயிற்சி, ஏழை விதவை தாயின் குழந்தைகள், ஏழை விதவையின் மகளின் திருமணத்திற்கு உதவி, அனாதை பெண்கள் ஆகியோருக்கு உதவியளித்தல் போன்ற பல்வேறு மகளிர் நல திட்டங்களை மேற்பார்வை செய்தல் (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 11. | மகளிர் மன்றம் மற்றும் அதன் பொருளாதார நடவடிக்கைகள் குறித்த திட்டம் (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 12. | பணிக்கு செல்லும் மற்றும் உடல் நலம் இல்லாத பெண்களின் குழந்தைகளுக்கான காப்பகங்களை மேற்பார்வையிடல் (மாநில திட்டம் / மத்திய பொறுப்பேற்கும் திட்டம்) | பார்வையிடல் | பார்வையிடல் | மறு ஆய்வு |
| 13. | மகளிருக்கான வழிகாட்டி அமைப்புகள் (மாநில திட்டம்) | –– | –– | –– |
| 14. | மாவட்டங்களில் உள்ள மகளிருக்கான தொண்டு இல்லங்களை மேற்பார்வையிடல் (மாநில திட்டம்) | –– | –– | மறு ஆய்வு |
| 15. | மகளிருக்கான அனைத்து நல திட்டங்கள் | உதவியளித்தல் | பார்வையிடல் | மறு ஆய்வு |
| 16. | மகளிர் தொழில் கூட்டுறவு சங்கங்களை மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) | –– | பார்வையிடல் | மறு ஆய்வு |
| 17. | அனாதை இல்லங்களின் செயற்பாட்டை மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) | –– | பார்வையிடல் | மறு ஆய்வு |
| 18. | வறுமைக்கோட்டிற்கு கீழேயுள்ள கருவுற்ற தாய்மார்களுக்கு நிதியுதவி (மாநிலத் திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 19. | வறுமை கோட்டிற்குக் கீழேயுள்ள பெண்களின் திருமணத்திற்கான நிதியுதவி (மாநிலத் திட்டம்) உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு | |
| 20. | பெண் குழந்தை நலத் திட்டத்திற்கான நிதியுதவி (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 21. | ஆதரவற்ற கைம் பெண்கள் / கைவிடப்பட்ட மகளிருக்கு தையல் இயந்திரம் வழங்குதல் (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 22. | ஏழை கைபெண்களின் மகளுக்கு திருமண முன்பணம் (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 23. | ஐ.எப்.ஏ.டி. திட்டத்தின் (IFAD) கீழ் மகளிர் மேம்பாட்டு திட்டம் (வெளி நாட்டு உதவி பெறும் திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 24. | முதியோர் இல்லங்களின் செயல்பாடு குறித்த திட்டம். | –– | பார்வையிடுதல் | மறு ஆய்வு |

லக்ஷ்மி ப்ரானேஷ்
அரசு செயலாளர்.

திட்டப்பணிகளைச் செயல்படுத்துதல் மேற்பார்வை செய்தல் மற்றும் ஆய்வு ஆகியவை தொடர்பான அதிகாரங்களை ஒப்படைத்தல் (ஊனமுற்றோர் நல திட்டம் / சமூக பாதுகாப்பு)

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 01. | பார்வையற்றாருக்கான / ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு இல்லங்களில் செயல்பாட்டை மேற்பார்வையிடல் | உதவியளித்தல் | பார்வையிடல் | மறுஆய்வு |
| 02. | உடல் ஊனமுற்றோருக்காக நடத்தப்படு" பள்ளிகள் / விடுதிகள் ஆ"யவற்றை மேற்பார்வையிடல் | உதவியளித்தல் | பார்வையிடல் | மறுஆய்வு |
| 03. | ஊனமுற்ற பள்ளி மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை | உதவியளித்தல் | பார்வையிடல் | மறுஆய்வு |
| 04. | கல்வி நிலையங்கள், அரசுத்துறைகளில் உடல் ஊனமுற்றோருக்கு இட ஒதுக்கீடு செயல்படுத்துவதை மேற்பார்வையிடல். | -- | -- | மறுஆய்வு |
| 05. | ஒருங்கிணைந்த இளம்பிள்ளை வாத ஒழிப்பு திட்டத்திற்கு நிதியுதவி | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 06. | உடல் ஊனமுற்ற / மன நலங்குன்றிய குழந்தைகளின் மறு வாழ்வுக்காக அரசு சாராத அமைப்புகளுக்கு உதவி | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 07. | உடல் ஊனமுற்றோர்க்கான (பார்வையின்படி) காது கேளாமை, வாய் பேசாமை புதிய பள்ளிகள் தொடங்குதல் | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 08. | வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்த பார்வையற்ற வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்பினை வழங்கல் (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 09. | பார்வையற்ற மாணவர்களுக்கு எழுத்தர் உதவி (மாநில திட்டம்) | -- | -- | மறு ஆய்வு |
| 10. | உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு படிப்புதவி தொகை (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 11. | தொழிற் பயிற்சி பள்ளிகளில் சீர் திருத்தப் பள்ளிகளிலிருந்து விடுபட்ட மாணவர்களுக்கு, பயிற்சி அளிப்பதற்கான உதவி | -- | -- | மறு ஆய்வு |
| 12. | சமுதாயத்திற்கு தீங்கு பயக்கும் இளங் குற்றவாளிகளைத் தடுத்து கட்டுப்படுத்தி நன்னெறிப்படுத்தும் திட்டங்கள் | -- | -- | மறு ஆய்வு |
| 13. | சீர்திருத்த இல்லங்கள், விழிப்பு பணி நிறுவனங்கள், சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகள் ஆகியவற்றின் செயல்பாடுகள். | -- | பார்வையிடல் | மறு ஆய்வு |

லக்ஷ்மி ப்ரானேஷ்

அரசு செயலாளர்.

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

வனம் – மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிப்பது குறித்த உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகள் – ஆணை – வெளியிடப்படுகிறது.

### சுற்றுப்புறம் வனம் (வனம்.6) துறை

**அரசாணை (நிலை) எண்.139** நாள் 15.6.99

1. அரசாணை (நிலை) எண்.320, ஊரக வளர்ச்சித் துறை நாள் 11.1.97.
2. அரசாணை (நிலை) எண்.100, ஊரக வளர்ச்சித் துறை நாள் 22.5.98.
3. ஊரக வளர்ச்சித் துறையின் நேர்முக கடித எண்.14532/சி4/99 நாள் 11.5.99.

**ஆணை:**

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகளுக்கு வனத்துறை மூலம் வளர்க்கப்பட்ட சகக் காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள், காடுகளின் சிறு உற்பத்திப் பொருட்கள் விறகு மற்றும் தீவனம் முதலானவைகளை மேம்படுத்த கூடுதல் அதிகாரங்கள் வழங்கலாமென பரிந்துரைகள் செய்துள்ளது. அவற்றை அரசு ஆய்வு செய்து, காப்புக்காடுகள் மற்றும் வன உயிரின உய்விடங்கள் நீங்கலாக இதே பகுதிகளில் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தலாமென அரசு முடிவு செய்து அதன்படி வனத்துறை செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறது:

### 6. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள்

### கிராம ஊராட்சிகள்

பத்தி 132 சமூகக்காடுகளையும், பண்ணைக்காடுகளையும் மேம்படுத்தவும் உயிரின வாழ்க்கையும் சுற்றுப்புறச் சூழலையும் மேம்படுத்தும் திட்டமாக சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள் பராமரிப்பு பற்றி செய்தி பரவச் செய்தல் சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகளுக்காக சமுதாய தரங்குறைந்த தரிசு நிலங்களை கண்டறிந்து, வளங்களைப் பாதுகாத்து செய்தி வெளியிடல் மற்றும் சமுதாய நிலங்களில் மரம் நடுதல் போன்ற திட்டங்களை வனத்துறையுடன் இணைந்து செய்யலாம்.

பத்தி 133 பங்கிடல் அடிப்படையில் ஆர்வமுள்ள தனியார் குழுவினருக்கு ஊராட்சிகளுக்குச் சொந்தமான நிலங்களை குத்தகைக்கு விடலாம் மற்றும் குத்தகைக் கட்டணங்களை வசூலிக்கலாம்.

பத்தி 134 சமூக மற்றும் பண்ணைக்காடுகள், மலைத் தோட்டக் கூழ்மரம், பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கட்கும் அரசுத் துறைகளுக்கும் தோட்டப் பயிர்களுக்கான விதைகளையும், செடிகளையும் இலவசமாக வழங்குதல், மூங்கில் பண்ணைகளை அமைத்தல், பழங்குடிப் பகுதிகளில் பயிர்களை வளர்த்தல், வனம் அல்லாத பழங்குடிப் பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்களை கட்டுதல், சாலைகள் அமைத்தல், மக்கள் நாற்றங்கால்களை நிறுவுதல், ஊரக வளர்ச்சித் துறையில் சமூகக் காடுகள் திட்டம், வேளாண்மைத் துறையின் தேசிய தரிசு நில

மேம்பாடு திட்டத்தின்கீழ் பண்ணைக்காடுகள் திட்டங்களில் பயனாளிகளைக் கண்டறிதல் ஆகியவற்றை வனத்துறையின் உதவியோடு செய்யலாம்.

பத்தி 135 வெளிநாட்டு உதவி மற்றும் மத்திய, மாநில உதவியுடன் வனமல்லாத தகுதிகளில் செயல்படுத்தப்படும் காடுகள் வளர்ப்பு திட்டத்தை செயல்படுத்தும் போது சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் அடங்கிய குழு அமைத்து தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்ட செயல்முறை போலவே அமுல்படுத்தலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

பத்தி 136 சமூகக் காடுகளையும் பண்ணைக்காடுகளையும் மேம்படுத்துதல். உயிரின வாழ்க்கையையும் சுற்றுப்புற சூழலையும் மேம்படச் செய்ய சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக்காடுகளை மேம்படுத்தி, அதைப் பற்றிய செய்தி வனத்துறையின் உதவியுடன் பரவச் செய்யலாம்.

பத்தி 137 சமுதாயத்தில் தரம் குறைந்த தரிசு நிலங்களைக் கண்டறிந்து அவற்றில் இத்திட்டம் மேம்படச் செய்யவும், அரசாலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையாலும், அவ்வப்போது வழங்கும் பணிகளையும் செவ்வனே செய்யலாம். தேவையான வனத்துறையின் தொழில்நுட்ப அறிவுரையைப் பெற்று இப்பணியைச் செய்யலாம்.

பத்தி 138 எரிபொருள், தீவனம் மற்றும் வீடு கட்ட பயன்படும் மரங்களைப் பற்றிக் கிராம மக்கள் அறியுமாறு செய்தி பரவச் செய்வதுடன் விற்பனைக்கும் ஏற்பாடு செய்யலாம். இப்பணியின் மூலம் மக்களை மரம் வளர்ப்பது குறித்து விழிப்புணர்வு மற்றும் மரக்கன்றுகள் விற்பனை செய்ய இயலும் மாவட்ட வாரியாக அமையவுள்ள வன விரிவாக்க மையங்களின் தொழில் நுட்ப உதவியைப் பெற்று செய்யலாம்.

பத்தி 139 தனது கட்டுப்பாட்டின் கீழ் வரும் ஊராட்சிகளுக்கும் பொதுமக்களுக்கும் நாற்றுகளையும் மரக்கன்றுகளையும் வழங்க வனத்துறையின் தொழில் நுணுக்கங்களோடு இணைந்து நாற்றங்கால்கள் அமைக்கலாம்.

பத்தி 140 தமிழ்நாடு வேளாண்மை சார்ந்த மேம்பாட்டுத் திட்ட சமூகக்காடுகள், சூழலியல் மற்றும் சுற்றுப்புறச் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வுகளை உருவாக்கலாம், மற்றும். அரிய மரவகை, ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு உதவுதல் மற்றும் ஆய்வு செய்யலாம்.

பத்தி 141 ஊராட்சி ஒன்றியங்கள், சமூக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மக்கள் நாற்றங்கால்களை நிறுவுதல் ஆகிய பணிகளை மேற்பார்வையிடலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்

142 சமூகக்காடுகள் மற்றும் பண்கைக்காடுகள் மேம்பாட்டு நடவடிக்கைகளில் மாவட்டத்தின் செயல்திறத்தை வனத்துறையுடன் இணைத்து மதிப்பிடலாம்.

143 அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மற்றும். வனத்துறைத் தலைமை அலுவலகங்கள் மூலமாக செயல்படுத்துவதற்கான தேவையான ஏற்பாடுகளையும், தயாரித்து அமுல்படுத்தலாம்..

144 நிதிகளுக்கு ஏற்பளித்து, ஒப்பளிப்பு செய்ததற்கேற்ப தீர்மானிக்கப்பட்ட சமூகக் காடுகள் திட்டங்களை தொகுத்தல் பணியை வனத்துறையின் உதவியுடன் செய்யலாம்

145 சமூக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். வனத்துறையின் உதவியுடன் திட்டமிடலாம்.

146 அனைத்து சமூக மற்றும் பண்ணைக்காடுகள் திட்டங்கள் அனைத்தையும் வேளாண்மை நிலைக்குழுவின் மூலமாக காலமுறையாக மூன்று மாதத்திற்கொருமுறையும் மற்றும் பண்ணைகளை அமைத்தல் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், ஊசியிலைக்காடுப் பயிர்கள், மரம் பயிரிடுதல், பழங்குடிப் பகுதிகளில் பயிர்களை வளர்த்தல் மற்றும் பழங்குடிப் பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்களை கட்டுதல், வனச்சாலைகளை அமைத்தல் ஆகியவற்றை வனத்துறையின் முன் அனுமதி பெற்று ஆய்வு செய்யலாம்.

147 மாவட்டத்தின் சமூக மற்றும் பண்ணைக்காடுகள் மேம்பாட்டின் இடர்பாடுகளையும், வாய்ப்பு வனங்களையும் பற்றி அரசுக்கு கருத்துரு அனுப்பலாம்.

## 7. காடுகளின் சிறு உற்பத்திப் பொருட்கள்
## கிராம ஊராட்சிகள்

148 பாதுகாக்கப்பட்ட காடுகள் வன உயிரின உய்விடங்கள், தேசியப் பூங்காக்கள் ஆகியவை தவிர மற்ற இடங்களில் சிறு வனப் பொருட்களை கிராமக் கைவினைஞர்கள் சேகரிப்பதற்கு, வனத்துறையினரை அணுகி, உரிமம் பெற்றுக் கொடுக்க கிராம ஊராட்சிகள் உதவலாம்.

149 அந்தந்தப் பகுதி வனத்துறையினரால் செயல்படுத்தப்படும். சிறுவன உற்பத்திப் பொருள் மேம்.பாட்டுத் திட்டத்திற்கான பயனாளிகளைக் கண்டறிந்தம்., வனங்கள் பற்றிய நிபுனத்துவம். பெற்ற வனத்துறையின் மூலம். வாய்ப்புகளைக் கண்டறிந்து, மேற்படி திட்டத்தை வனத்துறையின் மூலம். செயல்படுத்தலாம்..

150 மருத்துவச் செடிகள் உள்ளிட்ட சிறு வன உற்பத்திப் பொருட்களை நடவு செய்ய தகுதியான நபர்களைக் கண்டறிந்து கிராம ஊராட்சிகள் செயல்படுத்தலாம்..

## ஊராட்சி ஒன்றியங்கள்

151 வன உயிரின உய்விடங்கள், தேசியப் பூங்காக்கள் மற்றும் காப்புக்காட்டினைத் தவிர்த்து ஏனைய நிலங்களில் உராட்சி ஒன்றியங்கள், அந்தந்த ஒன்றியப் பகுதிகளில் சிறு வனப் பொருட்கள் தரும் காடுகளை ஏற்படுத்தவும், இருக்கின்ற காடுகளைப் பாதுகாத்து மேம்படுத்தவும் வழிவகைகள் செய்யலாம். சேகரிக்கப்படும் சிறு வனப் பொருட்களின் தரத்தை உயர்த்த தாமதமின்றி பதப்படுத்தவும் பதப்படுத்தப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கும் வழிவகை செய்யலாம்.

152 காப்புக்காட்டினை தவிர்த்து ஏனைய நிலங்களில் சிறு வனப் பொருட்களை சேகரிப்பவர்களுக்கு சேகரிப்பு கட்டணங்கள் குறித்த நேரத்தில் கிடைப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் உதவுதல்.

153 சிறு வனப் பொருட்கள் சேகரிக்கவும், பதப்படுத்தவும் மற்றும் விற்பனை செய்யவும் வனத்துறை மற்றும் பிற துறைகளால் (கிராமம் மற்றும் கைத்தொழில் துறை போன்றவை) செயல்படுத்தப்படும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் உதவலாம்.

154 சிறு வனப் பொருட்கள் தொடர்பான திட்டங்கள் மற்றும் திட்டம் சாராப் பணிகளை செயல்படுத்தலாம்.

155 காப்புக்காட்டினைத் தவிர்த்து சிறு வனப் பொருட்களான தேன், மரப்பட்டைகள், புளி, ஏலக்காய், மூங்கில் ஆகிய பொருட்களை முறைப்படுத்துதல் பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்பார்வையிட்டுச் செயல்படுத்தலாம்.

156 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலவாழ்வுத்துறையின் துணைத் திட்டமான சிறு வன உற்பத்திப் பொருள் மேம்பாடு மற்றும் வளர்ச்சியை செயல்படுத்த ஊராட்சி ஒன்றியங்கள் உதவலாம். மேலும், அத்திட்டங்களை மேற்பார்வையிடலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்

157 மாவட்ட ஊராட்சி அமைப்புகள், சிறு வனப் பொருட்களை உற்பத்தி செய்தல், சேகரித்தல், பதப்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள அமைப்பாளர்கள் பயன்படுத்துவோர் மற்றும் அலுவலர்களின் ஆண்டு மாநாட்டைக் கூட்டி நடைமுறையிலுள்ள செயல்பாடுகளின் திறனை மேம்படுத்தவும், பயன்படுத்துவோரின் தேவைகளை அறியவும், அரசின் மூலம் அதற்கான வழிவகைகளைக் கண்டறியவும் உதவலாம்.

158 உற்பத்தி செய்ப்பட்ட சிறு வனப்பொருட்களை கொள்முதல் செய்தல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான நிதியைத் திரட்ட கடன் தொடர்புகளுக்கு ஏற்பாடு செய்யலாம். இது தொடர்பான கருத்துக்களை கணித்து, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மீது அரசுக்கு ஆலோசனை வழங்கலாம்.

159 தேன், மரப்பட்டைகள், புளி, ஏலம், மூங்கில் போன்ற வனத்துறையின் சிறுவன உற்பத்திப் பொருட்களை முறைப்படுத்தி, திட்டமிடும் ஆய்வினையும் மற்றும் மருத்துவச் செடிகளின் உற்பத்தியை பெருக்க பரப்பளவை அதிகரிக்கும் திட்டத்தினையும் மேற்பார்வையிடலாம்.

## 12. விறகு மற்றும் தீவனம்
## கிராம ஊராட்சிகள்

221 கிராம மக்களின் தேவைக்கேற்ப எரிபொருள், மரங்கள் (விறகு), கால்நடைகளுக்குத் தேவையான தீவனப் பயிர் ஆகியவற்றை கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய நிலங்களில் வளர்க்க கால்நடை பராமரிப்பு/ வனத்துறைகளின் ஆலோசனையின்படி தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

222 தரிசு நிலங்களை தேர்வு செய்தல், தீவன மரங்கள், விறகு மரங்கள் போன்றவற்றை ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்தில் வளர்க்க ஆலோசனை வழங்கலாம்.

223 புகையில்லா அடுப்புகள் மற்றும் சூரிய அடுப்பு போன்ற மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை பொதுமக்கள் பயன்படுத்த ஊக்குவிக்கலாம். இது போன்ற எரிபொருட்களை சிக்கனமாகப் பயன்படுத்தப் பயன்படுத்தக் கூடிய கருவிகளை இனங்கண்டு அவைகளை பெருவாரியாக பொதுமக்கள் பயன்படுத்த தேவையான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தலாம்.

224 வனத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் ஊரக எரிபொருள் மற்றும் விறகு மரங்கள் பயிரிடல் போன்ற பணிகளை வனத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையுடன் இணைத்து மேற்பார்வையிடலாம்.

225 கால்நடை பராமரிப்பு இணை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்கும் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படும் தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தில் செயல்படும் தீவன மேம்பாட்டுத் திட்டத்திற்கு தேவையான தீவன மரச்செடிகள் தொட்டிச் செடிகள் வழங்குவதை மேற்பார்வையிடுதல் மற்றும் உதவிபுரிதல்.

226 ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் சாண எரிவாயு தேசிய வளர்ச்சித் திட்டம், ஊரக வளர்ச்சித் துறையின் சூளா தேசிய திட்டம் ஆகிய பணிகள் செவ்வனே நிறைவேற்றப்பட தேவையான உதவிகளை செய்து மேற்பார்வையிடலாம்.

**ஊராட்சி ஒன்றியங்கள்**

227 எரிபொருளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு அவற்றின் உற்பத்தியை பெருக்கக்கூடிய இனங்களின்பால் தனிக்கவனம் செலுத்தி ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்புக்கு உட்பட்ட நிலத்தில் எரிபொருள் உற்பத்தியை பெருக்கலாம்.

228 தீவன உற்பத்தியின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு மண்டல இணை இயக்குநர்/ உதவி இயக்குநர் ஆலோசனையின்பேரில் மரங்கள் மற்றும் மாட்டுத் தீவனம் உற்பத்தியை பெருக்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு நிலங்களை அடையாளம் கண்டு இதற்கென தனியே ஒதுக்கலாம்.

229 எரிபொருள் சிக்கனம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த மரபுசாரா அடுப்புகள் மற்றும் சூரிய சக்தி பயனால் இயங்கும் அடுப்புகளின் பயன்கள் பற்றி மக்களிடையே தனி விழிப்புணர்ச்சி ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கலாம்.

230 கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குநர் மற்றும் மண்டல இணை இயக்குநர் பனத்துறை அலுவலர்கள் உதவியுடன் தீவனத்திற்கு பயன்படும் மரங்களை இனங்கண்டு பயிரிடலாம் மற்றும் நேரிடையாக ஆய்வு மேற்கொள்ளலாம்.

231 சமூக தரிசு நிலங்களில் பயிர் செய்யும் தீவன மரங்களின் உற்பத்தியில் நேரிடையாக ஈடுபட்டு மேற்பார்வையிடலாம்.

232 ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் தேசிய எரிவாயு திட்டம் சூளா அடுப்பிற்கான தேசிய திட்டம், தீவன எரிபொருள் முன்னேற்ற திட்டங்கள் போன்றவற்றை பார்வையிட்டு உரிய ஆலோசனைகளை ஊராட்சி ஒன்றியங்கள் வழங்கலாம்.

**மாவட்ட ஊராட்சிகள்**

233 வனத்துறை செயல்படுத்தும் பல திட்டங்களில் ஊரக எரிபொருள் மற்றும் விறகு பயிரிடுதல் திட்டங்களில் மாவட்ட ஊராட்சி தனிக்கவனம் செலுத்தலாம். இத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து திட்டமிடலாம்.

234 மாவட்ட ஊராட்சி பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களில் கால்நடை தீவன மரங்களை வளர்த்து தீவன உற்பத்தியைப் பெருக்கலாம். இது போன்ற பணிகளை மாவட்ட ஊராட்சிகள் திட்டமிடலாம்.

235 கால்நடை பராமரிப்பு இயக்குநர், தலைமையில் செயல்படும் தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெரிய அளவில் கால்நடை தீவன உற்பத்தியைப் பெருக்க தேவையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

236 தீவன பயிர்கள் மற்றும் நாற்று விநியோகிக்கும் திட்டத்தினை செயல்படுத்த திட்டங்கள் தயார் செய்து, செயல்படுத்தி மேற்ரா்வை செய்யலாம். தேசிய தரிசு நில மேம்பாட்டு வாரியத்தின் நிதி உதவி பெற்று வனத்துறை தீவன மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்துகிறது. அத்துறையுடன் இணைந்து மாவட்ட ஊராட்சி இது போன்ற திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்தி மேற்பார்வை செய்யலாம்.

237 ஊரக வளர்ச்சி துறையின் மூலம் மரபுசாரா எரிசக்தியை பயன்படுத்தி சாண எரிவாயு திட்டம் மற்றும் தேசிய சூளா திட்டம், சூரிய அடுப்பு போன்றவை நிறைவேற்றப்படுகிறது. மாவட்ட ஊராட்சிகள் இது போன்ற செயல்பாட்டுக்கு திட்டம் வகுத்து செயல்பாட்டை ஆய்வு செய்யலாம்.

**2.** மேற்கண்ட அரசின் முடிவுகளை வனத்துறை அதிகாரிகள்/ அலுவலர்களுக்கும் அனைத்து கிராம ஊராட்சிகள்/ ஊராட்சி ஒன்றியங்கள்/ மாவட்ட ஊராட்சிகளுக்கும் தெரிவித்து அவற்றின்படி செயல்படுத் தக்க வகையில் அறிவுரைகள் வழங்குமாறு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்/ ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே.எஸ்.ஸ்ரீபதி**

அரசு செயலாளர்

**சுற்றுப்புறம் வனம் (வனம்.6) துறை**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை – 9.**

அரசு செயலர்

**கடித எண். 17108/வனம்.6/99.1 நாள்– 20.7.99ன் கடித நகல்**

பொருள்: வனம் – மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிப்பது குறித்து உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் – ஆணை வெளியிடப்பட்டுள்ளது – ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள் பற்றிய தொடர் ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண். 320, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 11.1.97.
2. அரசாணை (நிலை) எண். 100, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 22.5.98.
3. ஊரக வளர்ச்சித்துறையின் நேர்முக கடித எண்.14532/சி4/99, நாள் 11.5.99.
4. அரசாணை (நிலை) எண்.139, சுற்றுப்புறம் வனம் (வ.6) துறை, நாள் 15.6.99.
5. ஊரக வளர்ச்சித்துறை கடித எண். 2496/சி4/99, நாள் 29.6.99.

*****

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகளுக்கு வனத்துறை மூலம் வளர்க்கப்பட்ட சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள், காடுகளின் சிறு உற்பத்திப் பொருட்கள் விறகு மற்றும் தீவனம் முதலானவைகளை மேம்படுத்த கூடுதல் அதிகாரங்கள் வழங்கலாமென்ற பரிந்துரைகளை அரசு ஆய்வு செய்து காப்புக் காடுகள் மற்றும் வன உயிரின உய்விடங்கள் நீங்கலாக இதர பகுதிகளில் செயல்படுத்த அரசின் முடிவுகள் பார்வை நான்கில் உள்ள அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேற்கண்ட ஆணையிலுள்ள அறிவுரைகளைத் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் உள்ளாட்சிகளுக்கு ஆய்வு கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள் குறித்து கீழ்க்கண்டவாறு செயல்படுத்தலாமென அரசு முடிவு செய்து அதன்படி வனத்துறை செயல்படுமாறு அறிவுறுத்தப் பணிக்கப்பட்டுள்ளேன்.

## 1. ஊராட்சி ஒன்றியங்கள்

## 2. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள்

573. வனத்துறை செயல்படுத்தும் சமூக, தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் பற்றிய ஆய்வுக் கூட்டத்தில் வனத்துறை அலுவலர் கலந்து கொள்வார்.

574. பழங்குடி பகுதிகளில் பயிர்களை வளர்த்தல் குறித்து ஆய்வு செய்யும்போது சம்மந்தப்பட்ட வனத்துறை அலுவலரையும் கூட்டத்திற்கு அழைத்து ஆய்வு செய்யலாம்.

575. பழங்குடி பகுதிகளில் பள்ளிக் கட்டிடம், வனச்சாலை அமைத்தல் போன்ற வனத்துறை செயல்படுத்தும் திட்டங்களின் ஆய்வுக் கூட்டத்தில் வனத்துறை அலுவலர் கலந்து கொள்வார்.

576. வனத்துறை செயல்படுத்தும் மக்கள் நாற்றங்கால்களை நிறுவும் திட்டங்களில் வனத்துறை அலுவலரும் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்வார்.

577. அரசு ஒதுக்கும் காடுகளுக்கு வெளியில் உள்ள பகுதிகளில் தேன், மரப்பட்டைகள், புளி, ஏலக்காய், மூங்கில் போன்ற சிறிய வன பொருட்கள் உற்பத்தியை முறைப்படுத்த வனத்துறை செயல்படுத்தும் திட்டங்கள் பற்றிய ஆய்வுக் கூட்டத்தில் வனத்துறை அலுவலர் கலந்து கொள்வார். அரசு ஒதுக்கும் காடுகளுக்கு வெளியில் உள்ள பகுதிகளில் வனத்துறையின் சிறு வன உற்பத்திப் பொருட்கள் மேம்பாட்டுத் திட்டங்களில் ஆய்வுக் கூட்டத்தில் வனத்துறை அலுவலர் கூட்டத்தில் கலந்து கொள்வார்.

## மாவட்ட ஊராட்சி

## 13. சமூக காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள்

692. சமூக மற்றும் பண்ணைக் காடுகள் திட்டங்கள் பற்றி மாவட்ட / கோட்ட வன அலுவலருடன்ஆய்வு செய்யலாம்.

693. சம்மந்தப்பட்ட சமூக காடுகள் திட்டத்தில் வரும் மலைத்தோட்ட கூழ்மரத் திட்டம் பற்றி (சில குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு) சம்மந்தப்பட்ட மாவட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

694. வனத்துறை செயல்படுத்தும் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களுக்கும் அரசு துறைகளுக்கும் தோட்டப் பயிர்களுக்கு விதைகளையும் செடிகளையும் இலவசமாக வழங்குதல் (மாநிலத் திட்டம்) போன்ற திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

695. வனம் சாராப் பகுதிகளில் வனத்துறை செயல்படுத்தும் மூங்கில் பண்ணைகள் அமைத்தல் திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

696. சமூக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் பற்றி வேளாண்மை இணை இயக்குநர்,மாவட்ட / கோட்ட வன அலுவலர்களுடன் ஆய்வு செய்யலாம்.

697. பழங்குடியினர் பகுதிகளில் பயிர்களை வளர்த்தல் (மாநிலத் திட்டம்) பற்றி சம்மந்தப்பட்ட வன அலுவலர்களுடன் ஆய்வு செய்யலாம்.

698. வனத்துறை செயல்படுத்தும் பழங்குடியினர் பகுதிகளில் பள்ளிகளை கட்டுதல், வனச்சாலைகளை அமைத்தல் (மாநிலத் திட்டம்) திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

699. வனம் சாராப் பகுதிகளில் மக்கள் நாற்றாங்கால்களை நிறுவுதல் பற்றி கோட்ட வன அலுவலர் / மாவட்ட வன அலுவலர்களை கலந்து முடிவு செய்யலாம்.

700. வனத்துறை செயல்படுத்தும் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி அதிகாரத்தில் உள்ள சாலைகளில் நிழல் தரும் மரங்களை அமைத்து பேணுதல் திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

701. அரசு ஒதுக்கும் காடுகளுக்கு வெளியே உள்ள பகுதிகளில் வனத்துறை செயல்படுத்தும் தேன், மரப்பட்டைகள், புளி, ஏலக்காய், முங்கில் போன்ற சிறிய வனத்துறை பொருட்களை முறைப்படுத்துதல் (மாநிலத் திட்டம்) திட்டங்களில் மாவட்ட கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

702. அரசு ஒதுக்கும் காடுகளுக்கு வெளியே உள்ள பகுதிகளில் வனத்துறை செயல்படுத்தும் வனத்துறையின் சிறு வன உற்பத்தி பொருட்கள் மேம்பாட்டுத் திட்டம் (மாநிலத் திட்டம்) திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

703. பெரிய வகை பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் ஆய்வு செய்தல் இணை பதிவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வனத்துறை அலுவலர்களின் ஈடுபாடுடன் செயல்படுத்தலாம்.

704. வனத்துறை செயல்படுத்தும் வனத்துறையின் ஊரக எரிபொருள் விறகு பயிரிடும் திட்டங்களில் (மாநிலத் திட்டம்) மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

705. வனத்துறையின் தரம் தாழ்ந்த காடுகளை கால்நடை தீவனம் மற்றும் புல், எரிபொருள் பயிரிடும் திட்டங்களில் (மாநிலத் திட்டம்) மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

706. எரிபொருள் மற்றும் தீவனம் ஆகியவற்றை சமூக தரிசு நிலங்களில் குளங்களில் – பாசன பகுதிகளில் பயிரிடுதல் திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

707. தீவன சிறுதொட்டிகளையும் வேர் நாற்று முனைகளையும் வழங்குதல் திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலர் கூட்டத்தில் கலந்து கொள்வார்.

708. தேசிய தரிசு நில மேம்பாட்டு வாரியத்தால் நிதி உதவி பெறப்பட்டு வனத்துறையின் கீழான தீவன மேம்பாட்டுத் திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

709. ஊரக வளர்ச்சித்துறையின் எரிவாயு தேசிய வளர்ச்சித் திட்டம் பற்றி உதவிப் பொறியாளருடன் (கரிமவாயு) ஆய்வு செய்யலாம்.

710. ஊரக வளர்ச்சித் துறையின் புகையில்லா அடுப்பிற்கான தேசிய திட்டம் பற்றி உதவிப் பொறியாளருடன் (கரிமவாயு) ஆய்வு செய்யலாம்.

**ஒம்........**

அரசு செயலாளருக்காக.

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

சிறுதொழில் – மூன்றடுக்கு ஊராட்சிகள் பொறுப்புகளை பகிர்ந்தளித்தல் – மாநில திட்டக்குழுவின் அறிக்கை – சிறுதொழில்கள் பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

**சிறு தொழில் (எஸ்ஜடி) துறை**

**அரசு ஆணை (நிலை) எண். 66** **நாள்: 21.06.1999**

படிக்க:

அரசு நே.மு.கடித எண்.14539 /சி4 / 99 ஊரக வளர்ச்சித் துறை, நாள்.11.05.1998

* * *

**ஆணை:**

பார்வையில் கண்ட கடிதத்தில் முதல் நிலைக்குழுவின் பரிந்துரைகளில் உணவு பதப்படுத்தல் உள்ளடங்களான சிறுதொழில்கள் என்ற பொருளின் கீழ் மேலும் அதிகாரங்களை மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க இக்குழு பரிந்துரை செய்துள்ளது. அவற்றை ஆய்வு செய்து அரசு, இவ்வாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கி ஆணையிடுகின்றது.

2. இது குறித்து தேவையான மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் பணிக்கப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஓ.பி.சோசம்மா,**
அரசு செயலர்.

**பிற்சேர்க்கை**

## 8. உணவு பதப்படுத்தும் தொழில் உள்ளடங்களான சிறுதொழில்கள்

### கிராம ஊராட்சிகள்

மைய, மாநில அரசால் அறிவிக்கப்படும் திட்டங்கள் கிராமப்புறங்களில் உள்ள தொழில் தொடங்க ஆர்வமுள்ள பயனாளிகளுக்கு சென்றடைய கிராம ஊராட்சி தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் சென்றடைய கிராம ஊராட்சிகள் உதவி வேண்டும்.

### ஊராட்சி ஒன்றியங்கள்

ஒன்றியம் அளவில் தொழில்கள் ஆரம்பிக்கவும், அதற்கான வசதி வாய்ப்புகளை கண்டறியும் பணியினை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ள வேண்டும்.

### மாவட்ட ஊராட்சிகள்

மாவட்ட அளவில் தொழில் துவங்குவதற்கான ஆதாரங்களைத் தயாரித்து அதனை செயல்படுத்த தொழில் வளர்ச்சி மாநாடுகள் நடத்தும் பணியினை மாவட்ட ஊராட்சிகள் மேற்கொள்ள வேண்டும். மேலும் மாவட்ட அளவில் தொழில்கள் மற்றும் தொழிலாளர் பற்றிய நிலைக்குழுவை அமைக்கும்போது அதில் மாவட்டத் தொழில் மைய பொது மேலாளரை உறுப்பினராக சேர்க்க வேண்டும்.

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் – அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளித்தல் – உயர்நிலைக் குழு பரிந்துரைகள் – தமிழ் வளர்ச்சிப் பண்பாடு தொடர்பான இனங்கள் ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல் –ஆணை வெளியிடப்படுகின்றது.

## தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலைய (பள்) துறை

**அரசாணை (நிலை) எண். 411**

நாள் 29.6.99
திருவள்ளுவராண்டு 2030
பிரமாரி–வைகாசி–15

<u>படிக்க</u>:

ஊரக வளர்ச்சித் துறைச் செயலரின் நேர்முக கடித எண் 14532/சி4/99 நாள் 11.5.99.

*****

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு தனது அறிக்கையை அரசுக்கு 11.1.99 அன்று சமர்ப்பித்தது. உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள முடிவுகள் குறித்து அறிக்கை பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைக்கு அனுப்பப்பட்டு அத்துறை சம்பந்தப்பட்ட பரிந்துரைகள் மீது ஆணைகள் வெளியிடுமாறு ஊரக வளர்ச்சித் துறை கேட்டுக்கொண்டது. அதற்கிணங்க 'பண்பாடுகள்' என்ற தலைப்பில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களை கீழ்க்கண்டவாறு ஒப்படைப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

### கிராம ஊராட்சிகள்

1) கிராமப் புறங்களில் நடைமுறையிலுள்ள விளையாட்டுகளை அடிக்கடி நடத்துவதோடு திருவிழாக்களையும், அதோடு தொடர்புடைய பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளையும் நடத்தலாம். இதற்கு தேவையான உதவிகளை (நிதி உதவி தவிர) கலை பண்பாட்டுத் துறையிடமிருந்து பெறலாம்.

2) கிராம மக்களை அதிகம் கவரும் இசை, நாட்டுப்புறக் கலைக்குழுக்கள் மற்றும் நாடக/நடன பண்பாட்டுக் குழுக்களை ஏற்படுத்தி அவற்றை முறையாக ஒருங்கிணைத்து, கலை பண்பாட்டுத்துறை உதவியுடன் (நிதியுதவி தவிர்த்து) மக்களிடையே கல்வியறிவு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தலாம்.

3) சிறு குடும்ப கோட்பாட்டின் இன்றியமையாமை, தேசிய ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம், தீண்டாமை ஒழிப்பு போன்றவற்றின் அவசியத்தை மக்களிடம் பரப்ப தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

4) தற்போது நலிந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்களை கண்டறிந்து அரசின் நிதியுதவியை அவர்கள் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு நிதியுதவி செய்தல், விளையாட்டு வளாகங்களை நிறுவுதல், திறமையான விளையாட்டு வீரர்களை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான பயிற்சியை அளித்து உதவலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1) கிராம ஊராட்சிகள் மற்றும் உள்ளூர் கலாச்சார நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றின் உதவியுடன் கலாச்சார விழா மற்றும் விளையாட்டுப் போட்டிகளை கலை பண்பாட்டு இயக்கத்துடன் ஒருங்கிணைத்து நடத்தலாம்.

2) சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளின் உதவியுடன் உள்ளூர் திருவிழாக்களை நடத்தலாம்.

3) விளையாட்டுக்களையும், கலாச்சார நடவடிக்கைகளையும் கிராம நிலையில் அபிவிருத்தி செய்ய சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளில் உள்ள நிபுணர்களின் அறிவுரைகளுடன் விளையாட்டு வளாகங்கள், நாடக சபாக்கள் போன்ற அமைப்புகளை நிறுவலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்

1) இயல் இசை நாடக மன்றங்கள், ஓவிய பள்ளிகள், கலைக்குழுக்கள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு ஆணைக்குழு ஆகியவற்றின் உதவியுடன் மாவட்டங்களில் ஓவியம், இசை மற்றும் நாடகம் போன்ற போட்டிகள் நடத்துதல், விளையாட்டுகள், பயிற்சி முகாம்கள், கண்காட்சிகள், பந்தயங்கள், குழுப்போட்டி விளையாட்டுகள், உள்ளூர் திருவிழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யலாம்.

2) கலைஞர்கள், கைவினைஞர்கள், விளையாட்டு வீரர்கள் போன்றவர்களை சிறப்பித்து பரிசளிப்பதுடன், மாவட்ட அளவில் ஐந்தாண்டிற்கு ஒருமுறை மண்டல பண்பாட்டு மைய உதவி இயக்குநர்களின் உதவியுடன், மாவட்டத்திலுள்ள அனைத்து புராதன கலைகள் சார்ந்த சிறந்த கலைஞர்களின் முழு விவரங்களையும் தயாரித்து ஒரு பண்முக பட்டியலாக பராமரிக்கலாம்.

3) ஊரகப் பகுதிகளில் விளையாட்டுகளில் தரத்தை மேம்படுத்தும்பொருட்டு தேவையான அடிப்படை ஆதார வசதிகளை ஏற்படுத்தி தரலாம்.

4) தற்போது நலிந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்கள், அரசின் நிதியுதவியை பெறுவதற்கு அரசுக்குப் பரிந்துரை செய்யலாம்.

5) புதிய கலைப் பள்ளிகள் மற்றும் சிறந்த கலைஞர்களுக்கு ஊக்கமளித்து மேற்படி கலைகள் வளர தேவையான நடவடிக்கை எடுக்கலாம்.

6) தடகளப் போட்டிகள் மற்றும் பிரபலமான விளையாட்டுப்போட்டிகளை ஊக்கப்படுத்தும் வகையில் சிறப்பு பயிற்சிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு பரிசுகள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

2. ஊராட்சி அமைப்புகள் பண்பாடு தொடர்பான கீழ்க்கண்ட நிறுவனங்களில் கீழ்க்கண்ட அலுவலர்களுடன் இணைத்து ஆய்வு மேற்கொள்ளலாம்.

| நிறுவனம் | அலுவலர் |
|---|---|
| 1. ஜவகர் சிறுவர் மன்றம் | மண்டல பண்பாட்டு மைய உதவி இயக்குநர் |
| 2. மாவட்ட கலைக்கூடங்கள் & மன்றங்கள் | மண்டல பண்பாட்டு மைய உதவி இயக்குநர் |
| 3. மாவட்ட இசைப் பள்ளிகள் | மண்டல பண்பாட்டு மைய உதவி இயக்குநர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

**நா. ஆதிமூலம்,**
அரசு செயலாளர்.

## தமிழ்நாடு அரசு
## சுருக்கம்

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – பயிற்சிப்பிரிவு – மூன்றடுக்கு (கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள்) – ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்து உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகள் – தொழிற்பள்ளிகள் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் அமைப்பது– ஆணைகள் வெளியிடப்படுகிறது.

### தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (எஸ்.2) துறை

**அரசு ஆணை (நிலை) எண். 83** **நாள்: 18.06.1999**

கீழ் உள்ளவற்றைப் படிக்கவும்:

1. அரசு செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை–9
   நேர்முகக் கடிதம் எண்.35339 /சி4 / 99, நாள்.16.03.1999.
2. இயக்குநர், வேலை வாய்ப்பு (மற்றும்) பயிற்சித் துறை, சென்னை–9
   நேர்முகக் கடிதம் எண். திட்டம்.3 / 18262 / 99, நாள்.23.03.1999.
3. அரசு செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை–9
   நேர்முகக் கடிதம் எண்.14532 / சி4 / 99, நாள்.21.04.99, 3.5.99, 5.5.99 & 11.5.99.
4. அரசு செயலாளர், தொழிலாளர் (மற்றும்) வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9
   நேர்முகக் கடிதம் எண். 15889 / எஸ்.2 / 99–2, நாள்.07.05.1999.

**ஆணை:**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய ஊரக வளர்ச்சித் துறையின் 11.11.97ம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.320ல் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும் மற்றும் 2 பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது. அதன் பின்னர், ஊரக வளர்ச்சித் துறையின் 22.5.98 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.100–ல் மேலும் 2 உறுப்பினர்களை குழுவில் உறுப்பினர்களாகச் சேர்த்து ஆணையிடப்பட்டது. குழு தனது அறிக்கையை 11.1.1999 அன்று அரசுக்கு சமர்ப்பித்தது. குழு அறிக்கை இயல். ஐஐஐ, “ 19, தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் தொழிற்கல்வி” என்ற தலைப்பில் உள்ள பரிந்துரைகள் இத்துறை பற்றியது. இதன் மீது நடவடிக்கை எடுக்குமாறு சுட்டுகை –3ல் படிக்கப்பட்ட கடிதங்களில் ஊரக வளர்ச்சித் துறை கேட்டுக் கொண்டது.

2. உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, கீழ்க்காணுமாறு மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் ஒப்படைப்பு செய்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

3. ஊராட்சி ஒன்றியங்கள் என்ற தலைப்பில் வரிசை எண்கள்.1 மற்றும் 7ல் அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளை பொருத்தமட்டில் தனியார் ஆர்வம் இன்மையில் மத்திய அரசு நிதித் தொகுப்பு / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிதியிலிருந்து செயல்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

4. இவ்வாணை ஊரக வளர்ச்சித் துறையின் 7.6.1999–ஆம் நாளிட்ட அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 22864 / சி4 / 99–1ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அ.இராஜ்குமார்,**
அரசு செயலாளர்.

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் – உயர் நிலைக் குழுவின் அறிக்கை – குடிநீர் வசதி கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் பகிர்ந்தளிப்பது – ஆணை வெளியிடப்படுகிறது.

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (குவ) வழங்கல் துறை

**அரசாணை (நிலை) எண்.153** **நாள் 16.6.1999**

**படிக்கப்பட்டது:-**

1. ஊரக வளர்ச்சி (சி4) பிரிவின் குறிப்பு நாள் 3.9.98.
2. உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள முடிவுகள் குறித்த அறிக்கை நாள் 12.5.99.

******

**ஆணை:**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்த உயர்நிலைக் குழு குடிநீர் வசதி என்ற தலைப்பில் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட வேண்டிய அதிகாரங்கள் குறித்து பரிந்துரை செய்துள்ளது.

2. உயர்நிலைக் குழுவின் பரிந்துரையினை அரசு ஏற்று ‘குடிநீர்’ என்ற தலைப்பில் கீழ்கண்ட ஆணைகள் வெளியிடுகிறது.

### கிராம ஊராட்சிகள்

1. கிராம ஊராட்சிகளின் சொந்த நிதி மற்றும் அரசு அளிக்கும் நிதியிலிருந்து செயல்படுத்தும் சாதாரண குடிநீர்த் திட்டங்களை வகுத்து செயல்படுத்துதல்.
2. கிராமங்களில் போதிய அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதற்கு வழி வகை செய்தல்.
3. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படாத குடியிருப்புகளுக்கு தன்னிறைவுத் திட்டத்தில் குடிநீர் வழங்கும் திட்டத்தை மேற்பார்வையிடுதல்.
4. புளோரைடால் பாதிக்கப்பட்ட கிராம பகுதிகளுக்கு குடிநீர் வழங்க செயல்படுத்தப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மேற்பார்வையிடல்.
5. உப்பு நீர் மற்றும் உவர் நீரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் திட்டத்தில் செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டப் பணிகளை மேற்பார்வையிடுதல்.
6. தீவிரப்படுத்தப்பட்ட ஊரக குடிநீர் திட்டத்தின் கீழ் உப்பு நீரை நன்னிராக்கும் திட்ட செயல்பாட்டை மேற்பார்வையிடுதல்.
7. ஐந்து கிராமங்களுக்குப் பயன்தரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை பராமரிக்க கூட்டு கிராம குழு அமைத்து பராமரித்தல்.

## கிராம ஊராட்சிகள்

1. தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சிகளுக்கு தகுந்த நபர்களைக் கண்டறிய உதவுதல்.
2. தகுதிவாய்ந்த மாணவர்களை தொழிற் கல்வியின் அவசியத்தை அவர்கள் உணரும் வகையில் விளக்கக் கூட்டங்கள் நடத்துதல்.
3. தொழிற்பள்ளிகள் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் அமைப்பதற்கான இடங்களை தேர்வு செய்தல் மற்றும் அவைகள் நன்கு இயங்க உரிய சூழ்நிலைகளை ஏற்படுத்துதல்.
4. அரசு தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையம் இவற்றை நிறுவிட உதவி புரிதல்.
5. கிராம ஊராட்சிகளிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வியை பயிற்றுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளுதல்.
6. மகளிருக்கான தொழிற் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்த உரிய இடங்களைத் தேர்வு செய்தல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. ஊரக இளைஞர்களுக்கு, சாதாரண கல்வியுடன் தொழில் நுட்ப பயிற்சியளிப்பதற்கு உதவும் வகையில் தொழில் நுட்பக் கூடங்களை உருவாக்க உதவுவதுடன் அவர்கள் பயிற்சி பெறவும் ஆவண செய்தல்.
2. தொழிற் பயிற்சி நிலையங்களில் தகுதிவாய்ந்த ஊரக இளைஞர்களைச் சேர்ப்பதற்கு உதவுதல்.
3. தொழிற்துறை நிறுவனங்களில் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற மனித ஆற்றலை மேம்படுத்த தேவைப்படும் திட்டங்களை தயாரித்தல்.
4. தொழிற்பள்ளிகள் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றை நிறுவுவதற்கு ஏதுவான இடங்களை கண்டறிதல்.
5. உயர்நிலைப் பள்ளிகள் அமைந்துள்ள இடத்தில், சிறுதொழில் வளர்ச்சிக்கு இருக்கும் வாய்ப்பிற்கு ஏற்றாற்போல் தக்க தொழிற் கல்வி பிரிவுகளை கண்டறிதல்.
6. தற்போதுள்ள தொழிற் பயிற்சிப் பள்ளிகளை நவீனமயமாக்கத் தகுந்த நிபுணர்களின் உதவியுடன் திட்டமிடுதல்.
7. மகளிர் பயிற்சி பெறுவதற்கு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கான இடங்களை கண்டறிதல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. தொழிற் பயிற்சிப் பள்ளிகளை நவீனமயமாக்க தகுந்த நிபுணர்களின் உதவியுடன் திட்டமிடல்.
2. மகளிரின் வாழ்க்கைத்தரம் உயரும் வகையில் புதிய தொழிற் பயிற்சி நிலையங்களை துவங்குவதற்கு உரிய இடங்களை தேர்வு செய்தல். மேற்படி நிலையங்களை அவ்வப்போது மேற்பார்வையிட்டு அறிவுரைகள் வழங்குதல்.
3. மக்களுக்கு உபயோகமான தொழில் பள்ளிகளை துவங்கத் திட்டமிடல்.

*****

**தமிழ்நாடு அரசு**

**பொருட் சுருக்கம்**

பள்ளி கல்வி – பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி – மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் குறித்து உயர்நிலைக் குழுவில் பரிந்துரைகள் மீது அமைச்சரவை முடிவுகள் மீது ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வித் (வி2) துறை**

**அரசாணை (நிலை) எண்: 268** நாள்:27.08.1999

படிக்க:

ஊரக வளர்ச்சித்துறை நேர்முக கடித எண்:34191/சி4/98–6,

நாள் .13.7.99

.........

**ஆணை:-**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு தனது அறிக்கையை 11.1.1999 அன்று அரசுக்கு சமர்ப்பித்தது. உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து 3.5.99 மற்றும் 4.5.99 ஆகிய நாட்களில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அம்முடிவுகளின்படி பள்ளிச்சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி என்ற தலைப்பின் கீழ் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் இவ்வாணையில் இணைப்பில் கண்டவாறு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆய்வு, மேற்பார்வை, கண்காணித்தல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல் போன்ற கூடுதல் பொறுப்புகள் ஒப்படைப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

2. இவ்வாணை ஊரக வளர்ச்சித்துறையின் அ.சா.எண்:32134/சி4/99, நாள்: 12.8.99 ,இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எம்.ஏ. கௌரிசங்கர்,**

அரசு செயலாளர்.

## இணைப்பு

### கிராம ஊராட்சிகள்

1. வயது வந்தோர் கல்வி, பள்ளி சாராக் கல்வி செயல்பாட்டைக் குறித்து மேற்பார்வையிடுதல், மாணவர்களை சேர்த்தல், அதற்கான வசதிகளைச் செய்தல்.
2. முறைசாரா கல்வி இயக்ககத்தைப் பொறுத்தவரையில் பயனாளிகளைக் கண்டறிவது மையங்களைப் பேணுவது, முறைசாராக் கல்வி பரவ ஏதுவாக வாசக சாலைகள் அமைக்கலாம்.

### ஊராட்சி ஒன்றியங்கள்

1. பள்ளி சாராக் கல்வி மையம் அமைத்தல், மேற்பார்வையிடுதல் அதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
2. பள்ளி சாரா கல்வி மையங்களின் செயல்பாட்டை மேற்பார்வை செய்து ஆலோசனை வழங்கலாம்.

### மாவட்ட ஊராட்சிகள்

பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டம் முழு அளவில் கல்வி அறிவை பெறுவோருக்கு திட்டங்கள் தயாரித்தல் ஆகியவற்றை மேற்பார்வையிடுதல், அலுவலர்களை மேற்பார்வையிடுவது அரசு பொறுப்பாக இருக்கும். மாவட்ட ஊராட்சி வழங்கும் ஆலோசனைகள் முறைசாராக் கல்வி அலுவலர்களிடம் அளிக்கப்படவேண்டும்.

### ஊராட்சி ஒன்றியங்கள்

1. கிராம நல பணியாளர் மூலம் வயது வந்தோர் எழுத்தறிவு திட்டத்தை செயல்படுத்துதல் பற்றி மாவட்ட முதியோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
2. வயது வந்தோர் எழுத்தறிவு திட்டம் பற்றி மாவட்ட முதியோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
3. எழுத்தறிவு பெற்றவர்களுக்கு மேல்நிலைக் கல்வி பெறும் திட்டம் பற்றி உதவி கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
4. அறிவொளி இயக்ககம் வாயிலாக கலவி அறியாமையை முழுமையாக அகற்ற சிறப்பு திட்டம் பற்றி உதவி கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
5. பழங்குடியினர் பகுதியில் வயது வந்தோர் கல்வித் திட்டம் பற்றி மாவட்ட முதியோர் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. கிராம நலப் பணியாளர் வாயிலாக வயதுவந்தோர் எழுத்தறிவு திட்டத்தை செயல்படுத்துதல் பற்றி மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
2. வயது வந்தோர் எழுத்தறிவுத் திட்டம் பற்றி மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
3. படிப்பை இடையில் நிறுத்தியவர்களுக்கும் பள்ளிக் கல்வி தொடங்கப் பெறாதவர்களுக்கம் நலன் அடைவதற்கான பள்ளி சாரா கல்வித் திட்டம் பற்றி மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
4. எழுத்தறிவு பெற்றவர்க்கான மேல்நிலைக் கல்வி பெறும் திட்டம் பற்றி மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
5. அறிவொளி இயக்கம் வாயிலாக கல்வி அறியாமையை முழுமையாக அகற்றுவதற்கான சிறப்புத் திட்டம் பற்றி மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
6. பழங்குடியினர் பகுதியில் வயது வந்தோர் கல்வி அறிவுத் திட்டம் பற்றி மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

**எம்.ஏ. கௌரிசங்கர்**
அரசு செயலாளர்

## தமிழ்நாடு அரசு
## சுருக்கம்

தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994–ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை நிர்வகிப்பதற்காக அதிகாரங்கள், செயல்பாடு மற்றும் பொறுப்புகள் – கல்வித்துறையிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுதல் மற்றும் பொது நூலகங்கள் குறித்து அதிகாரங்கள் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வித் துறை**

**அரசாணை நிலை எண்.248** நாள்.11.6.97

படிக்கப்பட்டவை:-

தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994.

.....

**ஆணை:-**

தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994 ஆனது ஏப்ரல் 1994ம் ஆண்டு இயற்றப்பட்டது. அதன்படி மூன்றடுக்கு பஞ்சாயத்து அமைப்பு முறையை தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் மூலமாக அதாவது கிராமம், இடைப்பட்ட உள்ளாட்சி அமைப்பு , மற்றும் மாவட்ட அளவில் நிறுவுவதற்காக பஞ்சாயத்துகள் குறித்த அரசியலமைப்பு (73வது திருத்தம்) சட்டம் 1992ஐ கருத்தில் கொண்டு, மக்கள் பெருமளவில் பங்கு கொள்ளும் தன்னாட்சி பெற்ற அமைப்புகள் மற்றும் கிராம வளர்ச்சி திட்டங்கள் பெருமளவில் நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றை கருத்தில் கொண்டு இயற்றப்பட்டது. தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994ல் ஆரம்பக் கல்விச் சார்ந்த பொருள், உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்து வழங்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2) மேற்படி சட்டத்தின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கல்வித்துறையிலிருந்து சில அதிகாரங்களை மாற்றம் செய்வது குறித்து ஆராயப்பட்டது. நன்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர் பின்வரும் அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்திட முடிவு செய்யப்பட்டு அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

அ) ஊராட்சி தலைவர்கள், நகராட்சி தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சித்தலைவர்கள், பள்ளிக் கூட கட்டிடம், கழிப்பறைகள் ஆகியவற்றை பழுதுபார்த்தல், பராமரிப்பு செய்தல், குடிநீர் வசதி செய்து தருதல் போன்றவற்றைக் கவனித்தும், பள்ளிகளை பார்வையிட்டு உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு அறிக்கை அனுப்பலாம்.

ஆ) அவர்கள் அறித்த அறிக்கை அடிப்படையில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள், ஊராட்சி ஒன்றிய மாதாந்திர கூட்டத்தில் கலந்து கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கைத் தர வேண்டும்.

இ) மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் எடுக்கும் நடவடிக்கையினை ஆய்வு செய்து ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்ய வேண்டும்.

ஈ) உள்ளாட்சி அமைப்புகள் படிப்பகங்கள் ( Reading Rooms) திறக்கலாம். நூலகங்களைத் திறப்பது மற்றும் பராமரிப்பு செய்வது பொது நூலகத் துறையின் பொறுப்பில் மட்டுமே இருக்கும்.

உ) மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஒருவரை மாவட்ட நூலக ஆணைக்குழு (Local Library Authority) உறுப்பினராகச் சேர்க்க தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948க்கு திருத்தம் கொண்டு வரப்படும்.

3. மேற்படி ஆணையின் அடிப்படையில் தக்க நடவடிக்கை மேற்கொண்டு சார்நிலை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிடுமாறு தொடக்கக் கல்வி இயக்குநர்/பொது நூலகத் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எம்.ஏ.கௌரிசங்கர்,**
அரசுச் செயலாளர்

## தமிழ்நாடு அரசு
## சுருக்கம்

பொது நூலகங்கள் – ஊராட்சி அமைப்புகள் – மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்க பரிந்துரைகள் செய்ய அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளி கல்வி (கே2) துறை**

**அரசாணை நிலை எண்.202** நாள் .2.7.99

படிக்கப்பட்டவை

செயலாளர், ஊரக வளர்ச்சித்துறை நேர்முகக் கடித எண்
14232/சி2/99 நாள் 11.5.99

.........

**ஆணை:-**

கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் என்ற மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு பல்வேறு துறை சார்ந்த அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை வழங்குவது குறித்து அரசுக்கு பரிந்துரைகள் செய்ய உயர்நிலைக்குழு ஒன்று வைக்கப்பட்டது. மேற்படி உயர்நிலைக்குழு பொது நூலகங்கள் தொடர்பாக சில அதிகாரங்கள் மற்றும் பொறுப்பினை மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க சில பரிந்துரைகளை செய்தது.

2. மேற்படி உயர்நிலைக்குழுவின், பொது நூலகங்கள் தொடர்பாக பரிந்துரைகளை அரசு கவனமாக பரிசீலித்தது. அதனடிப்படையில், கீழ்க்கண்ட அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளக்கு வழங்கி அரசு இதன் வழி ஆணையிடுகிறது.

**கிராம ஊராட்சிகள்**

1. கிராமப்புறங்களில் வாசக சாலைகள் (Reading Rooms) அமைப்பது கிராம ஊராட்சிகளில் பொறுப்பாக இருக்கும் அலுவலர்களின் மாறுதல், மற்ற நடவடிக்கைகளும் அரசின் பொறுப்பாக இருக்கும்

**ஊராட்சி ஒன்றியங்கள்**

2. ஊராட்சி ஒன்றியங்களை பொறுத்த வரையில் நூலகங்களின் குறைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தெரிவித்தல், நூலகங்களுக்கு நூல்கள் சேகரித்தல் , வாசகர்கள் தொகையைப் பெருக்குதல்

**மாவட்ட ஊராட்சிகள்**

3. மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல், பிற திட்டங்களடன் ஊரகப் பணிகளை ஒன்றிணைத்தல், நூலகங்களுக்கு போதுமான வசதிகள் செய்து கொடுத்தல், நிதி பெற்றுத் தருதல் (to mobilize funds from public)

(ஆளுநரின் ஆணைப்படி)

**எம்.ஏ. கௌரிசங்கர்**
அரசுச் செயலாளர்

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்


உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகளும் பொறுப்புகளும் மற்றும் அதிகாரங்களும் வழங்குதல் – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயல்பாடு குறித்து மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு – அதிகாரம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.


### மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எண் 1) துறை

**அரசாணை (நிலை) எண் 272** நாள் 07.06.99

படிக்கவும்:–

1. ஊரக வளர்ச்சித் துறை செயலர் அவர்களின் நேர்முக கடித எண் 14532/சி2/99, நாள் 11.05.1999

**ஆணை:**

1. உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குவது குறித்து அரசு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் உயர்மட்டக்குழுவை அமைத்தது. இந்த உயர்மட்டக்குழு மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குவது குறித்து விவாதித்து தனது இறுதி அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தது. இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளை அரசால் கூர்ந்து ஆராய்ந்து இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டன.

2. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையைச் சார்ந்த பரிந்துரைகளை ஆழ்ந்து பரிசீலித்து எடுத்த முடிவுகளின் அடிப்படையில் பின்வரும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

அ) கிராம ஊராட்சிகள் தங்களது பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் செயல்படுத்தும் நலப்பணிகளை மேற்பார்வையிட்டு இந்த சேவைகளின் மேம்பாடு குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கலாம். இந்த அதிகார வரம்புகள் விபரம் இணைப்பு – 1ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆ) கிராம அளவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஏற்று நடத்தும் சில குறிப்பிட்ட செயல்பாடுகள் குறித்து ஊராட்சி ஒன்றியக்குழு (பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்) தகுந்த அறிவுரைகளை அதிகாரிகளுக்கும் களப் பணியாளர்களுக்கும் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கும் வழங்கலாம். இந்த செயல்பாடுகள் மற்றும் அதிகார வரம்பு விபரம் இணைப்பு – 2ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இ) மக்களின் நல்வாழ்வு தொடர்பாக மருத்துவமனைகள் மற்றும் பிற சுகாதார நிலையங்கள் ஏற்று நடத்துவது தொடர்பான 14 வகை செயல் திட்டங்கள் குறித்து மாவட்ட ஊராட்சிகள் மேற்பார்வையிட்டு ஆலோசணைகள் வழங்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

ஈ) கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான வளர்ச்சி திட்டத்தை உருவாக்குவதற்கு இணைப்பு– 4ல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஒவ்வொரு பகுதி வளர்ச்சித் திட்டத்திற்கும் பொறுப்பேற்று உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவி புரிய வேண்டும்.

உ) ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் குடும்ப நலத்துறையைச் சார்ந்த செயல்பாடுகள் குறித்து இணைப்பு–5ல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களுடன் ஆய்வு செய்து தகுந்த ஆலோசணைகளை வழங்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

3. மேற்குறிப்பிட்ட பொறுப்புகளையும், அதிகாரங்களையும் உள்ளாட்சி அமைப்புகள் சிறப்புற செயல்படுத்தும் வகையில் சுகாதாரம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை இயக்குநரும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரும் மாவட்ட அளவிலான மற்றும் பிற களப்பணியாளர்களுக்கு விரிவான அறிவுரைகள் வழங்குமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒம்/ வ.விஸ்வநாதன்
அரசு செயலாளர்.

## இணைப்பு 1

## கிராம ஊராட்சிகள்

1. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களின் சேவைக்கான எல்லைப் பரப்பினை விரிவுபடுத்தும் பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பரிந்துரை செய்து இது குறித்து அனுப்பப்படும் நடவடிக்கைகளுக்கு உதவுதல்.
2. மாவட்ட பயிற்சிக் குழுக்கள் வாயிலாக தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த செவிலியர்கள், மருத்துவர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு சுகாதார பயிற்சியளித்து கிராம அளவில் மக்கள் பயன்பெறும் வண்ணம் உதவுதல்.
3. நாட்டு மருத்துவர்களின் சேவைகளை ஆய்ந்து அறிந்து தகுதியுடைய மருத்துவர்களின் செயல்பாட்டினை ஊக்குவித்து உதவுதல்.
4. கருவுற்ற மற்றும் கருவுறக்கூடிய பெண்களின் புள்ளி விபரங்களை பதிவு செய்து மருத்துவ சேவைகள் வழங்க மருத்துவ நலப்பணியாளர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்தல்.
5. குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள் குறித்த புள்ளி விபரங்களைத் திரட்டி, அவற்றிற்கான காரணங்களைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குத் தெரிவித்து உதவுதல்.
6. பேறுகால இறப்பு மற்றும் பிறந்த ஓராண்டிற்குள் இறக்கும் குழந்தைகளின் இறப்பிற்கான காரணங்களைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குத் தெரிவித்து மேல் நடவடிக்கைகள் எடுக்க உதவுதல்.
7. அத்தியாவாசியமாகத் தேவைப்படும் உயிர்காப்பு மருந்துகள், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும் நோயாளிகளின் தேவைக்கு இருப்பில் இருக்க மேற்பார்வையிட்டு மருந்துகள் இருப்பில் இருப்பதனை உறுதி செய்தல்.
8. கிராம பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் இதர சுகாதாரப் பணியாளர்களை அந்தந்த பொறுப்பு பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு காலமுறை அடிப்படையில் சென்றுவர ஊக்கமளிப்பதுடன், பொது மக்கள் அரசின் மருத்துவத்துறை சார்ந்த சேவைகளை முறையாகப் பயன்படுத்திக் கொள்ள தேவையான விழிப்புணர்வினை அளித்தல்.
9. ஆரம்ப மற்றும் தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகளில் உடல் நலம் குறித்து மருத்துவ அட்டை பராமரிக்கப்படுகின்றதா என்பதனை ஆய்வு செய்து, மாணவ / மாணவிகளுக்கு காலமுறையிலான மருத்துவ பரிசோதனை, வயது வந்த மாணவிகள் மற்றும் பெண்களுக்குண்டான ஊட்டச்சத்து மற்றும் உடற்கூறுகள் சார்ந்த அடிப்படை விவரங்களை தெரிவித்தல் மற்றும் மருத்துவ பரிசோதனையில் கண்டறியும் நோய்களுக்கான சிகிச்சை அளிக்கப்படுகின்றனவா என்பதையும் மேற்பார்வையிட்டு உறுதி செய்தல், பள்ளிகளில் உடல்நலம், நல்ல சத்துணவு, மக்கட்தொகை, கல்வி ஆகியவை குறித்து மாணவர்களுக்கு அடிப்படை அறிவினை புகட்ட, சம்பந்தப்பட்ட துறைகளை அணுகி, சேவைகளை ஒருங்கிணைத்தல்.
10. கிராமங்களில் செயல்படும் கிராம நலவாழ்வுக்குழு பள்ளிகளை காலமுறை அடிப்படையில் தொடர்ந்து பார்வையிடப்படுகின்றதா என்பதனை அறிந்து அக்குழுவினை ஊக்கப்படுத்துதல்.

11. நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு குறித்து செயல்பட கிராம அளவில் கிராம நலவாழ்வு குழுக்களை கிராம ஊராட்சிகள் அமைக்கலாம். இக்குழுவில் கிராம ஊராட்சித் தலைவரை குழுவின் தலைவராகவும், குழு உறுப்பினர்களாக கிராம சுகாதார செவிலியர்கள், மரபு மருத்துவ செவிலியர்கள் மற்றும் பலநோக்கு சுகாதார பணியாளர்கள் ஆகியோரை சேர்த்து சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவை ஆகியவை மக்களுக்கு கிடைக்க நேரடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

12. கிராமத்தில் ஏற்படும் நோய்கள், தொற்று நோய்கள் மற்றும் தீராத நோய்களைக் கண்டறிந்து தகுந்த மருத்துவ சேவை அளிக்க ஏதுவாக மருத்துவத்துறை பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு உதவலாம்.

13. கிராம அளவில் பொது மக்களின் நலனுக்காக சுகாதார மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்துதல்.

14. கிராம ஊராட்சிகள் உணவு கலப்படச் சட்டத்தை செயல்படுத்த அதிகாரிகள் எடுக்கும் முயற்சிகளுக்கு உதவலாம்.

15. கிராம குடிநீர் தேக்க தொட்டிகளை காலமுறையில் சுத்தம் செய்தல், கிணறுகளுக்கு குளோரின் மருந்து கலவை தெளித்தல் மற்றும் தனியார் வசமுள்ள நீர்தேக்கத் தொட்டிகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்வதை உறுதி செய்தல் மற்றும் குடிநீர் ஆதாரங்கள் மாசுபடுவதிலிருந்து காத்தல்.

## இணைப்பு – 2

### ஊராட்சி ஒன்றியங்கள்

1. கிராம அளவில் நோய் மற்றும் கொள்ளைநோய் தொடர்பாக எடுத்த நடவடிக்கைகள் மீதான விளைவுளை மதிப்பீடு செய்து சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கும், மாவட்ட ஊராட்சிக்கும் அறிக்கைகள் அனுப்பி உதவலாம்.

2. ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்தப்படும் மகப்பேறுக்கு முன் மற்றும் பின் எடுக்கப்படவேண்டிய தாய்சேய் நலம் சார்ந்த பணிகள் திறம்பட நிறைவேற்றப்பட கிராம ஊராட்சிக்கு உதவுதல்.

3. மரபு வழி மகப்பேறு செவிலியர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கும் பயிற்சிகள் நடத்துதல், கிராம அளவிலான பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் நடத்தி திறம்பட பணியாற்ற உதவுதல்.

4. வயது வந்த பள்ளி மாணவிகளுக்கு உடல் கூறுகள் குறித்த விபரங்கள் மற்றும் இதர பொருட்களின் மீதான முழு அறிவு சார்ந்த தகவல்களை தருவதற்கு களப்பணியாளர்களுக்கு உதவுதல்.

5. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் மருத்துவ மற்றும் சுகாதார சேவைகளை கண்டறிந்து அந்தந்த பகுதி கிராம ஊராட்சிகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி சேவைகளை ஒருங்கிணைக்கலாம்.

6. காலமுறைப்படி அம்மைக்குத்துதல் மற்றும் தடுப்பூசி போடுதலை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல், இதனை கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்துதல், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் ஆகியவற்றில் பணியமர்த்தப்பட்ட மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் பணியாற்றுவதை மேற்பார்வையிட்டு உறுதி செய்து குறைபாடுகள் இருப்பின் சம்பந்தப்பட்ட மேல்நிலை அலுவலரிடம் தெரிவித்தல்.

7. மைய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் உரிய முறையில் செயல்படுத்தப்பட்டு, பொது மக்கள் இத்திட்டங்களினால் பயன் பெறுகின்றனரா ? என்பதனை ஆய்ந்து அறிந்து சம்பந்தப்பட்ட மேல்நிலை அலுவலர்களுக்கும் மாவட்ட ஊராட்சிகளுக்கும் அறிக்கைகள் அனுப்பி மேல்நடவடிக்கைகள் கோரலாம்.

8. கிராம ஊராட்சிகள் அளவில் செயல்படுத்தப்படும் தாய் சேய் நலத்திட்டங்களின் அறிக்கைகள் பெற்று திட்டங்கள் திறம்பட செயல்படுத்துவற்கான அறிவுரைகளை கிராம ஊராட்சிகள் மற்றும் சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளுக்கும் தெரிவித்தல்.

9. கிராம ஊராட்சிகள் மூலம் நோய்தடுப்பு விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல்.

10. காலமுறையாக தாய் சேய் நலன் குறித்த திட்டங்கள், நோய் தடுப்பு உத்திகள் ஆகிய திட்டங்கள் குறையின்றி செயல்படுகின்றதா என்பதனை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல்.

11. ஊராட்சிகளிலிடமிருந்து பெறபட்ட பள்ளி குழந்தைகள் சார்ந்த உடல் நலத்தன்மைகள், பரவி வரும் நோய்கள் குறித்த அறிக்கைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகளின் தொகுப்புகளை ஆய்ந்து கருத்துரைகளுடன் மாவட்ட ஊராட்சிக்கு அனுப்புதல். பொதுமக்களிடையே நோய் மற்றும் கொள்ளைநோய் மற்றும் உயிர்கொல்லி நோய்க்களுக்கெதிரான தடுப்பூசிகள் மற்றும் அம்மை தடுப்பு மருந்துகள் போடப்படுவதை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல்.

12. ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம் மற்றும் இதர மருந்தகங்களுக்கு பணியமர்த்தப்பட்ட மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் முறையாக வருகை புரிந்து பணியாற்றுகின்றனரா என்பதனை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல்.

13. உணவு கலப்படத்தை தடுக்க 1954 ஆம் ஆண்டு உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின் வழிகளை செயல்படுத்துதல்.

14. துப்புரவு, வடிகால், பொது கழிப்பிடங்கள் போன்றவற்றின் கட்டுமானப்பணிக்காகவும், அவைகளை பராமரிப்பதற்காகவும், தேவையான நிதி உதவியும் தொழில்நுட்ப உதவியும் ஊராட்சிகளுக்கு அளித்தல் மற்றம் செயல்பாட்டினை மேற்பார்வையிடுதல், திடக்கழிவுகளை அகற்றுதல் பணிகளை மேற்பார்வையிடுதல்.

15. அரசு மருத்துவமனைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் மற்றும் கருவிகளின் இருப்பினை உறுதி செய்து மற்றும் கருவிகள் வழங்கலை மேற்பார்வையிடுதல்.

## இணைப்பு – 5

## மாவட்ட ஊராட்சிகள்

1. மக்களின் நலவாழ்வு தொடர்பாக செயல்படுத்தப்படவும், அனைத்து திட்டங்களையும் ஆய்ந்து அறிந்து ஆண்டு அறிக்கைகள் தயார் செய்தல். இவ்வாறு தயார் செய்யப்பட்ட அறிக்கைகளை பிற மாவட்ட அறிக்கையுடனும், மாநில அறிக்கையுடனும் ஒப்பிட்டு பார்த்து தங்கள் மாவட்டத்தின் நிலையை அறிதல்.

2. ஊராட்சி ஒன்றியப் பணிகளை மேம்படுத்துவதற்காகவும், உரிய ஆண்டு திட்டம் தயாரிப்பதற்காகவும், 4 மாதங்களுக்கொருமுறை நலவாழ்வு மற்றும் மேம்பாடு சார்ந்த அலுவலர்களின் ஆய்வுக்கூட்டங்களை நடத்தி கலந்துரையாடல்கள் மூலம் சேவைகளை மேம்படுத்த உதவுதல்.

3. நோய் மற்றும் உயிர் கொல்லி நோய்களை தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளை மாவட்ட பகுதிகளில் மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல், இவை தொடர்பாக சிறிய மற்றும் பெரிய அளவில் மதிப்பீடு அறிக்கைகளைத் தயாரித்தல் அந்த அறிக்கைகளை அரசுக்கு அனுப்பி ஆலோசனைகள் வழங்கல்.

4. அனைத்து மருத்துவமனைகளுக்கும் தேவையான மருந்து பொருட்கள் மற்றும் மருத்துவக் கருவிகள் வழங்கப்படுவதினை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல்.

5. வட்டார அளவில் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்துவதில் மாவட்ட திட்டக்குழுவிற்கும் மருத்துவ மற்றும் சுகாதாரத்துறைக்கும் உதவுதல்.

6. மனித வளத்தினை முறையாகப் பயன்படுத்தும் பொருட்டு பேணிகாக்க மாவட்ட அளவிலான மனிதவள மேம்பாடு வாழ்க்கைத் தர அட்டவணையை தயாரித்தல்.

7. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலிருந்து திரட்டப்படும் பிறப்பு மற்றும் இறப்பு எண்ணிக்கை, பேறுகாலங்களில் நடைபெறும் இறப்பு எண்ணிக்கை, இறந்து பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை, பிறந்து ஓராண்டிற்குள் (1 வயது) இறந்து போகும் குழந்தைகள் விபரம் மற்றும் இவை தொடர்பான புள்ளி விபரங்களை தொகுத்து மாவட்ட அளவில் அறிக்கைகளாக தயார் செய்து இந்த அறிக்கைகள் அரசு மாநில திட்டக்குழு, மாவட்ட திட்டக்குழு, மாவட்ட அளவிலான அலுவலர்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்து அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களை திட்டமிடுதல் தொடர்பான பணிகளுக்கு பயன்படுத்த ஏதுவாக்கலாம்.

8. ஆரம்ப மற்றும் தொடக்கப்பள்ளிகளில் செயலாக்கப்படும் மருத்துவ பரிசோதனை, மருத்துவ அட்டவணைகள், பராமரித்தல் மற்றும் இது தொடர்பான செயல்பாடுகளை மேற்பார்வையிட்டு அரசுக்கு அறிக்கைகள் அனுப்பலாம். திட்டங்கள் செவ்வனே செயல்படும் பொருட்டு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு அறிவுரைகள் வழங்கலாம்.

9. மாவட்டங்களில் செயல்படும் நலவாழ்வு மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான தகவல்களைப் பொது மக்களிடையே பரப்புதவற்கும், மேலும் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் நடத்துவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உதவலாம்.

10. மருத்துவ, சுகாதாரப்பணிகள் சார்ந்த பணியாளர்கள் தேர்வு செய்வதிலும் பதவி அமர்த்துவதிலும், ஆவன செய்தல் மேலும் அயர்பணியில் பணியமர்த்தப்படுவது மற்றும் பணிமாறுதல் செய்வது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கலாம்.

11. உணவு கலப்படத்தை தடுத்தல் குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல், மாவட்ட உணவு / பருப்பு ஆய்வு கூட்டங்களின் செயல்பாடு குறித்து ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து ஆலோசனைகள் வழங்கலாம்.

12. மாவட்ட அளவில் புராதன மருத்துவ முறைகளான சித்த மருத்துவம், ஆயூர்வேதா, யுனானி முறை மருத்துவங்களின் பலன் மற்றும் சேவைகளை மக்கள் பெறும் பொருட்டு ஊக்குவித்தல்.

13. மாவட்ட பகுதியில் இயங்கும் மருத்துவமணைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மருத்துவ நிலையங்களுக்கு மருந்துகள் சிகிச்சை கருவிகள் வழங்குவதை மேற்பார்வையிடுதல்.

14. அனைத்து மருத்துவமனை கழிவுகளை பாதுகாப்பான முறையில் ஒதுக்குப்புறமான இடங்களுக்கு வெளியேற்ற உதவுதல்.

## இணைப்பு – 5

### ஊராட்சி ஒன்றியங்கள்

1). சுகாதார துணை நிலையங்கள் பற்றி ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ அலுவலருடன் ஆய்வு செய்தல்.

2). ஆரம்ப சுகாதார நிலையங்கள் பற்றி ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ அலுவலருடன் ஆய்வு செய்தல்.

3). வட்ட மருத்துவமனை மற்றும் பிற மருத்துவமனைகள் பற்றி இணை இயக்குநர் / துணை இயக்குநர் (மருத்துவம்) ஆகியோருடன் ஆய்வு செய்தல்.

### மாவட்ட ஊராட்சி

1). சுகாதார துணை நிலையங்கள் பற்றி துணை இயக்குநர்(சுகாதாரப் பணிகள்) அவர்களுடன்ஆய்வு செய்தல்.

2). ஆரம்ப சுகாதார நிலையங்கள் பற்றி துணை இயக்குநர்(சுகாதாரப் பணிகள்) அவர்களுடன் ஆய்வு செய்தல்.

3). அரசு மருந்தகங்கள் மற்றும் நடமாடும் மருத்துவ மருந்தகம் பற்றி துணை இயக்குநர்(சுகாதாரம்) துணை இயக்குநர்(மருத்துவம்) ஆகியோருடன் ஆய்வு செய்தல்.

4). வட்டார மருத்துவமனை மற்றும் இதர மருத்துவமனைகள் பற்றி துணை இயக்குநர்(சுகாதாரம்) துணை இயக்குநர் ( மருத்துவம்) அவர்களுடன் ஆய்வு செய்தல்.

5).. மகப்பேறு நிலையங்கள் பற்றி துணை இயக்குநர்(சுகாதாரம்)துணை இயக்குநர்( மருத்துவம்) அவர்களுடன் ஆய்வு செய்தல்.

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகள் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்குதல் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயல்பாடு குறித்து மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏசி 2) துறை

**அரசாணை (நிலை) எண் 274**

நாள் 08.06..99
பிரமாதி, வைகாசி 25
திருவள்ளுவர் ஆண்டு 2030
படிக்கவும்:

ஊரக வளர்ச்சித்துறை செயலர் அவர்களின் நேர்முக கடித .எண். 14532/சி2 /99 / நாள். 11.05.1999

**ஆணை**

உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள் மற்றம் பொறுப்புகள் வழங்குவது குறித்து அரசு , மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழுவை அமைத்தது. இந்த உயர்மட்டக் குழு மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குவது குறித்து விவாதித்து தனது இறுதி அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தது. இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பரிந்துரைகள் அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டன.

(2) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையைச் சார்ந்த (குடும்ப நலம்) பரிந்துரை மீது எடுத்த முடிவுகள் அடிப்படையில் பின்வரும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

அ. கிராம ஊராட்சிகள் தங்களது பகுதியில் குடும்ப நல மேம்பாட்டிற்கென செயல்படுத்தப்படும் திட்டங்களில் ஒன்றான கருவுற்ற தாய்மார்களுக்கு மருத்துவ வசதி மற்றும் பேறு காலத்திற்கு முன்னும் பின்னும் எடுக்க வேண்டிய மருத்துவ நடவடிக்கைகள், சுகபிரசவம் ஆவதற்கு வேண்டிய அறிவுரைகள் குறித்து மருத்துவ பணியாளர்கள் தக்க பயிற்சி பெற உதவுவது. மேலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் தங்களது பகுதியில் அடிப்படை ஆதார வசதிகளை பெருக்குதல். கிராம அளவில் மகளிர் மன்றங்களையும் இதர பிற மக்கள் குழுக்களையும் அமைத்து கருவுற்றிருக்கும் பெண்கள் மற்றும் பின்னாட்களில் கருவுறவிருக்கும் பெண்களிடையே பிரசவத்திற்கு முன்னும் பின்னும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், சிறு குடும்ப நெறி, தாய்பால் போன்றவற்றின் மீது சிறப்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் குடும்ப நலனைக் காக்க தக்க அறிவுரைகள் வழங்கும் வகையில் உதவலாம். இந்த அதிகார வரம்பு விபரம் இணைப்பு 1ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆ. கிராம ஊராட்சி, ஒன்றியங்கள் தங்களது ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் கிராம அளவில் மற்றும் பல கிராம ஊராட்சிகளில் நடைபெறும் குடும்ப நலன் காக்கவும் திட்டங்களை மேற்பார்வையிடுதல் மற்றும் குடும்ப நலதிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளும் மருத்துவமனைகளுக்கு தேவையான மருத்துவக் கருவிகள் வழங்குவதற்கு குடும்ப நலத்துறையின் சம்மந்தப்பட்ட அலுவலர்களை தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கை எடுக்க உதவலாம். இந்த அதிகாரவரம்பு விவரம் இணைப்பு – 2ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இ. மாவட்ட ஊராட்சிகள் குடும்ப நலத்துறை சார்ந்த செயல்பாடுகள் குறித்து இணைப்பு 3ல் குறிப்பிட்டுள்ளவாறு தகுந்த ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கலாம் எனவும் கருத்தரங்குகள் நடத்தலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

ஈ). கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான வளர்ச்சித் திட்டத்தை உருவாக்குவதற்கு இணைப்பு 4ல் குறிப்பிட்டுள்ளவாறு சம்மந்தப்பட்ட திட்டத்திற்கும் பொறுப்பேற்று உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவி புரிய வேண்டும்.

உ). ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள், மருத்துவம் மற்றும் குடும்பநலத் துறை சார்ந்த செயல்பாடுகள் குறித்து இணைப்பு 5ல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களுடன் ஆய்வு செய்து தகுந்த ஆலோசனைகளை வழங்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

3). மேற்குறிப்பிட்ட பொறுப்புகளையும் அதிகாரங்களையும் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள்சிறப்புற செயல்படுத்தும் வகையில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநரும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை இயக்குநரும் குடும்ப நலத்துறை இயக்குநரும் மாவட்ட அளவிலான மற்றும் பிற களப்பணியாளர்களுக்கு விரிவான அறிவுரைகள் வழங்குமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**வ.விஸ்வநாதன்**
அரசு செயலாளர்.

## குடும்ப நலவாழ்வு

## இணைப்பு – 1.

## கிராம ஊராட்சிகள்

1. குடும்ப நலமேம்பாட்டிற்கென செயல்படுத்தப்படும் திட்டங்களில் ஒன்றான கருவுற்ற தாய்மார்களின் மருத்துவ வசதிகள் குறித்து சுகாதாரத் துறை பணியாளர்கள் பதிவேடுகள் பராமரிப்பதற்கு உதவுதல்.

2. கர்ப்பிணி பெண்களின் பேறு காலங்களில் முறையான மருத்துவ உதவிகள் அளிக்கும் பொருட்டு அந்தந்தப் பகுதிகளில் உள்ள தாய் சேய் நல மையங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான உதவிகளைச் செய்தல்.

3. பேறுகாலத்திற்கு முன்னும் பின்னும் எடுக்க வேண்டிய மருத்துவ நடவடிக்கைகள் சுகபிரசவம் ஆவதற்கு வேண்டிய அறிவுரைகள் மற்றும் பிறந்த குழந்தைக்கான மருத்துவ பாதுகாப்பு ஆகியவை குறித்து மருத்துவப் பணியாளர்கள் தக்க பயிற்சிகள் பெறுவதை உறுதி செய்து அவர்கள் முறையான பயிற்சி பெற உதவுவது.

4. அந்தந்த பகுதிகளில் பணியாற்றும் பல்வேறு பணி தொடர்பான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தர்ம ஸ்தாபனங்களின் ஆதரவைத் திரட்டி, கருத்தரித்திருக்கும் பெண்கள் அனைவரும் மருத்துவ வசதி பெறும் வகையில் தாய் மற்றும் குழந்தையின் நோயற்ற வாழ்விற்கான அடிப்படை ஆதார வசதிகளைப் பெருக்குதல்.

5. குழந்தைகளுக்கு தாய்பால் அளித்தல் மற்றும் நோய் தடுப்பு சக்தியை அதிகரித்தல் போன்ற பொருள்களின்பால் பெண்களிடையே போதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த மருத்துவத் துறை பணியாளர்களுக்கு உதவுதல்.

6. வைட்டமின் அ. இரும்பு மற்றும் அயோடின் சத்துக் குறைவை கட்டுப்படுத்தல், வெறிநாய் கடி தடுப்பு மற்றும் சிகிச்சை ஆகிய சேவைகளை ஒருங்கினைத்து, சேவைகள் திறம்பட வழங்கும் வகையில் உதவுதல். இது தொடர்பாக தாய்சேய் நலப் பணியாளர்களுக்காக கிராம அலுவலர்களுடனும், சிறுகுடும்ப நலத்துறையுடன் சேர்ந்த காலமுறையிலான ஆய்வுக் கூட்டங்களை நடத்தி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு உதவலாம்.

7. உயிர்க்கொல்லி நோய், பால்வினை நோய்கள் மற்றும் எஸ்ட்ஸ் நோய் குறித்து சிறப்பு விழிப்புணர்வு முகாம்களுக்கு கிராம அளவில் ஏற்பாடுகள் செய்தல்.

8. கிராம அளவில் மகளிர் மன்றங்களையும், இதர பிற மக்கள் குழுக்களையும் அமைத்து கருவுற்றிருக்கும் பெண்கள் மற்றம் பின்னாட்களில் கருவுறவிருக்கும் பெண்களுக்கும் பிரசவத்திற்கு முன்னும், பின்னும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் , சிறுகுடும்ப நெறி தாய்ப்பால் போன்றவற்றின் மீது சிறப்பான விழிப்புனர்வை ஏற்படுத்திஅவர்களின் குடும்ப நலனைக் காக்க தக்க அறிவுரைகள் வழங்கும் வகையில் உதவலாம்.

## இணைப்பு – 2

## மாவட்ட ஊராட்சிகள்

1. மாவட்ட அளவில் குடும்ப நலம் சார்ந்த திட்டப் பணிகளின் செயல்பாட்டு தகுதி அறிக்கையை தயாரித்து, அதனை பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலத்தின் அறிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்து அந்தந்த மாவட்டத்திலுள்ள அறிக்கையின் எற்றத் தாழ்வுகளின் மேல் கருத்துரைகளை மாவட்ட ஊராட்சிகள் வழங்கலாம். இதனை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட குடும்ப நலத் திட்டக் கருத்துருக்களை தயாரித்து செயல்பாட்டிற்காக அதனை மாநில குடும்ப நல இயக்குநருக்கு அனுப்பலாம்.

2. திட்டங்களின் செயல்பாட்டிலுள்ள குறைகளை பார்வையிட்டு கண்டறிந்து அவைகளை நீக்க சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் ஆதரவினைத் திரட்டி, திட்டங்கள் திறம்பட செயலாக்க வழிவகைகள் செய்யலாம்.

3. பொருளாதார வளங்களைப் பொருத்தவரை கிராம மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவிலான வளங்கள் மற்றும் ஆதாரங்களையும், துணை வரவு செலவு திட்ட வளஆதாரங்களையும், உயர்த்தும் பொருட்டு சம்மந்தப்பட்ட துறைகள் மற்றும் அந்தந்த பகுதிகளில் பணியாற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தர்ம ஸ்தாபணங்களை அணுகி தேவையான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

4. குடும்ப நலன் சார்ந்த திட்டங்களின் முறையான நடவடிக்கைகளுக்கும் செயல்படுத்தப்படும் பணிகளின் மீதான சமூக தணிக்கை முறைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் காப்பாளர்களிடமிருந்து உதவிகளைப் பெற்று ஒருங்கிணைத்தல்.

5. பேறு கால காப்பு பணிகள் குறித்து மாவட்ட அளவிலான விவரக் குறிப்பினை தயாரித்து வழங்குதல் மற்றும் தகவல்பரிமாற்ற மேலாண்மை முறையினை மேம்படுத்துதல்.

6. ஊராட்சி ஒன்றியத்தால் குடும்ப நலம் சார்ந்த திட்டப் பணிகளின் நடவடிக்கைகளின் செயல் விளைவுகளை மதிப்பீட்டு குறைகளைக் கண்டறிந்து அவற்றை களைவதற்கான வழிவகைகளை ஆய்ந்து அறிவுரைகள் வழங்குதல்.

7. அந்தந்த பகுதிகளில் தேவையான மருந்துப் பொருட்கள் இருப்பில் இருக்கவும் இருப்பில் இருக்கும் மருந்து பொருட்களைவைத்து பாதுகாக்கத் தேவையான இடவசதி, குளிர்சாதன வசதிகள் ஆகியவை ஏற்படுத்தவும் அரசுக்கு பரிந்துரைத்தல்.

8. குடும்ப நலத் திட்ட இயக்கங்களிலும் திட்டத்தின் செயல்பாட்டிலும் தனியார் மருத்துவர்களையும், மருத்துவமனைகளையும் ஒன்றிணைத்து மருத்துவச் சேவைகள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

9. குடும்ப நலத் திட்டத்தின் நடைமுறை செயல்திறனை மேம்படுத்துவதற்கு கருத்தரங்குகள், கலந்துரையாடல் நிகழ்ச்சிகள், பணிமணை கூட்டங்களையும் மாவட்ட அளவில் நடத்துதல் / நடத்துவதற்கு உதவுதல்.

## இணைப்பு – 3

### மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை

1. சுகாதார துணை நிலையங்கள் பற்றி ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
2. ஆரம்ப சுகாதார நிலையங்கள் பற்றி ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.
3. வட்ட மருத்துவமனை மற்றும் பிற மருத்துவமனைகள் பற்றி இணை இயக்குநர்/ துணை இயக்குநர் (மருத்துவம்) ஆகியோருடன் ஆய்வு செய்யலாம்.

### மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத் துறை
### (மருத்துவமனைகள், ஆரம்ப சகாதார நிலையங்கள், மருந்தகங்கள்)

1. சுகாதார துணை நிலையங்கள் பற்றி துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.
2. ஆரம்ப சுகாதார நிலையங்கள் பற்றி துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.
3. அரசு மருந்தகங்கள் மற்றும் நடமாடும் மருந்தகம் பற்றி துணை இயக்குநர் (சுகாதாரம்), துணை இயக்குநர் (மருத்துவம்) ஆகியோருடன் ஆய்வு செய்யலாம்.
4. வட்டார மருத்துவமனை மற்றும் இதர மருத்துவமனைகள் பற்றி இயக்குநர் (சுகாதாரம்), துணை இயக்குநர் (மருத்துவம்) அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.
5. மகப்பேறு நிலையங்கள் பற்றி துணை இயக்குநர் (சுகாதாரம்), துணை இயக்குநர் (மருத்துவம்) அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

பொதுப்பணித் துறை – மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்குதல் – உயர் மட்டக்குழுவின் பரிந்துரைகள் –'சிறுபாசனம்' 'நீர்மேலாண்மை' மற்றும் 'நீர்பிடிப்பு மேம்பாடு' -ஆணைகள் வெளியிடப்படுகிறது.

### பொதுப்பணி (டபிள்யூ–2) த்துறை

**அரசாணை (நிலை) எண். 331** நாள் 18.06.1999

1. அரசாணை (நிலை) எண். 320, ஊரக வளர்ச்சித் துறை நாள் 11.1.97.
2. அரசு ஆணை (நிலை) எண். 100 ஊரக வளர்ச்சித் துறை நாள் 22.5.98.
3. ஊரக வளர்ச்சித் துறை செயலாளரின் நேர்முக கடிதம் எண். 14532/சி4/99, நாள் 11.5.99.

......

**ஆணை:**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய உயர்மட்டக்குழு ஒன்று அமைத்து பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை 11.1.99 அன்று அரசுக்கு சமர்ப்பித்து.

2) நீரினை மேம்பட்ட அளவில் பயன்படுத்தும் பொருட்டு ஊராட்சி அமைப்புகள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து உயர்மட்டக்குழு அறிக்கை இயல்–3 "சிறுபாசனம், நீர் மேலாண்மை மற்றும் நீர்பிடிப்பு மேம்பாடு" என்ற தலைப்பின் கீழ் தனது பரிந்துரையை அளித்துள்ளது. உயர்மட்டக்குழுவின் பரிந்துரைகள் அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனைக்குப் பின், இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகளை ஒப்படைப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3) இவ்வாணை ஊரக வளர்ச்சித் துறையின் ஒப்புதலுடன் அத்துறையின் அ.சா.எண். 23622/சி4/99–1 நாள் 16.6.99–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ந.பி.குப்தா,**
அரசு செயலாளர்,

## இணைப்பு
## சிறுபாசனம், மேலாண்மை மற்றும் நீர்பிடிப்பு மேம்பாடு (அ) சிறுபாசனம்
## கிராம ஊராட்சிகள்

1) கிராம ஊராட்சிப் பகுதிகளில் 100 ஏக்கருக்கும் குறைவான பாசனப் பரப்புள்ள ஏரிகளை கண்டறிந்து அவற்றின் நீர் பரப்பு, நீர்வளம் எவ்வளவு காலத்திற்கு கிடைக்கும் போன்ற விவரங்களைக் சேகரித்து, தேவையான திட்டங்களை தீட்டி செயல்படுத்துதல் மற்றும் தேவையான விவரங்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளித்து ஊராட்சி ஒன்றிய அளவில் திட்டங்கள் தீட்ட உதவுதல்.

2) பயிர் வளர்ப்புக்கு தேவையான நீர் ஆதாரங்களான பாசனக் குளங்களில் மண்படிந்து அதன் கொள்ளளவு குறைந்து கொண்டே வருவதைத் தவிர்க்க வறட்சிக் காலங்களில் 100 ஏக்கருக்கு குறைவான பாசனப் பரப்புள்ள குளங்களில் தூர் எடுக்கும் நடவடிக்கைகள் கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளுதல்.

3) தேசிய வேளாண்மை வங்கி (நபார்டு) சிறுபாசன மேம்பாட்டிற்கான திட்டங்களை நிறைவேற்றுகிறது. இத்திட்டத்தினைப் பயன்படுத்தி ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கவும், 100 ஏக்கருக்கும் குறைவான பாசனப் பரப்புள்ள குளங்களில் பாசனக் கால்வாய்களை சீர் செய்வதிலும் கிராம ஊராட்சிகள் உதவுதல்.

4) மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதியுள்ள விவசாயிகளில் தகுதியுள்ள பயனாளிகளை கண்டிறிய உதவுதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1) ஊராட்சி ஒன்றியங்கள் பல கிராம ஊராட்சிகளை கொண்டது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பல சிறுபாசனத் திட்டங்கள் அந்த பகுதி விவசாயிகளின் மேம்பாட்டிற்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவற்றில் 100 ஏக்கருக்கு குறைவான பாசனப் பரப்புள்ள ஏரிகளின் நீர்ப்பாசன விநியோக முறைகள், நீர் வரத்துக் கால்வாய் சீரமைப்பு, நுண் பாசன முறைகள் மற்றும் நுண் நீர்பாசன முறைகள் மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் ஆகிய திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளை வகைப்படுத்தி, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு பரிந்துரைத்து பழுதடைந்தவற்றைச் சீராக்கவும், புதிய பணிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுத்துதல்.

2) சிறுபாசனம் குறித்த புள்ளி விவரங்களை ஊராட்சி ஒன்றிய அளவில் தொகுத்து அதனைப் பராமரிக்க வேண்டும். இதன் பொருட்டு நீர்வள/நிலவியல் தொழில்நுட்ப வல்லுனர்களின் தொழில்நுட்ப ஆலோசனையைப் பெற்று மாவட்ட ஊராட்சிகளுக்கு தெரிவித்தல்.

3) ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் உள்ள 100 ஏக்கருக்கு குறைவான பாசனப் பரப்புள்ள ஊராட்சிக் குளங்களை கிராம ஊராட்சிகளின் உதவியுடன் கண்டறிந்து அதன் விவரங்களைப் பெற்று மழையில்லா காலங்களில், குளங்களில் தூர் எடுத்து, குளத்தின் நீர் கொள்ளளவினை அதிகரிக்க, ஊராட்சி ஒன்றிய அளவில் நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகள் தொடர்புடைய, பாசனக் குளங்களுக்கு நீர் பகிர்மான முறையை சீராக்குதல், பிரச்சினைகளைத் தீர்த்தல்.

4) பல்வேறு அரசு துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் மூலம் அமைக்கப்படும் நீர்ப்பாசன ஆழ்குழாய்க் கிணறுகள் திட்டம், வரத்துக் கால்வாய் சீரமைப்பு ஆகிய பணிகளை செயல்படுத்தவும், பயனாளிகளைக் கண்டறியவும் கிராம ஊராட்சிகளை ஒருங்கிணைந்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உதவுதல்.

5) மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஆலோசனை வழங்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரம் வழங்குவது.

### மாவட்ட ஊராட்சிகள்

1) மாவட்ட அளவில் நீர்ப்பாசன வளத்தை மேம்படுத்த மாவட்டம் முழுவதிலும் உள்ள நீர்ப்பாசன குழாய்கள், ஏரிகள், வரத்துக் கால்வாய்கள் போன்றவற்றின் துல்லியமான புள்ளி விவரங்களை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பெற்று மாவட்ட அளவில் தொகுத்து, திட்டமிடுவதற்கு ஏதுவாக பராமரித்தல்.

2) நீர்ப்பாசன வளத்தை மேம்படுத்தும் பொருட்டு ஓர் தொலைநோக்குத் திட்டத்தை தயாரித்து சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள், கிராம ஊராட்சிகளுடன் பகிர்ந்து கொள்ளுதல்.

3) கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தும் 100 ஏக்கருக்கு குறைவான பாசனப் பரப்புள்ள ஏரிகளை தூர் வாரும் பணிகள், வரத்துக் கால்வாய் மராமத்துப் பணிகள் ஆகிய பணிகளுக்கு மாவட்ட ஊராட்சிகள் உறுதுணையாக இருத்தல் மற்றும் ஆலோசகனைகள் வழங்குதல்.

4) 100 ஏக்கருக்கு குறைவான பாசனப் பரப்புள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பாசன குளங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக எடுக்கப்படும் அனைத்து திட்ட பணிகளை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல்.

## (ஆ) நீர் மேலாண்மை

### கிராம ஊராட்சிகள்

1) சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளில் நிலத்தடி நீரின் அளவு மற்றும் இருப்பு குறித்த விவரங்களை நிலவியல் தொழில் நுட்ப வல்லுநர்களின் மூலம் கண்டறிந்து அந்த விவரங்களை பயன்படுத்துதல்.

2) விவசாய நிலங்களில் நீர்ப்பாசனத்தை மேம்படுத்தும் பொருட்டு ஆழ்குழாய் கிணறு அமைக்கும் சாத்தியக்கூறுகள் குறித்து, கிராம ஊராட்சிகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

3) திறந்த வெளி கிணறுகளுக்கு உரிய அளவு இடைவெளி இருக்க வேண்டும் என்ற நிலையில் தொழில் நுட்ப வல்லுனர்களின் கருத்துக்களை பொது மக்களிடையே பரப்புதல்.

### ஊராட்சி ஒன்றியங்கள்

1) ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள நிலத்தடி நீரின் அளவு மற்றும் இருப்பு குறித்த விவரங்களை நிலவியல் தொழில் நுட்ப வல்லுனர்களின் மூலம் கண்டறிந்து, அந்த விவரங்களை ஊராட்சி ஒன்றிய அளவில் பயன்படுத்தி நடவடிக்கைகள் எடுத்தல்.

2) விவசாய நிலங்களில் நீர்ப்பாசனத்தை மேம்படுத்தும் பொருட்டு ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் சாத்தியக் கூறுகள் குறித்து, ஊராட்சி ஒன்றியங்கள் நடவடிக்கைகள் எடுத்தல்.

3) நீர் மேலாண்மை குறித்த திட்டங்களை ஊராட்சி ஒன்றிய அளவில் திட்டமிட்டு செயல்படுத்த சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வது பல்வேறு திட்டப் பணிகளை ஒருங்கிணைத்தல்.

### மாவட்ட ஊராட்சிகள்

மாவட்ட அளவில் நிலத்தடி நீரின் அளவு, நீரின் தன்மை ஆகியவற்றின் விவரங்களை தொகுத்து அந்த விவரங்களை நிலவியல் வல்லுநர்களின் அறிவுரைகளின்படி பயன்படுத்தி மாவட்ட திட்டம் தயாரித்து, நீரினை முறையாகவும், சிக்கனமாகவும் பயன்படதூத உரிய நடவடிக்கைகள் எடுத்தல்.

## (இ) நீர்பிடிப்பு மேம்பாடு

### கிராம ஊராட்சிகள்

1) நில ஆவணங்களை மேம்படுத்தலும், பராமரித்தல் சார்ந்த திட்டங்களில் வேளாண் மற்றும் மேய்ச்சல் நிலம், தரிசு நிலம், நீர்த்தேக்கங்கள், நீர் நிலைகள், சாலைகள், கரைகள் போன்றவை ஏனைய சமுதாய நிலங்கள் தொடர்பான விவரங்களின் மேம்பாட்டிற்கு கிராம ஊராட்சிகள் உதவுதல் மற்றும் ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அதனை அகற்ற உதவுதல்.

2) நீர்பிரி முகடு மேலாண்மை சார்ந்த பொருட்களில், திட்டத்தின் அனைத்து நில நீர் பயன்பாடுகள் குறித்து ஊராட்சிகள் மூலம் நடவடிக்கைகள் எடுத்தல், உற்பத்தியினை அதிகரிக்க சமுதாய பொதுநிலம் மற்றும் பொதுச் சொத்துக்களை முறையாக பயன் பயன்படுத்துவதை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல், இது தொடர்பான சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உதவுதல், இயற்கை வள ஆதாரங்கள், சுற்றுச் சூழலை மேம்படுத்தும் வகையில் பல துறைகளில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் எடுத்தல், நீரிபிரி முகடு மேலாண்மை சார்ந்த பொருட்களில் திட்டத்தின் அனைத்து நில/நீர் பயன்பாடுகள் குறித்து ஊராட்சிகள் மூலம் நடவடிக்கைகள் எடுத்தல், உற்பத்தியினை அதிகரிக்க சமுதாய பொதுநிலம் மற்றும் பொதுச் சொத்துக்களை முறையாக பயன்படுவதை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உதவுதல், இயற்கை வள ஆதாரங்கள், சுற்றுச் சூழலை மேம்படுத்தும் வகையில், பல துறைகளின் மூலம் ஒருங்கிணைப்பு நடவடிக்கை எடுத்தல்.

3) கிராம ஊராட்சிகள், தங்கள் பகுதியின் நீர்பிடிப்பு மேம்பாடு சார்ந்த திட்டங்களை செயல்படுத்தத் தேவையான செயல் திட்டங்களைத் தீட்டுதல் கிராமப் புறங்களின் நில அமைப்புக்கு ஏற்ற மரம் மற்றும் பயிர்களைக் கண்டறிதல்.

4) ஒருங்கிணைந்த நீர்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டத்திற்கான பயனாளிகளைக் கண்டறிய சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உதவுதல்.

### ஊராட்சி ஒன்றியங்கள்

1) ஊராட்சி ஒன்றியங்கள் நீர்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த தேவையான செயல் திட்டங்களைத் தீட்டுவதற்கும், பல்வேறு துறையின் சேவைகளை ஒருங்கிணைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

2) நீர்பிடிப்பு மேலாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்த, பொது மக்களைக் கொண்ட (அ) நீர் பயன்படுத்துவோர் குழுக்கள் (ஆ) நாற்றங்கால் அமைப்போர் குழுக்கள் போன்ற குழுக்கள் அமைப்பதில், சம்பந்தப்பட்ட துறை அலுவவர்களுக்கு உதவுதல்.

3) நிலம் மற்றும் நீரை முறையாகப் பயன்படுத்த ஊராட்சி ஒன்றிய அளவிலான செயல் திட்டங்களைத் தயாரிப்பதில் உதவுதல், பொது மக்கள் மற்றும் அமைக்கப்படும் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான மண்வளம், நீர்பிடிப்பு மேலாண்மை சார்ந்த பயிற்சிக்கு ஏற்பாடுகள் செய்தல்.

4) ஒருங்கிணைந்த நீர்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக உதவுதல் மற்றும் திட்ட செயல்பட்டை ஆய்வு செய்தல்.

5) மண்வள அட்டைகள் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் சம்மந்தப்பட்ட விவசாயிகளுக்கும் துறை அலுவலர்களுக்கும் உதவுதல்.

## மாவட்ட ஊராட்சிகள்

நீர்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான மண்வளம், நீர்பிடிப்பு பரப்பு ஆகிய விவரங்களைப் பெற்று பராமரித்தல், பெறப்பட்ட விவரங்களைக் கொண்டு தொலைநோக்குத் திட்டங்களைத் தயாரித்தல், மாவட்ட ஊராட்சியின் நீர்பிடிப்பு மேம்பாடு சார்ந்த திட்டங்களின் அனுபவங்களையும் இதர விவரங்களையும் ஊராட்சி ஒன்றியத்திற்கும், கிராம ஊராட்சிகளுக்கும் அளித்தல்.

**ந.பி.குப்தா,**
அரசு செயலாளர்

## தமிழ்நாடு அரசு
## சுருக்கம்

ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளித்தல் உயர் மட்ட நிலச் சீர்த்திருத்தம் பற்றிய பரிந்துரைகள் – அரசின் முடிவுகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

**வருவாய் ( நிலச் சீர்திருத்தம் 2–2 ) துறை**

**அரசாணை (நிலை) எண்.333** நாள் 30.6.1999

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண். 320 ஊரக வளர்ச்சித் துறை நாள் 11.1.97
2. அரசாணை நிலை எண். 100 ஊரக வளர்ச்சித் துறை நாள் 22.5.98
3. அரசாணை நிலை எண். 1006 வருவாய் நாள் 27.10.97
4. ஊரக வளர்ச்சி துறை செயலரின் நேமுக எண் 32732/சி 4/ 98–4 நாள் 2.2.99
5. ஊரக வளர்ச்சி துறை செயலரின் நேமுக எண் 14532/சி 4/ 99 நாள் 11.5.99

**ஆணை:**

மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு மேலும் அதிகாரங்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்க மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும் சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்து கட்சி பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு உயர்நிலைக்குழு ஒன்று மேலே படிக்கப்பட்ட அரசாணை ஒன்று மற்றும் இரண்டில் ஏற்படுத்தப்பட்டது. குழு தனது அறிக்கையை 1.1.99 அன்று மாண்புமிகு முதலமைச்சரிடம் சமர்ப்பித்தது. குழு தனது அறிக்கையில் பல்வேறு பொருள்களுடன் நிலச்சீர்திருத்தம் தொடர்பாகவும் பரிந்துரை செய்திருந்தது குழுவின் பரிந்துரைகள் ஆய்வு செய்யப்பட்டு நிலச் சீர்திருத்தம் சம்மந்தமாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு சில அதிகாரங்களை ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி இவ்வாணையில் பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ளவாறு பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணையிடப்படுகிறது.

2. ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த இயக்குநர் தனது நிர்வாகத்தின் கீழிருக்கம் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறார் வழங்கப்பட்ட அறிவுரைகளின் நகல் ஒன்றினை அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

( ஆளுநரின் ஆணைப்படி )

**தேபேந்திரநாத் சாரங்கி**
அரசு செயலர்

**பிற்சேர்க்கை**

**நிலச்சீர்திருத்தம், நில உச்சவரம்பு செயல்படுத்துதல், பரிந்துரை தொடர் எண்.**

**கிராம ஊராட்சிகள் :**

73, உபரி நிலங்களை எடுத்து நிலமில்லாத விவசாயிகளுக்கு அளிப்பதற்கு நிலச் சீர்திருத்த சட்டத்தின்படி அரசிற்கே அதிகாரம் உள்ளதென்பதால் அவற்றை கண்டறிந்து அரசிற்கு தெரிவிக்க ஊராட்சி மன்றம் உதவுதல்.

**ஊராட்சி ஒன்றியங்கள்:**

75 குத்தகை சட்டம், பங்கு, பயிரிடும் முறை செயலாக்கம் ஆகிய பணிகளில் தனி நபர் சம்பந்தமான தேர்வுகளில் தலையிடாமல் பொதுவாக வருவாய் அதிகாரிகளுக்கு உதவுதல்.

**தேபேந்திரநாத் சாரங்கி**
அரசு செயலர்

## தமிழ்நாடு அரசு
## சுருக்கம்

ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தல் நில ஒப்படை தொடர்பாக உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள் – அரசின் முடிவுகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

### வருவாய் ( நிலம் 3–1 ) துறை

**அரசாணை (நிலை) எண். 345** நாள் 2.7.1999

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண். 320 ஊரக வளர்ச்சித் துறை நாள் 11.1.97.
2. அரசாணை நிலை எண். 100 ஊரக வளர்ச்சித் துறை நாள் 22.5.98.

**ஆணை:**

மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு மேலும் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்க மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும் சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்து கட்சி பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு உயர்நிலைக்குழு ஒன்று மேலே படிக்கப்பட்ட அரசாணை ஒன்று மற்றும் இரண்டில் ஏற்படுத்தப்பட்டது. குழு தனது அறிக்கையை 1.1.99 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்தது. குழு தனது அறிக்கையில் பல்வேறு பொருள்களுடன் நில ஒப்படை தொடர்பாகவும் பரிந்துரை செய்திருந்தது. குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்வதற்காக 3.5.99 மற்றும் 4.5.99 ல் நடைப்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் நில ஒப்படை சம்மந்தமாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு சில அதிகாரங்களை ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி இவ்வாணையில் பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ளவாறு பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணையிடப்படுகிறது.

2. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தனது நிர்வாகத்தில் கீழிருக்கம் அலுவலர்களுக்கு இதன் தொடர்பாக அறிவுரைகள் வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறார் வழங்கப்பட்ட அறிவுரைகளின் நகல் ஒன்றினை அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

( ஆளுநரின் ஆணைப்படி )

**தேபேந்திரநாத் சாரங்கி**
அரசு செயலர்

## பிற்சேர்க்கை

## நில ஒப்படை தொடர்பான பரிந்துரையின் தொடர் எண்.

**கிராம ஊராட்சிகள் :**

74. புறம்போக்கு நிலங்கள் தனியாரிடம் இருக்கும் பட்சத்தில் அது பொது பயனீட்டிற்குப் பயன்படாத நிலமாக இருந்தால், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அதனைப் பிரித்துக் கொடுக்க ஊராட்சிகள் பரிந்துரை செய்தல்.

**ஊராட்சி ஒன்றியங்கள்:**

75. துண்டு நிலங்களை ஒருங்கிணைப்பதில் தனி நபர் சம்பந்தமான தேர்வுகளில் தலையிடாமல் பொதுவாக வருவாய் அலுவலர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் உதவுதல்.

**தேபேந்திரநாத் சாரங்கி**
அரசு செயலர்

## தமிழ் நாடு அரசு

## சுருக்கம்

ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளித்தல் மாநில திட்டக் குழுவின் – இரண்டாவது அறிக்கை – நிலச் சீர்திருத்தம் பற்றிய பரிந்துரைகள் – மீதான அரசின் முடிவுகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

### வருவாய் ( நிலச் சீர்திருத்தம் 2–2 ) துறை

**அரசாணை (நிலை) எண்.1006** நாள் 27.10.1997

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண். 75 ஊரக வளர்ச்சி (சி1) துறை நாள் 14.3.97.
2. அரசு ஆணை (நிலை) எண். 220 ஊரக வளர்ச்சி (சி1) துறை நாள் 4.7.97.
3. ஊரக வளர்ச்சித் துறை செயலாரின் நே.மு.க.எண். 12940 / C1 / 97 / 1 நாள் - 18.03.97
4. நிலச் சீர்திருத்த இயக்குநரின் கடித எண் அ 3/6030/97 ( நி.சீ) நாள் 7.4.97.
5. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடித எண். கே 3/17828/97/ நாள் 7.5.97.

**ஆணை:**

இந்திய அரசியலமைப்பின் 73–வது சீர்த்திருத்தச் சட்டத்திற்கு, இணங்க உருவாக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்களுக்கு தேர்தல்கள் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பணியேற்றுள்ளனர். மேற்கூறிய சட்டத்தின் பிரிவுகள் 243 ஜி மற்றும் 1994 – ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 267–க்கு இணங்க பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தவும் மற்றம் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பட்டியல்–IV–உள்ள இனங்களைச் செயல்படுத்தவும் தேவையான பொறுப்புகளை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். ஆகவே எந்தெந்த பொறுப்புகளை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்பது குறித்து மாநிலத் திட்டக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே, மாநில திட்டக் குழு தனது இரண்டாவது அறிக்கையில் பிறவற்றோடு நிலச் சீர்திருத்தம் தொடர்பான இத்திட்டம் மீது அரசுக்கு அறிக்கையினை அனுப்பியுள்ளது.

2. மாநிலத் திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கையில் மேற்சொன்ன நிலச் சீர்திருத்தம் பற்றிய பரிந்துரைகளை அரசு முதன்மை ஆணையர் மற்றும் நிலச் சீர்த்திருத்த ஆணையர், மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையருடன் கலந்தாய்வு செய்தது. ஆய்வுக்கு பின்னர் , வருவாய்த் துறையின் திட்டப் பணிகளை செயல்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும் ஊராட்சி அமைப்புகளுக்கு உரிய பொறுப்புகளை ஒப்படைக்க அரசு முடிவு செய்தது. அதன்படி, இவ்வாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புகளை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணையிடப்படுகிறது.

3. முதன்மை ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தமது நிர்வாகத்தின் கீழிருக்கும் ஒவ்வொரு நிலையிலும் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள், அவைகளை ஒருங்கிணைக்கும் அலுவலர்கள் பற்றி விரிவாகக் குறிப்பிட்டு உடனே அறிவுரைகள் வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. வழங்கப்பட்ட அறிவுரைகளின் நகல் ஒன்றினை அரசுக்கு அனுப்புமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**பி.எஸ்.பாண்டியன்,**
அரசு செயலாளர்.

## பிற்சேர்க்கை

திட்டங்களை செயல்படுத்துதல், மேற்பார்வையிடுதல், ஆய்வு செய்தல் தொடர்பாக.

அதிசாரங்களை ஒப்படைத்தல் (நிலச் சீர்திருத்தம்)

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பகிர்வு உபரி நிலத்தை மேம்படுத்துதல் மற்றும் நில உச்சவரம்புகளைச் செயலாக்குதல் | உதவுதல் | மேற்பார்வையிடுதல் | மேற்பார்வையிடுதல் |
| 2 | பில ஆவணங்களை இப்போதைய நிலைத்துக் கொணர்தல் | உதவுதல் | மேற்பார்வையிடுதல் | மேற்பார்வையிடுதல் |
| 3 | பிற நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் செயலாக்குதல் | அதிகாரம் ஏதுமில்லை | மேற்பார்வையிடுதல் | மேற்பார்வையிடுதல் |

பி.எஸ். பாண்டியன்,
அரசு செயலாளர்.

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தல்– மாநில திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கை – வேளாண்மை துறை திட்டங்கள் பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள் ஆணை வெளியிடப்படுகின்றது.

**வேளாண்மை (வ & தி) துறை**

**அரசாணை (நிலை ) எண்.377** **நாள்.4.09.1977**

படிக்கப்பட்டது:

அரசாணை (நிலை எண்.75 ஊர வளர்ச்சி (சி) துறை, நாள்.14.03.97.

**ஆணை**

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பதினோராவது அட்டவணையில், மாநில அரசு, சட்டத்தின் மூலம் அது பொருத்தம் எனக் கருதும் அலுவல்களையும், திட்டங்களையும், ஊரக உள்ளாட்சி மன்றங்களிடம் ஒப்படைப்பது குறித்து 29–இனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளை எந்த அளவிற்கு ஒப்படைக்கலாம் என்பதைத் தீர்மானிக்கவும், மாநில அரசிற்கு உரிமையுள்ளது. இதனை ஆய்வு செய்துஅரசிற்கு அனுப்புமாறு மாநில திட்டக்குழுவை ஊரக வளர்ச்சித்துறை கேட்டுக் கொண்டது. மாநில திட்டக்குழு 13–துறைகளுக்கான (வேளாண்மைத் துறை உள்ளிட்ட) பரிந்துரைகள் அடங்கிய தனது இரண்டாவது அறிக்கையை அளித்துள்ளது. மாநில திட்டக் குழுவின் அறிக்கையில் வேளாண்மை துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களில் எந்தெந்த திட்டங்களை செயல்படுத்துதல், மேற்பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகியவைகளின் பொருட்டு ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கலாம் என்பது பற்றி தனது பரிந்துரையை வழங்கியுள்ளது.

2. மாநில திட்டக்குழுவின்இரண்டாவது அறிக்கையில், மேற்சொன்ன வேளாண்மை பற்றிய பரிந்தரைகளைச் சம்பந்தப்பட்ட துறையுடன் கலந்தாலோசித்து, வேளாண்மை துறையின் திட்ட பணிகளை செயல்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும், ஊராட்சி அமைப்புகளுக்கு உரிய பொறுப்புக்களை ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, இவ்வாணையில் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணையிடப்படுகின்றன.

3. பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைப்படி திட்டங்களை நடைமுறைப்படுத்த தனது நிர்வாகத்தின் கீழிருக்கும் சார் அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்க துறைத்தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**நா.ஆதிமூலம்,**
அரசு செயலாளர்,

## பிற்சேர்க்கை

## திட்டங்கள் செயல்படுத்துதல், மேற்பார்வையிடுதல், ஆய்வு செய்தல் தொடர்பாக அதிகாரங்களை ஒப்படைத்தல்—வேளாண்மைத்துறை.

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | வேளாண்மை திட்டமிடல் | —— | —— | ஆலோசனை வழங்கல் |
| 2 | ஒருங்கிணைந்த தானிய வகை மேம்பாட்டுத் திட்டம்—அரிசி | —— | —— | ஆலோசனை வழங்கல் |
| 3 | நெல், தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் பருத்தி முதலியவற்றை பெருக்குதலும், வழங்குதலும் | —— | —— | ஆலோசனை வழங்கல் |
| 4 | காய்கறி வித்துக்களை கொள்முதல் செய்தலும், வழங்குதலும். | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | செயல்படுத்த உதவுதல் வழங்கல் | ஒருங்கிணைப்புகளுக் கான ஆலோசனை |
| 5 | சமுதாய கதிரடிக்கும் களம் | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | திட்டமிடல் | செயல்படுத்துதல் |
| 6 | நெல், பசுந்தாள் உரம், கரும்பச்சை, கடற்பாசி ஆகியவைகளை மான்ய விலையில் வழங்குதல் | பயனாளர்களை கண்டறிய உதவதல் | —— | —— |
| 7 | தரிசு நில மேம்பாட்டிற்கான சிறப்பு திட்டம் | செயல்படுத்த உதவுதல் | செயல்படுத்த உதவுதல் | ஒருங்கிணைத்தல் |
| 8 | கழிவு நீரையும் கழிவுப் பொருட்களையும் பயன்படுத்துவதன் மூலம் உள்ளூர் எரு ஆதாரங்களை மேம்படுத்துதல் | செயல்படுத்த உதவுதல் | செயல்படுத்த உதவுதல் | திட்டமிடல் |
| 9 | சிறுகருவி பெட்டிகள், இரசாயன உரம், விதைகள் ஆகியவற்றை வழங்குதல் | பயனாளர்களைக் கண்டறிய உதவுதல் | —— | —— |
| 10 | புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு நிதியுதவி செய்தல் | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | —— | —— |
| 11 | தென்னை வளர்ப்போருக்கு நுன்பாசன வசதிகளுக்கு நிதியுதவி | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | | |
| 12 | உழவர் பயிற்சி மையங்கள் | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | —— | —— |

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 13 | தோட்டக்கலை பயிற்சி மையம் | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | –– | –– |
| 14 | வேளாண் தொழிற் நுட்பவியலில் உழவர்களுக்கு (மகளிருக்கு ) பயிற்சியளித்தல் | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | –– | –– |
| 15 | நவீன வேளாண் கருவிகளை வழங்குதல் | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | –– | –– |
| 16 | கம்போஸ்ட் உரக்குழிகளை அமைத்தல் | செயல்படுத்துதல் | திட்டமிடல் | திட்டமிடல் |
| 17 | தோட்டக்கலை திட்டத்தின்கீழ் கன்றுகள் வழங்குதல் | –– | உதவி செய்தல் | |
| 18 | தீவிர பருத்தி மேம்பாடு | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | –– | –– |
| 19 | எண்ணெய்வித்து உற்பத்தி திட்டம் | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | –– | –– |
| 20 | தேசிய பயறுவகைகள் மேம்பாட்டு திட்டம் | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | –– | –– |
| 21 | வறட்சி பாங்கான பகுதி திட்டம் | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | ஒருங்கிணைத்தல் / ஆலோசனை வழங்கல் | ஒருங்கிணைத்தல் / ஆலோசனை வழங்கல் |
| 22 | ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டு திட்டம் | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | ஒருங்கிணைத்தல் / ஆலோசனை வழங்கல் | ஒருங்கிணைத்தல் / ஆலோசனை வழங்கல் |
| 23 | ஒருங்கிணைந்த நீர்வரத்து பகுதி மேம்பாட்டு திட்டம் | –– | ஆலோசனை வழங்கல் | ஆலோசனை வழங்கல் |
| 24 | மானாவாரி பகுதிகளில் தேசிய நீர்வரத்து பகுதி மேம்பாட்டு திட்டம் | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | ஆலோசனை வழங்கல் | ஆலோசனை வழங்கல் |
| 25 | விரிவான நீர்வரத்து பகுதி மேம்பாட்டு திட்டம் | பயனாளர்களை கண்டறிய உதவுதல் | ஆலோசனை வழங்கல் | ஆலோசனை வழங்கல் |

**நா.ஆதிமூலம்,**
அரசு செயலாளர்.

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்.**

ஊராட்சிகள்—மூன்றடுக்கு ஊராட்சிகள்—அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல்—உயர்நிலை குழுவின் பரிந்துரைகள்—வேளாண்மைத் துறைத் திட்டங்கள் பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்—ஆணை வெளியிடப்படுகின்றது.

**வேளாண்மை (வ & தி) துறை**

**அரசாணை (நிலை) எண்.220** நாள்.07.06.1999

படிக்கப்பட்டது:

அரசாணை (நிலை) எண்.377 வேளாண்மைத் துறை, நாள்.04.09.1997.

02. அரசு நேர்முகக் கடித எண்.34379/வ (ம) தி/98—3/ வேளாண்மைத் துறை நாள்.11.1.99

03. அரசு நேர்முகக் கடித எண்.5286 / வ(ம தி 99.3 வேளாண்மைத் துறைநாள்.31.03.99

04. அரசு நேர்முக கடிதம் எண்.5286/வ(ம)தி/99—5 வேளாண்மைத் துறை நாள்.12.04.99

05. ஊரக வளர்ச்சித்துறை செயலர் அவர்களின் நேர்முக கடித எண்.14532/சி4/99/நாள்.11.05.99.

******

**ஆணை:**

மாநில திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் வேளாண்மை துறையின் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும், ஊராட்சி அமைப்பகளுக்குப் பொறுப்புக்களை வழங்கி பார்வை 1—ல் கண்டுள்ள அரசாணையில் ஆணை வெளியிப்பட்டுள்ளது.

2. 1997.98—ம் ஆண்டு சட்டப் பேரவையில் நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு மேலும் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் வழங்க வேண்டுமென்று பேரவை உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும், சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களகவும், கொண்டு உயர்நிலைக்குழு அமைக்கப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அரசு அமைத்த உயர்நிலைக் குழு 11.01.1999—அன்று தனது அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்தது.

3. 03.05.1999—மற்றும் 04.05.1999—ஆகிய நாட்களில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டங்களில் உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டன. வேளாண்மை துறையின் திட்டப்பணிகளை செயல்படுத்துவதின் பொருட்டு மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் பொறுப்புகளை ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி இவ்வாணையின் பிற்சேர்க்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்களை மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணையிடப்படுகின்றன.

4. பிற்சேர்க்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைப்படி திட்டங்களை நடைமுறைப்படுத்த தனது நிர்வாகத்தின் கீழிருக்கும் சார் அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறு துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

**ஓம்/—நா.ஆதிமூலம்,**

அரசு செயலர்.

## பிற்சேர்க்கை.1

## வேளாண்மை மற்றும்வேளாண்மை சார்ந்த விரிவாக்கம்

## வேளாண்மை

### கிராம ஊராட்சிகள்.

01. வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேளாண் இடுபொருட்களான விதைகள் ரசாயன உரங்கள், உயிர் உரங்கள் பூச்சி பூஞ்சானைக் கொல்லி மருந்துகள் சரியான தருணத்தில் இலகுவில் கிடைக்கின்ற நிலையில் கிராம ஊராட்சிகள் ஆலோசனை வழங்கிடவும், பயனாளிகளை தேர்வு செய்திடவும் உதவிடலாம். அரசாணை (நிலை) எண்.377, நாள்.04.9.97–ல் பயனாளிகளை கண்டறிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

02. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு, இலாபகரமான விலை கிடைக்கவும், விரைவில் அழுகிவிடக்கூடிய பழங்கள் காய்கறிகளுக்கு இலாபகரமான விலை கிடைக்கும் வரை பாதுகாத்து வைப்பதற்கு ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலம் குளிர் சாதன சேமிப்பு கிடங்குகள் சம்பந்தப்பட்ட ஊராட்சி பகுதிகளில் அமைக்க ஆலோசனைகள் வழங்கலாம்.

03. விவசாயிகளிடையே ஒரு ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்தி, வேளாண் மகசூலை அதிகரிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் பயிர்மகசூல் போட்டிகளில் சம்பந்தப்பட்ட ஊராட்சி பகுதி விவசாயிகள் கலந்து பயன்பெற போதிய விளம்பரங்கள் செய்து உதவலாம்.

04. வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு செயல்படுத்தப்படும் வேளாண்வளர்ச்சி திட்டங்களான ஒருங்கிணைந்த தானிய மேம்பாட்டு திட்டம் (அரிசி) நெல், சில தான்யங்கள், பயறுவகைகள் எண்ணெய் வித்துக்கள், பருத்தி போன்றவற்றை பெருக்கி பகிர்வு செய்யும் திட்டம் பயிர் மற்றும் செடி பாதுகாப்பு குறித்த திட்டங்கள், விதை பரிசோதனைதிட்டம், ஒருங்கிணைந்த நோய் பூச்சி கட்டுப்பாட்டு தொழில் நுணுக்கத்தை மக்களிடையே பரவ செய்யும் திட்டம், நெல் தரிசுகளில் பருப்பு வகைகள் பயிரிட மேம்பட்ட செயல் முறை திட்டம், மண் மற்றும் நீர்வளங்களைப் பேணுதல் தொடர்பான திட்ங்கள், சிறு/குறு விவசாயிகளுக்குப் பயிர் ஈட்டுறுதி காப்பு திட்டங்கள், சிறு/குறு விவசாயிகளுக்கு உரமான்யம் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களில் பயனாளிகளை கண்டறிய சம்பந்தப்பட்ட விவசாயத்துறை அலுவலர்களுக்கு உதவலாம். இத்தகைய திட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு மான்யம் மற்றும் திட்ட உதவிகள் வழங்கப்பட்ட பயனாளிகளின் பெயர் மற்றும் திட்ட உதவி விவரங்களை தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டுக்கும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஊராட்சிகளுக்கு தெரிவிக்கலாம் என ஏற்கனவே ஆணையிடப்பட்டுள்ளது. (அரசாணை எண்.377,வேளாண்மைத்துறைநாள்.04.09.97)

05. புரதம் மற்றும் கொழுப்பு (எண்ணெய்) சத்து வகைகளில் தன்னிறைவு பெற, ஊரட்சிகள் முனைந்து செயல்பட்டு,சோயா,மொச்சை மற்றும்அவரை போன்ற பயிர்களை தனி பயிராகவும், ஊடுபயிராகவும், இருபோகச் சாகுபடிகளில் இரண்டாம் பயிராக பயிரிடச் செய்து , பரப்பளவையும், உற்பத்தியையும் அதிகரிக்க உதவி செய்யலாம்.

06. தோட்டக்கலை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் இலவசமாகவும், மான்ய விலையிலும் வழங்கப்படும் கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்கி தனி பயிராக பயிரிட வாய்ப்புள்ள பகுதிகளிலும் தோப்பாகவும், வரப்புகளிலும், நடவு செய்து பரப்பளவையும், உற்பத்தியையும்

அதிகரிக்கலாம். மேற்படி துறை திட்டங்களில் உள்ள வாய்ப்புகளை பயன்படுத்தி, ஊராட்சிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தரிசு நிலங்களில் பழ மரங்களை சாகுபடி செய்வதற்கு உதவி செய்யலாம். (அரசு நேர்முக கடித எண்.34379/வ (ம) தி/ 98 நாள்.11.01.99–ல் ஆலோசனை வழங்கும் அதிகாரமும், அரசாணை (நிலை) எண். 377, நாள்.04.09.97–ல் ஒருங்கிணைத்து தரிசு நில மேம்பாடு திட்டத்தை செயல்படுத்த உதவும் அதிகாரமும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது).

07. வேளாண் உற்பத்தியில் தரமான விதைகளே முதன்முதல், இடு பொருளாகும். விதைகள் தரமற்றதாக இருந்தால், எத்தனை தொழில் நுட்பங்களை புகுத்தினாலும், இடுபொருட்களை இட்டாலும், எதிர்பார்த்த மகசூல் கிடைக்காது. எனவே, வேளாண் இடு பொருட்களில் மிகவும் முக்கியமான இடு பொருளான விதைகளைத் தரமானதாகவும், சரியான முளைப்பு திறன் உள்ள நிலையிலும் பாதுகாத்து வைத்தல் மிக முக்கியமானதாகும். எனவே, கிராம ஊராட்சிகள் சம்பந்தப்பட்ட ஊராட்சி பகுதிகளில் விஞ்ஞான முறைப்படி விதைசேமிப்பு கிடங்குகள் சம்பந்தப்பட்ட துறையின் மூலம் கட்டுவதற்காக இடத்தை கண்டறிந்து உதவலாம்.

08. பெரும்பாலான விவசாயிகள் விளை பொருட்களை இருப்பு வைக்க வசதியில்லாமலும், பண நெருக்கடியினாலும், நல்ல விலையை எதிர்பார்த்து விற்பனை செய்ய முடியாமல் குறைந்த விலைக்கு விற்று நஷ்டம் அடைகின்றனர். எனவே, நல்ல விலையில் விற்று உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஏற்ற விலை கிடைக்க வகை செய்யும் பொருட்டு, ஊராட்சிகள் சம்பந்தப்பட்ட வேளாண்மை விற்பனைத்துறை அலுவலர்களைத் தொடர்பு கொண்டு ஊராட்சிகளில் ஊரக கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும் வேளாண் பொருட்களுக்கு, குறைந்த வட்டியில், இருப்பின் மதிப்பில் 50 சதம் வரை முன்பணம் வழங்குவதற்கும் ஊராட்சி மன்றம் பரிந்துரைக்கலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்.

01. வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த தான்ய உற்பத்தி திட்டத்தில் (அரிசி) வழங்கப்படும் விதை, பூச்சி பூஞ்சான மருந்துகள், பயிர் பாதுகாப்பு கருவிகள் உயிர் உரங்கள் போன்ற இடு பொருட்களை வாங்குவதற்கு பயனாளிகளை ஊக்குவித்து, வழங்கப்படுவதை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள், ஒன்றிய வளாகத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் செயல்படுத்தலாம்.

02. மேலே குறிப்பிட்ட ஒருங்கிணைந்த தான்ய உற்பத்தி திட்டத்தைப் போலவே வேளாண் துறையில் செயல்படுத்தப்படும், இதர திட்டங்களான நெல், சிறுதான்யங்கள் பருத்தி பயறு வகைகள், மற்றும் எண்ணெய் வித்து பெருக்க/உற்பத்தி திட்டங்களிலும் வழங்கப்படும் பல்வேறு மான்யங்களுக்கும், தகுதியான தேவையுள்ள பயனாளிகளை தேர்வு செய்து வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்படுவதை செயல்படுத்தலாம்.

03. சோயா, மொச்சை / அவரை விதைகளை தனி பயிராகவும், ஊடு பயிராகவும், சாகுபடி செய்வதற்கும், விளை பொருட்களை விற்பனை செய்வதற்கான வாய்ப்புக்கள் மற்றும் உள்கட்டுமான அமைப்புகளை ஏற்படுத்தவும், ஊராட்சி ஒன்றிய அளவில் திட்ட மிட்ட ஆலோசனை வழங்கலாம்.

04. வேளாண் விதை பொருட்களைச் சேமித்து வைக்கவும், தற்காலிகமாக கடன் வழங்கவும், ஊராட்சி ஒன்றியங்கள் வாய்ப்புள்ள கிராமங்களை தேர்வு செய்து, சம்பந்தப்பட்ட ஆரம்ப விவசாய கூட்டுறவு வங்கியுடன் தொடர்பு கொண்டு பயிர் கடன் வழங்கவும் மற்றும் ஊரக கிடங்குகள் கட்டுவதற்கும் ஆலோசனை வழங்கலாம்.

05. ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் தோட்டக்கலை துறையினால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் மான்யத்தில் வழங்கப்படும் பழக்கன்றுகளின் தேவைகள் மற்றும் வாய்ப்புக்களை ஆய்வு செய்து அவற்றை பகிர்ந்தளிக்க உதவிடலாம். மேலும் தனியாரால் நிர்வகிக்கப்படு நாற்றங்கால் உற்பத்தியினை ஊக்கப்படுத்தலாம் (ஏற்கனவே, பயனாளிகளை கண்டறிய உதவுவதற்கு அதிகாரம் அரசு நேர்முக கடித எண்.34379/வ (ம) தி) நாள்.11.01.99–ல் வழங்கப்பட்டுள்ளது.)

06. ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் வேளாண்மை சார்ந்த பணிகளை பார்வையிட்டும், கிராம ஊராட்சிகளின் திட்டங்களை ஒருங்கிணைத்தும், உற்பத்தியை பெறுவதற்கு வழிமுறைகளைச் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்து சம்பந்தப்பட்ட முகமைகளுடன் இணைந்து செயல்படுத்திட ஆலோசனை வழங்கலாம். உற்பத்தி பெருக்குவதற்கான வழிமுறைகளையும் விபரங்களையும் உருவாக்கிட ஆலோசனை வழங்கலாம்.

07. இயற்கையின் சீற்றத்தாலோ இதர காரணங்களினாலோ வேளாண் உற்பத்தி பாதிக்கப்படும் தருவாயில், வேளாண் பெருமக்களின் பளுவை குறைக்கவும், நிவாரணம் அளிக்கின்ற முறையிலும், சிறு/குறு விவசாயிகளுக்கு பயிர் காப்புறுதித் திட்டங்களை செயல்படுத்திட ஊராட்சிகள் உதவலாம். உரமான்யம் வழங்கும் திட்டங்களில் சிறு விவசாயிகளுக்கு உரிய முறையில் மான்யங்கள் வழங்க ஆலோசனை வழங்கலாம்.

08. ஊராட்சி ஒன்றிய பகுதிகளுக்குத் தேவைப்படும் வேளாண் இடுபொருட்களைக் கணக்கிட்டு அவைகள் எந்தெந்த பருவ காலத்தில் தேவைப்படும் என்பதையும் ஆராய்ந்து, தேவைப்படும் அளவு இடுபொருட்களை அந்த பகுதிகளுக்கு உரிய காலத்தில் எந்தவித தடைகளும் இன்றி கிடைக்க உதவலாம்.

09. வேளாண் துறையில் விரிவாக்க அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களது சேவையை சரியான முறையில் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள உதவுவதுடன், விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பது சம்பந்தமான ஆலோசனை வழங்கலாம்.

10. இயற்கையின் முக்கிய ஆதாரங்களான நீர்வளத்தையும், நிலவளத்தையும் பேணும் பொருட்டு, வேளாண்மை மற்றும் வேளாண் பொறியியல் துறைகளின் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றது. இவை குறித்து மக்களிடம் தகவல்களை பரப்பி இயற்கை வளங்களை பாதுகாக்க உதவலாம்.

11. முறையான திட்டமிடலுக்கு, சரியான புள்ளி விபரங்கள் தேவை, ஒன்றிய பகுதிகளில் அடிப்படை புள்ளி விபரங்களான மொத்த பரப்பளவு, சாகுபடிப் பரப்பு, பயிர் வாரியான பரப்பளவு, நீர் ஆதாரங்கள் போன்ற புள்ளி விபரங்களை திரட்டுவதற்கு உதவலாம்.

12. ஊராட்சி ஒன்றியங்களில், வேளாண் பருவ காலத்திற்கு முன்பே, ஊராட்சிகள் வாயிலாக ஆண்டு பயிர்த் திட்டங்கள் தயார் செய்து அத்திட்டங்களுக்கேற்ப காலந்தவறாது, அந்தந்த பகுதிகளுக்கு பயிர்க்கடனும், அத்துடன் வாங்கப்படும், உரம், பூச்சி, பூஞ்சான விஷங்களும் வழங்குவதற்கு முன்னோடி வங்கி நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டு கிளை நிறுவனங்களின் மூலம் கடன் வாங்கப்படுவதற்கு ஆலோசனை வழங்கலாம்.

13. அறுவடைக்கு பின், உரிய நேர்த்தி முறைகளைக் கடைபிடிக்காததால் மட்டும், நமது நாட்டின் மொத்த உற்பத்தியில் பத்து விழுக்காடுக்கும், அதிகமான விளை பொருட்கள் சேதமடைந்து வருகின்றன என்பதை வல்லுநர்களின் கணிப்பு. எனவே, ஊராட்சி ஒன்றியங்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள கூட்டுறவு ஒழுங்கு முறை கூடங்களை தொடர்பு கொண்டு விலை பொருட்களை விஞ்ஞான ரீதியாக

சேமித்து வைக்கவும், தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகும் காலங்களில் விளை பொருட்களை குறிப்பாக காய்கறிகள், பழங்கள் போன்றவைகள் பதனிடவும், குளிர் பதன அறைகளை ஏற்படுத்துவது போன்ற பணிகளை மேற்பார்வையிட்டு ஆலோசனை வழங்கலாம். கூட்டுறவு அங்காடிகளுக்கு தேவைப்படும் பல்வகை பொருட்களுக்கு ஏற்ப வேளாண் திட்டங்களை வகுத்து அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படுவதற்கு ஆலோசனை வழங்கலாம். இது தொடர்பாக பயிற்சிகளை திட்டமிட்டு செயல்படுத்தவும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஏனைய முகமைகள் மூலம் விளை பொருட்களை பதனிடுதல், விற்பனை செய்தல் ஆகிய பணிகளை திட்டமிட்டு, அதற்கான உள் கட்டமைப்புகளை மேம்படுத்தவும் ஆலோசனை வழங்கலாம்.

## பிற்சேர்க்கை 2

## மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கான திட்டமிடுதல்.

கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான வளர்ச்சி திட்டத்தை உருவாக்குவதற்கு பின்வருமாறு வேளாண்மை துறை அலுவலர்கள் ஒவ்வொரு பகுதி வளர்ச்சி திட்டத்திற்கும் பொறுப்பேற்று உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவி புரிவார்கள்.

| வ. எண் | பொருள் | துறை | திட்டம் தயாரிக்க பொறுப்புடைய அலுவலர்கள். |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| அ. கிராம ஊராட்சி | | | |
| 1 | உற்பத்தி மற்றும் பாதுகாப்பு | வேளாண்மை (ம) தோட்டக்கலைத்துறை | வேளாண்மைஅலுவலர், தோட்டக்கலை அலுவலர் |
| 2 | மண்வளம், நீர்வளம், பாதுகாப்பு | வேளாண்மை மற்றும் வனத்துறை | வேளாண்மை அலுவலர், வனச்சரகர் |
| 3 | பாசனப் பகுதி மேம்பாடு | வேளாண்மை பொறியியல் துறை. | உதவிப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) |
| ஆ. ஊராட்சி ஒன்றியம். | | | |
| 1 | பயிர் உற்பத்தி மற்றும் பாதுகாப்பு | வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை. | உதவி வேளாண்மைஅலுவலர். |
| 2 | மண்வளம், நீர்வளம் பாதுகாப்பு மேம்பாடு | வேளாண்மை மற்றும் வனத்துறை | மாவட்ட வன அலுவலர், |
| 3 | பாசன பகுதி மேம்பாடு | வேளாண்மை பொறியியல் துறை. | உதவிப் பொறியாளர் (வே.பொ). |
| இ. மாவட்ட ஊராட்சி. | | | |
| 01. | பயிர் உற்பத்தி மற்று" பாதுகாப்பு | வேளாண்மை மற்று" தோட்டக்கலைத்துறை. | சூவளாண்மை இணை இயக்குநர் மற்று" உதவி இயக்குநர் தோட்டக்கலைத் துறை |
| 02. | மண்வள", நீர்வள" பாதுகாப்பு | வேளாண்மை மற்று" வனத்துறை | மாவட்ட வன அலுவலர், மேற்பார்வை பொறியாளர் (வே பொ). |
| 03. | பாசனப் பகுதி மே"பாடு | வேளாண்மைப் பொறியியல் துறை. | உதவிப் பொறியாளர் (வே.பொ). |

## மாவட்ட ஊராட்சிகள்.

01. விவசாய மற்றும் தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியினைப் பெருக்கும் பொருட்டு மாவட்டத்திற்கான விவசாய வளர்ச்சி திட்டம் ஒன்றினைத் தயாரிக்க மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரம் அளிக்கலாம்.

02. விவசாய உற்பத்தி குழுவின் உதவியுடன் மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் தேவைகளை காலமுறை வாரியாக கண்டறிந்து தேவையான ஆலோசனைகளை வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனை இயக்குநர்கள் மற்றும் வேளாண்மை பொறியியல் துறையின் தலைமை பொறியாளர் ஆகியோருக்கு வழங்கலாம்.

03. விவசாயத் துறையின் ஆராய்ச்சி பூர்வமாக ஏற்படும் தொழில் நுட்பங்களை விவசாயிகளிடம் பரப்பும் பொருட்டும், மேற்கொண்டு ஆலோசிப்பது குறித்தும், ஆண்டிற்கு ஒருமுறை வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகளின் பிரதிநிதிகளைக் கொண்டு கருத்தரங்கினை மாவட்ட ஊராட்சிகள் தங்கள் மாவட்டங்களில் நடத்த தேவையான ஏற்பாடுகளையும் உதவிகளையும் செய்யலாம்.

04. வேளாண் விளை பொருட்களை விஞ்ஞான முறைப்படி சேமிக்கவும், குளிர்பதன வசதிகள் செய்வதும், விற்பனைக்கான உள் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்கான ஆலோசனைகள் வழங்கலாம். மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் ஒவ்வொரு அமைப்புகளும் பணிகளை வரையறுத்து மேற்படி பணிகளை செயல்படுத்தவும், மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் அனைத்து வேளாண் திட்டங்களையும், வேளாண்மை வளர்ச்சிக்காகவும், ஆலோசனை வழங்கலாம். வேளாண் சார்ந்த பயிர்க்கடன் கிணறு போன்ற உள்கட்டமைப்புக் கடன்களை சுணக்கமின்றி உரிய காலத்தில் கிடைப்பதற்கும், இதர வேளாண் இடு பொருட்களான தாவர விதைகள், உரங்கள் பூச்சி பூஞ்சான விஷக்கொல்லிகள் போன்ற அனைத்து பொருள்களும் உரிய நேரத்தில் கிடைக்க ஏற்பாடு செய்ய மேற்பார்வையிட்டு ஆலோசனை வழங்கலாம்.

05. மாவட்ட அளவில் தனியார் மற்றும் அரசு விதை விநியோக நிறுவனங்களின் மூலம் தரமான விதைகள் விற்பனை செய்யப்படுகின்றதா என்பதை ஆய்வு செய்வதற்கு சம்பந்தப்பட்ட விதை சான்று துறைகளுக்கு ஆலோசனை வழங்கலாம்.

06. மாவட்ட ஊராட்சிகள், மாவட்டத்தில் முதன்மை நிறுவன அமைப்பு என்ற முறையில் அம்மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள், கிராம ஊராட்சிகளின் மக்கள் பிரதி நிதிகளுடன் கலந்தாலோசித்து, அவ்வப் பகுதிகளின் வேளாண் தேவைகளையும் அதன் அளவுகளையும், ஆராய்ந்து வேளாண்மை துறையின் சம்பந்தப்பட்ட மாவட்ட, கோட்ட, வட்டார மற்றும் ஊராட்சிகளின் மட்டங்களில் உள்ள அலுவலர்களின் மூலம் ஒருங்கிணைந்து தானிய மேம்பாட்டு திட்டம் போன்ற திட்டங்களுக்கு ஆலோசனைகளை மாவட்ட ஊராட்சிகள் வேளாண்மை துறைக்கு வழங்கலாம்.

## பிற்சேர்க்கை 3

ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள்

### ஊராட்சி ஒன்றியங்கள்.

01. உதவி செயற் பொறியாளர் வேளாண்மை பொறியியல் துறை மற்றும் உதவி இயக்குநர், வேளாண்மைத் துறை, ஆகியோருடன் வறட்சி பகுதி மேம்பாட்டு திட்டத்தை ஆய்வு செய்யலாம்.

02. உதவி செயற் பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை மற்றும் உதவி செயற்பொறியாளர், நீர் ஆதாரத்துறை , ஆகியோருடன் சிறுபாசன சிறப்பு திட்டத்தை (முன்னாள் ஜமீன் குளங்கள் மற்றும் பொதுப்பணித்துறை குளங்கள் ) ஆய்வு செய்யலாம்.

### மாவட்ட ஊராட்சி

01. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி திட்டம் பற்றி இணை வேளாண்மை இயக்குநர் அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.

02. தேசிய பயிறு வகைகள் உற்பத்தி திட்டம் பற்றி இணை வேளாண்மை இயக்குநர் அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.

03. வறட்சி பகுதி மேம்பாட்டு திட்டம் பற்றி திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையுடன் ஆய்வு செய்யலாம்.

04. மண்வளப் பாதுகாப்புத் திட்டம் பற்றி செயற் பொறியாளர் வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.

05. மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பாசன வசதிகளான குளங்களை கட்டுதல் பற்றி செயற் பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை (மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டு திட்டம்) அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.

**ஒம்/—நா.ஆதிமூலம்.**
அரசு செயலாளர்.

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு மேலும் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்க உயர் நிலைக் குழுவின் பரிந்துரை – ஊரக வீட்டு வசதி – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

### வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (கூட். 1) துறை

**அரசாணை (நிலை) எண். 292** நாள் 14.7.1999.

1. அரசு ஆணை (நிலை) எண். 340 ஊரக வளர்ச்சித்துறை நாள் 3.12.1997.
2. அரசு செயலாளர் ஊரக வளர்ளச்சித்துறை அவர்களிடமிருந்துபெறப்பட்டநேர்முக கடித எண். 14532/சி4/99 நாள் 11.5.1999.

******

**ஆணை:**

இந்திய அரசியலமைப்பு சட்டம், அட்டவணை 4–ல் மாநில அரசுகள், உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க வேண்டிய 29 பொருள்கள் என்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி மாநிலத் திட்டக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று, “ஊரக வீட்டு வசதி” என்ற தலைப்பில், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் ஒப்படைப்பு செய்து பார்வை ஒன்றில் கண்ட அரசு ஆணையில் ஆணை வெளியிடப்பட்டது. இரண்டாவது கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை அரசுக்கு 11.1.1999 அன்று சமர்ப்பித்தது.

2. உயர்நிலைக் குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து 3.5.1999 மற்றும் 4.5.1999 ஆகிய நாட்களில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மீது நடவடிக்கை மேற்கொண்டு அரசாணை வெளியிடுமாறு பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சித்துறை, இத்துறையைக் கேட்டுக் கொண்டுள்ளது.

3. மேற்குறிப்பிட்டுள்ள அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை இத்துறை நன்கு பரிசீலினை செய்த கீழ்கண்டவாறு மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் ஒப்படைப்பு செய்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

## கிராம ஊராட்சிகள்

1. வீடு இல்லாதவர்களுக்கு வழங்கப்படக்கூடிய வீட்டுமனைகள் மற்றும் ஊரக வீட்டுவசதி திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டக்கூடிய வீடுகளுக்கான ஒட்டுமொத்தத் தேவையை கணக்கிட்டு விவரங்களை பராமரித்தல்.

2. வீட்டுமனைகள் / வீடுகள் கட்ட தகுந்த நிலங்களை கண்டறிந்து அதன் விவரத்தை பராமரித்தல்.

3. வீடுகட்டுவதற்கான மனைகளை பகிர்ந்தளிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உதவுதல்.

4. ஊரகப் பகுதியில் சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவினருக்கு வீட்டு வசதித் திட்டங்களில் தகுதியுள்ள பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல்.

5. ஊரக வீட்டு வசதியை மேம்படுத்துவதில் கூட்டுறவு அமைப்புகளுக்கு உதவுதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

6. வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் வழங்கும் வகையில் வீடுகட்ட பயனுள்ள மனைகளை கண்டறிந்து கையகப்படுத்திய நிலங்களை முறையாகப் பகிர்வு செய்தல்.

7. ஊரக வீட்டு வசதி திட்டங்களின் செயல்பாட்டுக்கு வழிகாட்டி, தேவையான தொழில் நுட்ப உதவியை, கிராம ஊராட்சிகளுக்கு அளித்தல், ஊரக வீட்டு வசதிக்காக பல்வேறு திட்டங்களின் கீழ்கட்டுமானத்திற்காக கட்டிடப் பொருட்கள் வழங்குதல், ஊரக வீட்டு வசதி திட்டங்களை திறம்பட செயல்படுத்த ஆய்வுக்குழுக்களை அமைத்து அதன் செயலை மேற்பார்வையிடல் போன்ற பணிகளை மேற்கொள்ளல்.

8. ஊரக வீட்டு வசதி திட்டங்களின் செயல்பாடுகள் / சிறப்பான முறையில் நடைபெற மேற்பார்வையிடவும், கட்டுமானப் பணிகளின் தரத்தினை மேற்பார்வை செய்யவும் மற்றும் ஆய்வும் மேற்கொள்ளல்.

## மாவட்ட ஊராட்சிகள்

9. மாவட்டத்தில், ஊரக வீட்டுவசதிக்கான திட்டங்கள் தீட்டும்போது அம்மாவட்டத்தின் எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு, திட்டமிட்டு, மாவட்டத்திலுள்ள அனைவருக்கும் ஒருவீடு என்ற கொள்கையை நிறைவேற்றலாம். இதற்கான ஒருங்கிணைந்த திட்டத்தை தயாரித்து, பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் மூலம் இத்திட்டங்களை செயலாக்கலாம். மாவட்டத்திலுள்ள கட்டிட மையத்தின் தொழில் நுட்ப ஆலோசனைகளைப் பெற்று கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஆலோசனைகள் வழங்குதல்.

10. மாவட்ட ஊராட்சிகள் தங்கள் பகுதிகளிலுள்ள ஊரக வீட்டு வசதித் திட்டங்களின் செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டு அறிவுரைகள் வழங்குதல்.

4. மேலே பத்தி 3–ல் (1) முதல் (10) வரை ஆணையிட்டுள்ளவாறு நடைமுறைப்படுத்த தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிறப்பு அலுவலர் ஊரக வீட்டு வசதிக் கழகம் / கூட்டுறவுப் பதிவாளர் (வீட்டு வசதி) வீட்டு வசதி இணையம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**என். கோவிந்தன்**
அரசு செயலர்

# தற்போதைய உயர்நிலைக்குழுவின் இடைக்கால பரிந்துரைகளின் அடிப்படையில் வெளியிடபட்டுள்ள அரசாணைகளின் தொகுப்பு

| | | |
|---|---|---|
| 1 | அரசாணை (நிலை) எண். 131, ஊ.வ. (ம) ஊராட்சித் (சி1) துறை, நாள்16.3.07 | உள்ளாட்சி அமைப்புகள்—உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், அவ்வமைப்புகளை பிரித்தல் மற்றும் சேர்த்தல் தொடர்பான நடைமுறையியல் ஆணை வெளியிடப்பட்டது. |
| 2 | அரசாணை (நிலை) எண். 632, ஊ.வ. (ம) ஊராட்சித் (சி1) துறை, நாள் 26.10.07 | விழாக்கள்—"உள்ளாட்சிகள் தினவிழா" ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஆண்டுதோறும் நவம்பர் முதல் நாளன்று "உள்ளாட்சிகள் தினவிழா" கொண்டாடுவது தொடர்பாக ஆணையிடப்படுகிறது. |
| 3 | G.O.Ms.No. 199, Finance Dept., dated25.5.07 | State Finance Commission- Recommendations of third SFC -Recommendations on the devolution of resources from the State Government to local bodies-Orders issued. |
| 4 | G.O.Ms.No. 126, RD & PR (C2) Dept., Dated 12.7.07 | RD & PR-SFC-Grant release funds to RLBs for months April-2007 to January 2008- a minimum Grant Rs.3 lakhs to each Village Panchayat Orders issued. |
| 5 | G.O.Ms.No.19, R.D. & P.R. (C2) Dept., dated 26.6.07 | Twelfth Finance Commission Grants to Panchayat Union-Village Panchayats -Utilisation of Grants Orders issued. |
| 6 | அரசாணை (நிலை) எண். 146, ஊ.வ. (ம) ஊராட்சி (சி4) துறை, நாள் 17.8.07 | கிராம ஊராட்சிகள்—கிராம ஊராட்சிகள் கணக்குகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் முறையாகப் பராமரித்தல் தொடர்பான வழிமுறைகள்—ஆணை வெளியிடப்படுகிறது. |
| 7 | G.O.Ms.No. 141, RD & PR (SGS-1), dated 9.3.07 | Rural Development and Panchayat Establishment – Conferring Financial autonomy to BDOs(V.P) Authorizing DRD to operate certain Heads of accounts-Orders issued. |

| | | |
|---|---|---|
| 8 | G.O.Ms. No. 71.<br>R.D. & P.R.<br>(SGS-IV) Dept.,<br>dated 25.4.07 | RD Dept.-Part-II Scheme-Orders-Provision of vehicles to District level officers-Sanction of Rs.72.00 lakhs-Orders issued. |
| 9 | G.O.Ms.No.72/<br>R.D. & P.R.<br>(SGS-IV) Dept.,<br>dated 25.5.07 | RD Dept.-Part-II Scheme 07-08-Provision of 105 five door hard top vehicles-Sanction of Rs. 472.00 lakhs-Orders issued. |
| 10 | ஆரசாணை<br>(நிலை)எண்.<br>118/ஊ.வ.<br>(மாஅதி–4)துறை,<br>நாள் 2.7.07 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை – கிராம ஊராட்சிகள் அனைத்து கிராம ஊராட்சிகளக்கும் தொலைபேசி வசதி செய்து தருதல்–ஆணை வெளியிடப்படுதல். |
| 11 | அரசாணை (நிலை)<br>எண்.134, ஊ.வ.(ம)<br>ஊராட்சி<br>(மாஅதி–4) துறை,<br>நாள் 2.8.07 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை – 24 மாவட்ட மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு ரூ.3.76 கோடி செலவில் சாதனங்கள் நிறுவுதல்–ஆணை வெளியிடப்படுகிறது. |
| 12 | G.O.Ms.No. 103,<br>RD & PR(C3) Dept,<br>dated 19.6.07 | Training-Training to PRI functionaries Allocation of funds-Creation of Training Corpus fund-Orders issued. |
| 13 | அரசாணை (நிலை)<br>எண். 172, ஊ.வ.(ம)<br>ஊராட்சித்துறை, நாள்<br>15.10.07 | நமக்கு நாமே திட்டம் 2007–08 முதல் மீண்டுல் செயல்படுத்துவது குறித்த ஆணை மற்றும் திட்ட செயல்பாட்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படுகிறது. |
| 14 | G.O.Ms.No. 94 RD<br>PR (SGS-4) Dept.,<br>dated 12.6.07 | Rural Development and Panchayat Raj Department-Panchayat Union School Renovation Programme Guidelines-Sanction of funds-Orders issued. |
| 15 | G.O.Ms.No.177,<br>RD & PR<br>(SGS/II)Dept.,<br>dated 25.10.07 | Schemes-Rural Development and Panchayat Raj – Anaithu Grama Anna Marumalrchi Thittam AGAMT Libraries-Appointing Honorary Librarians out of Village Panchayat funds Guidelines-Orders issued. |

| | | |
|---|---|---|
| 16 | அரசாணை (நிலை) எண். 80, ஊ.வ. (ம) ஊராட்சித் (மாஅதி–2)துறை, நாள் 30.5.07 | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்துதல், விளையாட்டு அமையங்கள் அமைத்தல், விளையாட்டு சாதனங்கள் பராமரித்தல், பழுதுநீக்குதல் செலவினம் ஊராட்சி தலைவர்களுக்கு அனுமதி அளித்தல்–ஆணை வெளியிடப்படுகிறது. |
| 17 | G.O.Ms.No. 95, Energy (D2) Dept., dated 12.10.07 | Electricity-Reduction on Electricity Tariff rates to the Local Bodies, Tamil Nadu Water Supply and Drainage Board and the Chennai Metropolitan Water Supply and Sewerage Board with effect from 12.4.2007 under LT Tariff II-A-Subsidy of Rs.44.44 crores to Tamil Nadu Electricity Board Snactioned-Orders-Issued. |
| 18 | அரசாணை (நிலை) எண். 111, , ஊ.வ.(ம) ஊராட்சித் (மாஅதி) துறை, நாள் 26.6.07 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை–தெருவிளக்கு விரிவாக்கப் பணிகள் புதிய மின்கம்பம் ஒன்றுக்கு நிலையான கட்டணம் ரூ.9500/– ஆணையிடப்படுகிறது. |
| 19 | Govt.Lr.No. 77, Energy (C3) Dept., dated 14.8.07 | Reduction of Belated payment Surcharge (BPSC) levied on Local bodies-waiver of Outstanding as on 13.3.2007 by Tamil Nadu Electricity Board directive issued. |

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

உள்ளாட்சி அமைப்புகள் – உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், அவ்வமைப்புகளை பிரித்தல் மற்றும் சேர்த்தல் தொடர்பான நடைமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி1) துறை

**அரசு ஆணை (ப) எண்.131** நாள் 16.3.2007

படிக்கப்பட்டவை.

அரசு ஆணை (நிலை) எண்.113, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 26.9.1999.

*****

**ஆணை**

உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், அவ்வமைப்புகளைப் பிரித்தல் மற்றும் சேர்த்தல் தொடர்பான வேண்டுகோள் அரசில் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

2. 17.2.2007 அன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் மாவட்ட அளவிலான குழுக்கள் அல்லது மாநில அளவிலான குழுக்கள் அமைக்க வேண்டிய அவசியமில்லை என்றும், மேலும் மாவட்ட ஆட்சியர்கள் பொது குறை கேட்கும் நாளில் அமைச்சரவைக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி அரசளவில் முடிவெடுக்க கருத்துருக்களை அனுப்பவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது.

3. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கீழ்க்கண்ட வழிமுறைகளின்படி, பொதுகுறை கேட்கும் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**I. உள்ளாட்சி அமைப்புகளின் நிலையை உயர்த்துதல்:**

(i) ஊராட்சிகளிலிருந்து பேரூராட்சிகளாக

(ii) பேரூராட்சிகளிலிருந்து நகராட்சிகளாக

(iii) நகராட்சிகளிலிருந்து மாநகராட்சிகளாக

**II. உள்ளாட்சி அமைப்புகளின் நிலையை குறைத்தல்:**

(i) பேரூராட்சிகளிலிருந்து ஊராட்சிகளாக

(ii) நகராட்சிகளிலிருந்து பேரூராட்சிகளாக

**III. உள்ளாட்சி அமைப்புகளை சேர்த்தல் மற்றும் ஒன்றிணைத்தல்:**

(i) ஒரு ஊராட்சியை முழுவதுமாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ, அருகாமையில் உள்ள ஊராட்சி அல்லது பேரூராட்சி அல்லது நகராட்சி அல்லது மாநகராட்சி ஒன்றுடன் இணைக்கப்படலாம்.

(ii) ஒரு பேரூராட்சியை முழுவதுமாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ, அருகாமையில் உள்ள ஊராட்சி அல்லது பேரூராட்சி அல்லது நகராட்சி அல்லது மாநகராட்சி ஒன்றுடன் இணைக்கப்படலாம்.

(iii) ஒரு நகராட்சியை முழுவதுமாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ, அருகாமையில் உள்ள நகராட்சி அல்லது மாநகராட்சியுடன் இணைக்கப்படலாம்.

**IV. உள்ளாட்சி அமைப்புகளைப் பிரித்தல்:**

(i) மிகப்பெரிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல்.

(ii) மிகப்பெரிய ஊராட்சிகளைப் பிரித்தல்.

(iii) மிகப்பெரிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைப் பிரித்தல்.

**V. மேலே குறிப்பிடப்படாத காரணங்கள் இல்லாமல் அவசியம் என்று கருதப்படுபவை:**

உதாரணமாக, ஒருநகரியத்தில் வாழ்கின்ற மக்கள் அந்நகரியம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சிகளாக பிரிக்கப்பட வேண்டும் என்று விரும்பலாம் அல்லது பேரூராட்சி அல்லது நகராட்சி அல்லது மாநகராட்சி ஒன்றின் எல்லைப் பகுதியில் வாழ்ந்துவரும் மக்கள் அவ்வமைப்பின் அருகில் உள்ள வேறொரு வகையைச் சார்ந்த உள்ளாட்சி அமைப்புடன் இணைக்கப்படவேண்டும் என்று விரும்பலாம் அல்லது தற்போது எந்த ஒரு உள்ளாட்சி அமைப்பின் பகுதியாகவும் இல்லாத தொழில் நகரியங்களில் வாழ்ந்து வரும் மக்கள் அந்நகரியம் ஒரு உள்ளாட்சி அமைப்பாக்கப்படவேண்டும் என்று விரும்புவது போன்றவை.

4. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்துருக்களை அரசுக்கு அனுப்பும்பொழுது கீழ்க்கண்ட ஆய்வு நடைமுறைகளை பின்பற்றவேண்டும்.

(i) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முதல் கூட்டம் நடத்த வேண்டும். இதற்கான அறிவிப்புக் கடிதங்கள் அனைத்து சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள், பெயர்பெற்ற தன்னார்வ தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் சங்கங்கள் போன்றவைகளுக்கும் அனுப்பப்படவேண்டும். இக்கூட்டத்தைப் பற்றி பொதுமக்களுக்கு உள்ளூர் ஊடகங்களின் வாயிலாக பெரிய அளவில் விளம்பரப்படுத்தப்படும். இவை உள்ளூர் மூலம் விளம்பரம் செய்வதால் பொதுமக்கள் எளிதில் அறிய வாய்ப்பு உண்டாகும். இந்த கூட்டத்தின் நோக்கங்கள் அனைவருக்கும் விளக்கப்படும். எல்லைவரையறை தொடர்பான விவகாரங்களை கண்டறிய மற்றும் கோரிக்கைகளை வரையறுக்கப்பட்ட படிவங்களில் தேவையான தீர்மானங்களுடன் அளிக்க, தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு ஒரு மாத கால அவகாசம் அளிக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / நகரக உள்ளாட்சி மற்றும் ஊராட்சி, உள்ளாட்சி ஆய்வாளர்கள் உரிய சட்டத்தின் கீழ் உள்ள நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

(ii) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இரண்டாவது கூட்டத்தில் பெறும் கருத்துருக்களை பரிசீலனை செய்யவேண்டும். தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளின் கருத்துக்கள்

தனித்தனியாக கேட்கப்படும். அரசியல் கட்சிகள் மற்றும் கோரிக்கைகள் அளித்துள்ளவர்களின் கருத்துக்களும் கேட்கப்படும். கூடுமானவரை விசாரணைகள் தொடர்ந்து நடத்தப்படும். ஓரிரு நாட்களில் விசாரணைகள் முடிக்கப்பட இயலவில்லையெனில், ஒரு சிறிய இடைவெளிக்குப்பிறகு வேறொரு தேதியில் குழுவின் விசாரணைகளை முடிக்கலாம். குழுவிடம் தெரிவிக்கப்படும் கருத்துக்களின் அடிப்படையில் துறைத் தலைவர்கள் தமது வரைவு பரிந்துரைகளை தயார் செய்யவேண்டும்.

(iii) சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு வரைவு பரிந்துரைகள் அனுப்பப்பட வேண்டும். அதே சமயத்தில் இதன் மீது மாற்றுக் கருத்துக்களையும் தெரிவிப்பதற்காக உள்ளூரில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலகங்கள் உள்ளிட்ட குறிப்பிடப்பட்ட பொது அலுவலகங்களில் பரிந்துரைகள் வெளியிடப்படும்.

(iv) தேவையானால் துறைத் தலைவர்கள் மாவட்ட அளவில் மூன்றாவது கூட்டத்தை கூட்டி வரைவு பரிந்துரை மீதான விண்ணப்பம் மற்றும் ஆட்சேபனைகளை பெறலாம். துறைத் தலைவர்கள் தங்களுடைய இறுதி பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பலாம்.

5. தற்போது பதவி வகித்துவரும் உறுப்பினர்களின் பதவிக் காலம் பாதிக்கப்படமாட்டாது என அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெளிவுரை வழங்கலாம்.

6. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொதுமக்களிடம் கருத்துக்களைக் கேட்கும் பணிகளைத் தொடங்கி, வரைவு பரிந்துரைகளைத் தயார் செய்து, அரசுக்கு அனுப்பி வைக்கலாம். ஆனால் மத்திய அரசின் தொகுதி சீரமைப்புக் குழு (Delimitation Commission) தன் இறுதி அறிவிக்கை வெளியிட்ட பின்னர் தான் தமிழக அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகளின் மீது இறுதி ஆணை வெளியிடும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்.

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

விழாக்கள் – "உள்ளாட்சிகள் தின விழா" ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஆண்டு தோறும் நவம்பர் முதல் நாளன்று "உள்ளாட்சிகள் தின விழா" கொண்டாடுவது தொடர்பாக ஆணையிடப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி 1) துறை**

**அரசு ஆணை (ப) எண். 632** நாள் **26.10.2007**

**ஆணை :**

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மக்களுக்கும் இடையேயான தொடர்புகளை மற்றும் நல்லுறவினை மேம்படுத்துகின்ற வகையிலும் இவற்றின் பணிகளை சம்பந்தப்பட்ட பகுதிகளில் வாழுகின்ற மக்களுக்கு தெரிவிக்குமை வகையிலும், "உள்ளாட்சிகள் தினவிழா" நடத்துவது என்று அரசு ஆணையிடுகிறது.

2. இத்தினத்தன்று, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்த சுவரொட்டிகள், விளம்பர பதாகைகள் நிறுவுதல், நிறைவேற்றப்பட்ட வளர்ச்சிப் பணிகள், பொது மக்களுக்கு அறிவித்தல், விழிப்புணர்வு பேரணிகள், கருத்தரங்கங்கள், மக்கள் குறை தீர்க்கும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து நடத்துதல், தேசிய மாணவர் சேவை இயக்கம் மற்றும் தன்னார்வ அமைப்புகள் ஒத்துழைப்புடன் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கட்டிடங்களை சீர்படுத்துதல், வண்ணம் தீட்டல், சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் மாணவ, மாணவியருக்கு உள்ளாட்சி நிர்வாகம் குறித்த பேச்சுப் போட்டி, பொது அறிவுப் போட்டிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து நடத்த வேண்டும்.

3. இத்தகைய நடவடிக்கைகளுக்குத் தேவையான செலவினை சம்பந்தப்பட்ட ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகள் தமது நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

( ஆளநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசுச் செயலர்.

## GOVERNMENT OF TAMIL NADU

### Abstract

State Finance Commission – Recommendations of the Third State Finance Commission – Recommendations on the devolution of resources from the State Government to local bodies – Orders – Issued.

### FINANCE (FINANCE COMMISSION – IV) DEPARTMENT

**G. O. No.199, Dated 25th May 2007**

(Sarvajith, Vaikasi-11, Thiruvalluvar Aandu –2038)

Read:

1. G. O. Ms.No.573/Finance (FC.IV) Department, dated: 1.12.2004.
2. G. O. Ms.No.584/Finance (FC.IV) Department, dated: 14.12.2004.
3. G. O. Ms.No.440/Finance (FC.I) Department, dated: 13.12.2005.

**ORDER:**

Based on 73rd and 74th amendments to the Constitution of India and the concomitant State Legislations, Third State Finance Commission was constituted in the Government Order first read above to study the financial position of rural and urban local bodies and to make its recommendations to the Government. In the Government Order second read above, the Terms of Reference to the Third State Finance Commission was issued. The Third State Finance Commission submitted its report to His Excellency the Governor of Tamil Nadu and Hon'ble Chief Minister on 30.9.2006.

2. The Government examined all the recommendations of the Third State Finance Commission including the recommendations on the devolution of resources from the State's Own Tax Revenue and transfer of Assigned Revenue. The decisions taken by the Government on the recommendations on the devolution of resources from the State Government to the local bodies were announced in the Budget speech on 23.3.2007. Moreover, the explanatory memorandum on the action taken by the State Government on the recommendations of the Third State Finance Commission was placed on the floor of the Assembly on 10.5.2007.

3. The Government have carefully examined the recommendations of the Third State Finance Commission and issue the following orders:

i. Considering the buoyancy of State's Own Tax Revenue and the sizeable increase in the quantum of State Finance Commission devolution even by increasing 1% and State Government's commitments, **the Government have decided that the devolution of funds from State's Own Tax Revenue for the year 2007-08 will be at 9%.** The devolution of funds for the remaining years of the award period will be issued during the years to follow.

ii. For arriving at the net State's Own Tax Revenue for the purpose of devolution of grants, Tamil Nadu Rural Road Development Fund, other surcharges including specific surcharges and collection charges for tax administration heads alone shall be deducted.

iii. The recommendation of the Third State Finance Commission **to adopt the existing vertical sharing ratio of 58 : 42 between rural and urban local bodies shall be followed during the award period.**

iv. The 58% share rural local bodies in the devolution grant shall be distributed **to Village Panchayats, Panchayat Unions and District Panchayats in the ratio of 60:32:8 respectively as recommended by the Third State Finance Commission.**

v. The Government shall **reserve 5% from out of 60% share of the Village Panchayats** from State Finance Commission devolution towards infrastructure gap filling fund.

vi. From **out of the infrastructure gap filling fund, 50% shall be allocated towards Anaithu Grama Anna Marumalarchi Thittam and out of the balance 50% of the fund,** a part of the amount shall be allocated to the Director of Rural Development for providing basic amenities in the Districts and the rest shall be allocated to the Districts based on population and the District Collectors shall utilize the funds for the same purpose.

vii. **A minimum grant of Rs.3 lakhs to each Village Panchayat** shall be provided as a measure of equalization, from out of the Village Panchayats' share of 55%. The balance amount shall be distributed based on population.

viii. As recommended by the Third State Finance Commission, the 42% share of urban local bodies in the devolution grant shall be **distributed to Municipal Corporations, Municipalities and Town Panchayats in the ratio of 30:41:29 respectively.** The Government shall set **apart 3% towards infrastructure gap filling fund and 2% for Operation and Maintenance gap filling fund** from out of the share of each tier.

ix. A minimum **State Finance Commission grant of Rs.10 lakhs shall be provided to each Town Panchayat** as in the case of Village Panchayats and the balance grant shall be distributed based on population.

x. From **out of the devolution share of Chennai Corporation, 10% shall be distributed to Chennai Metropolitan Water Supply and Sewerage Board.** The amount devolved to the Board shall be spent on development schemes only.

xi. The devolution grant shall be distributed within each tier or rural and urban local bodies based on 2001 population.

xii. The Government Orders on the basis to be adopted for distribution of funds among various Local Bodies would be issued separately by the respective departments in consultation with Finance Department.

xiii. **The 5% infrastructure gap filling fund for rural local bodies and 3% infrastructure gap filling fund and 2% Operation and Maintenance gap filling fund for urban local bodies shall be deducted from the devolution share of concerned tier of rural / urban local bodies. The balance devolution grant shall be released in 10 monthly installments (from April to January)** as per the existing procedure based on Budget Estimate provisions and the balance based on Revised Estimate provisions for State's

Own Tax Revenue. Necessary funds shall be made available in the Budget of Director of Rural Development / Commissioner of Municipal Administration / Director of Town Panchayats. The orders relating to this would be issued by Rural Development and Panchayat Raj Department, Municipal Administration and Water Supply Department in consultation with Finance Department. Based on Accounts, if any adjustments have to be made, the same would be adjusted in the first quarter of the following next year.

xiv. Further, the arrears in devolution due to Urban Local Bodies shall be released in **3 annual installments and the excess devolution made to Rural Local Bodies shall also be deducted in 3 installments as on 1.4.2007.**

xv. The pension commitment of local body pensioners shall be deducted from the devolution meant for the respective local bodies instead of respective tiers.

xvi. The Government orders on the decision taken on the other recommendations of the Third State Finance Commission as given in the Action Taken Report will be issued separately by the respective departments in consultation with Finance Department.

xvii. The implementation of the decisions taken by the Government on the recommendations of the Commission and the follow up action taken shall be monitored by the High Level Committee headed by the Chief Secretary to the Government ordered in Government Order third read above, on half yearly basis.

4. The orders issued in para 3 above shall take effect from 1.4.2007. The departments concerned are requested to take necessary follow up action based on the orders issued above.

(BY ORDER OF THE GOVERNOR)

**K. GNANADESIKAN,**

SECRETARY TO GOVERNMENT.

## GOVERNMENT OF TAMIL NADU

### Abstract

Rual Development and Panchayat Raj Department-State Finance Commission Grant- Release of Funds to Rural Local Bodies for the months of April 2007 to January 2008 and a minimum grant Rs. 3 Lakhs to each village Panchayat Order –Issued.

### Rural Development and Panchayat Raj (C2) Department

**G.O. (Ms) No.126** Dated: 12-07-2007

Read :

1. Director of Rural Development and Panchayat Raj Letter Rc. No. 31787/2007/PRI 1.2 dated 25-04-2007.
2. G.O. (Ms) No.199 Finance (FC-IV) Department, dated 25-05-2007.

**ORDER:**

The Hon'ble Minister for Rural Development and Local Administration, while presenting the Rural Development and local Administration demand on 11th and 12th April 2007. announced that the Village Panchayats' share will be raised to 60% of the Devolution grant allocated for Panchayat Raj Institutions to enable them to discharge their onerous duties of provision and maintenance of basic amenities such as drinking water supply, sanitation, roads and street light the Hon'ble Minister also announced that a minimum grant of Rs. 3.00 lakhs each, will be given to all the Village Panchayats from the shared amount of the Village Panchayats and the balance amount shall be apportioned on the basis of population.

2. Based on the announcement , the Director of Rural Development and Panchayat Raj has sent proposal in which he has stated that a sum of Rs. 1, 586 crores have been provided during the year 2007-2008 for rural local bodies as State Finance Commission grant. He has also stated that out of the village Panchayats share of devolution a floor amount of Rs. 3.00 lakhs be given to all the village Panchayats and balance amount be apportioned to the Village Panchayats in proportion to population.

3. The Government have carefully examined the proposal of the Director of Rural Development and Panchayat Raj in the light of the orders issued in G.O. 2nd above and the Budget provision of Rs.158358.71 lakhs , the State Finance Commission grant is distributed as follows:

| | |
|---|---|
| Budget provision for the year 2007-08 for devolution of state finance commission grant | Rs. 158358.71 lakhs |
| Ratio of distribution village Panchayats, panchayat Union and District panchayats | 60:32:8 |

| | |
|---|---|
| 60% of State Finance Commision grants to Village panchayats | Rs. 95015.23: 50674.79 : 12668. 69 lakhs |
| 60% of state Finance Commission grants to village Panchayats | Rs. 95015.23 Lakhs |
| out of this 5% infrastructure gap filling fund | Rs. 7917.94 lakhs |
| 55% state finance commission grants to village panchayts | Rs. 87097.29 lakhs |
| Minimum grant (Rs.3.00Lakhs X 12618 village panchyats ) from the share of state Finance Commission grant to village panchayts | Rs. 37854 lakhs |
| Balance state Finance commission grant to village panchayts | Rs. 49243.29 lakhs |

4. The Government have decided and sanction a minimum grant Rs. 3.00 lakhs at the rate of Rs. 25,000/- p.m. to each village panchayat in 12 monthly instalments The Government also sanction the State Finance Commission grant for 10 months from April 2007 to January 2008 to Rural Local Bodies on the basis of 2001 population as detailed below:-
Rs. in lakhs

(i) Minimum grant to village panchayat from April 2007 to March 2008 (Rs. 25,000 X 12 X 12618) = Rs. 37854 lakhs

(ii) State finance Commission devolution grant from April 2007 to January 2008

| | |
|---|---|
| District Panchayats | Rs. 9049. 06 lakhs |
| Panchayats Union | Rs. 36196.27 lakhs |
| Village Panchayats | Rs. 35173.78 lakhs |

5. The amount sanctioned in para 4 above shall be debited to the following head of accounts.

| | |
|---|---|
| <u>District Panchayat:</u><br><br>3604-00 Compensation and Assignments to local Bodies and Panchayat raj institutions 196- Assistance to Zilla Parishads / District panchayats - I - Non plan - AA - Grants to District Panchayats as per the recommendations of state finance commission controlled by the Director of Rural Development 09. Grants in aid - 02 Grants for capital Expenditure(DPC 3604-00 196-AA-0921) | Rs. 9049.06 Lakhs |
| <u>Panchayat Unions:</u><br><br>3604-00-Compensation and Assignments to local Bodies and Panchayat Raj institution 197- Assistance to Block panchyat – intermedia level panchayat Union as per the recommendations of state finance Commission controlled by the Director of Rural Development – 09 grants in – aid 02. grants for capital expenditure (DPC 3604-00-197-AA-0929) | Rs. 36196.27 lakhs |
| <u>Village panchayat:</u><br><br>3604-00- Compensation and Assignments to local Bodies and Panchayat Raj institution 198 Assistance to gram panchayat as per the recommendations of state finance commission controlled by the director of rural development –09, grants – in – aid -02 grants for capital expenditure (DPC 3604 -00-198-AA-0927 | Rs. 35173.78 lakhs&Rs. 378.54 crores(Minimum grant to 12618 village Panchayat for 12 months) |

6. The Director of Rural Developmet is authorized to draw and disburse the amount sanctioned in para 4 (i) in 12 monthly instalments and the amount sanctioned in para 4(ii) in 10 equal monthly instalments from April 07 to January 08 to the Rural Local Bodies Immediately.

7. The Director of Rural Development is also requsted to make necessary adjustments/ deductions for committed expenditure such as pension commitment excess devolution made to Rural Local Bodies from the devolution meant for the respective local bodies instead of respective tieres, while Distributing the State Finance Commission Devolution grant sanctioned in item to in para 4 above to concerned Rural local body. following the orders issued in this regard by the government after duly reconciling the amount to be deducted with concerned local Bodies / Heads of Departments. The minimum grant to Village panchayat will be used for payment of electricity consumption and water charges so that these services to not suffer.

8. The pay and Accounts officer/ Treasury officer concerned are requested to admit and honor the bills as and when presented by the Director of Rural Development , if they are found otherwise in order

9. This order issued with the concurrence of Finance Department vide Its. U.O. No 37593/RD/07, dated 10-07-2007.

(BY ORDER OF THE GOVERNOR)

**K. ASHOK VARDHAN SHETTY.**
Secretary To Government.

## GOVERNMENT OF TAMIL NADU

### Abstract

Twelfth Finance Commission Grants - to Panchayat Unions, Village Panchayats - Utilisation of Grants - Order - Issued.

### Rural Development and Panchayat Raj (C2) Department

**G.O.(Ms) No.19** Dated :26.2.2007

Read:

1. Guidelines of Twelfth Finance Commission issued by Ministry of Finance, Government of India dated 15.6.2005
2. Minutes of the First High Level Committee Meeting held on 30.12.2005.
3. G.O.Ms.No.157, Rural Development and Panchayat Raj (C2) Department dated 30.10.2006.
4. Director of Rural Development and Panchayat Raj Lr.No.47292 / 2006 / PRI.II.3, dated 19.2.2007.

++++

In the minutes of the first High Level Committee Meeting held on 30.12.2005, a decision was taken that the grants towards Panchayat Raj Institutions will be allocated among Village Panchayats and Panchayat Unions in the ratio of 80 : 20 from 2005-06 onwards and that the financially weaker Village Panchayats may be provided grant of Rs.1.50 Paise per unit of electricity consumption and the financially viable Village Panchayats may be provided with a grant of Rs.0.50 paise per unit.

2. Now the Director of Rural Development and Panchayat Raj has stated that the following difficulties are encountered in the implementation of the orders issued in the G.O. third read above based on the minutes of the first High Level Committee Meeting held on 30.12.2005.

(I) The State High Level Committee has recommended that the Twelfth Finance Commission money be allocated as per the population of the Village Panchayats and also as per the financial condition of the Panchayats. This has been repeated in para 5 of G.O.Ms.No.157, R.D., dated 30.10.2006. Many districts are unclear about the formula to be used in allocating the grants to the Village Panchayats based on the above two criteria.

(II) No indication has been made out in G.O.(Ms) No.157, R.D., dated 30.10.2006 and in the minutes of High Level Committee meeting as to how to classify the Village Panchayats as financially strong / weak.

3. The Director of Rural Development and Panchayat Raj has finally stated that the Village Panchayats that primarily need the grants have to bear the expenditure on operation and maintenance costs of water supply and sanitation. The Panchayat Unions do not have any

such commitment and it has been seen in most of the districts that Village Panchayats are, in most of the instances starved of funds for the purpose of operation and maintenance costs of water supply and street lighting. In the circumstances the Director of Rural Development and Panchayat Raj has requested orders on the following:-

(i) The entire Twelfth Finance Commission grants can be given to the Village Panchayats alone instead of giving to the Village Panchayats and the Panchayat Unions in the ratio of 80:20.

(ii) The clause of allocation of funds to the Village Panchayats in accordance with the financial strength of the Village Panchayats may be deleted and the allocation to the Panchayats may be made only on the basis of the population as was being done earlier to ensure simplicity in allocation of funds at the district level.

(iii) The Twelfth Finance Commission grants can be utilized by the Village Panchayats entirely for the operation and maintenance cost of water supply, street lighting and sanitation as provided for in the Guidelines of Twelfth Finance Commission.

4. The State High Level Committee under the Chairmanship of Chief Secretary has approved the proposal of Director of Rural Development and Panchayat Raj as above. Accordingly, the Government after careful examination issue the following orders:-

(i) The entire Twelfth Finance Commission grants will be given to the Village Panchayats alone instead of giving to the Village Panchayats and the Panchayat Unions in the ratio of 80:20.

(ii) The allocation to the Village Panchayats will be made only on the basis of the population as was being done earlier to ensure simplicity in allocation of funds at the district level.

(iii) The Twelfth Finance Commission grants will be utilized by the Village Panchayats entirely for the operation and maintenance costs of water supply, street lighting and sanitation.

5. This order takes effect from the date of release of second installment of Twelfth Finance Commission for the year 2006-07.

(BY ORDER OF THE GOVERNOR)

**K. ASHOK VARDHAN SHETTY,**
Secretary to Government

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

கிராம ஊராட்சிகள் – கிராம ஊராட்சிக் கணக்குகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் முறையாக பராமரித்தல் தொடர்பான வழிமுறைகள் ஆணை வெளியிடப்படுகிறது.

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி4)துறை

**அரசாணை (நிலை) எண். 146** நாள்– 17.8.2007

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண். 92, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 26.3.1997.
2. அரசு ஆணை (நிலை) எண். 260, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 9.12.1998.
3. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் இயக்குநரின் கடிதம் ந.க.எண். 52964/2007/பரா அ 1–4, நாள் 19.7.2007 மற்றும் 28.7.2007.

*****

**ஆணை:**

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் கிராம ஊராட்சிகளின் கணக்குகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் முறையாகப் பராமரிப்பது தொடர்பான வழிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அந்த அரசாணையிலேயே கிராம ஊராட்சிகளினால் கீழ்க்குறிப்பிட்ட மூன்று வங்கிக் கணக்குகள் பராமரிக்கப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டது.

1. கிராம ஊராட்சி நிதிக் கணக்கு
2. கிராம ஊராட்சிகளின் குறிப்பிட்ட நோக்க ஒதுக்கீடு மானியக் கணக்கு
3. கிராம ஊராட்சி திட்ட நிதிக் கணக்கு.

1. பின்னர் பார்வை இரண்டில் கண்ட அரசாணையில் கிராம ஊராட்சிகளில் குடிநீர் இணைப்புக் கட்டணம் செலுத்துவது தொடர்பாக நான்காவதாக ஒரு வங்கிக் கணக்கினை துவக்க ஆணையிடப்பட்டது. இதன்படி, தற்போது நான்கு வங்கிக் கணக்குகள் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் மட்டும் இத்திட்டத்திற்காக ஐந்தாவதாக ஒரு வங்கிக் கணக்கு ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கூடுதலாகத் துவக்கப்பட்டுள்ளது.

2. வீட்டு வரி, தொழில் வரி, சந்தைகளுக்கு வசூலிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் வாயிலாக கிராம ஊராட்சிக்கு வரவாகும் அனைத்து வரவுகள் மற்றும் கிராம ஊராட்சிகளின் குறிப்பிட்ட நோக்க ஒதுக்கீடு மானியக் கணக்கில் (திட்ட நிதி அல்லாத) மற்ற அனைத்து மானிய இனங்களும் கிராம ஊராட்சி நிதிக் கணக்கில் அடங்கும் மேற்படி கணக்குகள் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவரால் இணைந்து பராமரிக்கப்படுகின்றன. மூன்றாவது கணக்கான கிராம ஊராட்சித் திட்ட நிதிக் கணக்கு தொடர்பான வங்கிக் கணக்கு கிராம ஊராட்சி அளவில் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவரால் இணைந்து பராமரிக்கப்பட்டாலும் சம்பந்தப்பட்ட பொறியாளர்களால் வேலை அளவீடு மற்றும் சரிபார்த்த

அளவீடு செய்யப்பட்டு வட்டார வளர்ச்சி அலுவலரால் (கிராம ஊராட்சிகள்) பட்டியல் அனுமதிக்கப்பட்ட பின்னரே தொகை விடுவிக்கப்பட வேண்டும். தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத்திட்ட கணக்கிற்கும் இதே நடைமுறைதான் பின்பற்றப்பட வேண்டும்.

தற்போது அமுலில் உள்ள முறையில் வலுவற்ற குறைபாடுகள்

தற்போது நடைமுறையில் கீழ்க்காணும் வலுவற்ற குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன:–

1) மின்சார பயனீட்டளவு கட்டணம் மற்றும் குடிநீர் விநியோகக் கட்டணம் செலுத்தாமை:–

மத்திய மற்றும் மாநில நிதிக் குழுவால் கிராம ஊராட்சிகளின் குறிப்பிட்ட நோக்க ஒதுக்கீடு மானிய கணக்கிற்கு அளிக்கப்படும் மானியத் தொகைகளை மின்சாரம் மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்த உபயோகிக்காமல் குறைந்த முக்கியத்துவமே வாய்ந்த பணிகளுக்குச் செலவிடப்படுவதால் மிகப்பெரிய அளவில் கட்டண நிலுவையில் உள்ள விவரங்கள் அரசின் கவனத்திற்கு வந்தது. மின்சார பயனீட்டளவு கட்டணம் மற்றும் குடிநீர் விநியோகப் பராமரிப்புக்கான நிதியினை பிறநோக்கத்திற்காக திருப்பிவிடப்படுகின்ற குறைபாடுகளை சரிசெய்வதற்காக மின்சார பயனீட்டளவுக் கட்டணம் மற்றும் குடிநீர் விநியோகக் கட்டணம் ஆகியவற்றை பிடித்தம் செய்து தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றிற்கு மாவட்ட அளவில் செலுத்திவிட்டு எஞ்சிய மான்யத் தொகையை கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த நடைமுறையிலும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு குறைபாடுகள் வெளிப்படுகின்றன:–

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் தவறான அல்லது இருமுறை கட்டணப் பட்டியல்களை வெளியிட்டு அவற்றை நிவர்த்தி செய்யாத நிலையில், மாவட்ட அளவில் கட்டணம் செலுத்துவது ஊராட்சி மன்றத் தலைவர்களால் முறையாக சரிபார்க்காத நிலை மற்றும்

(ஆ) கிராம ஊராட்சி மன்றத் தலைவர்கள் மின்சார கட்டணம் மற்றும் குடிநீர்க் கட்டணத்தினை அவர்களாகவே செலுத்தாமலும், மின்சார உபயோகத்தைக் குறைக்க அக்கரை எடுத்துக் கொள்ளாதது.

2) அனுமதியற்று பணம் வாங்குதல்:

சில இடங்களில் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோர் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்ட வேலைகள் மேல்அளவு செய்யப்படாமலும் உரிய பட்டியல்கள் அங்கீகரிக்கப்படாமல் உள்ள நிலையில் திட்டநிதிக் கணக்கிலிருந்து வட்டார வளர்ச்சி அலுவலரால் (கிராம ஊராட்சிகள்) காசோலைகள் வழங்கியுள்ள நிகழ்வுகள் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் இணைந்து கையொப்பமிட்டு வங்கிக்கு காசோலை அனுப்பும்போது வங்கியாளர்கள் கண்டிப்பாக அதனை ஏற்றுக் கொண்டாக வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) இந்தத் தொகையினை அனுமதித்துள்ளாரா என வங்கியாளர்கள் சரிபார்க்க அவசியம் இல்லை. இது நடைமுறையிலுள்ள ஒரு குறைபாடாகும். இதனால் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் முன்னர் இவ்வாறாக முறையற்ற வகையில் பணம் எடுத்தது அதிக அளவில் இருந்தது.

**3.** இந்தப் பின்னணிக்கு எதிராக தற்போது உள்ள கிராம ஊராட்சி வங்கிக் கணக்குகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் பராமரிப்பது தொடர்பான நடைமுறைகளை மாற்றியமைப்பது

குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கருத்துரு ஒன்றினை அரசுக்கு சமர்ப்பித்துள்ளார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து அதனடிப்படையில் பின்வருமாறு ஆணையிடுகிறது:

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கீழ்க்கண்ட மூன்று கணக்கீடுகள் பேணப்பட வேண்டும்.

1. கிராம ஊராட்சி நிதிக் கணக்கு :

   தற்போது நான்காவது கணக்கான கிராம ஊராட்சி குடிநீர் வழங்கல் கணக்கினை முடித்து விட்டு அக்கணக்கில் உள்ள எஞ்சிய இருப்பினை கிராம ஊராட்சி நிதிக் கணக்கிற்குக் கொண்டு செல்லப்பட வேண்டும்.

2. தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் / அல்லது தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியக் கணக்கில் கிராம ஊராட்சி செலுத்தும் கொடுப்புக் கணக்கு;

3. கிராம ஊராட்சி திட்ட நிதிக் கணக்கு;

   தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில், கிராம ஊராட்சிகள் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டக் கணக்கினை நான்காவது கணக்காக பராமரித்தல் வேண்டும்.

**1) கிராம ஊராட்சி நிதிக் கணக்கு**

இக்கணக்கில் பற்று வைக்கப்படும் வரவினங்கள் மற்றும் மேற்கொள்ளப்படும் பல்வகை செலவினங்கள் மற்றும் கிராம ஊராட்சி நிதிக் கணக்குகளை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் பின்வருமாறு விவரிக்கப்படுகிறது:–

**(அ) வரவினங்கள்**

1. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 188 (1)–ல் கூறப்பட்டுள்ள அனைத்து வரவினங்கள்.
2. கிராம ஊராட்சி கணக்கு எண்.2–ற்கு விடுவிக்கப்படும் பகுதி தொகை தவிர இதர மாநில நிதிக்குழு மானியம்.
3. வீடுகளுக்கு குடிநீர் விநியோக இணைப்பிற்காகப் பெறப்படும் வைப்புத் தொகை.
4. குடிநீர் கட்டணமாகப் பெறப்படும் தொகை மற்றும் குடிநீர் விநியோகத்திற்காக பொதுமக்களால் செலுத்ததப்படும் பங்கேற்புத் தொகை.

**(ஆ) செலவினங்கள்:**

கிராம ஊராட்சிகளின் அன்றாட மற்றும் அவசர தேவைகளுக்கான செலவுகள் அனைத்தும் கிராம ஊராட்சி நிதிக் கணக்கிலிருந்து மேற்கொள்ளப்படவேண்டும். அனைத்து நிர்வாகச் செலவினங்கள், மூலதனப் பணிகள், பராமரிப்புச் செலவுகள், பிற அத்தியாவசிய இனங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் தன்னிச்சையாக செயல்படுவதற்குத் தேவைப்படும் கிராம ஊராட்சிப் பணிகள் ஆகியவை கிராம ஊராட்சி நிதிக் கணக்கில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்படி கிராம ஊராட்சி நிதிக் கணக்கில் இருந்து மேற்கொள்ளப்படும் செலவினங்கள் பின்வருமாறு இருக்க வேண்டும்.

**(அ) நிருவாகச் செலவினங்கள்**

(1.) தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான அமர்வுப்படி

(2.) தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான பயணப்படி

(3.) கிராம ஊராட்சி அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகள்

(4.) கிராம ஊராட்சி அலுவலர்களுக்கான ஓய்வதியப் பங்குத் தொகை

(5.) எழுதுபொருட்கள் கொள்முதல்

(6.) படிவங்கள் மற்றும் பதிவேடுகள்

(7.) கட்டிட வாடகை

(8.) கிராம ஊராட்சி கண்காட்சி மற்றும் திருவிழாக்களுக்கான செலவினங்கள்

(9.) சில்லரைச் செலவினங்கள்

(10.) கடன்களின் மீதான வட்டி

(11). அவ்வப்போது அனுமதிக்கப்பட்ட இதர நிர்வாக செலவினங்கள்

**(ஆ) மூலதனச் செலவினங்கள்**

(1.) கட்டிடங்கள் கட்டுதல்

(2.) சாலைகள் அமைத்தல்

(3.) சிறுபாலங்கள் மற்றும் பாலங்கள் அமைத்தல்

(4.) குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பணிகள்

(5.) அவ்வப்போது ஏற்படும் அனுமதிக்கப்பட்ட பிற மூலதனச் செலவினங்கள்

**(இ) பராமரிப்புச் செலவினங்கள்**

(1.) தெருவிளக்குகள் பராமரிப்பு

(2.) கைபம்பு மற்றும் விசைபம்பு பராமரிப்பு

(3.) கிராம ஊராட்சிச் சாலைகள் பராமரிப்பு

(4.) விளையாட்டு மையங்கள் பராமரிப்பு

(5. நூலகப் பராமரிப்பு

(6.) இடுகாடு மற்றும் சுடுகாடு பராமரிப்பு

(7.) சுகாதார வேலைகள்

(8.) அவ்வப்போது ஏற்படும் அனுமதிக்கப்பட்ட இதர பராமரிப்பு செலவினங்கள்

**(ஈ) பல்வகைச் செலவினங்கள்**

(1.) கடன்களைத் திரும்பச் செலுத்துதல்

(2.) வைப்புத் தொகைகளைச் செலுத்துதல்

(3.) முன்பணத்தை திரும்பச் செலுத்துதல்

(4.) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 191–ன்படி அனுமதிக்கப்பட்ட பிற செலவினங்கள்

(5.) அரசால் அனுமதிக்கப்பட்ட ஈமச் சடங்கு மானியம்.

இந்த கணக்கில் செலவழிக்கப்படும் தொகைக்கு நிர்வாக அனுமதி வழங்கும்போது, அரசாணை (நிலை) எண். 286, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 31.12.1999–இல் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்க வேண்டும்.

**(இ) பயன்படுத்தும் முறை**

கிராம ஊராட்சி நிதிக் கணக்கானது ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோரால் இணைந்து பராமரிக்கப்பட வேண்டும். தவிர்க்க இயலாத நேர்வுகளில், கிராம ஊராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவரிடையே முரண்பாடு ஏற்படும்போது, ஊராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் துணைத் தலைவர் அல்லாத வேறொரு உறுப்பினர் மாவட்ட ஆட்சியரின் முன்அனுமதி பெற்று ஊராட்சி மன்றத் தலைவருடன் இணைந்து கிராம ஊராட்சி நிதிக் கணக்கினை பராமரிக்க வேண்டும்.

**2. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் / அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கிராம ஊராட்சி கொடுப்புக் கணக்கு:** தற்போது நடைமுறையில் உள்ள கிராம ஊராட்சிகளின் குறிப்பிட்ட நோக்க ஒதுக்கீடு மானியக் கணக்கு என்பதை தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் / அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கணக்கில் கிராம ஊராட்சி செலுத்தும் கொடுப்புக் கணக்கு என பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.

**(அ) வரவினங்கள்:**

தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் / அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கணக்கில் கிராம ஊராட்சி செலுத்தும் கொடுப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும் இனங்கள்;

1. மத்திய நிதிக் குழு மானியம்
2. ஒவ்வொரு கிராம ஊராட்சிக்குமான மாநில நிதிக் குழுவின் குறைந்தபட்ச மானியம் ரூ.3 இலட்சம் (அல்லது அரசால் அவ்வப்போது குறிப்பிடப்படும் இதரத் தொகை)
3. இனம் 1 மற்றும் 2–இல் குறிப்பிடப்படும் தொகையானது தமிழ்நாடு மின்சார வாரியம் / குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அளிக்கப் போதுமானதாக இல்லாத பட்சத்தில் மாநில நிதிக்குழு மான்யத்திலிருந்து வழங்கப்படும் பகுதி நிதி (குறைந்தபட்ச மானியம் தவிர்த்து).

**(ஆ) செலவினங்கள்**

1. கிராம ஊராட்சிகளினால் பராமரிக்கப்படும் (அ) தெருவிளக்கு, (ஆ) குடிநீர் வழங்கலுக்கான கட்டணங்கள் (இ) கிராம ஊராட்சிகளினால் கிராம ஊராட்சிக் கட்டிடங்களின் மின்சார செலவு, (ஈ) கிராம ஊராட்சிகளினால் அளவிடப்படும் பிற இனங்களுக்கான மின்சார செலவினங்கள்.

2. கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய சேவைக் கட்டணம்.

**(இ) பயன்படுத்தும் முறை:**

இந்தக் கணக்கில் உள்ள நிதியினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான நுகர்வுக் கட்டணம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தவேண்டிய ஒருங்கிணைந்த குடிநீர்க் கட்டணம் மட்டுமே செலுத்தப்பட வேண்டும். வழங்கப்படும் அனைத்து காசோலைகளிலும் தமிழ்நாடு மின்சார வாரியம் / குடிநீர் வடிகால் வாரியத்திற்கான கட்டணம் என இதற்கான காசோலைகளின் ஒவ்வொரு காசோலை தாள்களிலும் அச்சு / முத்திரை இடப்படவேண்டும். இருப்பினும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு எழுத்து மூலமாக, தலைவர் மற்றும் துணைத் தலைவர் கையொப்பம் இட்ட காசோலைகள் “வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) செயல்முறைகள் வாயிலாக விடுவிப்பு ஆணைகள் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே தொகை கொடுக்கப்பட வேண்டும்” என முத்திரையிட்டும், உரிய பதிவேடுகள் / கணினி பதிவுகள் செய்யப்பட வேண்டும் எனவும், மேலும் தனது பெயரிலான காசோலை அல்லது தொகை திரும்பப் பெறப்படும் படிவங்கள் மூலம் இக்கணக்கிலிருந்து தொகை வழங்க அனுமதிக்கக் கூடாது என்றும் அறிவுரைகள் வழங்க வேண்டும்.

**(3) கிராம ஊராட்சித் திட்டநிதிக் கணக்கு:**

**(அ) வரவினங்கள்:**

1. மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதிகள் (தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதிகள் நீங்கலாக).
2. மாநில அரசு நிதி உதவி பெறும் திட்டங்கள்
3. பிற துறைகள் / முகமைகள் / வாரியங்கள் / கழகங்கள் / நிறுவனங்கள் மூலம் நிதி உதவி பெற்று செயல்படுத்தப்படும் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள்.

**(ஆ) செலவினங்கள்:**

கிராம ஊராட்சித் திட்ட நிதிக் கணக்கில் வரவு வைக்கப்படும் நிதியானது மத்திய அரசு திட்டங்கள் / மாநில அரசு நிதி ஒதுக்கும்திட்டங்கள் மற்றும் வரையறுக்கப்படும் ஏனைய திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும் வேலைகளுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும்.

**(இ) பயன்படுத்தும் முறை:**

இந்தக் கணக்கினை ஊராட்சி மன்றத் தலைவரும் துணைத் தலைவரும்இணைந்து பராமரிக்க வேண்டும். இருப்பினும், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு எழுத்து மூலமாக, தலைவர் மற்றும் துணைத் தலைவர் கையொப்பம் இட்ட காசோலைகள் “வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) செயல்முறைகள் வாயிலாக விடுவிப்பு ஆணைகள் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே தொகை கொடுக்கப்பட வேண்டும்” என முத்திரையிட்டும், உரிய பதிவேடுகள் / கணினி பதிவுகள் செய்யப்பட வேண்டும் எனவும், மேலும் தனது பெயரிலான காசோலை அல்லது தொகை திரும்பப் பெறப்படும் படிவங்கள் மூலம் இக்கணக்கிலிருந்து தொகை வழங்க அனுமதிக்கக் கூடாது என்றும் அறிவுரைகள் வழங்க வேண்டும்.

**4. கிராம ஊராட்சி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டக் கணக்கு (தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டங்கள் செயல்படும் மாவட்டங்களில் மட்டும்):**

இக்கணக்கினை தமிழ்நாட்டில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் மட்டும் பராமரிக்கப்பட வேண்டும்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழான வரவினங்கள் மற்றும் செலவினங்கள் மற்றும் கணக்கு பராமரித்தல் விதம் ஆகியவை கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளன:

**(அ) வரவினங்கள்:**

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பெறப்படும் மானியம் தேசிய வேலை உறுதித் திட்டக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

**(ஆ) செலவினங்கள்:**

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வரவு வைக்கப்படும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் நிதி, குறிப்பிடப்பட்டுள்ள தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளுக்காகச் செலவிடப்படவேண்டும்.

**(இ) பயன்படுத்தும் முறை:**

கிராம ஊராட்சிக் கணக்கினைப் பராமரிப்பது போல இந்தத் தலைப்பு கணக்கின் கீழ் உள்ள நிதியினை ஊராட்சி மன்றத் தலைவரும் துணைத் தலைவரும் இணைந்து பராமரிக்க வேண்டும். இருப்பினும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு எழுத்து மூலமாக, தலைவர் மற்றும் துணைத் தலைவர் கையொப்பம் இட்ட காசோலைகள் “வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) செயல்முறைகள் வாயிலாக விடுவிப்பு ஆணைகள் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே தொகை கொடுக்கப்பட வேண்டும்” என முத்திரையிட்டும், உரிய பதிவேடுகள் / கணினி பதிவுகள் செய்யப்பட வேண்டும் எனவும், மேலும் தனது பெயரிலான காசோலை அல்லது தொகை திரும்பப் பெறப்படும் படிவங்கள் மூலம் இக்கணக்கிலிருந்து தொகை வழங்க அனுமதிக்கக் கூடாது என்றும் அறிவுரைகள் வழங்க வேண்டும்.

4. கிராம ஊராட்சிக் கணக்கு நனைடமுறையில் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்கள் குறித்த இவ்வரசாணையை தங்களது மாவட்டத்தில் உள்ள அனைத்து வங்கி / வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) மற்றும் கிராம ஊராட்சிகளுக்குத் தெரிவிக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவள்ாகளும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஒம்/– க. அஷோக் வர்தன் ஷெட்டி,**

அரசு செயலாளர்.

## GOVERNMENT OF TAMIL NADU

### Abstract

Rural Development and Panchayat Raj Department-Establishment-Conferring Financial Autonomy to BDOs (Village Panchayat)- Authorizing Director of Rural Development and Panchayat Raj, to operate certain heads of accounts-Orders issued.

### RD & PR (SGS-1) DEPARTMENT

**G.O.Ms.No.141** Dated : 09.03.2007

Read :

i. From the Director of Rural Development & panchayat Raj Letter Rc. No.21187/2007/Budget-1 Dated 15.3.2007.

ii. From the Director of Rural Development & Panchayat Raj. Letter Rc. 21187/07/ Budget-1 Dated 26.6.2007.

In order to confer financial autonomy upon Block Development officer's (Village Panchayat) to enable them to draw salary for the staff working under them and to incur contingency expenses, the Director of Rural Development has requested that Block Development Officer (Village Panchayats) may be made independent drawing officers as in the case of the Block Development Officers (Block panchayat) and 50% of the Budget provision may be placed at their disposal itself since they have control over almost 50% of the Block staff and the schemes implemented in Block Panchayats.

2. The Government have examined the proposal of the Director of Rural Development and panchayat Raj and decided to accept it. Accordingly necessary changes in B.E.2007-2008 have been made in line with the request of the Director of Rural Development and Panchayat Raj and provisions have been made accordingly by Government in Finance Department.

3. Now the Director of Rural Development has reported that in Demand No.42 for the year 2007-2008, the budget provision under the above Heads of Account has been equally divided between Block Development Officers (Block panchayat) and Block Development Officer (Village Panchayats). The Block Development Officers (Village Panchayats) has been allotted funds under the following separate heads of Account:-

   1. 2225-01-789-AB (Extension Officers (ADW) to implement the programme intended for the Welfare of the SC/ST under Special Component Plan-Village panchayats).
   2. 2501-06-003-JC (Swarna Jayanthi Gram Swarozgar Yojana-Village Panchayats).
   3. 2505-01-702-JP(Sampoorma Grameen Rozgar Yojana-village panchayats)
   4. 2515-00-001-AT (Block head quarter-Village Panchayats)
   5. 2515-00-800-KV (Strengthening of Block Administration implementation of Anti-Poverty Programme-Village Panchayat)

4. The Director of Rural Development and Panchayat RaJ has requested that in view of the opening the above new Heads, the DRD & PR may be designated as the Estimating and Reconciling Authority for the new heads of accounts and necessary orders may be issued

authorizing the Block Development Officers (Village Panchayats) to perform as drawing officers in respect of the above heads of Account.

5. The Government accordingly direct that the Director of Rural Development and Panchayat raj will be the estimating reconciling and controlling authority for the new heads of Accounts indicated in para 3 above.

6. The Treasury Officer/PAOs are directed to make necessary entries in the books of their accounts in respect of the new heads of Accounts.

7. This order issues with the concurrence of Finance Department Vide its U.O.No.212/DS(B) /2007 dated. 19.7.07

(BY ORDER OF THE GOVERNOR)

**K. ASHOK VARDHAN SHETTY**

Secretary To Government

## GOVERNMENT OF TAMIL NADU

### Abstract

Rural Development and Panchayat Raj Department-Part II Scheme 2007-08 Provision of Vehicles to District Level Officers-Sanction of Rs.72.00 lakhs Orders-Issued.

### Rural Development and Panchayat Raj (SGSIV) Department

**G.O.(Ms) No.71** Dated: 25.4.2007

**ORDER:**

The District Level Officers of Rural Development and Panchayat Raj Department closely monitor the proper implementation of various schemes. The visits by the various District Level officers and inspection at the Block level should be done effectively to ensure quality in the execution of work and proper utilisation of funds. Since vehicles have not been provided to the District Level Officers, they find it very difficult to inspect and monitor the execution of the schemes. It is therefore proposed provide Vehicles to District Level Officers on the basis of requirements.

2. The State Planning Commission has cleared the proposal under part II Schmes for the year 2007-08 of Rural Development and Panchayat Raj Department on 12.1.07 and the Standing Finance Committee has approved the proposal for provision of 16 Vehicles to District Level Officers at the cost of Rs.72.00 lakhs Under Part II Scheme for the year 2007-08.

3. Sanction is therefore accorded for non recurring expenditure of Rs.72.00 lakhs (Rupees Seventy two lakhs only) for provision of 16 Vehicles to District Level Officers, of the Rural Development and Panchayat Raj Department.

4. The Government also direct that Director of Rural Development and Panchayat Raj shall purchase 16 Nos of 5 door hard top vehicles from among vehicles listed in Government Order No.1229 Home (Tr-IV) Department Dated 21.12.2006 on Director General of Supplies and Disposal rates

5. The expenditure sanctioned in para 3 above shall be debited to the following head account: "2515-00-00 Other Rural Development Programmes-001-Direction and Administration-1 Non-Plan-AD Establishment charges of Assistant Director (Audit) 21-Motor Vehicles 01. Purchase". (DPC-2515-00-001-AD2111)

6. The Director of Rural Development and Panchayat Raj, Chennai is authorised to draw and disburse the amount sanctioned in para 3 above and also requested to send the utilisation certificate to Government within the prescribed time. The Director of Rural Development and Panchayat Raj is also authorized to make need based internal allocation and reallocation of Vehicles

7. The Director of Rural Development and Panchayat Raj is directed to ensure that the Vehicles shall be purchased duly following the existing Tender and Codal procedures.

8. This Order issues with the concurrence of Finance Department Vide U.O. No.142/DS(D)/07, Dated 17/5/2007.

(BY ORDER OF THE GOVERNOR)

**K. ASHOK VARDHAN SHETTY.**

Secretary to Government.

**GOVERNMENT OF TAMIL NADU**

**Abstract**

Rural Development and Panchayat Raj Department - Part II Scheme 2007-08 - Provision of 105 five door hard top vehicles - Sanction of Rs. 472.00 lakhs - orders - Issued.

**Rural Development & Panchayat Raj (SGS.4) Department**

**G.O.Ms.No. 72** Dated: 25.05.2007

**ORDER:**

Various Centrally sponsored and State funded schemes besides works taken up under the Central and State Finance Commission Grants are being implemented by Village Panchayats, Panchayat Unions and District Panchayats. Extensive inspections of works and frequent inspections / audits of accounts are absolutely essential to ensure proper execution of works and utilisation of funds. Overseeing the maintenance of street lights, drinking water supply systems, sanitation, minor irrigation tanks, roads etc. also requires extensive touring by the field officers, such as Joint Directors, Assistant Directors, Executive Engineers, Assistant Executive Engineers and Block Development Officers.

2. The Standing Finance Committee has approved the proposal for purchase of 105 five-door, hard-top, 10 seater vehicles for field officers at a cost of Rs. 472.50 lakhs under Part II Schemes for 2007-08.

3. Sanction is therefore accorded for non-recurring expenditure of Rs. 472.50 (Rupees four hundred and seventy two lakhs .and fifty thousands only) for the purchase of 105 five-door, hard-top 10 seater vehicles for various field officers of RD&PR Department.

4. The Government also direct that the Director of Rural Development and Panchayat Raj shall purchase the 105 Nos. of 5 door Hard Top Vehicles from among the vehicles listed in G.O.Ms.No.1229 Home (Tr.IV) Department, dated 21.12.2006 at Director General of Supplies and Disposal rates.

5. The expenditure sanctioned in para 3 above shall be debited to the following head of account:

"2515-00-other Rural Development Programme - 001 - Direction and Administration I Non Plan - AA - Directorate of Rural Development - 21 - Motor Vehicle 01 Purchase (DPC-2515-00- AA 2117)"

6. The Director of Rural Development and Panchayat Raj, Chennai is authorised to draw and disburse the amount sanctioned in para 3 above and is requested to send the utilisation certificate to Government within the prescribed time. The Director of Rural Development and Panchayat Raj is also authorised to make need based internal allocation and reallocation of the vehicles.

7. The Director of Rural Development and Panchayat Raj, Chennai is directed to ensure that the vehicles shall be purchased duly following the existing Tender and Codal proceedures.

8. This order issues with the concurrence of Finance Department vide its U.O. No. 143/DS(B)/07, dated 17.05.2007

(BY ORDER OF THE GOVERNOR)

**K.ASHOK VARDHAN SHETTY,**

SECRETARY TO GOVERNMENT

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை – கிராம ஊராட்சிகள் – அனைத்து கிராம ஊராட்சிகளுக்கு தொலைபேசி வசதி செய்து தருதல் – ஆணை வெளியிடப்படுகின்றது.

**ஊரக வளர்ச்சி மற்றும் (மா.அதி4) ஊராட்சித் துறை**

**அரசு ஆணை நிலை எண். 118** நாள். 2.7.07

படிக்கப்பட்டவை

1) ஊரக வளர்ச்சி மற்று பஞ்சாயத்து ராஜ் கடித எண் 18236/06 PRI. 2.3 நாள் 23.4.07

2) துணை பொது மேலாளர் சென்னை டெலிபோன்ஸ் கடித எண் II DGM (Mktg/Comml/bfone 2007/ Vol /part-II/3 நாள் 25.5.07

3) பொது மேலாளர் (Marketing) பிஎஸ்.என்.எல். Do No.Mktg/bfone to VP office 2007–08 / – 16.6.2007

**ஆணை.**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ் நாடு சட்டமன்ற பேரவையில் இத்துறையின் மானியக்கோரிக்கையின் போது கீழ்க்கண்டவாறு அறிவித்தார்கள்.

“பொதுமக்களும், அலுவலர்களும் கிராம ஊராட்சிகளுடன் தொடர்பு கொள்ள ஏதுவாக, அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் இந்த ஆண்டு தொலைபேசி வசதி செய்து தரப்படும். இதன் மூலம் கிராம ஊராட்சிகள் கணினிகள் வழியாக இண்டர்நெட் (Internet) இணைப்பு பெற்று பயன்படுத்த வாய்ப்பாக அமையும்.”

2. இந்த அறிவிப்பிற்கிணங்க, இது குறித்த விரிவான கருத்துருவை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். தமிழ் நாட்டில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் 5380 கிராம ஊராட்சிகளில் ஏற்கனவே தொலைபேசி வசதி உள்ளது என்றும் மீதமுள்ள 7238 கிராம ஊராட்சிகளில் தொலைபேசி வசதி இல்லாமல் உள்ளது என ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் தெரிவித்துள்ளார். கிராம ஊராட்சிகள் சிறப்பாக செயல்படுவதற்கு வட்டார வளர்ச்சி அலுவலகம் மற்றும் தொடர்புடைய பிற அலுவலகங்களுடன் கிராம ஊராட்சி தலைவர் தொடர்பு கொள்ள தொலைபேசி வசதி மிகவும், அவசியம் என்றும் தொலைபேசி வசதி கிராம ஊராட்சி அலுவலகத்தில் இருக்கும் பட்சத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர், கிராம ஊராட்சித் தலைவர்களை எளிதாக தொடர்பு கொண்டு ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணிக்க இயலும். அதேபோன்று கிராமங்களில் அவ்வப்போது எழும் அடிப்படை வசதிகள் பிரச்சனைகளான தெருவிளக்கு, குடிநீர் விநியோகம், சுகாதாரம் போன்றவை குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் அது தொடர்புடைய துறைகளுக்கும் எளிதாக எடுத்துச்செல்ல இயலும். எனவே கிராம ஊராட்சிகளின் செயல்பாடுகளை முன்னேற்ற தொலைபேசி வசதி மிகவும் உதவிசெய்யும் என ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் கிராம ஊராட்சிகளில் நிறுவப்படும் தொலைபேசிக்கு கிராம ஊராட்சியின் பெயர் மற்றும் தொலைபேசி கட்டணம், முகவரி ஆகிய விவரங்கள் அடங்கிய கிராம ஊராட்சிகள் வாரியான தனித்தனி விண்ணப்பங்களை வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) பூர்த்தி செய்து அனுப்பி

வைக்கவேண்டும் என்றும், வட்டார வளர்ச்சி அலுவலர்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட தொலைபேசி நிறுவனங்களிடம் கொடுத்து தொலைபேசி இணைப்பு பெறுவதற்கான தொடர் நடவடிக்கையை எடுக்கும் பொருட்டு சம்மந்தப்பட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்களை பிஎஸ்என்எல் / சென்னை தொலைபேசி நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும் அதிகாரிகளாக (Liaison Officer) நியமிக்கலாம் என்றும் ஒரு கிராம ஊராட்சி தொலைபேசி மாத கட்டணம் ரூ.750/–என்று வரம்பு நிர்ணயிக்கலாம் என்றும் இது அனைத்து கிராம ஊராட்சிக்கும் பொருந்தும் என்றும் இந்த கட்டண தொகைக்கு மேல் தொலைபேசி கட்டணம் அதிகமாக இருந்தால் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி தலைவர். தனிப்பட்ட முறையில் இந்த கூடுதல் கட்டணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

3. பொது மேலாளர், சென்னை தொலைபேசி மற்றும் பொது மேலாளர் பிஎஸ்என்எல் ஆகியோர் தொலைபேசி அமைப்பதற்கான கட்டணம் (Installation charges)மற்றும் பிணையத்தொகை (Security deposit) கைவிடுதல் (waiver) சம்மந்தமாக ஒப்புதல் அளித்துள்ளனர்.

4. இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அவர்களின் கருத்துரு மற்றும் பொது மேலாளர் சென்னை தொலைபேசி மற்றும் பொது மேலாளர். பிஎஸ்என்எல்/ தமிழ்நாடு தொலைபேசி தொடர்பு வட்டம் ஆகியோரின் கருத்தினை அரசு கவனமாக பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ள முடிவுசெய்து, கீழ்க்கண்ட ஆணைகளை அரசு வெளியிடுகிறது:–

i) தொலைபேசி வசதி இதுவரை இல்லாத 7238 கிராம ஊராட்சிஅலுவலகங்களுக்கு தொலைபேசி நிறுவுதற்கான கட்டணம் (ஐளேவயடடயவடிைே உாயசபநள) மற்றும் பிணையத்_தொகை (security deposit) இல்லாமல் தொலைபேசி இணைப்பு வழங்க (வெளியூர் தொலைபேசி வசதி இல்லாமல்) (without95/STD facility) அனுமதிக்கப்படுகிறது.

ii) அனைத்து கிராம ஊராட்சிகளிலும் தொலைபேசி கட்டணம் மாத உச்சவரம்பு ரூ.750/ஆக நிர்ணயிக்கப்படுகிறது. இந்த உச்சவரம்பிற்குமேல் தொலைபேசி கட்டணம். இருந்தால் அதிகப்படியான தொகையை சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர் அவரது தனிப்பட்ட பொறுப்பில் செலுத்த வேண்டும்.

iii) கிராம ஊராட்சித் தலைவர்கள் சென்னை தொலைபேசி மற்றும் பிஎஸ்என்எல்க்கு செலுத்த வேண்டிய தொலைபேசி கட்டணங்களை உரிய காலத்தில் செலுத்துவதை இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் அவர்கள் உறுதிசெய்ய வேண்டும்.

IV) கிராம ஊராட்சிகள் பெயர் மற்றும் முகவரி ஆகிய விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை பூர்த்தி செய்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சி) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

V) வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமிருந்து (கிராம ஊராட்சி) பூர்த்தி செய்து பெறப்பட்ட விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட மாவட்ட தொலைபேசி நிறுவன பொது மேலாளிரிடம் கொடுத்து தொலைபேசி இணைப்பு பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்கள் தொடர்பு அதிகாரிகளாக (டுயைளைடிே டீக–கைஉநச) நியமிக்கப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசு செயலாளர் (பொறுப்பு)

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை 24 மாவட்ட மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு ரூ.3.76 கோடி செலவில் சாதனங்கள் நிறுவுதல் ஆணை வெளியிடப்படுகின்றது.

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி–4) துறை

**அரசு (நிலை) ஆணை எண்:134** நாள்: 2.8.2007

படிக்கப்பட்டது.

இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
சென்னை, க.எண். 18236/06/ PR I 2 3 நாள் 20.6.2007.

****

**ஆணை**

மாண்புமிகு அமைச்சர் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அவர்கள் 12.4.07 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மான்யக் கோரிக்கை மீது கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

“இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் பொழுதும், ஊரக வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கத்தை தீவிரமாக கண்காணிக்கவும், மாவட்ட மற்றும் வட்டார நிர்வாகங்களுக்கு இடையே தடையற்ற தகவல் தொடர்புக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு அவசியமாகிறது. எனவே, முதற்கட்டமாக 17 மாவட்டங்களில் வளர்ச்சித் துறையின் மாவட்ட மற்றும் வட்டார அலுவலர்களுக்கு 4 கோடி ரூபாய் செலவில் கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்கள் (Wireless Sets) வழங்கப்படும். “

2. மேற்குறிப்பிட்ட அறிவிப்பிற்கிணங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசிற்கு செயற்குறிப்பு ஒன்றினை படிக்கப்பட்ட கடிதத்தில் அனுப்பி வைத்துள்ளார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், தனது கடிதத்தில் 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் சுனாமி மற்றும் பலத்த மழையின் காரணமாக வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை இடர்பாடுகள் ஏற்பட்டு அதன் காரணமாக கடற்கரையை ஒட்டிய மற்றும் உட்புற மாவட்டங்களில் பெருத்த பேரழிவு ஏற்பட்டது என்றும் மேற்கண்ட பேரழிவு சமயத்தில் பி.எஸ்.என்.எல். தரைவழி தொலைபேசி மற்றும் தனியார் நிறுவனங்களின் தகவல் தொடர்பு சாதனங்கள் உள்ளிட்ட அனைத்து கட்டமைப்புகளும் செயலிழந்து போய் மாவட்ட நிர்வாகங்கள் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து செய்வதில் சிரமம் ஏற்பட்டது என்றும் அச்சமயம் கடற்கரையை ஒட்டிய சில மாவட்டங்களில் இருந்த கம்பியில்லாத் தந்தி தொடரமைப்பு (Network) மாவட்ட அளவில் தொடர்பு கொள்வதற்கு மிகவும் உதவியாக இருந்தது என்றும் தெரிவித்துள்ளார். எனவே கம்பியில்லா தகவல் தொடர்பு முழு மாவட்டத்திற்கும் இருந்திருந்தால் மாவட்ட நிர்வாகம் நிவாரணப்பணிகளை தேவையான இடங்களுக்கு மிக்க திறமையுடன் செய்திருக்க மிகவும் உதவியாக இருந்திருக்கும் என்று அச்சமயத்தில் உணரப்பட்டது என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் கிராமங்களின் நலனுக்காக மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்கள் குறிப்பாக, தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் போன்ற திட்டங்கள் அடிமட்ட கிராம ஊராட்சி அளவில் நாள் தோறும் கண்காணிக்கப்பட வேண்டியுள்ளது. அதே போல மாநில அரசின் முக்கிய திட்டமான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் செயல்பாடுகளை மிகவும் உன்னிப்பாக கண்காணிக்கப்பட வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் எதிர்பாராத இயற்கை

பேரழிவுகளை எதிர்கொண்டு கையாள்வதற்கு ஏற்கனவே கீழ்க்கண்ட 10 மாவட்டங்களில் சொந்த நிதியை பயன்படுத்தி கம்பியில்லா தகவல் தொடர்பு வசதி வட்டார வளர்ச்சி அலுவலகத்துடனும் மற்றும் வாகனங்களுடனும் ஏற்படுத்தப்பட்டு உள்ளது என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

1. திருவள்ளூர்
2. காஞ்சிபுரம்
3. விழுப்புரம்
4. கடலூர்
5. சேலம்
6. நீலகிரி
7. கிருஷ்ணகிரி
8. நாகப்பட்டிணம்
9. திருநெல்வேலி
10. தூத்துக்குடி

3. மேலும் கீழ்க்கண்ட 19 மாவட்டங்களில் தற்போது முழுமையாக கம்பியில்லாத தொடர்பு வசதி இல்லாமல் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

1. திருச்சி
2. மதுரை
3. தேனி
4. சிவகங்கை
5. விருதுநகர்
6. வேலூர்
7. திருவண்ணாமலை
8. தருமபுரி
9. ஈரோடு
10. நாமக்கல்
11. கோயம்புத்தூர்
12. கரூர்
13. திண்டுக்கல்
14. பெரம்பலூர்
15. தஞ்சாவூர்
16. புதுக்கோட்டை
17. இராமநாதபுரம்
18. கன்னியாகுமரி
19. திருவாரூர்

4. தற்போது கீழ்க்கண்ட மாவட்ட அளவிலான அலுவலர்கள் மற்றும் அவர்களது அலுவலகங்கள், மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை அடிப்படை நிலையத்துடன் (Base Station) இணைக்கவும் வாகனங்களில் செல்லும் போது தகவல் தொடர்புக்காக வாகனங்களில் மொபைல் ரேடியோ அமைக்கவும் உத்தேசித்துள்ளதாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

அ. மாவட்ட அளவில் அலுவலர்கள்/அலுவலகங்கள்

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர். | அலுவலகம் மற்றும் மொபைல் |
| 2. | திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | அலுவலகம் மற்றும் மொபைல் |
| 3. | செயற் பொறியாளர் (ஊ.வ) (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) | மொபைல் |
| 4. | நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) | அலுவலகம் |
| 5. | உதவி இயக்குநர் (ஊராட்சி) மற்றும் மொபைல் | அலுவலகம் |
| 6. | உதவி இயக்குநர் (தணிக்கை) | அலுவலகம் |

7. உதவி செயற் பொறியாளர்கள் (ஊ.வ.) அலுவலகம் மற்றும் மொபைல்

ஆ. ஊராட்சி ஒன்றிய அளவில்

1. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அலுவலகம் மற்றும் மொபைல்

2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மொபைல்

3. வட்டார பொறியியல் பிரிவு அலுவலகம்

ஒவ்வொரு அலுவலகத்திற்கும் அடிப்படை நிலையம் (ஃயளந ளுவயவடைடே) மற்றும் மாவட்ட மற்றும் வட்டார அலுவலகங்களில் உள்ள வாகனங்களுக்கான நடமாடும் நிலையத்திற்கும் (ஆடி–டைந ளுவயவடைடே) கூடுதலாக, நடமாடும் ரேடியோ தகவல் தொடர்பு சேவை சிறப்பாக மாவட்டம் முழுவதும் செயல்படுவதற்கு ஏதுவாக ஒரு ரிப்பீட்டரை (சுநயீநயவநச) முக்கியமான இடத்தில் அமைக்க வேண்டும் என்றும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. 2007–08–ஆம் ஆண்டில், முழுவதும் கம்பியில்லா தகவல் தொடர்பு இல்லாத 19 மாவட்டங்களில் கோயம்புத்தூர், பெரம்பலூர், வேலூர், தேனி மற்றும் நாமக்கல் ஆகிய 5 மாவட்டங்களை தற்போதைக்கு விலக்கிவிட்டு, எஞ்சிய 14 மாவட்டங்களையும் ஏற்கனவே பாதி அளவில் கம்பியில்லாத் தகவல்தொடர்பு வசதி உள்ள 10 மாவட்டங்களையும் சேர்த்து ஆக மொத்தம் 24 மாவட்டங்களில் மேற்கண்ட கம்பியில்லா தொடர்பு வசதிகளை ரூபாய் 3.76 கோடி செலவில் ஏற்படுத்தலாம் என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அனுப்பி வைத்துள்ள மேற்கண்ட செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது.அதன் பின், அச்செயற்குறிப்பினை ஏற்பதென்று அரசு முடிவு செய்தது. அதன் படி தமிழ்நாட்டில் கீழ்கண்ட 24 மாவட்டங்களில் கம்பியில்லா தகவல் தொடர்பு வசதி செய்து கொடுப்பதற்காக ரூ.3.76 கோடி (ரூபாய் மூன்று கோடியே எழுபத்து ஆறு இலட்சம் மட்டும் ) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திருச்சிராப்பள்ளி | 9. திண்டுக்கல் | 17. விழுப்புரம் |
| 2. மதுரை | 10. தஞ்சாவூர் | 18.கடலூர் |
| 3. சிவகங்கை | 11. புதுக்கோட்டை | 19. சேலம் |
| 4.விருதுநகர் | 12. இராமநாதபுரம் | 20. நீலகிரி |
| 5. திருவண்ணாமலை | 13. கன்னியாகுமரி | 21. கிருஷ்ணகிரி |
| 6. தருமபுரி | 14. திருவாரூர் | 22. நாகப்பட்டினம் |
| 7. ஈரோடு | 15. திருவள்ளூர் | 23.திருநெல்வேலி |
| 8. கரூர் | 16. காஞ்சிபுரம் | 24. தூத்துக்குடி |

7. எஞ்சிய 5 மாவட்டங்களான (1) கோயம்புத்தூர், (2) வேலூர், (3) பெரம்பலூர், (4) தேனி, மற்றும் (5) நாமக்கல் மாவட்டங்களில் 2008–09ம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

8. மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பெற்று சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உள்ளபடியான தேவையின் அடிப்படையில் பகிர்ந்தளிக்குமாறு ஆணையிடப்படுகிறது.

9. கம்பியில்லா தகவல் தொடர்பு அலைவரிசையை பெறுதல், கருவிகளைக் கொள்முதல் செய்தவதற்கான திட்டம் மற்றும் இதற்கான மாவட்ட அளவிலான குழு அமைத்தல், கருவிகள் ஆண்டு பராமரிப்பு செலவினம் மற்றும் பணியாளர் நியமனம் குறித்து பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள் குறித்து விரிவாக இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

10. மேலே பத்தி 6–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2515–00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் 102 சமுதாய வளர்ச்சி –பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் II. மாநிலத் திட்டம், மாவட்டங்களில் கம்பியில்லா தகவல் தொடர்பு வசதி ஏற்படுத்துதல் .09. உதவி மானியங்கள் 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் (DPC.NO.2515 00 102 KO 0932) “

11. இது ஒரு புதுப்பணி (New Service) குறித்த செலவினமாகும். இச்செலவினத்திற்காக சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினம் எதிர்பாரா செலவு நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (BGI) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியில் இருந்து இச்செலவினத்திற்கான தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிதி (BGI) துறைக்கு இவ்வரசாணையின் நகலுடன் விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இந்த செலவினத்தை 2007–08ம் ஆண்டிற்கான முதலாவது துணை மானியக் கோரிக்கையில் சேர்த்திட தக்க விளக்கக் குறிப்புடன் உரிய தருணத்தில் வரவு செலவுத் திட்டக் கருத்துருக்களை அனுப்பி வைக்கும்படியும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

12. இப்புதிய கணக்கு தலைப்பிற்கு மதிப்பீட்டு கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இருப்பார். மேற்சொன்ன புதிய கணக்கு தலைப்பினை தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர்/கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப் படுகிறார்.

13. இத்திட்டத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகளில் எதிர்காலத்தில் ஏற்படும் நிலமைகளை கருத்தில் கொண்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரிடம் கலந்து ஆலோசித்து, தேவையான மாற்றம் செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை செயலருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

14. இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன், அ.சா.கு. எண்.48370/ஊ.வ/2007, நாள் 30.7.2007 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கம் பேரேடு எண். 585 (ஐந்நூற்று எண்பத்தி ஐந்து)–இல் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**

அரசு செயலாளர்

## இணைப்பு II

### தகவல் தொடர்பு அலைவரிசையை பெறுதல்.

கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி ஏற்படுத்துவதற்கு **146–174** Mhz வரை உள்ள அலைவரிசையை புது டெல்லியில் உள்ள தகவல்தொடர்பு அமைச்சகத்தின் கம்பியில்லா தகவல் தொடர்பு திட்ட குழுவிடம் அனுமதி பெற வேண்டும். தற்போது உள்ள நடைமுறைப்படி முதல் கட்டமாக மேற்கண்ட மத்திய அரசு துறையிடம் பல்வேறு மாவட்டங்களுக்கு தேவையான ரிப்பீட்டர் அலைவரிசையில் (Repeater Frequency) ஒதுக்கீடு செய்வதற்கு உரிய படிவத்தில் விண்ணப்பம் செய்ய வேண்டும். கம்பியில்லா தகவல் தொடர்பு திட்ட குழுவின் அலைவரிசை ஒதுக்கீட்டுக்கான கொள்கை அளவிலான கடிதம் பெறப்பட்டவுடன் கருவிகள் கொள்முதல் செய்வதற்கான நடைமுறை பின்பற்றப்படவேண்டும்.

(ii) **கருவிகள் கொள்முதல் திட்டம்.**

கம்பியில்லா தகவல் தொடர்பு கருவிகள் மத்திய அரசின் பொருள் வழங்குதல் மற்றும் தீர்வு இயக்குநர், நிர்ணயித்த ஒப்பந்த விலையில் (DGS & D rate) வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

(iii) **மாவட்ட அளவிலான குழு.**

மாவட்ட அளவில் மத்திய அரசின் பொருள் வழங்குதல் மற்றும் தீர்வு இயக்குநர், நிர்ணயித்த ஒப்பந்தவிலையில் கம்பியில்லா தகவல் தொடர்பு கருவிகள் கொள்முதல் செய்வதை முடிவு செய்ய, கீழ்க்கண்டவாறு குழு அமைக்கப்படவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (i) | மாவட்ட ஆட்சித் தலைவர், | – | தலைவர். |
| (ii) | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | – | உறுப்பினர் செயலாளர். |
| (iii) | செயற் பொறியாளர் (ஊ.வ), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | – | உறுப்பினர். |
| (iv) | உதவி இயக்குநர் (கணக்கு) | – | உறுப்பினர். |
| (V) | உதவிஇயக்குநர் (ஊராட்சிகள்) | – | உறுப்பினர். |

(iv) **கம்பியில்லா தகவல் தொடர்பு கருவிகள்.**

**ஆண்டு பராமரிப்பு** (Annual maintenance)

இந்த கருவிகளுக்கான உத்திரவாத காலம் முடிவடைந்தபின் இக்கருவிகளை பராமரிப்பதற்காக, ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் (Annual maintenance contract) ஒன்றை (கருவிகளின் விலை மதிப்பிற்கு 2ரூ மிகைப்படாமல்) ஏற்றுக் கொள்ளும் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். இதற்கான தொகையை, இயக்குநகரத்தில் வைத்துள்ள இத்திட்டத்தின் எஞ்சியுள்ள தொகையிலிருந்து அளிக்கப்படும். மேலும் இந்த செலவினம் சம்பந்தமாக கூடுதல் தொகை தேவைப்படின், ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரை ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்தும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையைப் பொறுத்த வரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாக நிதியிலிருந்தும், செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர் அலுவலக நிர்வாக நிதியிலிருந்தும் பிற அலுவலகங்களை பொறுத்தவரை எதிர்பாராத சில்லரை செலவினங்களுக்கான தொகையிலிருந்தும் செலவு செய்து கொள்ளலாம்.

(எ) **பணியாளர் நியமனம்.**

கம்பியில்லா தகவல் தொடர்பு சாதன திட்டத்தை செயல்படுத்தவதற்கு புதிய பணியாளர் நியமனம் எதுவும் தேவையில்லை, வானொலி மேற்பார்வையாளர்கள் (Radio Supervisors) உள்ளிட்ட தற்போது உள்ள பணியாளர்களை பயன்டுத்தி தேவைப்படும் அன்றாட பணிகளை மேற்கொள்ளலாம்.

**GOVERNMENT OF TAMIL NADU**

**Abstract**

Training _ Training to panchayat Raj Institutions fungtionaries _ Allocation of funds_Creation of Training corpus Fund._ Orders _ Issued.

**Rural Devolapment & Panchayat Raj (C3) Department.**

**G.O: (Ms) No.103** Dated: 19.6.2007

Read:

**From the Director of Rural Devolapment and Panchayat Raj**

**Rc. No.32093/07 Trg. 2 Dated: 17.5.2007.**

****

**ORDER:**

The Hon'ble minister for Rural Devolapment and Local Administration has Announced on the floor of the Assembly on 12.4.2007 as follows:

'A Training Corpus fund will be created for organlzing training Programmes to the elected representatives on the panchayat Raj Administration and Implementation of rural Development Schems. An amount of Rs.3 crores Will be set apart for the Training Corpus Fund every year. The training corpus fund Will also be utilized to undetake exposure visits of the elected representatives Within and outside the State in order to aquire first-hand knowledge about the good practices elsewhere'.

2. Based on the above announcement, the Director of Rural Development and panchayat Raj has sent a proposal for imparting systematic and regular training to the elected representatives of Panchayat Raj. He has requested to create a Training Corpus Fund of Rs.3crores out of State Finance Commission Grant and for formation of High Level Committee for administering the Training Corpus Fund. He has also suggested certain guidelines in this regard.

3. The Government have carefully examined the above proposal of the Director of Rural Development and Panchayat Raj and accept to impart systematic and regular training to the representatives of Panchayat Raj. The Government direct that the guidelines annexed to this order shall be strictly followed. The Government also direct that an annual allocation of Rs.3crores be made for this training from the State Finance Commission grant in the ratio of 8:32:60 as detailed below:

| | | |
|---|---|---|
| 1. District Panchayats | : | Rs.0.24 crores (8%) |
| 2. Block Panchayats | : | Rs. 0.96 crores (32%) |
| 3. Village Panchayats | : | Rs. 1.80crores (60%) |

The said amount shall be deducted from the first month allocation out of State Finance

Commission grant.

4. A High Level Committee for administering the Training Corpus Fund is consitutued as follows:

   a. Secretary, Rural Development and Panchayat Raj –Chairman

   b. Directory of Rural Development and Panchayat Raj –Member Convener

   c. Director Of Rural Development and Panchayat Raj (Trg)

   d. Financial Adviser & Chief Accounts Officer,

   O\o Director of Rural Development and Panchayat Raj)-Members

   The High Level Committee shall-finalise the currculam and specific training programme etc.

5. The Director of Rural Development and Panchayat Raj is authorized to draw and disburse the amount sanctioned in para 3 above.

6. This order issues with the concurrence of Finance Department vide its U.O. No.98\SS(PK)7\07 Dated 4.6.07.

(BY ORDER OF THE GOVERNOR)

**K. ASHOK VARDHAN SHETTY**

SECRETARY TO GOVERNMENT

## Annexure

Guidelirlas to be followed for imparting systermatic and regular training to the elected represenctatives on the Panchayat Raj Administration

(1) The Corpus Fund of Rs. 3crores is created from the State Finance Commissiobn grant and it shall be apportioned between District Panchayats and Panchayats Unions and Villages Panchayat in the ratio of 8:32;60as given below.

i) Share percentage of the three tiers:

District Panchayat : Rs.0.24 Crores (8%)

Block Panchayats : Rs. 0.96% crores (32%)

Village Panchayats : Rs. 1..80 crores (60%)

ii) Contribution of Three titers:

| | | | | |
|---|---|---|---|---|
| District Panchayat | : | Rs. 0.24 crores\29 | = | @Rs. 82,758\- |
| Block Panchayats | : | Rs. 0.96 Crores\385 | = | @Rs. 24,935\- |
| Village Panchayts | : | Rs. 1.80 Crocres\12,618 | = | @Rs. 1,427\- |

(2) The Direct of Rural Development and Panchayat Raj shall open a separate savings Bank account and operate and the Director of Rural Development and Panchayat Raj shall be the custodian of the Training Corpus Fund.

(3) Functions of High Level Committee:-

(a) The committee Shall finalise the list of training institutions that Will undertake training for the elected representative of panchayat Raj institutions. This could be universities,-NGOs, reputed private training Institutions, etc. apart from the State Insutitute of Rural Development and Regional Institutes of Rural Development.

(b) The Committee Shall finalise the curriculam for the training programmes for the elected representatives of the three tiers of rural local bodies and also the special training programmes to be designesd by the training institution.

(c) The Committee shall allocate the training ppragrammes to various training Institutions.

d) The Committee shall finalise the list places for exposure visits of the participants.

e) The Committee shall finalise the rates for training programmes on per person per day basis.

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

நமக்கு நாமே திட்டம் 2007–2008 ஆண்டு முதல் மீண்டும் செயல்படுத்தப்படுவது குறித்த ஆணை மற்றும் திட்ட செயல்பாட்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் – வெளியிடப்படுகிறது,

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.3) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.172** நாள் : 15.10.2007.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை)எண்.77 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 19,4,99,
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித நக எண்.63543. / 2007.எஸ்.எஸ்.2, நாள்30.8.2007.

**ஆணை**

1997–98 ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மக்கள் பங்களிப்புடன் செயல்படுத்தக்கூடிய நமக்கு நாமே திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2000–2001ம் ஆண்டுவரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் அடிப்படை கோட்பாடுகளில் மாற்றம் ஏதும் இல்லை எனினும் 2001–02 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தின் பெயர் கிராம தன்னிறைவுத் திட்டம் என்று மாற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டது. பின்னர் 17.7.02–ல் மீண்டும் இத்திட்டத்தின் பெயர் “தன்னிறைவுத் திட்டம்” என்று மாற்றப்பட்டு 2005–06 ஆம் ஆண்டுவரை செயல்படுத்தப்பட்டது. 30.07.07 மற்றும் 31.7.07 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் நமக்கு நாமே திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் மாநாட்டில் நமக்கு நாமே திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த அறிவிப்பிற்கிணங்க, நமக்கு நாமே திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவது குறித்த விரிவான கருத்துருவை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் இயக்குநர் சமர்ப்பித்துள்ளார். மக்களின் சுய உதவி மற்றும் சுய சார்பு தன்மையை ஊக்குவிக்கவும், பலப்படுத்தவும் மக்களுக்கு தேவையான திட்டங்களை அவர்களது பங்களிப்புடன் செயல்படுத்தி பொதுச் சொத்துக்கள் உருவாக்கி பராமரித்து வருவதே நமக்கு நாமே திட்டத்தின் நோக்கமாயகும். அரசு, திட்டங்களை தீட்டி அதில் மக்கள் பங்கு கொள்வதற்கு பதிலாக, மக்கள் தாமே கண்டறிந்து, செய்லபடுத்தும் திட்டங்களில் அரசு பங்கு கொள்வது நமக்கு நாமே திட்டத்தின் சிறப்பு அம்சம் ஆகும். இந்த வகையில் நமக்கு நாமே திட்டம், நகரம் மற்றும் கிராமம் ஆகிய அனைத்து பகுதியிலும் செயல்படுத்தப்படும்.

2. முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க நமக்கு நாமே திட்டத்தை 2007–08 ஆண்டு முதல் செயல்படுத்துவதற்கான கருத்துருவையும் இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும், அரசின் ஒப்புதலுக்காக ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் அனுப்பியுள்ளார். 2005–2006ம் ஆண்டில் தன்னிறைவு திட்டம் என்ற பெயரில் இருந்த இந்த திட்டத்திற்கு ரூ.100 கோடி அரசு ஒதுக்கீடு செய்தது என்றும், அதே அடிப்படையில் 2007–08 ஆம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்திற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் இயக்குநர் அரசிடம் கோரியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. தற்போது உயர்த்தப்பட்டுள்ள மாநில அரசின் நிதி பகிர்வு மூலமாகவும், 12வது நிதி குழு மூலமாகவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அளவு நிதி வழங்கப்படுவதால். உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நிலைமையில் நல்ல முன்னேற்றம் உள்ளது. கிராமம் மற்றும் நகர அடிடப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்காக நபார்டு வங்கி உதவி மற்றும் அரசின் செலவினம் அதிக அளவில் உயர்ந்துள்ளது. அதே போல் நகர்புற வள;ராச்சிக்கான நிதி உதவி வாய்ப்புகளும் பல்வேறு திட்டங்கள் மூலமாக அதிகரித்துள்ளது. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மற்றும் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டங்கள் மூலம் கிராமம் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி தேவை குறைவாகவே தேவைப்படும் என்று அரசு கருதுகிறது. ஆகவே 2007–08 ஆம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்திற்கு அரசின் பங்களிப்பு ரூ.50 கோடி போதுமானதாக இருக்கும் என்று கருதி இத்தொகையை ஒதுக்கீடு செய்யலாம் என்றும் நெறிமுறைகளை ஏற்றுக் கொள்ளலாம் என்றும் அரசு முடிவு செய்துள்ளது.

4. அதன்படி 2007–08 ஆம் ஆண்டு முதல் நமக்கு நாமே திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது. 2007–08 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.50 கோடி (ரூபாய் ஐம்பது கோடி மட்டும்) அரசு அனுமதிக்கிறது. இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் இந்த ஆணையின் இணைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இந்த வழிகாட்டு செறிமுறைகள் உடனடியாக நடைமுறைக்கு வருகிறது என்றும் அரசு ஆணையிடுகிறது.

5. முன் பத்தி 4ல் இத்திட்டத்திற்காக அரசு அனுமதித்த ரூ.50 கோடியில் ஊரக வபளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் இயக்குநர் ஒப்புதல் அளிக்கக்கூடிய சிறப்பு திட்டங்களுக்காக 25 விழுக்காடு தொகையை இயக்குநரகத்தில் வைத்துக் கொண்டு, மீதமுள்ள தொகையை மாவட்டங்களுக்கு, மொத்த மக்கள் தொகை விகிதாச்சாரத்தின்படி பிரித்து இரண்டு தவணைகளில் விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் இயக்குநருக்கும், மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட தொகையை திட்டங்களின் முன்னுரிமை அடிப்படையில் கிராமப்பகுதிகள் மற்றும் நகரப்பகுதிகளுக்கு விடுவிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. ஒப்பந்தப்புள்ளி கோராமல் பணிகளை ஒப்படைப்பது தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998க்கு முரணானது என்பதால் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் விதிமுறைகளை கடைபிடித்து, நமக்கு நாமே திட்டப்பணிகளை ஒப்படைக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி அரசின் பங்களிப்பு 50 விழுக்காடுக்கு மேல் உள்ள இனங்களில், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் சட்டத்தில் கூற.பபட்டுள்ள வழிமுறைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும் என்றும், பணிகளின் மதிப்பு 50 விழுக்காடு மற்றும் அதற்கு குறைவான அளவில், அரசின் பங்களிப்பு உள்ள இனங்களில் பங்களிப்பாளர்கள் (Controbutors) அப்பணியை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு தர வேண்டும் என்றும் பங்களிப்பாளர் பணியை நிறைவேற்றிட விரும்பாத இனங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் சட்டத்தின்படி விதிமுறைகளை கடைபிடித்து பணிகளை நிறைவேற்றிட வேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது. இது குறித்து உரிய அரசு அறிவிக்கை (Notification) 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16( f ) ன் கீழ் தனியே வெளியிடப்படும்.

7. முன்பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்கண்ட புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்.

**2515–00–** ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – **800 –** ஏனைய செலவு – பதினோறாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II. மாநிலத் திட்டம் – ஜே.டபிள்யூ – நமக்கு நாமே திட்டம் செயலாக்கம் **– 09** உதவி மான்யங்கள் **– 03** குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் (து.தொ.கு. எண்.**2515 00 800** ஜே.டபிள்யூ **0934**)

8. இப்புதிய கணக்குத் தலைப்பிற்கு மதிப்பீட்டுக் கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இருப்பார். கணக்குகளில் மேற்சொன்ன புதிய தணக்குத் தலைப்பினை தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இது ஒரு புதுப்பணி குறித்த செலவினமாகும். இச்செலவினத்திற்கானச் சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படுவத எதிர்நோக்கி இச்செலவினத் எதிர்பாரா செலவு நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (BGI) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியில் இருந்து இச்செலவினத்திற்கான தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் (BGI) துறைக்கு இவ்வரசாணையின் நகலுடன் விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இந்த செலவினத்தை **2007–08–**ஆம் ஆண்டிற்கான முதலாவது துணை மானியக் கோரிக்கையில் சேர்த்திட தக்க விளக்கக் குறிப்புடன் உரிய தருணத்தில் வரவு செலவுத் திட்டக் கருத்துருக்களை அனுப்பி வைக்குபடியும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இந்த ஆணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.**253**(DS(APA))/**2007**, நாள் **12.10.2007**, கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண்.**1091** (ஆயிரத்து தொண்ணூற்று ஒன்று) ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**

அரசு செயலாளர்

## இணைப்பு

### 2007– 2008ம் ஆண்டு முதல் மீண்டும் செயல்படுத்தப்படும் நமக்கு நாமே திட்ட செயல்பாட்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

1) நமக்கு நாமே திட்டம் நகரம் மற்றும் கிராமம் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் செயல் படுத்தப்படும்.

2) இத்திட்டத்தின் கீழ் க்கண்ட பணிகளை எடுத்துச் செய்யலாம்.

1. அரசு மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் (சுற்றுச் சவர் மற்றும் சுற்றுவேலி உள்பட), ஆய்வகங்கள், பள்ளிகளுக்கான கழிவறைகள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், நூலகங்கள், விடுதிகள், மதிய சத்துணவு கூடங்கள், அரசு நியாய விலை கடைகள், கிராமம் மற்றும் நகரங்களில் குடிநீர் ஆதாரங்கள் உருவாக்குதல் போன்ற சமுதாய சொத்துக்களை உருவாக்குதல், எல்லா சமூக சொத்துக்களையும் பராமரித்தல் ( சுவர்களுக்கு சுண்ணாம்பு அடித்தல், பெயிண்ட் அடித்தல் போன்றவை உள்பட)

2. பாலங்கள், அல்லது சிறிய பாலங்கள் கட்டுதல், சாலைகளை தரம் உயர்த்துதல், தெருக்கள் மற்றும் சிறிய சந்துகளை செங்கல் அல்லது கப்பி கற்கள் அல்லது சிமெண்ட் சிலாப்பு அல்லது சிமெண்ம் கான்கிரிட் கொண்டு சீரமைத்தல்.

3. பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலை திட்டு (Traffic Island)நீரூற்று தெருவிளக்குகள் போன்றவற்றை அமைத்தல் மற்றும் அவற்றை மேம்படுத்தி பராமரித்தல்.

4. பொது மக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அரசு மற்றும் உள்ளாட்சி மன்ற பள்ளிகள் நூலகங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு தேவையான அறைகலன்கள் ( பர்னிச்சர் கம்யூட்டர்கள்) மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை வாங்குதல் பழைய கம்ப்யூட்டர்கள் உபகரணங்கள் மற்றும் அறைகலன்கள் வாங்கக் கூடாது. எனினும் நூலகங்களில் பயன்படுத்தப்பட்ட புத்தகங்களை தானமாகப் பெறலாம்.

மேற்கூறிய பணிகள் கீழே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.

அ. சொத்தின் உரிமதாரரின் முன் அனுமதி பெறாமல் எந்த நிரந்தர கட்டுமான பணியும் செய்யக் கூடாது.

ஆ) பணிக்கான பங்களிப்பை அளிக்க முன்வரும் நபர்/நிறுவனம் ( contributing person / entity) சொத்திலோ அல்லது அதன் பயன்பாட்டிலோ ( property / use of property) எந்த உரிமையும் கோரக்கூடாது.

இ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட பணிகள் அனைத்தும் ( தூர்வாரும் பணிகள் உட்பட ) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவும் தடை செய்யப்படுகிறது.

ஈ) பணிக்காக பங்களிப்பு நிதி வழங்கியவர்களின் பெயர்களை, மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதி பெற்று, பணி நடை பெறும் இடத்தில் விளம்பரப் பலகை வைக்கலாம்.

விளம்பரப் பலகையில் குறைந்தது மூன்றில் இரண்டு பகுதி பரப்பில் நமக்கு நாமே திட்டம் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். பணி செய்யும் இடத்தின் மதிப்புக்குக் குந்தகம் ஏற்படாத வகையிலும், திட்ட பணிக்காக பங்களித்தோர் சொத்துக்கு உரிமையோ அல்லது குத்தகை உரிமையோ, கோர வாய்ப்பு அளிக்காத வகையில், அந்நிறுவனம் விளம்பரம் செய்ய அனுமதிக்கலாம்.

உ) திட்டப் பணிக்கு பங்களித்தோர் போதுமான அக்கரை காட்டவில்லை அல்லது ஏதாவது நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சியர் கருதினால், பணியைச் செய்யவும், பராமரிக்கவும் வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும் அல்லது பணியைத் தொடர அனுமதிக்கப்பட மாட்டாது.

**3)** நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகளை தேர்வு செய்வதற்கான நடைமுறைகள்

i ) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகளை எடுத்து செய்வதற்கான தேவை குறித்த கருத்து, தனி நபர், குழு, நிறுவனங்கள், கம்பெனிகள் அல்லது சமுதாய மக்கள் மூலமாக உருவாகலாம்.

ii ) செய்ய வேண்டிய பணியை கண்டறிந்தபின், பணியின் தன்மையை குறிப்பிட்டு விண்ணபமும், மூன்றில் ஒரு பங்கு கண்டறிந்தபின், பணியின் தன்மையயை குறிப்பிட்டு விண்ணபமும், மூன்றில் ஒரு பங்கு தொகையை கேட்புக் காசோலையாக வழங்கவும் சம்மதம் தெரிவித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவரிடமோ கொடுக்க வேண்டும்.

iii ) உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் அல்லது அரசுத்துறை நிறுவனங்கள் வழங்கும் நிதி இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

iv) பணிகளை செய்வதற்கு உள்ளாட்சி மன்றம் அல்லது பணியின் உண்மையான தேவை மற்றும் செயல்படுத்தக்கூடிய வாய்ப்பு குறித்து கேட்டு அறிந்து கொள்வார்.

எ) பணிகளை செய்வதற்கு உள்ளாட்சி மன்றம் அல்லது அப்பணி சம்பந்தப்பட்ட துறையின் அனுமடித தேவையெனின் அவற்றின் அனுமதியை நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன் மாவட்ட ஆட்சித்லைவர் பெற வேண்டும்.

vi) உருவாக்கப்படும் சொத்துக்கள் உள்ளாட்சி நிறுவனங்கள் அல்லது துறையின் பராமரிப்பின் கீழ் இருக்க வேண்டியிருப்பின், அச்சொத்துக்களை உருவாக்க அந்த துறைகளின் ஒத்திசைவினை மாவட்ட ஆட்சித் தலைவர் பெற வேண்டும்.

vii) குறிப்பிட்ட அளவுள்ள தொகைக்குள், பல்வேறு பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின் அவற்றுள் மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளைக் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

**4)** பணிகளை நிறைவேற்றுதல்

i ) அரசின் உரிய அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது பொதுபணித்துறையால் நிர்ணயிக்கப்பட்ட பணிகளுக்கான தற்போதைய விலைப்பட்டியலின்படி உள்ளாட்சி நிறுவனங்கள் அல்லது சம்பந்தப்பட்ட துறையால் பணிகளின் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின்னரே, நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டும். பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் குறைந்த பட்சம் மூன்றில் ஒரு பங்கு

தொகை கேட்புக் காசோலை மூலம் பணமாக மாவட்ட ஆட்சியரின் நமக்கு நாமே திட்டம் நிதி என்ற பெயரில் பெறப்பட வேண்டும். மீதமுள்ள தொகை, அரச ஒதுக்கீடு செய்யும் நமக்கு நாமே திட்ட நிதியிலிருந்து அளிக்கப்படும். மேலும், மத்திய அல்லது மாநில அரசின் வேறு திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகள், இத்திட்டத்திற்கு இசைவாக இருந்தால், அத்திட்டங்களின் நிதியும், பொது மக்களின் பங்களிப்புக்கு இணையாக சேர்த்து கொள்ளப்படும்.

ii) மக்கள் இத்திட்டத்தில் பெரிய அளவில் பங்கேற்க ஏதுவாக, பொது மக்களோ அல்லது பணிக்கான பங்களிப்பை அளித்தவரோ, மேற்கண்ட பணியை தாங்களாகவே அல்லது வேறு முகவர்கள் மூலமாக செய்திட விரும்பினால், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்யும் போது எழுத்து பூர்வமாக தெரிவிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த கோரிக்கையை ஆய்வு செய்து, பங்களித்தவரையோ அல்லது அதன் முகவரையோ, அப்பணியை அதற்கான மதிப்பீட்டின்படி செயல்படுத்த அனுமதி வழங்குவார்.

iii) பணிக்கான பொதுப்பங்களிப்பை அளித்தவர்/நிறுவனம் தானே பணியை நிறைவேற்ற முன்வரவில்லை என்றால், அப்பணிகள், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவு அற்ற ஒப்பந்தபுள்ளிகள் சட்டத்தின் படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

iv) பணிகள் தொழில் நுட்ப அடிப்படையில் மேற்பார்வையிடுவதற்கான முகவர் யார் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு செய்வார். சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனமோ அல்லது இது தொடர்புடைய துறையோ, முகவராக இருக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் தேவைப்படும் நிதியை இம் முகமைக்கு விடுவிப்பார்.

v) அ) உள்ளாட்சி மன்றமோ/தொடர்பு துறையோ / (Line Department) நிதிவழங்கியவரோ / தனியார் நிறுவனங்களோ அல்லது மேற்கூறிய நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியை மேற்கொள்வோருக்கு பணி நிறைவேற்றல் ஆணை வழங்கப்படும்.

ஆ) பணிகளை நிறைவேற்றுவது தனியார் நிறுவனங்களோ / சங்கங்களோ / பொது மக்களாகவோ இருந்தாலும், இப்பணியை கண்காணிக்கும் முகவர்களான உள்ளாட்சி மன்றங்கள் / தொடர்புடைய துறையிடம் மட்டுமே இதற்கான நிதி இருக்கும்.

இ) பணி செய்யப்பட்டதற்கு அளவு குறித்து சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப பிரிவுகளால் சரிபாக்கப்பட்டு, மற்ற அரசு திட்டங்களில் பணிச் செய்யப்ட்டதற்கு தொகை வழங்கப்படும் வழி முறைகளின்படியே இத்திட்டத்தின் கீழும் பட்டியல்கள் அனுமதிக்கப்படும்.

ஈ) உயர்நிலை பள்ளி/ மேல் நிலைப் பள்ளிகள் உள்ளிட்ட பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரை மேற்கண்ட கண்காணிப்புத் தவிர, சம்பந்தப்பட்ட பொதுப்ணித்துறை அல்லது நகராட்சி அல்லது மாநகராட்சிகள் ஆகியன கட்டிடத்திற்கான உறுதி தன்மை குறித்து சான்றிதழ் வழங்க வேண்டும். கட்டிடப்பணி நிறைவு பெற்றதற்கான பணிநிறைவு அறிக்கையை தொழில்நுட்பக் குழு தயார் செய்ய வேண்டும்.

vi) 100 விழுக்காடு மக்கள் பங்களிப்புடன் பணியை மேற்கொள்ளும் இனங்களில் சம்பந்தப்பட்ட பயனாளி சங்கம்/பங்களிப்பு அளித்தவர்கள் செலுத்த வேண்டிய முன்பண பங்களிப்பு விருப்பம் தெரிவித்தால், நமக்கு நாமே திட்டத்தின்படி செலுத்த வேண்டிய முன்பண பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டி வலியுறுத்தாமல், பணியை நிறைவேற்ற அவர்களிடம் ஒப்படைக்கலாம். எனினும்

மேற்கண்ட பணிகள், அங்கீகரிக்கப்பட்ட கட்டிட அமைப்பு மற்றும் கட்டிட உறுதி தன்மைகள் உட்பட வழக்கமான பணி நிறைவேற்றப்பெற்றதற்கான அளவுகள் சரிபார்க்கப்படுவதற்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.

5) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களை பராமரித்தல்

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பணிகளை/ சொத்துக்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் அல்லது சம்பந்தப்பட்ட துறை சார்பாக பணிக்கான பங்களிப்பை வழங்கியோரே பராமரித்து வருவது மிகவும் விருப்பதக்கது ஆகும். எனவே சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனத்தின் உதவியுடன் இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களை தொடர்ந்து பராமரித்து வருவதற்காக சுயமாக நிதிபெற்று செயல்படும் ஒரு பயனாளிகள் குழுவை உள்ளூர் மக்கள் அமைக்க வேண்டும். உள்ளூர் தேவைக்கேற்ப திட்டமிட்டு, பணிகளை செயல்படுத்தி, பின்னர் பராமரித்து வருவதற்கு உள்ளூர் மக்களுக்கு உக்கமளிக்க வேண்டும்.

6) மாவட்டங்களுக்கு கூடுதல் நிதி மற்றும் சிறப்பு திட்டங்களுக்கான நிதி வழங்குதல்

i) அ) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சிறப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாவட்டத்திற்கு கூடுதல் நிதிதேவைப்படின், அத்தகைய திட்டங்கள் குறித்த கோரிக்கைகளை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். கூடுதல் நிதி மற்றும் சிறப்பு திட்டங்களுக்கான நிதியை இயக்குநரிடம் கோருமுன், மாவட்டத்திற்க ஒதுக்கப்பட்ட நிதியை முதலில் முழுமையாக செலவு செய்திருக்க வேண்டும்.

